இந்துமத இணைப்பு விளக்கம்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
பழனி.

உ

இந்துமத இணைப்பு விளக்கம்



அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

பழனி
அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் வெளியீடு
2007

முதற்பதிப்பு : 1991
இரண்டாம் பதிப்பு : 1999
மூன்றாம் பதிப்பு : 2002
நான்காம் பதிப்பு : 2007

பக்கம் – 220 + 12

தமிழ்நாடு அரசாங்கம்

விலை ரூ. 40-00

கிடைக்குமிடம் :
பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில்
பழனி – 624 601.

ஆசிரியர்

மகாவித்துவான் கே. ஆறுமுக நாவலர்

ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிய
ஸ்ரீ முகம்

நாகர்கோவில் ஸ்ரீ ஆறுமுக நாவலர் இயற்றிய இந்துமத இணைப்பு விளக்கம் எனும் நூல் பார்வையிடப்பட்டது.

சமயங்கள், மாந்தர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து மேல்நெறி அடைவதற்கான மார்க்கங்களைப் போதிப்பனவாகும். இந்து மதத்தில் சமயவாழ்க்கை தெய்வீக நெறியுடன் இணைப்புண்டிருக்கின்றது. சமயத்துறையிலும், தெய்வீக நெறியிலும் தாம் பின்பற்றுவதே உய்யும் நெறியை அளிப்பதாகும் என்ற எண்ணமின்றி, பிற சமயங்களிடத்தும் பேதம் பாராட்டாமல் தந்தம் நெறியில் நின்று, சமய வாழ்வினையும், பக்தி நெறியினையும் ஒவ்வொருவரும் கைக்கொண்டு ஒழுக வேண்டும். இதனை கைக்கொண்டால் சமயப்போர், மூர்த்திதூஷணை முதலியன தோன்றமாட்டா.

தமிழ்நாட்டின் சமயவாழ்க்கையில் சைவமும், வைஷ்ணவமும் இருகண்களாகத் திகழ்ந்து வருகின்றன. சிவபெருமானும், விஷ்ணுவும் முறையே இதற்குத் தெய்வங்கள். தேவாரத்தில் சிவனை விஷ்ணுவாகவும் பிரபந்தத்தில் விஷ்ணுவை சிவனாகவும் பாவித்துப் பாடிய பகுதிகள் உள்ளன. சிவனை, "அலைகடல் நடு அறிதுயிலமர் அரியுரு இயல்பான்" என்று சம்பந்தரும், "அரிஅவன்காண்" என்று அப்பரும், விஷ்ணுவை, "முக்கண் அப்பா" என்று நம்மாழ்வாரும் போற்றியுள்ளனர்.

ஒருவருடைய திருமேனியில் மற்றொருவர் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. சிவனது இடப்பக்கம் விஷ்ணு இடங் கொண்டிருப்பதாகத் தேவாரத்திலும், விஷ்ணுவின் வலப்பக்கத்தில் சிவன் வீற்றிருப்பதாகப் பிரபந்தத்திலும் பாடப்பட்டுள்ளது. "நாரணனை இடப்பாகத்து அடைத்தார் போலும்" (தேவாரம்) "பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து" (பிரபந்தம்). கம்பர், மலையில் உற்பத்தியான வெள்ளம் பல பிரிவுகளாகப் பிரிந்து கடலைச்

சென்றடைந்தது எனக் கூறும்பொழுது அங்கு. சமய தெய்வீக ஒற்றுமைக்கு அடிகோலுகிறார்.

"பரம்பொருள் ஆதியில் ஒன்றாயிருந்ததைப்போல் மலையில் ஒன்றாக ஓடி. பின்னர் அப்பரம்பொருள் சமயவாதிகளிடையே ஆராய்ச்சி முறையில் பல பிரிவுகளாகப் பிரிந்து பல மூர்த்திகளாகியது போல. பல பிரிவுகளாகப் பிரிந்து சென்று கடலை அடைந்தது" என்பது கம்பர்கவியின் சாராம்சமாகும். ஆதியில் இருந்தது ஒன்றே: காரிய காரணத்தைமுன்னிட்டு மூன்றாப் பிரிந்தது. அப்பர். "ஒருருவே மூவுருவமானநாளோ" எனப் பாடுகின்றார். திருமங்கை மன்னன் இதனை இன்னும் சிறிது விளக்கமாகக் கூறுகின்றனர். ஒன்றாயிருந்த அப்பரம் பொருளை வேறுபடுத்திக் கூறும் பொழுது ஒன்று பொன்னுருவம் (பிர்மா). ஒன்று கடலுருவம் (விஷ்ணு). ஒன்று தீயுருவம் (சிவன்) என்று ஐக்கியப்படுத்திக் கூறுகின்றார்.

இத்தகைய கொள்கைகள் இந்நூலில்பல இடங்களில் இடம் பெற்றிருப்பதை நூலைப்படிப்பவர்கள் நன்குணரலாம். நமது சமயநூல்கள். இந்துமதப் பெருமைகள். மதாசாரியர்கள். அடியார்கள். ஆலய வழிபாடு. உத்ஸவ விளக்கம். தோத்திரமாலை முதலான உபயோகமான விஷயங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

ஸ்ரீ நாவலர் இதுபோன்ற திருத்தொண்டுகள் பல செய்து கொண்டு நீடூழிவாழ்ந்துவர ஆசீர்வதிக்கின்றோம்.

தமிழ்மக்கள் இந்நூலைப் படித்துச் சமயபேதம். மூர்த்தி பேதம் பாராட்டாமல். சமய பக்தியும். தெய்வ பக்தியும் உடையவர்களாக வாழ்ந்துவர ஸ்ரீ திரிபுரஸுந்தரி சமேத ஸ்ரீ சந்திர மௌலீச்வரரைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

யாத்திராஸ்தானம்
கல்யாணபுரம்
சோபகிருது அதிககார்த்திக **நாராயணஸ்மிருதி,**
பகுளதசமி

ஸ்ரீலஸ்ரீ மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம்
மஹாசந்நிதானம் அவர்களது
ஆசியுரை

"இந்துமத இணைப்பு விளக்கம்" என்ற நூல் கிடைத்து மகிழ்ந்தோம். இந்துக்களுக்குப் பொதுவாகத் தெரிந்திருக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் அத்தனையும் அதில் கூறப் பெற்றிருப்பது மிகவும் போற்றற்குரிய காரியமாகும். அரிய பெரிய சாஸ்திர நுணுக்கங்களை பண்டிதர் மட்டுமன்றி பாமரரும் புரிந்து கொள்ளுகிற இனிய எளிய முறையில் எழுதியிருப்பது தமிழுலகிலுள்ள எல்லோரும் இந்நூலைப் படித்து உண்மையை உணர்ந்து கொள்ளச் செய்யும் சீரிய வழியாகும்.

ஆலயங்களை நிர்வாகம் செய்யும் தர்மகர்த்தாக்களும், இறைபணியாளரும், இதர சிப்பந்திகளும், அங்கு வழிபாடு செய்யவரும் அனைவரும், பள்ளிகளில் படிக்கின்ற மாணவ மாணவிகளும் இந்நூலைப் படித்து விடுவார்களானால் இந்து மதத்தினுடைய பொதுத் தத்துவங்களை இலகுவில் உணர்ந்து கொள்ளக் கூடியவர்களாவார்கள். வேத ஆகமங்களிலும், உபநிஷத்துக்களிலும், பல்வேறு சாஸ்திரங்களிலும், தோத்திரங்களிலும், புராண இதிகாசங்களிலும், புதைந்து கிடக்கின்ற பல இந்துமத உண்மைகளையும் தத்துவங்களையும், கிரியைகளின் விளக்கங்களையும், விரதங்களின் மகிமைகளையும் இந்த அரிய நூல் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறுகின்றது.

இவ்வித இந்துமத இணைப்பு நூலின் அவசியத்தை உணர்ந்து தக்க தருணத்தில் இதனை வெளியிட்டிருக்கும் ஆசிரியர், நமது திருவருள் தவநெறி மன்றத்தின் நிரந்தரச் செயலாளரும், நமது ஆதீனத்தின் "சைவ சமய சண்டமாருதம்" என்பதுடன், திருவாவடுதுறை ஆதீனத்தின் மகா வித்வான் என்பதும் யாவரும் அறிந்ததே. ஆனால் அவர்கள் இந்திய ரோமாபுரி என்ற வடக்கன் குளத்தில் தனது உயிரையும் பொருட்படுத்தாது துணிவோடு அங்குள்ள கிறிஸ்தவர்களை இந்துவாக மீட்பித்து இன்று அங்குள்ள பஞ்சாயத்து

யூனியன் இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளதாகச் செய்திருக்கும் செயற்கரிய செயலும், வேறு பல இடங்களிலும் பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்களை இந்துக்களாக மாற்றியிருக்கிற விபரமும், பலருக்கும் தெரியாதென்றே கருதுகிறோம். அவ்வாறு அவர்கள் செய்வதற்காகவே இறைவன் அவர்களை இப்பூலோகத்திற்கு அனுப்பியிருக்கின்றான் என்ற தெய்வ இரகசியமும் பலருக்கும் தெரிந்திருக்கமுடியாது.

நாம் பிறக்கும் முன்னரே தாம் பிறக்கவேண்டிய இடமும், பெயரும், படிப்பும், செய்யவேண்டிய தொழில்களும் அவரவர்கள் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தக்க, இறைவனால் தீர்ப்புக் கொடுக்கப் பெற்று அத்தீர்ப்பு அவரவர் கைகளிலே இரேகைகளாக எழுதப் பெற்றே பிறக்கிறோம் என்பதை இரேகை சாஸ்திரம் எனப்படும் நாடி சாஸ்திரம் உறுதிப்படுத்துகிறது என்ற உண்மையை அதனை ஆராய்ந்து பார்த்தவர்கள் மட்டுமே அறிவார்கள்.

இந்நூலாசரியரது மணி விழா மலரில் அவர்களது பிறப்பைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும், சோழபுரத்திற்குச் சமீபத்திலுள்ள வடமலாபுரம், திரு. கிருஷ்ணன் செட்டியார் அவர்களிடம் இருந்த கௌசிகர் இரேகை சாஸ்திரத்தில் வால்மீகபந்தன வரியாம்ச இரேகை 17 புள்ளியில் அமைந்த ஏட்டில் கூறியிருப்பதின் மகிமை பலருக்குத் தெரியாது. இறைவன் இந்நூலாசிரியரை இவ்வுலகில் பிறக்கும்படி செய்திருப்பதற்குக் காரணம் அதில் கூறப் பெற்றிருக்கிறது.

"இவன் உதிப்பான் புவியில் ஆணாய், ஆங்குற்ற சேரன் நாடு தன்னில் இவன் உதிக்க, தந்தை கண்டு மாநிலத்தில் இவன் தனக்காம் இட்ட நாமம் பாரிதனில் ஐந்து ஒன்றாய் வதனமெனப் பெயரும் சூட்டி, (ஐந்தும் ஒன்றும் ஆறு - வதனம் என்றால் முகம், ஆகவே பெயர் ஆறுமுகம்) இவன் தனக்கு பிரமன் நாவிலுற்றாள் (சரஸ்வதி) இவன் மனதுள் நுழைந்து இவன் தமிழில் தேர்ச்சியுற்று பல ஊர்ஊர் சுற்றி பல நற்காரியச் சீர் எடுத்துரைக்கப் பலர் இவனை அழைத்து கருதமென அப்பாண்டி நாடு முற்றும் நற்பெயரே பெற்றும் பல பெரியோர், அரசாங்கத்தார், விளங்குமென மடாதிபதிகள்பால் சென்றும் மேன்மை

பெற்றும். அங்கு அவரவரின் சங்கை தீர்த்து நிற்கும்படி மேன்மையுடன் இவன் பேச்சினில் வாணி (சரஸ்வதி) நின்று எடுத்துரைப்பள் பதிலாய் இவன் ஓர் கூட்டத் தலைவனாகி உரிமையுடன் ஆங்காங்கு பல ஊரில் நற்கூட்டம் அமைத்து தப்பாது இவன் நாவலரின் பட்டம் பெற்று தரணிதனில் மழுங்கும் கலை முற்றும் இவன் கிளப்பி அற்பமிலா அங்கு அச்சமணர் மதம் முறித்து அச்சிவமதம் ஆக்கியோன்போல் (திருஞான சம்பந்தரைப் போல்) அவனிதனில் மதச் சீர் கெட்டழியாது விருத்தியாக்கி. இவன்தனை ஈசனென்று உலகிலுள்ளோர் போற்றுமாறு தரணிதனில் அவ்வெண்டாமரையாள் ஏற்றி வைப்பாள். அங்கு இவன் இவ்வாறடைய ஆசான் இல்லானெனிலும் பொருந்துமென "நெருப்பில் நின்று ஏடு சல மிது ஏறக் கண்டான் (திருஞான சம்பந்தர்) ஆசான் அவன் ஆகிடுமே"

ஆகவே கடவுளால் இந்துமதம் சீர்கெட்டு அழியாது சிறந்தோங்கி வளர்ந்து திகழுமாறு பணிபுரிவதற்காகவே இவ்வுலகிற்கு அனுப்பப் பெற்ற இந்நூலாசிரியரது இந்த வெளியீடு மக்களிடையே பெரியதோர் விழிப்பையும். ஆர்வத்தையும். பக்தியையும் உண்டாக்கும் என்பதில் யாரும் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை.

இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் உயர்திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார். பி.ஏ.. பி.எல்., அவர்கள் இவ்வித வெளியீடுகளுக்குக் கொடுத்துவரும் ஆதரவு மிகவும் பாராட்டற்குரியதாகும்.

தமிழ் பேசத் தெரிந்த ஒவ்வொருவரும் இந்த அரிய நூலை வாங்கிப் படித்து, இந்துமத மாண்பை உணர்ந்து அதன்படி நடந்து, தாமும் உயந்து பிறரையும் உய்யுமாறு செய்யத் திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி பங்கனாம் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிகர்

முகவுரை

நமது இந்து மதத்தின் இணையிலாத் தத்துவங்களை அடங்கிய வேதாகமங்கள் வடமொழியில் இருப்பதாலும், சாத்திரங்கள் பல செய்யுள் வடிவில் எல்லோரும் இனிது அறிந்துகொள்ள முடியாத முறையில் அமைந்திருப்பதாலும், அத்தத்துவங்களை யாவரும் நன்குணருமாறு எளிய இனிய தமிழில் ஓர் இந்துமத நூல் வெளியிடவேண்டுவது இன்றியமையாததாயிற்று.

இந்து மதத்தில் உள்ள அநேக கிளை மதங்களின் அடிப்படைக் கருத்து ஒன்றேயாயினும், அவை வேறுபட்டனபோலப் பிரிந்து ஒன்றோடொன்று மாறுபட்டு ஒற்றுமை இல்லாதிருப்பது இந்து மதத்தின் பொதுவளர்ச்சிக்கு இடையூற்றினை விளைவித்து வருகின்றது. ஆதலின், அக்கிளைகள் அனைத்தையும் இணைத்துப் பொதுக்கொள்கைகளை மேற்கொண்டு இந்து மதத்தை உருப்படுத்தி வளர்க்க வேண்டுவது அவசியமாகும். அது கருதியே இந்துமத இணைப்பு விளக்கம் எனும் இந்நூல் வெளியிடப்படுகின்றது.

உலகில் உள்ள ஒவ்வொரு மதங்களுக்கு ஒவ்வொரு மத நூல் இருப்பதுபோல, இந்து மதத்துக்கும் ஒரு தனி நூல் அமையவேண்டுவதும், மதத்தின் சாராம்சங்களை எளிதில் தற்கால விஞ்ஞான முறையில் விளக்க வேண்டுவதும், மத தத்துவங்களில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை அகற்றி, மதத்தில் தெளிவுபெற்ற ஒரு உறுதி நிலையை உண்டுபண்ணவேண்டுவதும் காலநிலைக்கு இன்றியமையாத கடப்பாடாயிற்று.

இந்துமத தேவாலயங்கள், அறநிலயங்கள் முதலியவற்றை நிர்வகிக்கும் நிர்வாக அதிகாரிகளும், அர்ச்சகர்களும் மதசம்பந்தமான துறைகளில் பயிற்சி பெறுவதற்கும், ஒரு நூல் அவசியமேயாகும். இவற்றை இனிது நிறைவேற்ற நமது இந்துமத அறநிலையத்திலிருந்து ஒரு நூல் எழுதி வெளியிட முயற்சித்தனர். அம்முயற்சியே இந்நூல் வெளியிடுவதற்கு ஏற்றதுணை ஆயிற்று.

நமது இந்துமத புராண இதிகாஸ வரலாறுகள், பல நூல்களில் பலமாறுபட்ட முறைகளில் கூறப்பட்டுள்ளன. ஆதலால், அவற்றில் உள்ள பொதுவான தத்துவங்களை மட்டும் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது. இவைகளில் திருத்தப்பாடுகள் எதுவேனும் உளவேல் பேரறிவாளர்கள் எமக்கு அறிவிப்பின் அதனை ஆராய்ந்து அடுத்த பதிப்பில் இணைத்துக்கொள்ள ஏற்றதாயிருக்கும்.

தமிழ்நாடு முதலமைச்சர் உயர் திரு பக்தவத்ஸலம் பி.ஏ., பி.எல்., அவர்கள், இந்நூல் வெளிவர ஊக்கமளித்து உதவினார்கள். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்து அறநிலைய ஆணையாளர் உயர்திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார் அவர்கள் பி.ஏ., பி.எல்., அடியேன் ஆற்றிய தொண்டுகளை மதித்தும், இயற்றிய நூலை ஆராய்ந்தும் சிறந்தோர் அணிந்துரை அனுப்பி ஆதரித்த பெருந்தகைமையைப் பெரிதும் போற்றி எமது உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாகர்கோவில்
விஜயதசமி
27-10-1963

இங்ஙனம்
இந்துமதத் தொண்டன்
கே. ஆறுமுக நாவலர்.

உள்ளுறை

பக்க எண்

1. **இந்துமதம்** 1

மதம் என்றால் என்ன? மதப்பெயர்க் காரணம், இந்துமதம் என்பதன் பொருள், இந்துமதப் பெருமைகள்.

2. **இந்துமத நூல்கள்** 5

வேதம், இருக்கு, யஜுர், ஸாமம், அதர்வணம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாசம், புராணங்கள்.

3. **இந்து மத உட்பிரிவுகள்** 14

உலகாயத மதக்கொள்கை, புத்தமதம், சமணம், சாங்கியம், மீமாம்சம்.

4. **அத்வைத, விசிஷ்டாத்வைத, துவைத சித்தாந்தங்கள்** 19

அத்வைதம், வசிஷ்டாத்வைதம், துவைதம்.

5. **தர்சனாங்கள்** 21

வைசேஷிகம், நியாயம், யோகம்.

6. **வைணவ மதம்** 23

7. **சைவ சமயம்** 25

பதி, பசு அல்லது உயிர், பாசம், சைவசமயக்கிளைகள்.

8. **மதங்களின் இணைப்பு** 30

9. **கடவுள்** 33

அளவைகள், காண்டல், கருதல், நூலளவை, கடவுளின் ரூபங்கள்.

10. **சக்தியும் சிவமும்** 36

அம்மையப்பர், சக்தி, அர்த்தநாரீசுவரர்

11. **விநாயகர்** 40

12. **ஆலயம்** 42

கோபுரம், பிராகரங்கள், விமானம், கொடிமரம், கொடிமரப் பிரதிட்டையின் நோக்கம், கர்ப்பக்கிரகம், சிவலிங்கம், திருநந்திதேவர், பலிபீடம், தட்சிணாமூர்த்தி, நடராஜர், முருகன், சண்டேசுரர்.

பக்க எண்

13. நாராயணர் 64

தசாவதாரங்கள்

14. உலகத் தோற்றம் 73

15. ஓம் 75

16. ஆன்மாக்கள் 78

உயிர்வர்க்கம், மானுடப் பிறப்பு, உடலும் உயிரும், கடவுளும், உயிரும், உயிர்கள், உயிர்களின் அவத்தைகள், பாசம், ஆணவம், கன்மம், மாயை.

17. மரணத்தின் பின் மனிதர் நிலை 88

18. முத்திமார்க்கங்கள் 92

சரியை அல்லது தாஸமார்க்கம், கிரியை அல்லது சற்புத்திரமார்க்கம், யோகம் அல்லது சகமார்க்கம், ஞானம் அல்லது சன்மார்க்கம்.

19. குரு 102

தீட்சை ஸ்பர்ச, நயன, மானத, வாசக, மந்திர, யோக, ஔத்ரி.

20. ஜீவன் முத்தர் 108

21. ஆலய நிர்மாணம் 110

பிரதிட்டைக்குரிய கிரியைகள்

22. பூஜை 114

பஞ்சசுத்தி, சோட சோபசாரங்கள்.

23. ஆலய வழிபாடு 119

விபூதி, உருத்திராக்கம், சந்தனம், திருமண், விக்கிரகங்கள், வழிபாடு செய்யும் முறை, தலங்களும் திவ்விய தேசங்களும். இதரச் சிறப்புப்பெற்ற தலங்கள்.

24. மந்திரம் 130

மந்திரங்களின் மகத்துவம், சில மூலமந்திரங்கள், மந்திர ஜபமுறை, பஞ்சாட்சரம், அட்டாட்சரம், காயத்திரி மந்திரம்.

பக்க எண்

25. **திருவிழாத் தத்துவம்** 139

திருவிழா நாட்கள், திருவிழா பொதுத்தத்துவம், கொடியேற்றம், வாகனம், தேர், தீர்த்தவாரி.

26. **இதரத் திருவிழாக்கள்** 145

திருக்கல்யாணத் திருவிழா, விநாயகசதுர்த்தி விழா, நவராத்திரி விழா, கந்த விரத விழாக்கள், திருக்கார்த்திகை விளக்கீடு விழா, திருவாதிரைத் திருவிழா, வைகுண்டஏகாதசி விரத விழா, தைப்பூசத் திருவிழா, சிவராத்திரி விரத விழா, மாசி மகவிழா, பங்குனி உத்திர விழா, சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி உத்திரம், ஆடிப்பூரம், பிரதோஷம்.

27. **இந்துக்களின் சடங்கு முறைகள்** 165

பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், புண்ணியாவாசனம், நிஷ்க்ராமணம், அன்னப்பிராசனம், வித்யாரம்பம், கர்ணபூஷணம் (காது குத்தல்), சௌளம் (குடுமி வைத்தல்), உபநயணம், குருகுலவாசம், திருமணம், குறிக்கோள் பகர்தல் (சங்கற்பம்), புனித நீர் சுத்தி (புண்யாவாசனம்) புனித நீர் அமைக்கும் முறை (பஞ்சகவ்வியம்), காப்புக் கட்டுதல் (ரக்ஷாபந்தனம்), முளையிடுதல் (அங்குரார்ப்பணம்), குடவழிபாடு (கும்ப பூஜை), எரியோம்பல் (அக்னி காரியம்), வடிவ வழிபாடு (மூர்த்தி பூஜை), தானம், கைப்பிடித்துக் கொடுத்தல், திருமங்கலநாண் பூட்டல், சஷ்டிஅப்தபூர்த்தி (அறுபதாம் ஆண்டு நிறைவு விழா), சதாபிஷேகம், அபரக்கிரியை, அந்தியேட்டி, அத்திசஞ்சயணம், பாஷாண பூசை, சிராத்தம்.

28. **அடியார்கள்** 174

தொண்டர் பெருமை, மாணிக்கவாசகர், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், நாயன்மார்களும் குரு பூஜை நாட்களும், சந்தானாசாரியர்கள், மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம், வைணவ அடியார்கள் (ஆழ்வார்கள்),. முதலாழ்வார்கள், பிறஆழ்வார்கள், முருகன் அடியார்.

29. **தொகுப்புரை** 199

இணைப்பு, சமயசாரம், சமய முன்னேற்றப் பணிகள்.

30. **தோத்திரமாலை** 205

இந்துமத இணைப்பு விளக்கம்

1. இந்து மதம்

1. மதம் என்றால் என்ன?

இவ்வுலகிலுள்ள மனிதர்கள் அனைவரும் துன்பத்தை வெறுத்து, இன்பத்தை அடைய விரும்புகின்றனர். அவ்வின்பமும் நீடித்து நிலைபெற்று இருக்க வேண்டுமென்பது அவர்களது விருப்பம். மக்கள் அனைவரும் தங்கள் வாழ்நாட்களில், சிறிது காலம் இன்பத்தையும், சிறிது காலம் துன்பத்தையும் மாறிமாறி அனுபவித்து வருவதை நாம் காண்கிறோம்.

இவ்வாறு உலகப்பொருள்கள் வழியாக மக்கள் அனுபவிக்கும் இன்பம் சிற்றின்பம் எனப்படும். உலகப்பொருள்கள் அனைத்தும் அழியும் தன்மையுடையனவாதலால் சிற்றின்பமும் என்றும் நிலைபெற்று நில்லாது அழிந்துவிடுகிறது. என்றும் நிலைபெற்று நின்று இடையறாது அனுபவிக்கத்தக்க இன்பம் ஒன்று உளது. அவ்வின்பம் பேரின்பம் எனப்படும். இப்பேரின்பத்தை மக்கள் அனுபவிக்கப் பெரியோர்கள் இறைவன் அருளோடு வகுத்த வழியே மதமாகும்.

2. மதப் பெயர்க் காரணம்

சில மதங்கள் அம்மதத்தினர் வழிபட்டு வரும் கடவுள் பெயரால் அமைந்துள்ளன. உதாரணம் : சைவம், வைணவம் முதலியன. வேறு சில மதங்கள் அதனை நிறுவியவர் பெயரால் அமைந்துள்ளன. உ-ம்: பௌத்தம், ஜைனம் முதலியன. சில மதங்கள் அம்மதத்திற்குரிய தலைசிறந்த நூலின் பெயரால் அமைந்துள்ளன. உ-ம்: வேதாந்தம், ஸ்மார்த்தம் முதலியன.

3. இந்து மதம் என்பதன் பொருள்

ஆரியர்கள் சிந்துநதி தீரத்தில் வசித்து வந்தபோது அவர்களை "சிந்துக்கள்" அல்லது "இந்துக்கள்" எனப் பாரசீகரும், கிரேக்கரும் அழைத்து வந்தனர் என்றும், அந்த சிந்துக்களுடைய மதமே இந்து மதம் என ஆயிற்று என்றும் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்திய நாட்டினரின் மதமே இந்து மதம் எனப் பொருள் கூறுவாரும் உளர்.

ஒரு நாட்டின் பெயராலோ, ஒரு ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. ஆதலால், இதன் உண்மைப் பொருளை அறிய வேண்டுவது அவசியமாயிற்று. இந்து மதம் எனும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும். இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம்+து எனப் பிரிக்கலாம். (ஹிம் = ஹிம்சையில் து = துய்க்கின்றவன்)

ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அதற்காக வருந்தி அத்துன்பம் தனக்கு வந்ததாய்க் கருதி அதை அகற்ற எவன் ஒருவன் பணிபுரிகிறானோ அவனே இந்து ஆவான். அப்பண்பு வாய்ந்த மக்களைக் கொண்ட மதமே இந்து மதமாகும். இக்கருத்தை

"ஹிம்ஸாயாம் தூயதே ய: ஸ: ஹிந்து:
இத்யபி தீயதே".

என்ற சுருதி வாக்கியத்தாலும் அறியலாம். இதிலிருந்து இந்து மதம் என்பதற்கு அன்பு மதம் எனப் பொருள் கொள்ளலாம்.

"அஹிம்ஸா பரமோதர்ம." மேலான அறம் எனப்படுவது அஹிம்ஸையே. அஹிம்ஸையாகிய அரும்பு அன்பாகிய மலராக மலர்கிறது. அன்பிற்கு அடிப்படை அஹிம்ஸையே ஆகும்.

அன்பே கடவுள். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காது உறைகிறான். எல்லா உயிர்ப் பிராணிகளுடைய உடம்பையே அவன் கோயிலாகக் கொண்டிருக்கிறான். ஆதலால், எந்த உயிரின் உடலுக்கும் துன்பம் நேராவண்ணம் அவைகளிடத்து அன்பு செலுத்தினால் அன்புருவாய ஆண்டவனது அருள் பெறலாம்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

எனத் திருமந்திரம் கூறுகின்றது.

இந்து மதம் என்பதற்கு "சநாதனதர்மம்" என வேறு ஒரு பெயர் கூறுவாரும் உளர். இதற்கு அழிவிலா அறம் என்பது பொருள். அன்றியும் திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்ந்நெறி, சன்மார்க்கம் என்பன போன்ற பல பெயர்களை இட்டு வழங்குவாரும் உளர். மதத்தைச் சமயம் எனவும் கூறுவர். சமயம் என்பதற்கு '**சமை**' என்பது பகுதி. உடம்பை வளர்ப்பதற்கு உணவுப் பொருள்களைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு உரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பரிபக்குவப் படுத்துவது என்பது அதன் பொருளாகும்.

சமயம் நமது கண்ணால் காணப்படும் உலகத்தையும், அனுமானத்தால், அறியத் தகுந்த ஆன்மாவினையும், இறைவனையும் இனிது காட்டும் ஞானஒளி. மனிதனுடைய உடல்நலத்திற்கும் உள நலத்திற்கும் உதவும் அமுதம். மனிதர் அன்போடு அளவளாவி வாழ்வதற்குரிய வழிகளை வகுக்கும் ஒழுக்கபீடம். மனிதர்களுடைய இகபர வாழ்விற்குரிய நலன்கள் அனைத்தையும் அருளும் கற்பக மரம்.

4. இந்து மதப் பெருமைகள்

(அ) இந்து மதம் காலத்தால் மிகவும் முந்தியது. அது ஒரு காலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதை தற்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சி முதலியவற்றால் அறியலாம்.

(ஆ) பிறமதங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்து மதத்தில் அநாதியாகவே இடம் பெற்றுள்ளன. ஆதலால், உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் தாயக மதம் இந்து மதம் எனக் கொள்ளலாம்.

(இ) இந்து மதம் எந்த மதத்தையும் இழிவுபடுத்தாமல் குஞ்சணைக்கும் தாய்போல் அணைத்து விளங்குகிறது. உலகில் உள்ள சில மதத்தினர் "தங்கள் மதத்தின் வழியாகவேதான் முத்தி அடைய முடியும்; வேறு மதங்களின் வழியாக முடியாது" எனக் கூறுகின்றனர். சிலர் தம் மதத்தைச் சாராதவர்களைப் பாவிகள் என்றும், அஞ்ஞானிகள் என்றும் கூறுகின்றனர். ஒரு மரத்தில் ஏறிப்படர்ந்து தழைத்துப் பூத்த படர்கொடி அம்மரத்தினிடமே தன் சிறப்பைக் கூறுவதைப் போல இந்து மதத்தினிடமே அவை தற்பெருமை பேசுகின்றன. தூங்கும் சிங்கத்தின் மேலேறிக் குதிக்கும் சிறுபிராணிகள் போல இந்து மதமாகிய சிங்கத்தினிடம் வேறு சில மதங்கள் விளையாடுகின்றன. இவற்றை நமது இந்து மதம் தனது பெருந்தன்மையால் பொறுத்துக்கொண்டு இருக்கின்றது.

(ஈ) இந்து மதம் வெறும் நம்பிக்கையோடு நின்றுவிடாமல், ஒவ்வொரு கொள்கையையும் ஆராய்ந்து, ஐயங்களை அகற்றி அறிவினைப் புகட்டுவது.

(உ) மனிதர்களைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தாது சுதந்திரத்தோடு வாழச்செய்வது.

(ஊ) இல்லறத்தாரும், துறவறத்தாரும் முத்திபெறலாம் எனக் கூறுவது.

(எ) உலக வாழ்க்கையோடு மத வாழ்க்கையும் இணைத்து மேற்செல்ல வழிகாட்டுவது.

(ஏ) ஆண், பெண், சிறுமியர், வாலிபர், வயோதிகர், உயர்ந்த வகுப்பினர், தாழ்ந்த வகுப்பினர் எனும் பேதமின்றி யாவரும் முத்திபெறலாம் எனக் கூறுவது.

(ஐ) முத்திபெறுவதற்கு உரியவழிகளை மக்களின் தகுதிக்கு ஏற்ப வகுத்து வழிகாட்டுவது.

(ஒ) மக்கள் செய்த நல்வினை, தீவினைகளுக்குத் தக்கவாறு மறுபிறப்பு உண்டு என்பதை வலியுறுத்தி, மக்களின் இன்ப, துன்ப வாழ்வுக்குக் காரணம் அதுவே என்பதை விளக்குவது.

(ஓ) சில மதங்கள் விஞ்ஞானத்துக்கும் பொருத்தமற்ற கொள்கைகளை உடையவனவாய் இருக்க, இந்து மதம் விஞ்ஞானத்தாலும்

உணரமுடியாத மெய்ப்பொருள்களைத் தனது மெய்ஞ்ஞானத்தால் இனிது இயம்புவது.

(ஔ) இவ்விதப் பெருமைகளை வேற்று நாட்டுப் பெருமக்களின் மாபெரும் கூட்டங்களில் சுவாமி விவேகானந்தர் போன்ற இந்து மத ஞானிகள் எடுத்தியம்பியுள்ளனர். அவற்றைக் கேட்ட பல மேல்நாட்டு அறிஞர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் இந்து மதத்தைப் பெருமைப்படுத்திப் பேசியும், எழுதியும் பாராட்டியுள்ளனர். சிலர் இந்துக்களாகி இனிது வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய இந்து மதப் பெருமைகளை நாம் இனிது நன்றாய் அறிவதோடு பிறநாட்டினருக்கும் இவற்றை விளக்கிக் கூறித் தக்க பணியாற்றுவது நமது இன்றியமையாத கடமையாகும்.

2. இந்து மத நூல்கள்

உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திற்கும் முக்கியமான சமய நூல் ஒவ்வொன்றுளது. நமது இந்து மதத்திற்கு வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாசம், புராணம் எனப் பல நூல்கள் இருக்கின்றன.

1. வேதம்

வேதம் என்ற சொல்லின் தாது அல்லது பகுதி 'வித்' என்பதாகும். வித்–அறிவு, வேதம் என்பதற்கு அறிவு நூல் என்பது பொருள். தெய்வீகமான கருத்துகளைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர்பெற்றது. ஆசிரியனிடம் கேட்டுத் தெளியவேண்டிய நூலாதலால் இதனைச் சுருதியெனவும் கூறுவர். இதனை இருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என நான்காக வியாசர் வகுத்துள்ளார்.

இருக் வேதம்

இருக் என்பதற்கு 'துதித்தல்' அல்லது 'வழிபடல்' என்பது பொருள். இறைவனைத் துதிப்பாடல்கள் பாடி வணங்குவதற்குரிய வழிகளை இதில் வகுத்துக் காட்டப்பட்டுள்ளது. இது பத்து மண்டலங்களைக் கொண்டது. ஒன்று முதல் ஏழு மண்டலங்களில் இறைவனை அக்கினி என்ற பெயராலும், பத்தாவது மண்டலத்தில் பிரமன், இந்திரன் என்ற பெயர்களாலும் பாடப்பட்டுள்ளது.

யஜுர் வேதம்

'யாஜ்' என்னும் பதத்துக்கு 'யாகம்' என்பது பொருள். யாகம், பலி, தானம் முதலிய கிரியைகளைச் செய்யவேண்டிய முறைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன. அமாவாசை, பௌர்ணமி காலங்களில் செய்ய வேண்டிய வேள்விகளைப் பற்றியும், பிதுர்கர்மம் முதலியன செய்ய வேண்டிய விதங்களைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. மிகச் சிறப்பு வாய்ந்த ருத்ரம் இதில் அமைந்துள்ளது.

ஸாம வேதம்

ஸாமம் என்னும் இன்னிசையால் பாடப்பெற்றது. இதில் பரமேசுவரனை அக்கினி, இந்திரன் முதலான பெயர்களால் பாடப் பெற்றிருக்கிறது. பாபத்தை நீக்கிப் பலனைக் கொடுக்கும் பாடல்கள் இதில் அமைந்திருக்கின்றன. இசையுடன் இதனைப் பாடுவதால் பாபம் நீங்குகிறது.

அதர்வணம்

இதில் மந்திரம் உச்சரிக்கவேண்டிய முறைகளையும், விரோதி களின் அழிவின் பொருட்டுச் செய்யவேண்டிய கிரியா முறைகளைப் பற்றியும் கூறி இருப்பதோடு வேத சாரக்கிரியைகளையும் அனுஷ்டானங்களையும் பற்றிய தோத்திரங்களும் உள்ளன.

உபநிஷதம்

உபநிஷதம், நான்கு வேதப்பிரிவுகளிலிருக்கும் சம்ஹிதை, பிராம்மணம், ஆரணியகம் என்ற பாகங்களைச் சார்ந்தவை.

'உபநிஷத்' என்பதற்கு ஆசாரியன் அருகில் உட்கார்ந்து அறிந்துகொள்ளப்படும் ஞானம் என்று பொருள்கொள்ளுகிறார்கள். நூற்றெட்டு உபநிஷத்துகள் உள்ளன. அவற்றுள் மிக முக்கியமான உபநிஷத்துகள் பத்தாகும். அவை வருமாறு : ஐத்ரேய உபநிஷத், தைத்திரீய உபநிஷத், கடோபநிஷத், சுவேதாசுவதர உபநிஷத், பிருஹதாரண்யகோபநிஷத், பிரச்னோபநிஷத், கேநோபநிஷத், ஈசோபநிஷத், முண்டகோபநிஷத், சாந்தோக்கிய உபநிஷத்.

இந்த பத்து உபநிஷதங்களுக்கும் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் பாஷ்யம் செய்துள்ளார்கள். பின்னர் இராமானுஜர், வித்யாரணயர், ஆனந்த தீர்த்தர் முதலானவர்கள் பாஷ்யம் செய்துள்ளனர்.

2. ஆகமம்

ஆகமம் என்ற சொல்லை ஆ + கமம் எனப் பிரிக்கலாம். ஆ = ஆன்மாக்களின் கமம் = பாசங்களை நீக்கம் செய்து முத்திப் பேற்றை அருளுவது. இறைவனது ஐந்து முகங்களிலிருந்து இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றினவென்று காரணாகமத்தால் அறிகிறோம். சத்யோஜாத முகத்திலிருந்து காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் என்ற ஆகமங்கள் தோன்றின. வாமதேவ முகத்திலிருந்து தீப்தம், சூக்ஷமம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என்ற ஆகமங்கள் தோன்றின. அகோர முகத்திலிருந்து விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், அநலம், வீரம் என்ற ஆகமங்கள் தோன்றின. தத்புருஷ முகத்திலிருந்து ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம் என்ற ஆகமங்கள் தோன்றின. ஈசான முகத்திலிருந்து ப்ரோத்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்ற ஆகமங்கள் தோன்றின.

இவ்விருபத்தெட்டு ஆகமங்களுள் பத்து ஆகமங்கள் சிவ பேதங்களாகும். ஏனை பதினெட்டு ஆகமங்கள் ருத்ர பேதங்களாகும். இவ்வாகமங்களில் சரியாபாதத்தில் பூஜைக்குரிய பொருள்களைச் சேகரித்தலும், பூஜை முறைகளும் கூறப்பட்டுள்ளன. கிரியாபாதத்தில் கர்ஷணம் (உழுதல்) முதல் பிரதிஷ்டைவரையில் உள்ள கிரியைகளும், நித்திய நைமித்திக பூஜைகளும் திருவிழா முறைகளும், சமய, விசேஷ, நிர்வாண தீட்சை விதிகளும் கூறப்பட்டுள்ளன. யோகபாதத்தில் ஆன்ம சுத்தி, அந்தர் யாகம் முதலியனவும், ஞானபாதத்தில் பதி, பசு, பாச இலக்கணங்களும் கூறப்பட்டிருக்கின்றன. மேலும் ஆகமங்களில் தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆத்ம ரூபம், ஆத்ம தரிசனம், ஆத்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் எனும் தசகாரியங்களது இலக்கணங்களும் உரைக்கப் பட்டிருக்கின்றன.

வைணவாகமங்கள்

ஸ்ரீமந் நாராயணனாகிய விஷ்ணுவை பரதேவதையாகக் கூறும் ஆகமங்கள் வைணவாகமங்களாகும். வைணவாகமங்கள் பாஞ்சராத்ராகமம் எனவும், வைகானஸாகமம் எனவும் இருவகைப்படும். பாஞ்சராத்ராகமம் பலரிஷிகளின் மூலமாகவும், வைகானஸாகமம் விகனஸர் என்ற

மகரிஷியின் மூலமாகவும் உபதேசிக்கப்பட்டன. இவ்விரு ஆகமங்களுக்கும் அதிக பேதமில்லை. ஆனால், ஆலய பூஜாவிதிகளிலும், தினசரியைகளிலும் சிறிது பேதமுண்டு. பாஞ்சராத்ரஸம் ஹிதைகளின்படி மேலக்கோட்டை என்கிற திருநாராயணபுரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் என்ற மூன்று ஆலயங்களிலும் பூஜை முதலியன நடைபெற்று வருகின்றன. திருப்பதி கோவில் வைகானஸ ஆகமத்தை ஒட்டி, நடந்துவருகிறது. ஒரு யாகத்தின் இடையில் ஐந்து இரவுகளில் பகவானால் உபதேசிக்கப்பட்டதால் பாஞ்சராத்ரம் எனப் பெயர் பெற்றது எனவும் கூறுவர். இவ்வாகமத்தில் பஞ்ச பூதங்கள், பஞ்ச தன்மாத்திரைகள், அஹங்காரம், புத்தி, அவ்வியக்தம் என ஐந்து பாகங்கள் விளக்கப்பட்டுள்ளன.

இப்பாஞ்சராத்ராகமங்களில் தேவாலயங்களுக்கென்று ஏற்பட்ட தலங்கள், தேவாலய நிர்மாணங்கள், விக்கிரகப் பிரதிஷ்டாக் கிரமங்கள், பூஜாகாலங்கள், பூஜாதிரவியங்கள், உத்ஸவாதிகள், ஸம்ப்ரோட்சணாதிகள், பூஜை செய்பவர்களின் யோக்கிய தாம்சங்கள், அவர்களுக்கு ஏற்பட்ட தீட்சை முதலியவைகள் விளக்கப்பட்டுள்ளன.

ஆகமங்களால் சொல்லப்படும் பொருள்களில் மிகவும் முக்கியமானவை மந்திரங்களும், தந்திரங்களும் (முத்திரைகளும்) ஆகும். இவை ஆலய நித்திய, நைமித்திக பூஜைகளுக்கு இன்றியமையாத சாதனங்களாகும்.

இந்து மத நூல்கள் தொடர்ச்சி :-

3. தோத்திரம்

பன்னிரு திருமுறைகள்:- திருமுறை என்பதற்குத் தம்மை அடைந்தவர்களைச் சிவமேயாக்குகின்ற முறையெனப் பொருள் கூறலாம். சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. அவையாவன : திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் 1, 2, 3 திருமுறைகளாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம் 4, 5, 6 திருமுறைகளாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் ஏழாம் திருமுறையாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம், திருக்கோவையார் எட்டாவது திருமுறை. திருமாளிகைத் தேவர் முதலிய

ஒன்பது பேர்கள் அருளிச் செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை. திருமூலதேவ நாயனார் அருளிச்செய்த திருமந்திரம் பத்தாம் திருமுறை. திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார் முதலிய பன்னிருவர் அருளியவை பதினோராம் திருமுறை. சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும். இதில், அறுபத்து மூன்று நாயன்மார்களது வரலாறு கூறப்பட்டுள்ளது.

முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படும். **'தே'** என்பதற்கு **தெய்வம்** எனவும் **'ஆரம்'** என்பதற்கு **மாலை** எனவும் பொருள் கொண்டு **'தேவனுக்குரிய பாமாலை'** எனப் பொருள் கூறுவர். தேவனிடத்தில் அன்பு செலுத்துவதற்குரிய நூலெனவும் பொருள் கூறுவர்.

'திருவாசகம்' என்பதற்கு தெய்வத்தன்மை வாய்ந்த வாசகங்களாலாகிய நூல் என்பது பொருள். திருவாசகப் பாடல்கள் கருப்பஞ் சாற்றினில் தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பவையாகும். இதனை ஒருமனப்பட்டுப் படிப்போரும், கேட்போரும், உணர்வோரும் உளமுருகி இறையருளில் திளைப்பர். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கு உருகார்' என்பது பழமொழி. திருவாசகத்தைப் படித்த மேல் நாட்டு அறிஞராகிய போப்பையர் அதில் மிகவும் ஈடுபட்டு ஆங்கிலத்தில் அதனை மொழிபெயர்த்துள்ளார்.

திருமுறைகளில் உள்ள சில பாடல்களைப் பொன்னம்பலம் ராமநாதன், பிலிப்ஸ் முதலியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

வைணவ சமயத்தில், விஷ்ணுவை தமிழ்ப் பாமாலைகளால் வழிபட்ட ஆழ்வார்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடி ஆழ்வார், குலசேகராழ்வார், திருமங்கை ஆழ்வார், திருப்பாணாழ்வார், மதுரகவி ஆழ்வார், திருமழிசை ஆழ்வார் எனப் பன்னிருவராவர். அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பிய இவர்களது பாக்கள் மதுரம் பழுத்துத் தேன் துளிப்பனவாக படிப்பவர்களுக்குத் தெய்வீக உணர்வை ஊட்டுகின்றன.

4. சாத்திரம்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்காகும்.

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தரவருட்
பண்பு வினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்ப முற்று."

	சாத்திரங்கள்	இயற்றியவர்கள்
1.	திருவுந்தியார்	திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார்
2.	திருக்களிற்றுப்படியார்	திருக்கடவூர் உய்யவந்தேவ நாயனார்
3.	சிவஞானபோதம்	மெய்கண்ட தேவ நாயனார்
4.	சிவஞான சித்தியார்	அருணந்தி சிவாசாரியார்
5.	இருபா இருபது	"
6.	உண்மை விளக்கம்	மனவாசகம் கடந்தார்
7.	சிவப்பிரகாசம்	உமாபதி சிவம்
8.	திருவருட்பயன்	"
9.	வினாவெண்பா	"
10.	போற்றிபஃறொடை	"
11.	கொடிக்கவி	"
12.	நெஞ்சுவிடு தூது	"
13.	உண்மைநெறி விளக்கம்	"
14.	சங்கற்ப நிராகரணம்	"

இவற்றை மெய்கண்ட சாத்திரங்கள் என்பர். இப்பதினான்கு சாத்திரங்களில் தலைசிறந்தது சிவஞானபோதமாகும். சிவம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருள். ஞானம் என்றால் அதனை அறிதல். போதம் என்றால் தெளிதல். சிவஞானம்போதம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய கடவுளை அறிந்து தெளிதலுக்குரிய நூல் எனப் பொருள்படும். இது மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பட்டது. இதில் பன்னிரண்டு சூத்திரங்கள் உள்ளன.

பதியின் உண்மையினை முதற்சூத்திரமும், பதியின் பொது இலக்கணத்தை இரண்டாம் சூத்திரமும், பதியின் சிறப்பிலக்கணத்தை ஆறாம் சூத்திரமும் உணர்த்தும். பசுவின் உண்மையை மூன்றாம் சூத்திரமும், பசுவின் பொது இலக்கணத்தை நான்காம் சூத்திரமும், பசுவின் சிறப்பு இலக்கணத்தை ஏழாம் சூத்திரமும் இயம்பும். பாச உண்மையை இரண்டாம் சூத்திரத்தாலும், பாசத்தின் பொது இலக்கணத்தை நான்காம் சூத்திரத்தாலும், பாசத்தின் சிறப்பிலக் கணத்தை ஐந்தாம் சூத்திரத்தாலும் உணரலாம்.

ஞானத்தினை உணரும் முறையை எட்டாம் சூத்திரத்தாலும், ஆன்மசுத்தியை ஒன்பதாம் சூத்திரத்தாலும், பாசநீக்கத்தை பத்தாம் சூத்திரத்தாலும், சிவப்பேற்றினை பதினொன்றாம் சூத்திரத்தாலும், அணைந்தோர் தன்மையை பன்னிரண்டாம் சூத்திரத்தாலும் தெள்ளிதில் தெளியலாம்.

இதனை அடிப்படையாகக் கொண்டே ஏனைய சைவ சாத்திரங்கள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளன. சிவஞானபோதத்திற்கு பாண்டிப் பெருமாள் விருத்தி, சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞானபோத மாபாடியம் எனும் உரைநூல்கள் உள்ளன. சிவஞானபாடியத்தை திராவிட மகாபாடியம் எனக் கூறுவர்.

அப்பாடியம் விக்கிரமசிங்கபுரத்திலுதித்தவரும், திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தவருமான மாதவச் சிவஞான சுவாமிகளால் எழுதப்பட்டது. சிவஞானபோதத்தை ஹாய்சிங்டன், பையட்பாதிரியார், கார்டன் மாத்யூஸ், நல்லசாமிப்பிள்ளை, டேவிட் நவமணி நாடார், சிவபாத சுந்தரம் முதலியோர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

இச்சிவஞானபோதத்துக்கு அடுத்தபடியாகத் திகழ்வதும் சிவஞானபோதத்தைத் தழுவி எழுதப்பட்டதும் ஆகிய பெருநூல் சிவஞான சித்தியார் என்பதாகும். இதனை இயற்றியவர் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள். இவர் மெய்கண்டாரின் தந்தையின் குரு. ஆயினும் மெய்கண்டாரின் மாணவரானார். சித்தியார் சுபக்கம், பரபக்கம் என இரு பிரிவுகள் கொண்டது. இதற்கு சிவஞான யோகியாரும், திருவாவடுதுறை ஆதீனத்தில் பதினாறாம் பட்டத்தில் வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரும் எழுதிய உரைகள் உண்டு. மேலும் நிரம்ப அழகிய தேசிகர்,

மறைஞான தேசிகர், சிவாக்கிரயோகி ஞானப் பிரகாசர் ஆகியோர் சுபக்கத்திற்கு தனித்தனியே உரை எழுதியுள்ளார்கள்.

பரபக்கத்திற்கு தத்துவப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் உரை எழுதியுள்ளார். சித்தியாரின் பெரும்பகுதிகளை டாக்டர் கிராண்ட், நல்லசாமிப் பிள்ளை, சிவராமன் முதலிய அறிஞர்கள் ஆங்கிலத்தில் ஆக்கியுள்ளார்கள், B.D. ஜெயின் என்பவர் இந்தி மொழியில் வெளியிட்டிருக்கிறார்.

இருபா இருபதில் குருவுக்கும் மாணவனுக்கும் உள்ள சம்பாடணை முறையில் சைவசித்தாந்தக் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. திருவுந்தியாரில் முத்திமார்க்கம் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இதனைத் தழுவி வெளிவந்ததே திருக்களிற்றுப்படியாராகும். மனவாசகம் கடந்தார் இயற்றிய உண்மைவிளக்கம் சித்தாந்த உண்மைகளை நன்கு விளக்குகிறது.

உமாபதி சிவாசாரியார் இயற்றியவை ஏனைய எட்டு நூல்களுமாகும். சிவப்பிரகாசம் சிவஞானபோதத்தின் சார்பு நூலாகும். சைவ நூல்களின் இயல்பும், தீட்சை வகைகளும் இதில் கூறப்பட்டுள்ளன. இது பொது, சிறப்பு என இருவகைப்படும். நூறு விருத்தங்களால் ஆகியது. பசு, பதி, பாச இலக்கணம் நன்கு இதில் கூறப்பட்டுள்ளது.

திருவருட்பயன் திருக்குறள் போன்று குறள் வெண்பாக்களால் ஆகியது. பத்து அதிகாரங்களை உடையது. நூறு பாக்களைக் கொண்டது. வினாவெண்பா 13 பாக்களாலாகியது. ஆசிரியர் தம் குருநாதராகிய மறைஞான சம்பந்தரிடம் சாத்திர உண்மைகளை வினவும் முறையில் எழுதப்பட்டது. போற்றிப் பஃறொடை தமக்கு சிவஞானம் நல்கிய குருமூர்த்தியை வாழ்த்திய பாடல்கள் அடங்கியவை.

கொடிக்கவி சில மந்திரங்களின் இயல்பை உணர்த்துவது. ஏறாத தில்லைக்கொடியை ஏற்றியது. நெஞ்சுவிடு தூது ஆசிரியர் தம் குருவிடம் மாலை வாங்கிவரும்படி தனது நெஞ்சை தூது விடும் முறையில் பாடப்பட்டது. உண்மை நெறி விளக்கம் முற்கூறிய தசகாரியங்களை விளக்குவது. சங்கற்ப நிராகரணம் சமயக் கொள்கைகளைக் கூறி வேற்றுச் சமயக் கொள்கைகளின் வேறுபாடுகளை விளக்குவது.

5. இதிகாசம்

இதிகாசம் என்பதற்கு "ஐதீகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு" என்று பொருள். வேத உபநிஷதங்களின் உட்பொருளை அடக்கிக் கதை வடிவத்தில் இவை எழுதப்பட்டுள்ளன. இராமாயணமும், பாரதமும் இதிகாசங்களாகும்.

இராமாயண காவியத்தை இயற்றியவர் வால்மீகி முனிவர் ஆவார். இதில் அரசநீதி, சத்யபரிபாலனம், புத்திரர் கடமை, பெரியோர் வழிபாடு, கற்பு நெறியின் மேன்மை இவை விளக்கப்பட்டுள்ளன.

பாரதத்தை இயற்றியவர் வியாச முனிவர். இதை ஐந்தாம் வேதம் என்றும் சிறப்பித்துக் கூறுவர். இதில் இல்லாதது வேறு எங்கும் சொல்லப்படவில்லை என்ற சிறப்பினையுடையது. ஞான நூல்களில் சிறந்த பகவத் கீதை இதனுள் அடங்கி இருக்கிறது.

இந்த இரு இதிகாசங்களும் தர்ம, அதர்மப் போராட்டத்தில் தர்மமே முடிவில் வெற்றி பெறும் என்பதை நன்கு விளக்கிக் கூறியுள்ளன.

6. புராணங்கள்

புராணம் என்பதற்கு 'பழைய வரலாறுகள்' என்பது பொருள். இதனை எழுதியவர் வேத வியாஸர். இதனை உலகிற்கு உதவியவர் சூதபுராணிகர். புராணங்கள் பதினெட்டாகும். அவை, பிரமம், பத்மம், வைணவம், சைவம், பாகவதம், பவிஷ்யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்னேயம், பிரம கைவர்த்தம், இலிங்கம், வராகம், வாமனம், கூர்மம், மத்ஸ்யம், காருடம், ஸ்காந்தம், பிர்மாண்டம் என்பனவாம்.

இதில் சைவம், பவிஷ்யம், மார்க்கண்டேயம், இலிங்கம், ஸ்காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிர்மாண்டம் என்பன சிவபுராணங்களாம். காருடம், நாரதீயம், வைஷ்ணவம், பாகவதம் என்பன விஷ்ணு புராணங்களாம். பிர்மம், பதுமம் என்பவை பிரமனைச் சேர்ந்தவை. ஆக்னேய புராணம் அக்கினியையும், பிரம கைவர்த்தம் சூரியனையும் சார்ந்தவை.

வேதம் 'ஸத்யம்வத', 'தர்மம்சர' என்று கூறுகிறது. இதன் பொருள் 'உண்மையைப் பேசு'; 'தர்மத்தைச் செய்' என்பதாகும். இத்தகைய வேதக் கட்டளைகளைப் புராணங்கள், கற்றோரும், மற்றோரும் நன்கு அறிந்து கடைப்பிடித்து உய்யுமாறு சுவையான நீதிக்கதைகளால் விளக்குகின்றன.

3. இந்து மத உட்பிரிவுகள்

நமது இந்து மதம் ஒன்றே எனினும், அதன் கிளைகளாகப் பல மதங்கள் உள்ளன. அவை மாறுபட்ட சில கொள்கைகளைக் கொண்டவனவாகவும் இருக்கின்றன. கடவுளே இல்லை என்று சொல்லுகின்ற கொள்கையாளரும் இருக்கின்றனர்.

பிரமம் என்ற ஒரு பொருளே உளது. ஜீவர்களும் பிரமமே ஆவர் எனக் கூறுபவரும், கடவுளும், உயிர்களும் உள்ள பொருள்கள்; அவை வேறு வேறாகவே இருக்கின்றன எனச் சொல்பவரும், கடவுளும், உயிர்களும் வெவ்வேறு எனினும் உயிர்களும் கடவுளின் பரிணாமமே என கூறுபவரும் உள்ளனர்.

உயிர்களைப் பற்றி நிற்கும் ஆணவத்தை வேறு விதமாகச் சிற்சிலர் கூறுகின்றனர். வினையைப் பற்றிய வேறுபாடுகளும் பல உள. கடவுளை உயிர்கள் அடையவேண்டியதற்கு கைக்கொள்ள வேண்டிய முறைகளையும் பல விதங்களாகக் கூறுகின்றனர்.

உயிர்களின் மறுபிறப்பை மாறுபட்ட சில கொள்கைகளோடு சில மதங்கள் கூறுகின்றன. மோட்சத்தைப் பற்றி பலதிறப்பட்ட வித்தியாசக் கொள்கைகளும் நிலவுகின்றன.

சமயங்களைப் புறப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், அகப்புறச்சமயங்கள், அகச்சமயங்கள் என நான்காகப் பகுத்து அவற்றில் ஒவ்வொன்றிலும் ஆறு சமயங்கள் உள்ளனவாகவும், அவற்றின் கிளைகளாகப் பல சமயங்கள் இருக்கின்றன என்றும் கூறியுள்ளனர். அவற்றின் கொள்கைகளையும், அவற்றிற்கு மறுப்பினையும் எடுத்தியம்பியுள்ளனர். அவைகளும் சில சமயங்கள் பெயர் மாத்திரமாக நிற்கின்றனவேயன்றி அதனை மேற்கொண்டு வாழ்கின்ற மக்கள் தொகுதி எங்கும் காணப்படவில்லை. ஆதலின், தற்காலத்தில் நடை முறையில் இருக்கும் இந்து மதக்கிளைச் சமயங்களை ஆராய்ந்து மதப்பிரிவுகளை இணைத்து இந்துக்கள் அனைவரையும் அக்கொள்கைகளைக் கைக்கொண்டு வாழச்செய்வது இந்துமத ஒற்றுமைக்கும், வளர்ச்சிக்கும், மேன்மைக்கும் அடித்தளம் அமைப்பதாய் இருக்குமாதலின் இந்துமதக் கிளைமதங்கள் ஒவ்வொன்றினுடையக் கொள்கைகளை எடுத்துக் கூறி நடுநிலையோடு ஆராய்ந்து ஒரு முடிவான கொள்கையோடு அம்மதத்தை அமைப்பது சமய அறிஞர் கடப்பாடாகும்.

கடவுள் இல்லையெனக் கூறும் சமயங்கள்

உலகாயதம், பௌத்தம், சமணம், சாக்கியம், மீமாம்ஸம் என்ற இந்த ஐந்து மதங்களும் கடவுள் இல்லையெனக் கூறும்.

1. உலகாயத மதக் கொள்கைகள்

இவர்கள் ஐம்பெரும் பூதங்களில், நிலம், நீர், தீ, காற்று, எனும் நான்கு பூதங்களே உள்ளன. இவைகள் சேர்ந்து உடம்பு உண்டாகின்றது. இவ்வுடம்பில் பூதங்களின் சேர்க்கையால் அறிவுண்டாகும். உடம்பு வளர அறிவு வளரும். உடம்பு தேய அறிவும் தேயும். கடவுளும், வினையும், உயிரும் இல்லை. நல்ல பெண்களை மணந்து அவரோடு இன்பம் நுகர்வதே முத்தியாகும் என்பர். இது **'சாருவாகம்'** எனவும் பெயர்பெறும். இவர்கள் கண்ணால் கண்டதையே நம்புவார்கள். காணமுடியாதனவற்றை நம்பமாட்டார்கள். ஆதலால், இதனைக் 'காட்சிவாதம்', அல்லது 'நாஸ்திகவாதம்' எனவும் கூறுவர்.

இவர்களில் சிலர் உடம்பை ஆன்மா எனக் கூறுகின்றனர். வேறு சிலர் மெய், வாய், கண், மூக்கு, செவியெனும் இந்திரியங்களே ஆன்மா என்கின்றனர். நமது பருவுடம்பின் உள்ளுடம்பாகிய சூட்சம தேகமே ஆன்மா என்பாரும் உளர். பிராண வாயுவே ஆன்மா எனவும், மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களாகிய அந்தக்கரணங்கள் அல்லது உட்கருவிகளே ஆன்மா எனவும் வேறு சிலர் கூறுகின்றனர்.

ஐம்பூதங்களுள் ஒன்றாகிய ஆகாயம் தற்காலத்தில் விஞ்ஞான முறைபடி ஓசைகளை வாங்கியும், ஒலிகளைப் பரப்பியும் உலகில் விளங்குவதை நாம் அனைவரும் அறிவோம். ஆதலால், ஆகாயம் இல்லையெனக் கூறுதல் பொருந்தாது. இன்பம் என்பது தன்னிடத்திருந்தே எழுகின்ற ஓர் உணர்வாகும். ஆதலால், பெண் இன்பப் பொருளல்ல. பெண் இன்பம் முத்தியுமாகாது. அவ்வின்பம் ஒருவகைச் சிற்றின்பமே. பேரின்பம் என்பது ஒன்றுண்டென உணர்ந்து, அது சிற்றின்பத்தினும் பல மடங்கு பேரானந்தத்தைத் தருவது எனத் தெரிந்து, சிற்றின்பத்தோடு பேரின்பத்தையும் நுகர முயல்வதே ஆறறிவு படைத்த அறிஞரின் செயலாம்.

கடவுளைக் கண்ணால் கண்டதில்லை. ஆதலால், கடவுள் இல்லை என இவர்கள் கூறுவது தவறு. ஒரு பொருள் உண்டென அறிவதற்கு மூன்று அளவைகள் உள்ளன. அவை காண்டல் அளவை, கருதல் அளவை,

நூலளவை என்பனவாம். நம்மால் எல்லாவற்றையும் கண்ணால் காண இயலாது. அவ்வாறு காண முடியாதவற்றைக் கருதல் அளவையாலும், நூல் அளவையாலும் உணர்ந்து அறியலாம். கடவுளைக் கண்ணால் கண்ட பெரியோர்கள் பலர் உளர். எல்லோராலும் கடவுளைக் காணமுடியாது. காணமுடியாதவர் கடவுளின் செயல்களைக் கண்டு அவர் உண்டு எனக் கருதுதல் வேண்டும். அன்றேல் கடவுளைப் பற்றிக் கூறும் நூல்களால் உணர வேண்டும்.

மின்சாரத்தைக் கண்ணால் காணமுடியாது. மின்சாரம் செய்யும் வேலையால் அது உண்டென உணர்கிறோம். நமது உடம்பில் உயிர் இருப்பதைக் கண்ணால் காணமுடியவில்லை. ஆதலால், எனக்கு உயிரில்லை என்று யாராவது கூறுவார்களா? அதுபோலக் கடவுளைக் கண்ணால் காணமுடியவில்லை. ஆதலால், கடவுள் இல்லை எனக் கூறுவதும் தவறு.

நாம் நமது உடம்பை எனது உடம்பு எனக் கூறுவதால் நான் வேறு உட்ம்பு வேறு எனத் தெரிகிறது. ஆதலால் உடம்பு ஆன்மா அன்று. உடம்பினுள் இருக்கும் உயிரே ஆன்மாவாகும். இந்திரியங்கள் ஆன்மாவாகும் எனச் சிலர் கூறுகின்றனர். மெய், வாய், கண், மூக்கு செவியாகிய இந்திரியங்களில் ஒன்று செய்வதை மற்றொன்றிற்குச் செய்ய இயலாது. ஆதலால், ஐந்து இந்திரியங்களுக்கும் வேறாக ஒன்று இருந்து அவற்றைச் செய்விக்க வேண்டும் அதுவே ஆன்மாவாகும். இவ்வாறே அந்தக்கரணங்கள், பிராணன் முதலியனவும் ஆன்மாவாகா. ஆன்மா என்பது தனியாக உடம்பினுள் அமைந்திருக்கிறது. இவைகளிலிருந்து கடவுளும், ஆன்மாவும், உலகமும் வேறு வேறாக உண்டென உணரலாம்.

2. புத்த மதம்

புத்தர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட மதம் புத்த மதமாகும். 'புத்தர்' என்ற சொல்லுக்கு அறிஞர் என்று பெயர். இவர் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் தோன்றினார். உலக மக்களின் துன்பத்தை நீக்க முயன்றார். அதற்குரிய ஞானம் பெற பல இடங்களுக்குச் சென்று தவமாற்றி ஞானம் பெற்றார். பெற்ற ஞானத்தை பல இடங்களுக்குச் சென்று போதித்தார். இப்போதனைகள் அடங்கிய நூலுக்குப் "பிடகநூல்" எனப் பெயர். இப்புத்த மதம் மாத்தியமிகம், யோகசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம் என நான்கு வகைப்படும். இவர்களுடைய கொள்கை,

"எல்லாப் பொருளும் சூன்யம், கடவுள் ஒருவர் இல்லை. ஞானமே ஆன்மா. வினையும் மறுபிறப்பும் உண்டு. வினையை ஊட்ட ஒரு கடவுள் வேண்டாம். அதுதானே சென்று பற்றும்" என்பனவாம்.

இம்மதம் கூறும் தீக்குணங்கள் பத்து :

பொய் சொல்லல், கோட் சொல்லல், கோபித்துப் பேசுதல், பயனல்ல பேசுதல், களவு, வீணான வேலை செய்தல், கொலை, தீயன நினைத்தல், தீயன ஆசைப்படுதல், காமப்பற்று என்பனவாம்.

இம்மதம் கூறும் நற்குணங்கள் பத்து :

மெய் பேசுதல், நல்லவார்த்தை பேசுதல், இனியன கூறல், பயன்படுவன சொலல், பள்ளிவலம் வருதல், தவம்புரிதல், தானம் செய்தல், அருள் நினைவு, ஆசை அறுத்தல், தவப்பற்று முதலியனவாம்.

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் எனும் ஐந்து கந்தம் அறக்கெடுதலே முத்தியெனக் கூறுவர். இவர்கள் புத்தனையே கடவுளாகக் கொண்டு வணங்கி வருகின்றனர். துன்ப விடுதலை அடைவதை 'நிர்வாணம்' எனவும், நிர்வாணத்தை ஒருவித சமாதி நிலையெனவும் கூறுவர்.

3. சமணம்

இதனை ஆருகதம், ஜைனம் எனவும் கூறுவர். இதில் கூறப்படும் பொருள்கள் ஏழு. அவையாவன: சீவன், அசீவன், ஆச்சிரவம், சமுவரம், நிர்ச்சரம், பந்தம், வீடு என்பனவாம்.

சீவன் அநாதி சித்தன், முத்தன், பெத்தன் என மூவகைப்படுவன். அநாதி சித்தனே அருகக் கடவுள். முத்தன் ஆசாபாசம் நீக்கிக் கட்டறுத்தவன். பெத்தன் ஆசை முதலியவற்றால் கட்டுண்டவன்.

சீவன் உடம்பளவில் வியாபகமாயிருக்கும். அது உடம்பு தோறும் வெவ்வேறாம். சீவன் ஆசாபாசம் விட்டு சுதந்திரம் அடைந்து அனந்தஞானம் முதலிய எட்டுக் குணங்களைப் பெற்று உலகம் கடந்து எல்லையில்லா ஆகாயத்தில் மேல்நோக்கிச் சென்று அம்மேலிடத்தில் இருப்பதுவே முத்தியாகும் என்பர்.

4. சாங்கியம்

இம்மதம் இறைவன் ஒருவன் இல்லை, மூலப்பகுதியும் ஆன்மாவும் உண்டு. தத்துவம் இருபத்துநான்காகும். இருபத்தைந்தாம் தத்துவம் புருடன். புருடன் பெத்தநிலையிலும், முத்திநிலையிலும் ஒரே தன்மையாய் தாமரையிலைத் தண்ணீர்போல பற்றற்று நிற்பன். மூலப்பகுதியின் பரிணாமம் புத்தியாகும். அதுவே அந்தக்கரணமுமாகும். மூலப் பகுதியையும் புருடனையும் பகுத்து உணர்வதால் அவிச்சை நீங்கும். அதுவே முத்தியாகும் என இயம்புகின்றது. இதனைத் தோற்றுவித்தவர் கபிலர்.

5. மீமாம்சம்

மீமாம்சகர் "வேதம் அநாதி. அதுவே பிரமாணம், வினை, மோட்சம், முதலியவற்றைத் தரும். காமிய வினை காமியப் பயனையும், நிஷ்காம்ய வினை முத்தியையும் கொடுக்கும், கடவுள் உண்டென்பது பொய், உலகம் தோன்றி அழியும் என்பதும் பொய்யாகும். உலகம் என்றும் நிலைபெற்று விளங்கும்" எனக் கூறுவர். இவர்கள் ஞானகாண்டத்தை இகழ்ந்து கர்மகாண்டத்தைக் கைக்கொள்வர். இந்நூலியற்றியவர் ஜைமினி.

இது பட்டாசாரியின் மதம், பிரபாகரன் மதம் என இரு உட்பிரிவுகளைக் கொண்டது. பட்டன் மதத்தினர் "கன்மம் பயன் கொடுக்கும். வேத வேள்விகள் தத்துவ ஞானத்தைத் தரும். சொர்க்க முத்தியே முத்தி. இந்த முத்தியில் ஒரு வகை ஆனந்தம் உண்டு என்பர்.

பிரபாகர மதத்தினர் "ஞானம் கெட்டபோது கல்போல் கிடப்பதே முத்தி" என்பர். இது வினைகெடு முத்தியெனவும் பெயர் பெறும். பிரபாகர மதத்துக்கு 'குருமதம்' எனவும் பெயருண்டு.

பௌத்தம், சமணம் முதலிய மதங்களில் கூறப்படும் ஒழுக்கநெறிகள் இந்துமதத்தில் உள்ளனவேயாகும்.

இவ்வைந்து மதங்களும் கடவுள் இல்லையெனக் கூறுவதால் இவற்றை அத்வைத, வைணவ, துவைத, சைவப் பெரியார்கள் கண்டித்துள்ளனர்.

4. அத்வைத, விசிஷ்டாத்வைத, துவைத சித்தாந்தங்கள்

1. அத்வைதம்

இந்த மதத்தைப் பரப்பியவர் சங்கரபகவத் பாதராவார். இவர் 1200 வருடங்களுக்கும் முன் மலையாள நாட்டில் காலடி என்னும் திருப்பதியில் அவதரித்தார். இளமையிலேயே துறவியாகி வேதாந்த விசாரணை செய்து காசி, காசுமீர் வரை சென்று, அத்வைத மதத்தைப் பல இடங்களில் பிரசாரம் செய்து வந்தார். புத்த, சமண மதக்கொள்கைகளைக் கண்டித்து வெற்றி பெற்றார். இவர் பெற்ற வெற்றியால் பழைய வேதாந்த நெறி மீண்டும் தழைத்தோங்கிற்று. அத்வைத மதத்திற்கு 'வேதாந்த மதம்' எனவும் பெயருண்டு. இதனைப் பின்பற்றுவோர்களை வேதாந்திகள் எனக் கூறுவர்.

இவர் வேதவியாசர் இயற்றிய பிரமசூத்திரத்திற்கும், பகவத் கீதைக்கும், தசோபநிஷத்துகளுக்கும் அத்வைத சித்தாந்தப்படி பாஷ்யம் இயற்றியுள்ளார். இம்மூன்றையும் பிரஸ்தானத் திரயம் எனக் கூறுவர். விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கும் பாஷ்யம் இயற்றியதோடு மூர்த்திபேதம் பாராட்டாமல் தோத்திரங்களை இயற்றியுள்ளார். சைவ, வைணவ பேதமற்ற கொள்கையையுடையவர். இறைவனை எங்கும், யாவுமாய்ப் பார்த்துப் பரமானந்தம் அடைந்து வாழ்ந்தவர். தமது 32ம் வயதில் முத்தி பெற்றார்.

அத்வைதம் என்னும் சொல்லை அ + த்வைதம் எனப் பிரிக்கலாம். அ = இல்லை, த்வைதம் = இரண்டு. அத்வைதம் = இரண்டற்ற ஒன்று. "அகம் பிர்மாஸ்மி" நான் பிர்மமாயிருக்கிறேன்.

அத்வைத மத சாரம் :

பிரமம் என்ற ஒரு பொருளே உள்ளது. ஜீவர்கள் பிரமமே ஆவர். காணப்படும் உலகம், கயிற்றில் பாம்பும், கானல் ஜலமும் போல பொய்த்தோற்றப் பொருளேயாகும். ஒரு சூரியன் பல குடநீர்களில் தோன்றுவது போலவும், ஒரு உருவம் பல கண்ணாடிகளில் பிரதிபிம்பிப்பது போலவும், ஒரு பிரமமே யாவற்றிலும் விளங்கி நிற்கிறது. நாம் பாசக்கட்டுகளால் நிலைபெற்ற இன்பத்தை உணராமல் இருக்கிறோம். ஞானத்தினால் அஞ்ஞானம் நீங்கும் பொழுது அஞ்ஞானத்தால் தோன்றிய கட்டுகள் அனைத்தும் நீங்கும். உண்மை இன்பம் விளங்கும். கேட்டல்,

சிந்தித்தல், தெளிதல், நிட்டை, கூடல் முதலியவற்றால் நிலைபெற்ற பேரின்பத்தை அடைந்து பிரமமயமாகி முத்தி அடையலாம்.

2. விசிஷ்டாத்வைதம்

இந்த மதத்தைப் பரப்பியவர் இராமாநுஜர் ஆவார். இவர் செங்கல்பட்டுக்கருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் கி.பி. 1017 ல் அவதரித்தார். தனது பதினைந்தாவது பிராயம் வரை வீட்டிலேயே வேத வேதாந்தங்களை வாசித்துக் கொண்டிருந்தார். பின்னர் விசிஷ்டாத்வைதத்தில் விருப்பமுற்று, ஸ்ரீரங்கம் சென்று பெரியநம்பிகளை ஆச்ரயித்து கொள்கையை நன்கு அறிந்து கொண்டார். இல்லறத்தில் இருந்த இவர் தமது பதினெட்டாவது வயதில் துறவு பூண்டார். பிரமசூத்திரம், கீதை முதலியவற்றிற்கு விசிஷ்டாத்வைதக் கொள்கைப்படி பாஷ்யம் இயற்றினார்.

விசிஷ்ட + அத்வைதம் = விசிஷ்டாத்வைதம். அத்வைதம் = இரண்டற்றது ஒன்றாக உள்ளது. விசிஷ்டம் = விசேஷம். சித்து, அசித்து இவைகளை உடம்பாகக் கொண்டிருக்கிற விசேஷத்தை உடையது. ஆகவே, சித்து, அசித்துச் சேர்க்கையால் விளங்கும் இரண்டற்ற ஒன்றான பிரமம் உண்டென்று கூறும் மதம் விசிஷ்டாத்வைதமாகும்.

நீலகண்ட சிவாசாரியார் பிரமசூத்திர பாஷ்யத்திற்கு சைவ விசிஷ்டாத்வைத பரமாக பாஷ்யம் இயற்றியுள்ளார். அதற்கு நீலகண்ட பாஷ்யம் என்று பெயர். இவர் சங்கரர் காலத்தில் வாழ்ந்தவர் எனத் தெரிகிறது. கோகர்ணத்தில் பிறந்த தெலுங்கர். சைவ ஆகமமாதி சாஸ்திரங்களைக் கற்றுத்தேர்ந்தவர்.

விசிஷ்டாத்வைதக் கொள்கைகள் :

பரப்பிரமம் ஒருவரே. அவர் சத்து என்றும் பிரமம் என்றும் ஈசுவரர் என்றும் விஷ்ணு என்றும் பெயர் பெறுகிறார். அவர் சித்து என்னும் ஆத்மாவோடும், அசித்து என்னும் அநாத்மாவோடும் எப்பொழுதும் சேர்ந்து இருக்கிறார். பரமாத்மா ஒருவரே நித்தியர். சுதந்திரம் உடையவர். சித்தும், அசித்தும் பரதந்திரமுடையவை. சித்து, அசித்து, பரப்பிரமம் ஆகிய மூன்றும் தனித்தனியாக இராமல் ஒரு பொருளும் அதன் குணமும் போல சேர்ந்து இருக்கிறது. சித்தும், அசித்தும் சரீரம். பரப்பிரமம் சரீரி. சரீரி இல்லாமல் சரீரமும் சரீரம் இல்லாமல் சரீரியும் இல்லை. ஜீவகோடிகள் இறைவனின் தாசர்கள். மோட்சம் அடைய நிர்மலமான

பத்தியே சாதனம். சித்து, அசித்து, பரப்பிரமம் என்பதனைப் பற்றி ஞானம் பெறல், ஆசாரிய அன்பு, சுருதி ஸ்மிருதி நம்பிக்கை, மோட்ச விருப்பம், உலக ஆசை அறுதல், தரும சிந்தனை, வேத பாராயணம், சாது சங்கச் சேர்க்கை என்பவற்றால் கர்ம பந்தத்தை விட்டொழித்து முத்தி பெறலாம்.

3. துவைதம்

இந்த மதத்தைப் பரப்பியவர் மத்வாசாரியர் ஆவர். இவர் துளுவ நாட்டில் உடுப்பிக்கு அருகில் அநந்தேசுவர கிராமத்தில் அவதரித்தார். ஒன்பதாவது வயதிலேயே அச்சுதப்பிரகாசரின் சீடராகி துறவியானார். பிரம சூத்திரம், கீதைதசோபநிஷத் முதலிய நூற்களுக்குத் துவைத பரமாக பாஷ்யம் இயற்றியுள்ளார். முப்பத்தேழு பெரியகிரந்தங்கள் இயற்றியுள்ளார்.

துவைதம். 'துவி' என்றால் இரண்டு. பிரபஞ்சமும், பரமாத்மாவும், ஜீவாத்மாவும் வேறு வேறானவை. பரமாத்மா தனி. மற்றவை அதில் சேராதவை என்பதாம்.

துவைத கொள்கைகள் :

பரமாத்மா, ஜீவாத்மா, ஜடஉலகம் இவை எவராலும் உண்டாக்கப்படாத நித்தியப் பொருள்கள். ஜீவாத்மாக்களுக்கு ஜனன, மரணமுண்டு. உலகம் ஒரு தோற்றமல்ல, உண்மையானதே. சுதந்திரம் இறைவன் ஒருவனுக்கே உள்ளது. கடவுளும், உயிர்களும் எந்நிலையிலும் எக்காலத்தும் வேறானவர்களே, இறைவனும், இறைவியும் எல்லா உயிர்களுக்கும் அம்மையப்பர். பிரமா முதலிய தேவர்களும் ஜீவர்களே. அவர்களுக்கும் பிறப்பு, இறப்பு, ஸ்தூல தேகமுண்டு. கர்மம் தீர்ந்தால் மோட்சமுண்டாகும்.

5. தர்சனங்கள்

தர்சனமாவது தர்சிப்பதற்கு அல்லது அனுபவித்து அறிவதற்குரிய சாத்திரமாம். இது வைசேடிகம், நியாயம், ஸாங்கியம், யோகம், பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை என அறுவகைப்படும்.

1. வைசேடிகம்

வைசேடிகத்தைக் கணாதர் என்பவர் இயற்றினார். வைசேடிகப் பொருள்கள் பிரமாணம் முதல் நிக்கிரகம் வரை பதினாறாம். இதன் அளவைகள் நான்காம். அவை, காண்டல், கருதல், உரை, உவமானம் என்பனவாம். இதன் பிரமேயம் ஆன்மா முதல் முத்தி வரை பன்னிரண்டாம். இதன் நித்தியப் பொருள்கள் நான்கு பூதங்களின் பரமாணுக்களும், ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என்பனவுமாக ஆறாம். உலகிற்கு முதற்காரணம் அணுக்களே. படைத்தல் என்பது பரமான்மா முக்குணத்தோடு கூடி நின்று செய்வதாகும். ஜீவான் மாக்கள் பலவாகும். இதன் மோட்சம் இந்திரியங்களையும், அவற்றின் தொழில்களையும், சுகதுக்கங்களையும் விடுதலேயாம்.

2. நியாயம்

இதனை இயற்றியவர் அக்கபாதராவர். யுக்தியே இதன் அடிப்படையாகும். யுக்தி விசாரணையால் நுணுகிய புத்தி உண்டாகிறது. அதன் வழி வேதாந்த அறிவைப் பெறுதலே இதன் பயனாகும். நியாய சாத்திரத்தில் பொருள்களை ஏழாகப் பகுத்துள்ளனர். அவை திரவியம், குணம், கர்மம், ஸாமான்யம், விசேடம், ஸமவாயம், அபாவம் என்பனவாம். வைசேடிகம், நியாயம் இரண்டினையும் தருக்கம் எனவும் கூறுவர்.

3. யோகம்

இதனை வகுத்தவர் பதஞ்சலி முனிவராவர். இதன் அங்கங்கள் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம்.

இது கூறுவதாவது :

இருபத்தாறாம் தத்துவமாக இறைவன் ஒருவன் உளன். அவன் முற்றுணர்வுடையவன். சாத்திரங்களை அருளிச் செய்தவன். ஆன்மாக்களுக்கு ஞானத்தை அருளுபவன். அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்வம், வசித்வம் முதலிய அட்டமா சித்திகளைப் பெற்றிருப்பதே முக்தி. தியானத்தால் இறைவன் அகக் கண்ணுக்கு விளங்குவான். மீமாம்ஸை, ஸாங்கியம் இரண்டும் முன்பே கூறப்பட்டுள்ளது. உத்திரமீமாம்ஸை வேதத்தில் உள்ள ஞான காண்டமாகும். இதனை அத்வைதம் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

6. வைணவ மதம்

இராமானுஜாசாரியரால் நிறுவப்பெற்ற வைணவ விசிஷ்டாத்வைத்திலும், பாஞ்சராத்ரம் என்ற சமயச் சார்பிலும் வைணவம் நன்கு பேசப்படுகிறது. வைணவம் என்பதற்கு விஷ்ணுவைக் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் எனப் பெயர். இது வடகலை, தென்கலை என இருவகைப்படும். வடகலையார் வடமொழியில் உள்ள வேத சாஸ்திரங்களுக்கு ஏற்றம் கொடுப்பர். தென்கலையார் தமிழ் மொழியிலுள்ள ஆழ்வாராதிகளின் வாக்குகளுக்குப் பெருமை கொடுப்பர்.

வைணவத்தில் ஐந்து குறிகள் உண்டு. அவை தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம், அர்ச்சனம் என்பனவாம். இதனைப் பஞ்ச சம்ஸ்காரம் என்பர். வைணவம் கூறும் முக்கியப் பொருள்கள் ஐந்து. அதனை அர்த்த பஞ்சகம் என்பர். அவை வருமாறு :

1. அடைபவன்	ஜீவன்	ஸ்வஸ்வரூபம்
2. அடையப்படுவது	விஷ்ணு	பரஸ்வரூபம்
3. பயன்	முடிவிலா இன்பம்	புருஷார்த்த ஸ்வரூபம்
4. உபாயம்	பக்தி	உபாய சொரூபம்
5. இடையூறு	சாஸ்திரவிரோதமான செயல்கள்	விரோதிஸ்வரூபம்

சைவத்தைப் போல இதிலும் முப்பொருள் உண்மை சொல்லப் படுகிறது. இதனை 'தத்துவத்திரயம்' என்பர். அவை, ஈசுவரன், சித்து, அசித்து என்பனவாம். உயிர்களை அணு, ஞானம், ஆனந்தம், அமலம் என நான்கு விதமாகப் பிரித்துள்ளார்கள். அவர்கள் பத்தர், முத்தர், நித்தியர் எனப்படுவர். கடவுள் இலக்கணம் கூறும்போது, அவர் விகாரமற்றவர், ஞானவடிவினர், அளவிலாதவர், மகிழ்ச்சி வடிவினர், மலப்பற்றில்லாதவர் எனக் கூறுவர். அஷ்டாட்சரி, ஷடாட்சரி, துவாதசாட்சரி என்பன மந்திரங்களாம். யாதவம், மாயாதவம், ஹிரண்யகர்ப்பம், இராமானுஜீயம், பாஸ்கரம், தத்துவவாதம் என ஆறு உட்சமயங்கள் இதில் உண்டு.

விஷ்ணு என்ற சொல்லுக்கு எங்கும் நிறைந்தவர், இரட்சகர், யாவையும் படைத்துக் காத்து வருபவர் எனப்பொருள்.

பாஞ்சராத்ரத்தில் விஷ்ணு மூர்த்தியே அரூபியாய், ஆதிமூலப் பொருளாய் எவ்விடத்தும் நிறைந்து ஞானவடிவினராய் இருக்கிறார் என்று கூறப்படுகிறது. இருபத்து நான்கு தத்துவங்களுக்கு மேல் இருபத்தைந்தாம் தத்துவமாக பரவாஸுதேவ ஸ்வரூபமாக இருக்கிறார். இவரது வியூகாவதாரங்கள் வாஸுதேவர், சங்கர்ஷணர், பிரத்யும்னர், அநிருத்தர் என நான்காகும். மச்ச, கூர்ம, வராக, நரசிங்க, வாமன, பரசுராம, தசரதராம, பலராம, கிருஷ்ண, கல்கியென இவரது அவதாரங்கள் பத்தாம். உலகமெல்லாம் வாஸுதேவன் பரிணாமம் எனவும், வேதத்தை அருளிச்செய்தவர் இவரே எனவும், திருபாற் கடலில் ஆதிசேஷன் மீது யோக நித்திரை செய்து அருளுகிறார் எனவும் கூறப்படுகிறது.

ஸ்ரீவைகுண்டத்தில் பரவாஸுதேவராய் வீற்றிருக்கும் இவர் தனது உந்தித்தாமரையில் இருந்து பிரமதேவரை உண்டாக்கி உலகத்தைப் படைக்கிறார் எனவும், பிரமதேவரிடத்திலிருந்து உருத்திரனை உண்டாக்கி அவரைக் கொண்டு சங்காரத்தைச் செய்விக்கின்றார் எனவும் கூறப்படுகிறது. உலகைக் காத்தருளும் கடமையைத் தாமே மேற் கொண்டுள்ளார்.

தேவர்களுக்காக மகாமேருவை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக், கடைந்து அமுதம் எடுத்து உதவினார். பல அவதாரங்கள் எடுத்துக் கொடிய அரக்கர்களை அழித்து தேவர்கள் முதலிய நல்லோர்களை இரட்சித்துள்ளார். கலைகளைக் கருணையினால் அடியார்களுக்கு உதவியுள்ளார்.

ஆன்மாக்களைச் சார்ந்திருக்குந் தத்துவக் கூட்டங்களும் அவனே யாவன். மாயையால் ஆன்மாக்களைப் பந்தித்து திரும்பவும் நீக்குவான். ஆதலால், அம்மாயனை அன்றி மாயை நீங்காது. மாயனை வழிபட மாயை நீங்கும். மாயை நீங்கினால் பரமபுருஷனாகிய விஷ்ணு விரஜை ஆற்றிலே ஆன்மாவைச் சுத்தமாக்கி வைகுண்டத்தில் சாரூப பதவியைக் கொடுத்தருளுவான்.

7. சைவ சமயம்

சிவபெருமானை ஆன்மாக்கள் அடைந்து உய்வதற்குரிய பரிசுத்தம், அறிவு, அருள் முதலியவற்றை அங்கங்களாகக் கொண்டு பேரின்பத்தைத் தருவதாகிய சமயம் சைவ சமயம் எனப்படும். இதில் பல பிரிவுகள் உண்டு. அவற்றுள் முதன்மையானது சைவ சித்தாந்தம் அல்லது சித்தாந்த சைவம் எனப்படும்.

சைவம் என்பதற்குச் சிவபெருமானை உயிர்கள் அடைந்து உய்வதற்குரிய வழிகளைக் காட்டும் சமயம் என்பது பொருளாகும். ஆகவே, சைவ சித்தாந்தம் என்பதற்கு உயிர்கள் சிவபெருமானை அடைந்து உய்வதற்கு வழிகாட்டும் எல்லாச் சமயங்களிலும் சிறந்ததும், எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதுமாகிய சமயம் என்பது பொருளாம். சித்தாந்தம் என்பதற்கு சித்திக்கப் பெற்ற அல்லது கைவரப் பெற்ற முடிந்த முடிபு எனவும் பொருள் கொள்ளலாம்.

சைவத்தில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை மிகவும் விளக்கமாகப் பேசப்படுகிறது. இவற்றை, இறை, உயிர், தளை எனவும் கூறுவர். இவை மூன்றும் வேறு வேறாக என்றும் நிலை பெற்று உள்ளவையென இதில் கூறப்பட்டுள்ளது.

பதி

பதி என்பதற்குக் கர்த்தா எனவும், கடவுள் எனவும், முழு முதல் எனவும், சிவம் எனவும் பொருள் கூறலாம். இதில் கூறப்படும் கடவுளுக்கும், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மூன்றில் ஒருவனாகக் கூறப்படும் கடவுளுக்கும் வேறுபாடு உண்டு. இம்மூவர்களுக்கும் முழுமுதற் கடவுளே காரணமாவர். கடவுளைச் சகுணர் எனவும், நிர்க்குணர் எனவும் கூறுவர். நிர்க்குணக் கடவுள் குறியும், குணமும், தொழிலும், உருவமும் இல்லாமல் எல்லாவற்றிற்கும் புறம்பாக நிற்கிறார். அப்போது அவரை அகளர் எனவும் கூறுவர். (அகளம் = நிர்க்குணம்) அகளமாய் நின்ற அறிவரும் அப்பொருளே சகுணமாகி அருளால் வருகின்றது. அது சகுணமாகும் போது எட்டுக் குணங்களையுடையதாய் ஐந்தொழில் இயற்றுகின்றது.

எட்டுக் குணங்களாவன :

1. தன்வயத்தனாதல், 2. தூய உடம்பினனாதல், 3. இயற்கை உணர்வினனாதல், 4. முற்றும் உணர்தல், 5. இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், 6. பேரருள் உடைமை, 7. முடிவில் ஆற்றலுடைமை, 8. வரம்பிலின்பமுடைமை.

இக்கடவுளே உலகிற்குக் கருத்தா. உயிர்களுக்குத் தலைவன். எல்லாத் தொழில்களையும் இவரே நடத்துகிறார். அத்தொழில் ஐந்து வகைப்படும். இவை சிருட்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அநுக்கிரகம் என்பனவாகும். இவற்றைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனவும் கூறலாம். இத்தொழில்களை நடத்த இச்சை, கிரியை, ஞானம் எனும் மூன்று வகையான சக்திகள் துணைபுரிகின்றன. இந்தச் சக்தியிலிருந்து சிவம் பிரிக்க முடியாத வகையில் கலந்திருக்கிறது. சத்தியோடு கலந்த சிவமே ஆலயங்களில் காணப்படுகின்ற சிவலிங்கமாகும்.

சைவம் ஸத்காரியவாதமாகும். ஒவ்வொரு காரியத்திற்கும் முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் எனக் காரணங்கள் மூன்றாகும். ஒரு குடத்தை உண்டு பண்ண மண் மிகவும் அவசியம். அதனைக் குடமாக்க ஒரு தொழிலாளி வேண்டும். அவனுக்கு அதைச் செய்ய கருவிகளும் வேண்டும். குடத்திற்கு மண் முதற்காரணம். குயவன் நிமித்த காரணன். தண்டசக்கரம் துணைக்காரணம். அதுபோல் இவ்வுலக உற்பத்திக்கு மாயை முதற்காரணம். இறைவன் நிமித்த காரணன். சக்தி துணைக்காரணம்.

'ஸத்காரியவாதம்' என்பதற்கு "உள்ளது போகாது; இல்லது வாராது" என்பது பொருள். கடவுள் உலகங்களைச் சூன்யத்திலிருந்து படைத்தார் என்பது பௌதீக சாத்திரத்திற்கும் நம்பிக்கைக்கும் பொருந்தாத ஒன்றாகும். உலகம் எதுவேனும் ஒன்றிலிருந்து உண்டாக்கப்பட வேண்டும். உலகம் அழியும் போது அணுவாகி, அணு பரமாணுவாகிப் பின் ஒரு நுண் பொருள் ஆகின்றது. இந்த நுண் பொருள் பருப்பொருள்கள் மாய்வதற்கு இடமாக இருப்பதால் இதனை 'மாய்' என்றும், அதிலிருந்து அனைத்தையும் ஆக்கப்படுவதால் 'ஆ' என்றும் ஆகி 'மாயா' என ஆகின்றது. ஆதலால் உண்மைப் பொருளாகிய மாயையை இறைவன் முதற்காரணமாகக் கொண்டு பராசக்தியின் துணையாகிய துணைக்காரணத்தோடு தான் நிமித்த காரணனாய் அனைத்தையும் படைக்கின்றான் என்று இது கூறுகின்றது. சைவ சமய அளவைகள் காண்டல், கருதல், உரை, ஒப்பு, பொருள், அபாவம் என ஆறாம்.

சிவத்தின் தன்மை

சைவ சமயம் கூறும் இறைவனுக்குச் சொரூப நிலை, தடத்த நிலை என இரு பெருநிலைகள் உள்ளன. இறைவனைச் சச்சிதானந்தம் என்று அழைக்கிறார்கள். (சத் = அழியாதது. சித் = அறிவுடையது. ஆனந்தம் = இன்பமயமானது.)

இவர் எல்லாம் வல்லவர். தானே தானாய் நிற்பவர். பிறப்பு இறப்பு அற்றவர். பரிசுத்தமானவர். அருளையே உருவாகக் கொண்டவர். இக் குணங்களுக்கு மாறான குணமுடையவர்கள் பசுக்கள் அல்லது ஆன்மாக்கள் எனப்படுவர்.

பசு அல்லது உயிர்

பசு, இதனை உயிர் எனவும், ஆன்மா எனவும் கூறுவர். எண்ணிலாத உயிர்கள் உள்ளன. அவை என்றும் உள்ளவை. கடவுள் உயிர்களை உண்டாக்குவதில்லை, உடம்பைப் படைக்கிறார். அதனுள் பொறி, புலன், கரணம் இவற்றை அமைக்கின்றார். இவை கருவிகள் அல்லது தத்துவங்கள் எனப்படும்.

உள்நிலைக் கருவிகள் முப்பத்தாறு தத்துவங்கள், புறநிலைக்கருவிகள் அறுபது தத்துவங்கள். ஆக, தொண்ணூற்றாறு தத்துவங்கள் உள்ளன. ஜாக்ரம், ஸ்வப்னம், சுஷுப்தி, துரியம், துரியாதீதம் என ஐந்து அவத்தைகள் ஆன்மாவுக்கு உண்டு. ஆன்மாக்கள் விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப் படுவர். ஆணவம் என்ற ஒரு மலமுடையவர் விஞ்ஞான கலர். ஆணவம், கன்மம் என்ற இருமலமுடையவர் பிரளயாகலர். ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலம் உடையவர் சகலர்.

ஆன்மா இருள் மலத்தில் அழுந்திக்கிடக்கிறது. அதனால் நல்வினை தீவினைகளை அது இயற்றுகின்றது. வினைக்கீடாக பிறப்பு இறப்புகள் அனுபவிக்கின்றது. ஆன்மா ஸதஸத்து. இயல்பாகவே உயிரில் பாசம் என்பது களிம்புபோல இருக்கிறது. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையுடையது. அது உலகத்தைச் சார்ந்து நின்றால் இப்பாசம் அதைப் பற்றிக் கொண்டு நிற்கும். உயிர் கடவுளைச் சார்ந்துவிட்டால் பாசம் விலகிப் போகும். இந்த இரண்டு தன்மையும் உயிருக்கு இருப்பதால் அதனை ஸத ஸத்து என்பர். (ஸத் + அஸத்து = ஸதஸத்து)

பாசம்

பாசம் ஆணவம், கன்மம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை என ஐந்துவகைப்படும். பசுவாகிய உயிர்களைக் கட்டிநின்று கடவுளை அடையவொட்டாது தடுப்பதால் இது தடை அல்லது பாசம் எனப்படும். சுத்தமாயை தனு, கரணம், புவனம், போகம் இவற்றை விஞ்ஞான கலருக்கும், பிரளயாகலருக்கும் கொடுக்கின்றது. (தனு = உடம்பு கரணம் = உடம்புக்கேற்ற இந்திரியம் முதலியன. புவனம் = உலகம், போகம் = உடம்பால் நுகரப்படும் இன்பம்.)

இவ்வாறே அசுத்தமாயை சகலருக்குத் தனு, கரண, புவன போகங்களைக் கொடுக்கிறது. திரோதாயி ஆன்மாவை இவற்றில் அழுந்திக்கிடக்கும்படிச் செய்யும். கன்மம் பிறப்பு இறப்புகளுக்குக் காரணமாய் நிற்கும். நல்வினை தீவினைகளுக்குத் தக்கவாறு இன்ப துன்பங்களை ஊட்டும். ஆணவமலம் யான், எனது என்னும் பற்றினைக் கொடுத்து மேலும் வினை செய்யும்படிச் செய்யும். பசு பாசத்தை விட்டு நீங்கினால் முத்திப் பேற்றினை அடையும்.

சைவ சமயக்கிளைகள்

சைவம் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வயிரவம், ஐக்கியவாதம் என ஆறு சமயங்களை அகப்புறச் சமயங்களாகக் கூறுகிறது. இவற்றுள் பாசுபதம் "ஆணவ மலம் இல்லையெனவும், இன்ப, துன்ப வெறுப்புத் தோன்றும் பொழுது கடவுள் அருளை ஆன்மா பெறுகிறது" எனவும் கூறும். மாவிரதம், "ஆன்மா பந்தமுற்று இன்ப, துன்பங்களை அனுபவிக்கும். எலும்பு மாலை அணிந்து சரியைத் தொண்டு செய்தால் முத்தி பெறலாம்" எனக் கூறும். காபாலம், "தலையோட்டில் ஐயம் ஏற்று உண்டு பச்சைக் கொடி ஏந்தி சிவனை வழிபட்டால், சிவன் ஆவேசிப்பன் எனவும், சிவத்தொடு சமமாய் உயிரும் வாழும்" எனவும் கூறும். வாமம், "சத்தியை வழிபட்டு சத்தியில் இலயிப்பதே முத்தி"யென இயம்பும். வயிரவம், "வயிரவக் கடவுளைச் சாருவதே முத்தி"யெனக் கூறும். ஐக்கியவாதம், "ஆணவ மலம் இல்லையெனக் கூறும். புண்ணிய, பாவங்கள் துலையொத்தபின் மாயா கன்மங்கள் அழியும்" எனவும் இயம்பும்.

சைவ சமய அகச்சமயங்களாக பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாதம், ஈசுவர அவிகார வாதம். சிவாத்துவிதம் என ஆறு சமயங்கள் உள்ளனவாகக் கூறுவர்.

பாடாணவாத சைவத்தில் முத்தியிலும் ஆணவம் நீங்காது எனவும், கல்போல் கிடப்பதே முத்தியெனவும், ஆன்மா இறைவனோடு கூடுவதில்லையெனவும் கூறுவர். பேதவாத சைவத்தில், ஆன்மா மும்மலமும் நீங்கப் பெற்று பெறுவானும் பேறுமாய் நிற்கும் எனவும், அதுவே முத்தியெனவும் கூறும். சிவசமவாதத்தில், உயிர் அறிவிக்க வேண்டாதது எனவும், உயிர்த்தன்மை நீங்கிய பின் இறைவனைப் போல எண்குணங்களும் பெறும் எனவும், அது முதல்வனோடு அத்துவிதமாகும் எனவும் இயம்பும். சிவசங்கிராந்தவாதத்தில், உப்பிலிட்டவை உப்பாவது போல, ஆன்மா சிவமேயாகி சிவகரணம் பெற்று இலங்கும் எனவும் கூறும். ஈசுவர அவிகாரவாதத்தில், குடத்தில் ஏற்றிய விளக்குப்போல உடம்பில் ஆன்மா பிரகாசிக்கும் எனவும், அது மலபரிபாகம், சத்திநிபாதம் தேர்ந்த போது இறைவன் திருவடியை அடையும் எனவும் கூறும். சிவாத்துவித சைவத்தில், பசு, பதி, பாசங்களைச் சித்தாந்த சைவத்தோடு ஒப்பக்கூறி மரத்தின் கொம்புகளும் மரமாவது போல அனைத்தும் ஸத்தே எனவும், ஆன்மாவினிடமிருந்து அறியும் ஸத்து சிவமே எனவும் கூறும்.

சைவத்தை அறுவகையாகப் பகுத்துக் கூறுவதும் உண்டு. அவை, காணாபத்தியம், கௌமாரம், ஸௌரம், வைணவம், சாக்தேயம், சைவம் என்பனவாம். காணாபத்தியம், கணபதியே முழுமுதற் பரம்பொருள், ஓங்கார வடிவினனாக அவரை வழிபட வேண்டும் என இயம்பும். கௌமாரம், குமரனாகிய முருகனே கடவுள். பேரின்ப வடிவினனாக அவனை வழிபட வேண்டும் எனக் கூறும். ஸௌரம், சூரியனே கடவுள். பேரொளி வடிவினனாக அவனை வழிபட வேண்டும் என இயம்பும். வைணவம், விஷ்ணுவே கடவுள். அவரை எங்கும் நிறைந்தவராக வழிபட வேண்டும் எனக் கூறும். சாக்தேயம், சக்தியே தெய்வம். அவளைத் தாயாக வழிபட வேண்டுமெனப் பேசும். சைவம், சிவனே கடவுள், அவனைத் தந்தையாக வழிபட வேண்டும் என இயம்பும்.

இவையனைத்தையும் திருமூலர்

"ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள" எனக் கூறுகிறார்.

சிவஞான சித்தியார், "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" கடவுள் இயங்குகிறார என இயம்பும்.

ஆதலால், நமது சிவாலயங்களில் கணபதி, முருகன், சூரியன், விஷ்ணு, அம்மையப்பர் முதலிய திருவுருவங்களை அமைத்து வேற்றுமையின்றி வழிபாடு செய்து வருகிறோம்.

8. மதங்களின் இணைப்பு

இதுகாறும் இந்துமத நூல்களில் உள்ள கருத்துக்களின் சுருக்க விளக்கமும், இந்து மதக் கிளை மதங்களின் வரலாறும், கொள்கைகளும் ஒருவாறு எடுத்தியம்பியுள்ளோம். அச்சமய நூல்களிலும், கிளைச் சமயங்களிலும் பொதுவாகச் சொல்லப்படும் கருத்துக்களைப் பொன்னே போல் போற்றி மாறுபட்ட சிறுபான்மைக் கருத்துகளை விடுத்து இந்து மதம் ஏகமதமாக இணைத்து வாழ்வதற்குரிய இணையிலா முறைகளை எடுத்துக் கூறுவோம்.

நமது இந்து மதம் வேத, ஆகம, சாத்திர, தோத்திரங்களையொட்டி பல முக்கியப் பிரிவுகளாக மக்களின் தகுதிக்கேற்ப ஆதியில் தோன்றிற்று. அது நாளடைவில் பல்வேறு கிளைகளாகப் பிரிந்தது. சில காலங்களில் பெரியார்கள் சிலர் தோன்றி தங்கள் கொள்கைகளைப் பரப்பலாயினர். புதுமையில் விருப்புறும் சாதாரண சமய உறுதிப்பாடில்லாத மக்கள் அவற்றை விரும்பி மேற்கொள்ளத் தலைப்பட்டனர். ஆதலால், இந்து மதம் பற்பல கிளைகளாகப் பிரிய நேர்ந்தது. ஒவ்வொரு மதத்திற்கும் பற்பல நூல்களும் ஏற்படலாயின. இவ்வாறு சமயங்களும், நூல்களும் சமய ஆசாரியர்களும் பெருகலாயினர். இந்துமதம் எனும் ஒரு தனி மதம் பற்பல பிரிவு மதங்களாகி பல கொள்கைகளோடு வேற்றுச் சமயங்கள் போல நிலவத் தலைப்பட்டது. இதனால் இந்து மதம் ஒற்றுமையின்றி நிலைகுலையத் தொடங்கிற்று.

பிற மதத்தினர் பாடசாலைகளில் சமயப் படிப்புக் கொடுப்பது போல இந்து மதப் படிப்பு எங்கும் கொடுக்கப்படாத காரணத்தால் இந்து மாணவர்கள் சமய ஞானமின்றியே படித்து, பட்டங்கள் பெற்று பதவிகளுக்கு வரலாயினர். மத அறிவு எங்கும் பெறாத காரணத்தால் அவர்கள் மத நம்பிக்கையற்று, மதத்தைப் பழித்துப் பேசி, மதமிலா வாழ்க்கையில் வாழவும் தொடங்கினர். பொது மக்களுக்கு மத தத்துவ ஞானத்தைப் பரப்பத்தக்க திட்டங்கள் எதுவும் இல்லாததால், மக்கள் தங்கள் மனம் போனபடி மதத்தைப் புகழவும், இகழவும் தொடங்கினர். சமயவாதிகள் தம்முள் மாறுபட்டு எம்மதத்திலும் உண்மைப் பற்றின்றி சமய வாதப் போரினையே முதன்மையாக மேற்கொள்ளத் தலைப்பட்டனர். இவ்வாறு இந்து மதம் சீரழிந்து சிதறுண்டதை நன்கறிந்து வேற்று மதத்தினர் தங்கள் மதத்தை நமது நாட்டில் நிலைநிறுவி இந்து மதத்தை அழித்து ஒழிக்கத் தயங்காது முயன்று வருகின்றனர். இன்னும் சிலகாலம்

சென்றால் இந்து மதமே இருந்த இடந்தெரியாமல் அழிந்து போக நேரிடும் என அஞ்சுகிறோம்.

இந்துமத வளர்ச்சிக்கு இன்றியமையாப் பணிகளில் தலை சிறந்தது இந்துமதக் கிளைமதங்களின் இணைப்பாகும். அதனை, இணைக்கும் முறையை அடியில் இனிது விளக்கலாம்.

1. நாத்திக மதத்தினர் அல்லது உலகாயத மதத்தினர் என்ற ஒரு குழுவினர் தற்போது எங்கும் இல்லையாயினும், இந்து மதத்தினரில் பலர் இக்கொள்கையுடையவர்களாவே காணப்படுகின்றனர். இவர்களில் சிலர் நாத்திகம் பேசி சமயங்களைப் பழித்தும், கடவுள், கன்மம், ஆன்மா முதலியன இல்லையெனக் கூறியும் வாதிப்பதால், அவர்களின் கொள்கையை அகற்றி அவர்களைக் கடவுள் கொள்கையுடையவர்களாக வாழும்படிச் செய்ய வேண்டும்.

2. மனிதர்களாகப் பிறந்து உலக இன்ப, துன்பங்களை நுகர்ந்து, வாழ்ந்து, இறந்து போனவர்களை பிறப்பு இறப்பு அற்ற கடவுளாகக் கொண்டு வழிபட்டுவரும் மக்களுக்கு கடவுள் நிலையை உணர்த்தித் தக்க அறிவு புகட்ட வேண்டும்.

3. கொள்கைகளில் ஒற்றுமையுற்று, கடவுள் நாமங்களில் வேற்றுமைப் பட்டு விவாதம் புரியும் மக்களுக்கு எப்பெயரால் அழைப்பினும் அப்பரம் பொருளே அதனை ஏற்றருளி அருள் புரியும் எனும் அறிவைப் புகட்ட வேண்டும்.

4. பிரமம் ஒன்றே உளது என்றும், ஜீவர்கள் அனைவரும் பிரமமே ஆவர் எனவும் கூறுகிறவர்களுக்கு எல்லா மக்களுடையவும் உயிர்க்குயிராய் இறைவன் இலங்குகின்றான் எனினும், மக்களைச் சூழ்ந்திருக்கும் அஞ்ஞானம் அகன்று மெய்ஞ்ஞான உதயத்தில் அவன் பிரமமாக விளங்க முடியுமேயன்றி, அஞ்ஞானப் படுகுழியில் ஆழ்ந்துகிடக்கும் பொழுது அவன் "நான் பிரமம்" எனக் கூறுவது பொருந்தாது, அவ்வாறு அவன் கூறி தனக்குத் தானே தீங்கினைத் தேடிக்கொள்ளாதிருக்கச் செய்யவேண்டும்.

5. காணப்படும் உலகம் இல்லாதது எனும் கொள்கையை அகற்றி உலகம் உள்பொருளே எனவும், ஒரு நிலையில் அது இல்பொருளாகவும் படலாம் எனவும் விளக்கி இரு வேறு கொள்கைகளையும் சமரசப்படுத்தவேண்டும்.

6. உயிர்களை உண்மை உணராதபடி தடுக்கும் அஞ்ஞானம், அவித்தை, ஆணவம், மாயை முதலியவை அனைத்தும் ஒருவகைத் தடையேயாம் என விளக்கவேண்டும். ஆணவம், கன்மம், மாயை எனும் தடைகள் உண்டெனவும், இல்லையெனவும் கூறிவரும் வேற்றுமைகளை அகற்றித் தடையென ஒன்றுண்டு எனும் உண்மையை உணர்த்தவேண்டும்.

7. பற்பல விதமாக மதங்கள் கூறும் ஆன்மாக்களின் முத்திப்பேற்றை ஒரு வழிப்படுத்த வேண்டும்.

8. முத்திக்குரிய மார்க்கங்களை முறைப்படுத்தி, ஒரு வழியில் வகுத்துக் காட்டி விளக்கவேண்டும்.

9. ஆலயம், திருவுருவம், வழிபாடு, விழாக்கள், விசேட தினப்பெருமைகள், சின்னங்கள், தீக்கைகள் முதலியவற்றின் அவசியத்தைத் தற்கால விஞ்ஞானரீதியில் விளக்குவதோடு உலக வாழ்க்கையில் சமய வாழ்க்கையையும் இணைத்து அவற்றை இந்துக்கள் அனைவரும் ஒரே முறையில் அநுட்டிக்கும்படிச் செய்ய வேண்டும். ஆலய நிர்மாணம் முதல் கும்பாபிஷேகம் வரை நடைபெறும் சமயச் சடங்குகளை விளக்கி அவற்றின் அவசியத்தை காலநிலைக்கேற்ப அமைத்துக் கைக்கொள்ளும்படிச் செய்யவேண்டும்.

10. இந்துமதத்தின் இணையிலாக் கருத்துகளை பல பிரசாரகர்களுக்கு நன்றாய்க் கற்பித்து அவர்களைக் கொண்டு நாடெங்கும் இந்துமதப் பிரசாரம் செய்விக்க வேண்டும். இந்துமத விளக்க நூல்கள் பல வெளியிடவேண்டும். இந்துமதப் பழிப்புரைகளுக்கும், ஐயவினாக்களுக்கும் தக்க விடை கூறி மக்களை சமயப் பற்று உள்ளவர்களாகச் செய்ய ஒரு சமய அறிஞர் குழுவை நிறுவவேண்டும். கோவில் நிர்வாகிகளும், அறநிலைய நிர்வாகிகளும், சமயபோதகர்களும், தருமகர்த்தர்களும், அர்ச்சகர்களும், ஓதுவார்களும் சமயத்தை நன்றாய் அறிந்து ஒழுகத்தக்கவாறு சமயபோதனை கொடுக்கச் சமயக்கல்லூரிகள் நிறுவவேண்டும்.

இவ்வாறு பணிபுரிந்தால் இந்துமதக் கிளைச்சமயங்கள் அனைத்தும் இணைந்து ஒரு மதமாகி ஒரே கொள்கையோடு வளரத் தலைப்படும். உலகெங்கிலும் இந்துமதம் பரவி வேற்று மதத்தினரும் அதனை விரும்பி வந்து சார்வர். மதத்தைப் பழித்துக் கூறுபவர்களின் கூற்றுகள் ஒடுங்கும். இறையருளைப் பெறுவதற்கு எல்லா மக்களும் விரும்பி முயல்வர். ஆதலின், இந்துமத இணைப்பு இன்றியமையாத ஒன்றாகும்.

9. கடவுள்

கடவுள் என்ற பதம் 'கட' என்னும் பகுதியையும் 'உள்' என்னும் தொழிற் பெயர் விகுதியையும் கொண்டது. 'கடவுள்' என்பதற்கு 'எல்லாவற்றையும் கடந்தவர்' எனப் பொருள் கூறலாம். எவற்றின் உள்ளும் கடந்து நிற்பவர் எனவும், எல்லா அண்டங்களையும் அவற்றிலுள்ள எல்லா சராசரங்களையும் கடவுகின்றவர் அல்லது இயக்குகின்றவர் எனவும் பொருள் கூறுவர்.

எண்ணில்லாத அண்டங்கள் பரவெளியில் தாமே சுழன்றும், அவற்றுள் சிலவற்றைச் சில சுற்றியும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாமல் ஒரு வரையறைக்குட்பட்டு சஞ்சரிக்கின்றன என்று பூகோள, ககோள வல்லுனர் கூறுகின்றனர். எங்கும் நிறைந்த அணுக்கள் ஏக தாளத்தில் ஆடிக்கொண்டே இருக்கின்றன. இவ்வாறு இவற்றை ஆட்டுவிப்பது எது எனத் தெரியாமல் விஞ்ஞான வல்லுனர் வியப்படைகின்றனர். இதனை உற்று நோக்குமிடத்து மனித அறிவுக்கு எட்டாத ஒரு மகத்தான சக்தி உண்டு என்பதும், அதுவே இவ்வற்புத வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறதெனவும் விளங்கும்.

இவ்வுலகிலுள்ள எல்லா உயிர்ப்பிராணிகளும், தோன்றி வாழ்ந்து மடிகின்றதை நாள்தோறும் நாம் பார்க்கிறோம். இவை ஆதிகாலந்தொட்டே நடந்து வருகின்றன. இத்தொழில் ஒழுங்காய் நடக்க, தோன்றாதவனும், அழியாதவனும், என்றும் நின்று நிலவுகின்றவனுமாகிய ஒருவன் அவசியம் வேண்டும். அவனே கடவுளாவன்.

கடவுளுக்கு ஓர் நாமம், ஊர், குணம், வடிவம், குறி முதலியன இல்லை. அவர் நமது உடம்பினுள் உயிர் இருப்பது போல உயிரினுள் உயிர்க்குயிராய் உறைகின்றார். எல்லா உயிர்களுக்கும் உடம்பு உறைவிடம். இறைவனுக்கு நமது உயிர் உறைவிடம்.

"எவ்வுயிரும் பராபரன்றன் சந்நிதியதாகும்
இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோவில்"

என ஆன்றோர் கூறியுள்ளனர். சூரியன் ஒருவனாக இருந்து எல்லா உயிர்வர்க்கங்களுடைய கண்களுக்கும் ஒளியைக் கொடுப்பது போல கடவுள் ஒருவராய் இருந்து எல்லா உயிர்களுக்கும் விளக்கம் தருகிறார்.

அக்கடவுள் கண்ணொளியும், உள்உணர்வும் போல நம்முள் நின்று அரிய கருத்துகளை அறிவிக்கினறார்.

இத்தகைய அருவநிலையில் இருக்கும் கடவுள் தனதருளால் உருக்கொண்டும் வருகிறார். கடல்நீர் சூரிய வெப்பத்தால் நீராவியாக மாறுகிறது. அந்நீராவியே மேகமாகி மழையாய்ப் பொழிகிறது. நீராவி நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அது மேகமாகி மழையாகாமற்போனால் அந்த நீராவியால் நமக்கு ஒரு பயனுமில்லை. அது போல் கடவுள் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கிறார். அவர் மழை போல உருக்கொண்டு வராமற்போனால் நமக்கு அவரால் ஒரு பயனையும் அடைய முடியாது. நாம் பயனடையும் பொருட்டே கடவுள் அருள் உருக்கொள்ளுகிறார்.

அளவைகள் : காண்டல் அளவை

"கடவுளைக் கண்ணால் காணமுடியவில்லை. கண்ணால் காணத்தகுந்த பொருள்களையே நாங்கள் உண்டென நம்புவோம். அல்லாதவற்றை நம்பமாட்டோம்" எனச் சிலர் கூறுகின்றனர். ஆனால் கடவுளை கண்ணால் கண்ட பெரியோர்கள் இந்து மதத்தில் பலர் உண்டு.

"........ பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே" என சம்பந்தர் கடவுளைத் தந்தைக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என அப்பரும்,

"கண்ணால் யானும் கண்டேன் காண்க" என மாணிக்க வாசகரும் கூறியுள்ளனர்.

கடவுளிடத்தில் ஈடும் எடுப்புமில்லாத பத்தியுடைய பரமஞானிகள் அவரை நேரில் காணமுடியுமே தவிர சமயஞானமும், சமயவாழ்வும் இல்லாதவர்களால் அவரை என்றும் காணமுடியாது. "கண்ணால் கண்டால் அன்றி நம்பமாட்டோம்" என இவர்கள் கூறுவது தவறு.

கடவுள் விறகில் தீ போலவும், பாலில் நெய்போலவும், மணியில் ஒலிபோலவும் மறைந்து உறைகின்றார். கடவுளிடத்து உறவாகிய கோலினை நட்டு உணர்வாகிய கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன்னிற்பார்.

கருதல் அளவை

கண்ணால் காணமுடியாது போயினும் அனுமானத்தால் அவர் உண்டென உணரலாம். மலையில் தீயுண்டு என்பதை புகையால் அறிவதுபோல கடவுளின் அரிய செயல்களைக் கண்டு அவர் உண்டென அறியலாம்.

நூலளவை

காட்சியாலும், அனுமானத்தாலும் அறியமுடியாத அரிய விஷயங்களை நூல்களால் உணரலாம். நாம் நமக்குத் தெரியாத இடங்களுக்குப் பிரயாணம் செய்யும்பொழுது கால அட்டவணை (இரயில்வே கைடு) முதலியவற்றை நம்புகிறோம். இச்சிறிய யாத்திரைக்கு இச்சிறிய நூலை நம்புவது போல இறைவனைப் பற்றி அறிவதற்கு அவனைப்பற்றிக் கூறும் நூலை ஏன் நம்பக்கூடாது? இரயில்வே வழிகாட்டியை நம்பாதவனுக்கு யாத்திரை செய்ய முடியாததைப்போல சமயநூல்களைத் தெரியாதவனுக்குக் கடவுளைப்பற்றியும் தெரிய முடியாதாகிவிடும். நாம் ஒரு நதியில் நீராடுவதால் நதிக்கு எவ்விதப் பயனும் இல்லாதது போலவும், குளிர்மாற்றும் தீயின் அருகில் இருந்து நாம் குளிர்காய்வதால் தீக்கு எவ்விதப்பயனும் இல்லாததுபோலவும் நாம் கடவுளை வணங்குவதால் கடவுளுக்கு எவ்விதப் பிரயோஜனமும் ஏற்படுவதில்லை. தண்ணீரில் குளிப்பதாலும், தீக்காய்வதாலும் உண்டாகும் நன்மை நமக்கேயாகும். ஆதலால், கடவுளை வணங்குவதால் நாமே நன்மை பெறுகிறோம் கடவுளுக்கு அருவம், அருவுருவம், உருவம் எனும் மூன்று நிலையுண்டு. அருவத்தில் அவர் சிவம், சக்தி, நாதம், விந்து எனவும், ரூபாரூபத்தில் சதாசிவம் எனவும், ரூபத்தில் மகேசுவரன், உருத்திரன், மால், அயன் எனவும் ஒன்பது விதமான பெயர்களைப் பெறுகிறார். இதனை சிவஞான சித்தியார்,

"சிவம் சக்தி நாதம் விந்து சதாசிவன் திகழு மீசன்
உவந்தருள் உருத்திரன்தான் மால் அயன் ஒன்றின்
ஒன்றாய்ப்
பவந்தரும் அருவம் நாலு இங்கு உருவம் நாலு
உபயம் ஒன்றா
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்"

எனக்கூறும்.

கடவுளின் ரூபங்கள்

அரூபம்	ரூபாரூபம்	ரூபம்
1 சிவம் 2 சத்தி 3 நாதம் 4 விந்து	5 சதாசிவம்	6 மகேசுவரன் 7 உருத்திரன் 8 மால் 9 அயன்

இதனால் ஏகநாயகனே, சக்தியை எழுப்பி இரண்டுருவாகவும் சக்தியோடு சேர்ந்து சதாசிவம் ஆகவும், நாத விந்துவாகவும், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் எனும் நான்கு மூர்த்திகள் ஆகவும் நவந்தரு பேதமாக நடிக்கின்றான் என்பது விளங்குகின்றது. இவ்வுண்மையை உணர்ந்து சிவசக்தி வாதம், சைவ வைணவ பேதம் முதலியவற்றை விட்டு இந்துக்கள் அனைவரும் ஐக்கியப்பட்டு அவரவர்களுக்குரிய மூர்த்திகளை வழிபட்டு அனைத்தும் ஏகநாயக வழிபாடேயாகும் எனக்கொண்டு வாழ்வார்களாக.

10. சக்தியும் சிவமும்

அம்மையப்பர்

கடவுளின் அருளை சக்தியென நாம் வழிபடுகின்றோம்.

“அருளது சத்தியாகும் அரன் தனக்கு அருளையின்றித்
தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை”

எனச் சிவஞான சித்தியார் கூறுகின்றது. அருட்சக்தி பெண் வடிவம் கொண்டது நம்பொருட்டேயாகும். இவ்வுலகிலுள்ள உயிர்கள் எல்லாம் ஆண் பெண் என இருவகையாகப் பிரிந்து வாழ்ந்து இன்புறுகின்றன. செடி கொடிகளிலும் ஆண் பெண் தன்மையுண்டு. எல்லா உயிர்களும் போகத்தை நுகர இறைவன் சக்தியும் சிவமுமாகி அம்மையப்பராயிருந்து இவ்வுலகை உண்டு பண்ணுகின்றான். “அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்” எனத் திருக்களிற்றுப்படியார் இயம்புகின்றது.

சிவலிங்கத்திலுள்ள இலிங்கம் சிவமும், பீடம் சக்தியுமாகும். "நிருத்தனார் தமதிச்சையால் திருவுருக்கொள்வர்" எனத் திருவிளையாடல் கூறுகின்றது.

சிவம் சக்தியோடு சேர்ந்து விளங்கினால் இவ்வுலகிலுள்ள இயங்கும் பொருள்களும், இயங்காப் பொருள்களும் ஆண் பெண் தன்மையில் கூடி மகிழும். இன்றேல் அவை கூடாது பிரியும். இறைவன் கல்லால் நிழலில் தட்சிணாமூர்த்தியாய் இருந்தபோது உயிர்கள் கூட்டுறவின்றி இன்புறாமல் இருந்தன எனவும் அம்மையை மணந்து அம்மையப்பரான பொழுது எல்லா உயிர்களும் இன்புற்றிருந்தன எனவும் அறிகிறோம். தென்பாலுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் பெண் பாலுகந்தது ஏன்? எனும் கேள்விக்கு

"பெண் பாலுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலியோகெய்தி வீடுவர்காண்"

என மணிவாசகர் விடைகூறுகிறார்.

மக்கள் இன்புறுவது அவ்வவர் பொருட்டாகும். இறைவன் இன்புறுவது உயிர்களின் நலத்திற்காகும். கோயில்களில் பள்ளியறை அமைத்திருப்பதும், திருக்கலியாணம் முதலியன நடத்துவதும் இக்கருத்துப் பற்றியேயாகும். நமக்கு ஒரு ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஆண்டிற்கு ஒரு முறை திருக்கலியாண உற்சவம் நடத்துவது தேவர்களின் கணக்குப்படி தினந்தோறும் நடத்துவது ஆகும். மீன் அது இடும் முட்டைகளைக் கண்ணால் பார்க்க முட்டை பொரித்துக் குஞ்சாவது போல பராசக்தியின் கடைக்கண் பார்வை நம்மிடம் பதிய நாம் பரிபக்குவமடைகிறோம். தாயை மீனாட்சி என்றழைக்கிறோம். அவளது மீன்போன்ற கண்களால் நம்மைப்பார்க்க நாம் பரிபாகம் அடைவோம்.

இறைவன் அரூபத்தில் சிவமாய் இருக்கும்பொழுது அவளும் அரூபத்தில் சக்தியாய் இருப்பாள். அவன் நாதமாய் இருக்கும்பொழுது அவள் விந்து சக்தியாய் விளங்குவாள். அவன் ரூபாரூபத்தில் சதாசிவமாய் இருக்கும் பொழுது மனோன்மணியாவாள். இவ்வாறே ரூபத்தில் மகேசனுக்கு மகேசையாகவும், உருத்திரனுக்கு உமையாகவும், திருமாலுக்கு இலக்குமியாகவும், பிரமனுக்கு சரசுவதியாகவும் உருக்கொள்ளுகின்றனள்.

சக்தி

அரூபம்		ரூபா ரூபம்	ரூபம்			
சிவம்	நாதம்	சதா சிவம்	மகேசன்	உருத்திரன்	திரு மால்	பிரமன்
சக்தி	விந்து	மனோண் மணி	மகேசை	உமை	இலக்குமி	சரசு வதி

இதனை

"சத்தியாய், பிந்து, சத்தியாய் மனோன்மணி, தானாகி
ஒத்திறும் மகேசையாகி, உமை, திரு, வாணியாகி
வைத்துறும் சிவாதிக் கிங்ஙன் வரும் சக்தி ஒருத்தியாகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்"

எனச் சிவஞான சித்தியார் கூறுகிறது. திருஞானசம்பந்தர் திருவெழு கூற்றிருக்கையில்.

"ஓருருவாயினை மானாங் காரத்து
ஈரியல்பாய்"

எனக் கூறுகிறார். இதன் பொருள், கடவுளே நீர் உயிர்களுக்கிரங்கி ஐந்தொழில்களையும் செய்ய உமது விருப்பினாலேயே ஒரு திருவுருவை எடுத்தருளினீர், பின் சக்தியை எழுப்பி அதைக் கொண்டு சக்தி சிவம் எனும் இரண்டுருவானீர் என்பதாம். திருமூலர் "ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்" என இயம்புகிறார்.

இருமையினின்றி இயங்காதுலகு என்பது விஞ்ஞானம். ஒரு செயல் நடக்க இரண்டின் சேர்க்கை அவசியமாகும் என்பது இதன் கருத்து. மின்சார சக்தியை ஆராய்ந்து பார்த்தால் அதனுள் இரண்டு வகையான சக்திகள் இருப்பதைக் காணலாம். ஒன்று "பாஸிடிவ்" மற்றொன்று "நெகட்டிவ்" இவ்விரண்டும் சேர்ந்தே மின்சாரம் உண்டாகிறது. இதைப்போன்று சிவசக்தியின் சேர்க்கையே உலக நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் ஆதாரமாய் இருக்கின்றது. அருவுருவத்திலிருந்து உருவம் உண்டாகும் என்பதைப் பிண்டத்திலிருந்து மனிதர், விலங்கு முதலியனவும், அண்டத்திலிருந்து பறவைகள் முதலியனவும், வித்திலிருந்து தாவரங்களும்

உருப்பெற்று வெளிவருவதால் உணரலாம். அதனாலேயே சிவசக்தி அருவுருவமாய் நின்று மூர்த்திகளின் உற்பத்திக்கு மூலகாரண மாயிற்று என்பதை அறியலாம்.

அர்த்த நாரீசுவரர்

இறைவன் அம்மையப்பராகி இருவடிவில் தோன்றுவதேயன்றி ஒரு வடிவில் தோன்றுவதும் உண்டு. அதனை அர்த்தநாரீசுவரர் என்பர். அர்த்தம் = பாதி, நாரி = மாது. அர்த்தநாரீசுவரர் என்பதற்கு, பாதி மாதுடைய பரமன் என்பது பொருள். இவ்வடிவை மாணிக்கவாசகர்

"தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"

எனும் பாட்டில் படம்பிடித்துக் காட்டுகிறார். பரமன் தனது பாதி வடிவை நாராயண வடிவமாக்கிக் காட்சி அளிப்பதும் உண்டு. இவ்வடிவை சங்கர நாராயணர் எனக் கூறுவர்.

அப்பர் "மாலை மகிழ்ந்ததொருபால் வைத்தார் போலும்" எனப் பாடுகிறார். சைவத்தில் சிவனது இடப்பக்கம் மால் எனக் கூறுவதுபோல், வைணவத்தில் நாராயணனின் வலப்பக்கம் சிவன் எனக் கூறுவர். "பிறை தங்கு சடையானை வலத்தே வைத்து" எனும் வாக்கால் அறியலாம். இந்த சங்கர நாராயணத் திருக்கோலத்தைப் பேயாழ்வார்.

"தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால் சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றா யிசைந்து"

என அழகுறக் கூறுகிறார். மேற்கூறியவற்றால் சிவசக்தி பேதமும் சைவ வைணவ பேதமின்றி இந்துக்கள் அனைவரும் இணைந்து வாழ்வோமாக.

11. விநாயகர்

நாதமும் விந்துவும்

விநாயகர் என்ற சொல்லுக்கு 'நாயகர் இல்லாதவர்' என்பது பொருள். "ஓம் அநீஸ்வராய நம:" என்ற மந்திரத்திற்கும் "ஓம் அநீஸ்" இதுவே பொருளாகும்.

"அநாயகைக நாயகம் ....
.... நமாமிதம் விநாயகம்"

(கணேச பஞ்சரத்னம்)

அநாயக + ஏக + நாயகம் = அநாயகைக நாயகம். அதாவது விநாயகருக்கு மேல் வேறொரு நாயகர் இல்லை என்பதாம். வி – விசேஷமான நாயகர் – எல்லோருக்கும் மேலான நாயகர் எனவும் பொருள் கூறுவர். தன்னைத் தளைப்பவரும், செலுத்துபவரும் இல்லாத தன்மையர் எனவும் பொருள் கூறுவர். விக்கினேசுவரர் என்ற நாமமும் இவருக்குண்டு. விக்கினங்கள் வராமல் தடுப்பவர் என்பது இதன் பொருள்.

சிவபெருமானிடத்திலிருந்து "ஓம்" எனும் நாதம் ஆதியில் பிறந்தது. ஓம் என்பதைப் பிரணவம் எனக் கூறுவர். ப்ர + நவ என்று பிரித்து என்றும் புதியது எனப்பொருள் கூறுவர். விநாயகர் பிரணவ வடிவினர். "ஓம் பிரணவானன தேவாய நம." என்பது அவரது மந்திரங்களுள் ஒன்று. ஓம் எனும் பிரணவத்தின் வரி வடிவமே விநாயகர் வடிவம். அதன் ஒலி வடிவமே நாதபிந்துவாகும். மேல்சுழி இருக்குமிடம் விநாயகரது ஒடிந்த கொம்பு இருக்குமிடம். அது அங்கிருந்து வலது கைவழியாக மேலேறிக் கிரீடத்தைச் சுற்றி இடக்கைப் பாசம்வரை வந்து வளைந்து நெற்றிப் பொட்டுவரையிலும் சென்று துதிக்கை வழியாகக் கீழ் இடக்கை வரைவந்து கால்வரை இறங்குகிறது. இடக்கையும் அதிலிருக்கும் மோதகமும் *(O)*ம் என்பதைக் குறிக்கிறது. ஆதலின் ஓம் எனும் வரிவடிவமே விநாயகரது வடிவமாகும்.

இவருக்குக் கரங்கள் ஐந்து. திருமூலர் "ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை" எனக் கூறுகிறார். இவரது துதிக்கையில் ஒரு குடம் இருக்கிறது. இக்குடநீரால் தாய் தந்தையரை நீராட்டி வழிபடுகிறார். தாய் தந்தையரிடம் இவருக்கிருக்கும் பக்தி இதனால் நன்கு

விளங்குகிறது. பின்னிரண்டு கைகளில் பாசம், அங்குசங்களை வைத்திருக்கிறார். யானையை அடக்க யானைப்பாகன் பாசாங்குசங்களை வைத்திருப்பான். விநாயகரோ அவற்றைத் தன் கைகளில் வைத்துக் கொண்டிருக்கிறார். ஒரு யானைப்பாகன் யானையை படுகுழிகளில் விழாமல் தடுத்து நேர்வழியில் நடத்துவது போல, உயிர்களாகிய யானைகளை ஆசாபாசங்களாகிய படுகுழிகளில் விழாமல் தடுத்து நல்ல வழியில் நடத்தி நமது பாசத்தை அவரது கையிலிருக்கும் பாசத்தால் கட்டி அங்குசத்தால் வெட்டிப் பாச நீக்கம் செய்து முத்திப்பேற்றை அருளுகிறார்.

முன்கைகளில் வலது கையில் ஒடிந்த கொம்பினை வைத்திருக்கிறார். இது கயமுகாசுரனைக் கொன்று தேவர்களைக் காப்பாற்றியதன் அறிகுறியாகும். இடது கையில் மோதகத்தைத் தாங்கி இருக்கிறார். இது அமிர்தகலசம் என்றும் கூறப்படும். மோதகத்தில் இவருக்கு விருப்பம் அதிகம். மோதகம் என்பதற்கு அழிவற்ற தன்மை அல்லது நிஜாநந்தம் என்பது பொருள். ஐந்து கரங்களில் ஒரு கையைத் தாய் தந்தையருக்கும், மற்றொரு கையை தேவர்களின் நலத்தின் பொருட்டும், ஒரு கையைத் தன் பொருட்டும் ஆக்கி, இரு கைகளை ஆன்மாக்களாகிய நமக்கு உதவுவதன் பொருட்டு வைத்துக் கொண்டிருக்கிறார். இக்கருத்தை

"பண்ணியம் ஏந்தும் கரம் தனக்காக்கிப்
பானிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி அரதனக்கலச வியன்
தந்தை தாய்க் காக்கிக்
கண்ணிலாணவ வெங்கரி பிணித்தடக்கிக்
கரிசினேற் கிருகையுமாக்கும்,
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத்சகாயனை
அகந்தழீஇக் களிப்பாம்"

என்ற தணிகைப் புராணப் பாடலால் அறியலாம். விநாயகருடைய உருவம் பல அரிய உண்மைகளை உணர்த்துகின்றது. அவர் ஆணல்லர்; பெண்ணுமல்லர். அலியோ எனில் அதுவுமல்லர். யானைத்தலை, தேவ உடல் இவற்றைக் கொண்டிருப்பதால் மிருகமும் அல்லர்; மனிதரும் அல்லர்; தொந்தி வயிற்றொடும் சப்பைக் காலோடும் இருக்கிறார். இவற்றால் விநாயகர் நாம் காணும் எவ்வகை இனத்தையும் சாராதவர் என்று உணர்கிறோம்.

யானைக்கு மதஜலம் ஒழுகுவதுபோல இவருக்கும் வலப்பக்க அறக்கருணையும், இடப்பக்கம் மறக்கருணையும் பொழிகிறது. இதனை பரஞ்சோதி முனிவர்

"கருணை யென்னும் வெள்ளமதம் பொழி சித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்"

எனக் கூறுகிறார்.

சிவனுக்குப் பிள்ளையார், முருகன், வீரபத்திரர் எனும் மூன்று குமாரர்கள் உண்டு. இவர்களில் விநாயகரே சிவனுடைய பிள்ளைகளில் முதன்மையானவர் என்பதைப் பிள்ளையார் என்ற சிறப்புப் பெயரால் அறியலாம். பிள்ளையாரை வணங்குவதால் மலங்கள் விலகும். திருமகள் வந்துறைவாள். விக்கினங்கள் அகலும். இருவினை நீங்கும்.

விநாயகரே குருவாக வந்து அருள் புரிவார் என்பதை ஒளவைப்பிராட்டியார்.

"குருவடிவாகிக் குவலயந் தன்னில்,
திருவடி வைத்து"

எனக் கூறுவதால் அறியலாம். அவரே முத்திகொடுப்பர் என்பதை ஒளவையின் "இருத்தி முத்தி இனிதெனக் கருளி" என்ற வாக்கியம் உணர்த்துகின்றது. ஒளவைப் பிராட்டியாரை விநாயகர் தனது துதிக்கையால் தூக்கிக் கைலாசத்தில் சேர்த்தார் என்ற வரலாறு இதனை வலியுறுத்துகின்றது.

12. ஆலயம்

ஆலயம் என்பதை ஆ + லயம் எனப் பிரிக்கலாம். 'ஆ' என்பதற்கு ஆன்மா என்று பொருள். 'லயம்' என்பதற்கு இலயமாவதற்கு அல்லது சேருவதற்கு உரிய இடம் என்பது பொருள். ஆகவே, கடவுளது திருவடியில் ஆன்மா இலயிப்பதற்குரிய இடம் எனப் பொருள் கூறலாம். ஆ என்பது ஆணவ மலத்தையும், லயம் என்பது அடங்கி இருத்தலையுங் குறிக்கும். அதனால் ஆலயம் ஆணவ மலம் அடங்குவதற்கு உரிய இடம் என்பது விளங்குகிறது. இதனைக் கோயில் எனவும் கூறுவர். கோ + இல் = கோயில். கோ = கடவுள்; இல் = தங்குமிடம். கோயில் = கடவுள் தங்குமிடம்.

பூமியின் அடியில் எங்கும் தண்ணீர் வியாபித்திருந்தாலும், நமக்கு அதை உபயோகப்படுத்த வேண்டுமானால் ஒரு கிணறு வெட்ட வேண்டியதாயிருக்கிறது. "எலக்ட்ரான்" (மின்சாரம்) ஆகாயம் எங்கும் பரவியிருந்தாலும் "எலக்ட்ரிஸிட்டி பவர்ஹவுஸ்" (மின்சார நிலையம்) வழியாகத்தான் அதனை நமக்கு உபயோகிக்க முடிகிறது. இவற்றைப் போல் கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும் ஆலயங்களில் சிறப்பாக நின்று அருள் செய்கின்றார். பசுவின் உடம்பெல்லாம் பால் வியாபித்திருந்தாலும் அது அகடுகளின் வழியாகவே நமக்குக் கிடைக்கிறது. அதுபோல இறைவன் எங்கும் வியாபித்திருந்தாலும், ஆலயங்களிலுள்ள மூர்த்திகளின் வழியாகவே அருளைச் சுரக்கிறான்.

ஆலயம் மனிதவடிவம்

கோயில்கள் நமது உடம்பின் வடிவிலேயே அமைக்கப் பட்டிருக்கின்றன. இதனை "க்ஷேத்திரம் சரீரப்பிரஸ்தாரம்". என்பர். ஆலயம் மனிதர் உடம்புபோல் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது இதன் பொருள். இதனை திருமூலர்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே"

எனக் கூறுகிறார். இதனை வேறொரு முறையிலும் மனித உடம்போடு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. மனித உடம்பில் உள்ள பாதங்கள் கோபுரம். முழங்கால் ஆஸ்தான மண்டபம். தொடை நிருத்த மண்டபம். தொப்புள் பலிபீடம். மார்பு மகாமண்டபம். கழுத்து அர்த்தமண்டபம். சிரம் கர்ப்பக்கிரகம். சிரத்தில் உள்ள இரு செவிகளில் வலது செவி தட்சிணா மூர்த்தி. இடது செவி சண்டிகேசுவரர். மார்பில் நடராஜர். கழுத்தில் நந்தி. வாய் ஸ்நபன மண்டபவாசல். மூக்கு ஸ்நபன மண்டபம். புருவமத்தி இலிங்கம். தலையின் உச்சி விமானமாகும்.

1. கோபுரம்

கோபுரம் ஸ்தூலலிங்கமாகும். கோபுர தரிசனம் கடவுளது பாத தரிசனம் என்பர். இதனை 'பிரமரந்திர மத்ய கபாலத்வாரம்' என்று யோகிகள் கூறுகின்றனர். அண்ட பிண்டங்கள் அனைத்தையும் அடக்கிக்கொண்டு இருக்கும் பரமபுருஷனாகிய இறைவனது

விராட்ஸ்வரூபமே கோபுரமாகும். உச்சியில் இருக்கும் கும்பம் ஷோடசாந்தம் எனப்படும்.

2. பிரகாரங்கள்

கோயிலினுள் இருக்கும் பிராகாரங்கள் மூன்று, ஐந்து, ஏழாகக் காணப்படுகின்றன. மூன்று பிராகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம் என்ற மூன்று கோசங்களையும் உணர்த்துகின்றன. ஐந்து பிராகாரங்கள் இவற்றொடு விஞ்ஞானமயம், ஆனந்தமயம் எனும் கோசங்களைக் குறிக்கின்றன. ஏழு பிராகாரங்கள் இவற்றோடு ஸ்தூல, ஸூக்ஷ்மங்களை விளக்குகின்றன. பலமுறை பிராகாரங்களைச் சுற்றி வலம் வருவது கோசங்களைக் கடந்து இறைவன் விளங்குகிறான் என்பதை நினைப்பூட்டுகிறது.

3. விமானம்

விமானங்கள் நாகரம், திராவிடம், வேசரம் என மூன்று வகைப்படும். பீடம் முதல் அனைத்தும் சதுரமாக உள்ள விமானம் நாகரம் எனப்படும். கண்டம் முதல் வட்டமாக உள்ள விமானத்தை வேசரம் என்பர். கண்டம் முதல் எட்டுக்கோணமாக உள்ள, விமானம் திராவிடமாம். ஆண்விமானமாக நாகரத்தையும், பெண்விமானமாக திராவிடத்தையும் அலிவிமானமாக வேசரத்தையும் கூறுவர். விமானத்தின் கீழ்புறம் முருகனையும், தென்புறம் தட்சிணாமூர்த்தியையும், மேல்புறம் விஷ்ணுவையும், வடபுறம் பிரமனையும் சுதையால் அமைப்பர். விமான மேல்பாகத்தில் இடபத்தையாவது, பூதத்தையாவது அமைப்பது மரபு. விமானத்தையும் கோபுரத்தைப் போல் ஸ்தூலலிங்கமாகக் கருதுவர்.

4. கொடிமரம்

கோபுரத்தை ஸ்தூலலிங்கமெனக் கூறினோம். கொடிமரம் சூட்சமலிங்கமாகும். கொடிமரத்தின் அடிப்பாகம் சதுரமாக இருக்கும். இது இறைவனின் படைப்பை உணர்த்துகிறது. இது பிரமபாகமாகும். அதன் மேலுள்ள பாகம் எண்கோணமாயிருக்கும். இது காத்தலைக் குறிக்கும். இது விஷ்ணுபாகமாகும், மேல் உருண்டு நீண்டபாகம் உருத்திரனைக் குறிக்கும். அது சங்காரத் தொழிலின் அறிகுறியாகும். ஆகவே, கொடிமரம் மும்மூர்த்திகளையும், முத்தொழில்களையும் உணர்த்துகிறது.

கொடிமரப் பிரதிட்டையின் நோக்கம்

அசுரர்களை அகற்றுவதன் பொருட்டும், சிவகணங்களையும், தேவர்களையும் அழைத்தற் பொருட்டும், ஆலயத்தை இரட்சித்தற் பொருட்டும், பக்தர்களைப் பாதுகாக்கவும் கொடிமரம் நிறுவப்படுகிறது. சிவன்கோயில் கொடிமரத்தின் மேல்பாகத்தில் நந்தியையும், விஷ்ணுகோயிலில் கருடனையும், தேவி ஆலயங்களில் சிங்கத்தையும், விநாயகர் ஆலயத்தில் மூஷிகத்தையும், முருகன் கோவிலில் மயிலையும், சாஸ்தாகோவிலில் குதிரையையும் அந்தந்த தேவதைகளுக்குத் தக்கவாறு அமைத்துள்ளனர்.

மூலலிங்கத்திற்குச் செய்யும் அபிடேகம், அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை முதலிய அனைத்தும் கொடிமரத்திற்கும் செய்ய வேண்டும் என்பது முறையாகும். கொடிமரத்தின் தடி நல்ல வயிரம் உள்ளதாயிருக்க வேண்டும். சந்தனம், தேவதாரு, செண்பகம், வில்வம், மகிழ் முதலிய மரங்கள் இதற்குகந்ததாகும். பலாவும், மாவும் மத்திமம். கமுகு, பனை, தெங்கு முதலியன அதமமாம். கொடிமரம் முப்பத்து மூன்று கணுக்கள் உள்ளதாய் இருப்பது சிறப்பு. நீளம் ஆலயத்தின் அளவுக்கு ஏற்றதாய் இருக்கவேண்டும். கொடிமரத்தின் தத்துவத்தை யோகநிலையோடும் ஒப்பிடலாம். கொடிமரத்தூண் போன்றது உடம்பு. உடம்பில் இடை, பிங்கலை என்ற இரு நாடிகள் வழியாகச் செல்லும் பிராணவாயுவை நடு நாடியாகிய சுஷும்னையில் நிலை நிறுத்தி இறைவனைத் தியானிக்க வேண்டும். அப்பொழுது பிராணவாயு அடங்கும். பஞ்சேந்திரியங்கள் ஒடுங்கும். மனம் ஒருநிலைப்படும். இறைவன் வெளிப்படுவான். கொடிமரத்தை ஒரு யோகியின் உடம்பினுள் விளங்கும் மேருதண்டம், அல்லது முதுகெலும்பிற்கு ஒப்பிடலாம். இதனுள் ஆறாதாரங்களும், சுஷும்னா நாடியும் அமைந்திருக்கின்றன, குண்டலினி மூலாதாரத் திலிருந்து வெளியேறி ஆறாதாரங்களையுங் கடந்து ஸஹஸ்ராரத்தை அடைகிறது. அங்கே அடையும்பொழுது அமிர்தம் பொழிகிறது எனும் தத்துவத்தை இது விளக்குகிறது.

5. கர்ப்பக்கிரகம்

ஆலயங்களில் கர்ப்பக்கிரகம் அல்லது மூலஸ்தானம் மிகவும் முக்கியமான இடமாகும். இது எல்லா உலகங்களையும் படைத்தற்குக் காரணமான மூலப்பிரகிருதியின் இடமாகும். ஒரு கோவில் எந்த மூர்த்திக்கு உரியதோ அந்த மூர்த்தியை அங்கு பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். அதன் நேராக அந்த மூர்த்திக்கு உரிய வாகனம் அல்லது ஊர்தியையும் அதன் பின் ஒரு பலிபீடத்தையும் அமைத்திருப்பர்.

உதாரணம் :	சிவன்	நந்தி	பலிபீடம்
	நாராயணர்	கருடன்	”
	விநாயகர்	மூஷிகம்	”
	முருகன்	மயில்	”
	அம்பாள்	சிங்கம்	”

இவை பதி, பசு, பாசம், அல்லது இறை, உயிர், தளை எனும் முப்பொருள் உண்மையை உணர்த்துகின்றன.

ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலேறென நிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை ஆய்ந்து கொள்வார்கட்கே.

(திருமந்திரம்)

மூலஸ்தான மூர்த்தியே இறை. அதன்முன் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் ஊர்தியே பசுக்களில் தலைசிறந்த உயிர். பீடமே பாசம் அல்லது தளையாம். கர்ப்பக்கிரகத்திற்கு முன்புள்ள அர்த்த மண்டபம், மஹா மண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்கார மண்டபங்கள் நிவிருத்தி, பிரதிட்டை, வித்தியை, சாந்தி, சாந்தியாதீதம் என்னும் கலைகளை உணர்த்துகின்றன.

6. சிவலிங்கம்

இலிங்கம் என்பதற்கு 'குறி' என்பது பொருள். குறி என்றால் அடையாளம். காண முடியாத இறைவனைக் காணுவதற்கு அடையாளமே சிவலிங்கமாகும்.

இலிங்கம் என்பதை லிம் + கம் எனப் பிரிக்கலாம், 'லிம்' என்பதற்கு உலக முடிவில் எல்லா சராசரங்களும் இலயிப்பதற்குரிய இடம் என்பது பொருள். 'கம்' என்பதற்கு அவ்வாறு இலயித்த பொருள்கள் அனைத்தும் அதிலிருந்தே வெளிப்படும் என்பது கருத்து. ஆகவே, இலிங்கம் என்பதற்கு எல்லாம் ஒடுங்கி மீண்டும் வெளிப்படுவதற்குரிய இடம் என்பது பொருள். இலிங்கத்தின் அடிப்பாகம் நாற்கோணமாயிருக்கும். அது பிரம பாகமாகும். நடுப்பாகம் எட்டுக்கோணமாயிருக்கும். அது ஆவுடை என்ற

பீடத்தினுள் அமைந்திருக்கும். இது விஷ்ணுபாகமாகும். இதற்குமேல் காணப்படும் பாணம் நீண்ட வட்டவடிவமாய் இருக்கும். இதனை உருத்திரபாகம் என்பர். பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்திகளின் உள்ளடக்கமே சிவலிங்கமாகும்.

இலிங்கம் நிஷ்களம், சகள நிஷ்களம், சகளம் என மூவகைப்படும். இதனை அவ்யக்தம், வ்யக்தா, வ்யக்தம் எனவும் கூறுவர். அதனையே அரூபம், ரூபாரூபம், ரூபம் எனவும் சொல்லப்படும். நிஷ்களம் அரூப சிவம், சகள நிஷ்களம் மூலஸ்தான சிவலிங்கம். சகளம் நடராஜர் முதலிய திருவுருவங்கள், சகளம் அறுபத்து நான்கு உருவங்களாக இருக்கின்றன. அவற்றுள் இருபத்தைந்து முக்கியமானவையெனக் காரணாகமம் கூறுகின்றது. அவை சந்திரசேகரர், கலியாண சுந்தரர், கஜ்ஸம்ஹாரர் முதலியனவாம்.

இலிங்கம் பலவிதப் பொருள்களால் அமைக்கப்படும். சைலஜம் (கல்லால் செய்யப்படுவது), இரத்னஜம் (மாணிக்கம், மரகதம் முதலியவற்றால் செய்யப்படுவது), லோகஜம் (ஸ்வர்ணம் வெள்ளி முதலிய லோகங்களால் செய்யப்படுவது.), க்ஷணிகம் (அரிசி, மணல், கோமயம், விபூதி, சந்தனம் முதலியவற்றால் செய்யப்படுவது:) க்ஷணிக லிங்கத்தை பூஜை முடிந்ததும் அழித்துவிடுவதால் அது அப்பெயர் பெற்றது. (க்ஷணம் – சிறிது நேரம்)

இலிங்கத்தை தேவிகம், திவ்யம், ஆர்ஷம், மானுஷம், இராட்சஸம், பாணம் என, அவை உண்டான காரணத்தைக் கொண்டு ஆறு வகையாகக் கூறுவர். அரூபியாகிய இறைவன் ரூபாரூபமாகிய சிவலிங்க வடிவில் தோன்றி பின் மகேசுவரன் முதலிய உருவத்திருமேனிகள் உற்பவிக்கக் காரணமாகின்றான். அணுவுலக ஆராய்ச்சியாளர், அணுவுக்கு அணுவாக எவ்விடத்தும் விளங்கும் எலக்ட்ரானைப் பரிசோதித்துப் பார்த்ததில் பச்சை நிறமான ஒரு வட்டத்தின் நடுவில் ஒரு சோதி துலங்கக் கண்டுள்ளார்கள். இப்பச்சைவடிவம் ஆவுடையினையும், சோதிவடிவம் சிவலிங்கத்தினையும் போன்றுள்ளன. ஆகவே, எலக்ட்ரான் வியாபித்த உலகமெங்கும் சிவலிங்க வடிவம் தோன்றுவதாலும் இறைவன் கொண்ட அருவுருவத் தோற்றம் சிவலிங்க வடிவமெனத் தெளியலாம்.

7. திருநந்திதேவர்

சிவலிங்கத்தின் முன் நந்திதேவர் சிவலிங்கத்தைப் பார்த்துக் கொண்டு இருப்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது. 'நந்தி' என்ற சொல்லுக்கு 'எப்பொழுதும் ஆனந்த நிலையில் இருப்பவர்' என்பது பொருள். இவர், இளமையும், திட்பமும் வாய்ந்தவர்.

"செம்பொருள் ஆகமத் திறம் தெரிந்து
நம்பவம் அறுத்த நம்நந்தி வானவன்"

என்றதால் திருநந்திதேவர் சிவபிரானிடத்திலிருந்து சிவாகமங்களைத் தெளிந்து நமக்கு அருளினார் என்பது தெரிகிறது. ஆதலால், அவரே சைவ சமயத்திற்கு முதல் குருவாவார். இதனை "நங்குரு மரபுக்கெல்லாம் முதற்குரு நாதனாகி" என்பதனால் அறியலாம்.

நந்திதேவருக்கு நெற்றிக்கண்ணும், நான்கு புயங்களும், கையில் பிரம்பும், உடைவாளும், இருபுயங்களில் மானும், மழுவும் உண்டு. மான் வேதத்தைக் குறிக்கிறது. மழு வீரத்தை அல்லது ஆண்மையைக் குறிக்கிறது எனக் கூறுவர். எல்லா உயிரிகளையும் ஒரு காலத்தில் ஒய்வு படுத்துதல் மகாசங்காரம் எனப்படும். இவ்வதிகாரம் நந்தியெம் பெருமானுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர் ஒரு சித்தர். இவர் சிவசந்நிதியில் காவல் பூண்டு இருக்கிறார். இவரது அனுமதி பெற்றே சிவதரிசனம் செய்தல் வேண்டும். இவருக்கு உருத்திரன் எனவும் பெயருண்டு. ருத் – துக்கம், ரன் – ஒட்டுகிறவன். "இடும்பை நோய் ஒட்டும் ருத்ரன்" எனச் சிவஞான முனிவர் கூறுகிறார். தூயவன், சைலாதி எனவும் பெயர்கள் உண்டு. தப்பிதம் செய்தாரைத் தண்டிக்கும் அதிகாரமும் இவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இவர் தக்ஷயாகத்தில் சிவனைப் பழித்துப் பேசிய தக்ஷனையும், உடனிருந்த தேவர்களையும் சபித்தார். இவர் சிவபெருமானிடத்தில் உபதேசம் பெற்றார். இவரிடத்திலிருந்து சனத்குமாரரும், சனத்குமாரரிடமிருந்து சத்தியஞானதெரிசனிகளும், சத்தியஞானதெரிசனிகளிடமிருந்து பரஞ்சோதியாரும், பரஞ் சோதியாரிடமிருந்து மெய்கண்டாரும் உபதேசம் பெற்றனர். இது 'குரு பரம்பரை' அல்லது 'திருக்கைலாய பரம்பரை' எனக் கூறப்படும்.

8. பலிபீடம்

பலிபீடம் பாசத்தை உணர்த்துகிறது எனக் கூறினோம். அதனை 'ஸ்ரீபலி நாதர்' எனவும் கூறுவர். கோவிலில் எட்டு மூலைகளிலும், எட்டு பலிபீடங்கள் உண்டு. அவை இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் எனும் எட்டு திக்பாலகர்களை உணர்த்துகிறது. பிராம்மி, மாகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி எனும் சப்தமாதாக்களை உணர்த்தும் பீடங்களும் உள்ளன. இவைகளுக்கு எல்லாம் தலைமைப் பீடமே நந்திதேவருக்குப் பின்னுள்ள பலிபீடமாகும்.

9. தட்சிணாமூர்த்தி

சிவபெருமானது குருவடிவே தட்சிணாமூர்த்தி ஆகும். ஆலயங்களில் கர்ப்பக்கிரகத்தின் தென்பாகத்தில் தென்திசை நோக்கி வீற்றிருக்கிறார். ஆதலால், இவரைத் 'தென்முகக் கடவுள்' எனவும் கூறுவர். கல்லால் மரத்தினடியில் யோக ஆசனத்தில் சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் உபதேசிக்கும் முறையில் வீற்றிருக்கிறார். அவருடைய ஒரு திருவடி முயலகனை மிதித்துக் கொண்டிருக்கிறது. மற்றொன்று வீராஸனமாக வீற்றிருக்கிறது. நான்கு கைகளில் வலப்பக்கம் ஒரு கை சின்முத்திரை தாங்கியும், ஒரு கை உருத்திராக்க மணிவடம் தாங்கியும் இருக்கிறது. இடது பக்கம் உள்ள ஒரு கையில் அமுத கலசமும், ஒரு பக்கம் வேதமும் உள்ளன. இவரை யோக தட்சிணாமூர்த்தி, வீணாதட்சிணாமூர்த்தி எனவும் கூறுவர். யோக முறையைக் காட்டியதால் யோக தட்சிணாமூர்த்தி எனப்பட்டார். தும்புரு, நாரதர் முதலியோருக்கு வீணையின் இலக்கணத்தை உணர்த்தியதால் வீணா தட்சிணாமூர்த்தி எனப்பட்டார்.

சின்முத்திரை

சித் + முத்திரை = சின்முத்திரை. ஞானத்தைக் கையால் காட்டும் அடையாளம் சின்முத்திரையாகும். சுட்டு விரலால் பெருவிரலின் அடியைச் சேர்த்து மற்ற மூன்று விரல்களையும் வேறாக ஒதுக்கிக் காட்டப்படும் முத்திரை. பெருவிரல் இறைவனையும், சுட்டுவிரல் ஆன்மாவையும் குறிக்கிறது. மற்ற மூன்று விரல்களில், நடுவிரல் ஆணவ மலத்தையும், அணிவிரல் கன்ம மலத்தையும், சுண்டு விரல் மாயா மலத்தையும் குறிக்கும். ஆணவாதி மலங்களை விட்டு ஆன்மா இறைவனை அடைந்து இன்புறுவதை இச்சின்முத்திரை காட்டுகிறது. இதனைக் கச்சியப்பமுனிவர்,

"மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள் நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியில் கதுவ நல்கிய
செம்மலை யலதுளம் சிந்தி யாதரே"

என்ற பாடலில் நன்கு விளக்கியுள்ளார். பெருவிரலுடன் சுட்டு விரலைச் சேர்க்கும் பொழுது ஒரு வட்டவடிவம் உண்டாகிறது. அது இரண்டும் இரண்டல்ல; ஒன்றே எனும் அத்வைதத்தை உணர்த்துகிறது. இடக்கை அமுதம் மலநீக்கம் செய்து சிவானந்தத்தை நுகரச் செய்வதையும், உருத்திராக்க மணி சிவஞானத்தில் நிலைத்து ஐந்தெழுத்து எண்ணுவதையும், முயலகனை மிதித்தல் ஆணவ மலத்தை மிதித்தலையும் வீராஸனம் "எங்கும் யாம் யாவர்க்கும் எளியோமல்லோம்; யாவர்க்கும் மேலானோம்" எனும் பெருமிதத்தையும், ஞானத்தையும் கல்லால் நிழல் இரஜோகுண, தமோகுணங்கள் அண்டாது சத்துவகுணத்தைச் சார்ந்திருத்தலையும், தென்முகம் அகோர முகமானதால் பயத்தை அகற்றிவிட்டு அருளைக் கொடுப்பதையும் உணர்த்துகின்றன. இந்த மூர்த்தியின் பெருமையை பிளாவட்சுகி அம்மையர் "Silent watcher" (மௌன குரு) என அழைக்கிறார்.

தட்சிணாமூர்த்தி கல்லாலமரத்தடியில் அமர்ந்து சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் முதலியோர்களுக்கு மோன நிலையிலேயே ஐயங்களை நீக்கி உணர்த்தியருளியதை,

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறாங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்".

என்ற திருவிளையாடற் புராண வாக்கால் அறியலாம். தட்சிணா மூர்த்தியை,

"ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்கு
ஈரிருவர்க் கிரங்கிநின்று
நேரியனான் மறைப் பொருளை உரைத்து
ஒளிசேர் நெறியளித்தோன்"

என் ஞானசம்பந்தரும்,

"நன்றாக நால்வருக்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங்கு அறமுரைத்தான்"

என மாணிக்கவாசகரும் போற்றியுள்ளனர்.

10. நடராஜர்

ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் ஜோதியாகிய அருபசிவம், சதாசிவமாகிய அருவுருவத்திருமேனியைக் கொண்டது. அதுவே ஐந்தொழில் நடத்த ஆனந்தத்தாண்டவம் புரியும் அற்புத நடராஜர் ஆகியது. அண்டங்கள் அனைத்தும் இயங்கிக் கொண்டிருப்பதனாலேயே அனைத்துயிர்களும் இன்ப வாழ்வு நடத்துகின்றன. அண்டங்கள் முதல் அணுக்கள் வரை இயங்கிக் கொண்டே இருக்கின்றன. இவ்வியக்கத்திற்குரிய காரணம் அல்லது "மெயின்ஸ்பிரிங்" எதுவென அறியமுடியாது, ஈன்ஸ்டீன் முதலிய விஞ்ஞானப் பேராசிரியர்கள் மயங்கினர். அம்பலக் கூத்தனின் ஆனந்தக் கூத்தாலேயே அணுக்களின் ஏகதாள நடனம் நடைபெறுகிறது என அறிந்ததும் அத்திருவுருவை அகத்தும் புறத்தும் கண்டுகளித்தனர்.

அவன் எல்லா உலகங்களையும் படைத்து, அவற்றுள் ஐம்பெரும் பூதங்களையும் அமைத்து, அவற்றைத் தனது திருவுருவிற் கொண்டு விளங்குகின்றான். அவனது வலக்கை உடுக்கை படைத்தல் தொழிலை உணர்த்துகின்றது. உடுக்கையின் ஒலி "ஓம், ஓம்" என முழங்குகின்றது. 'ஓம்' எனும் பிரணவமே படைப்புக்கு மூல காரணமாகும். மற்றொரு வலக்கை அபயகரமாக அமைந்திருக்கிறது. அது எல்லாவற்றையும் நானே காத்துக்கொள்கின்றேன் எதற்கும் அஞ்சவேண்டாமெனக் காட்டுகின்றது. இடக்கை ஒன்றில் தீ அமைந்துள்ளது. அது உயிர்கள் இளைப்பாறுவதன் பொருட்டு அழித்தல் தொழிலையும் நானே செய்கின்றேன் என்பதனை உணர்த்துகின்றது. மற்றொரு இடக்கை உயிர்களுக்கு முத்திப்பேற்றை அருளும் திருவடியைக் காட்டுகிறது. வலதுகால் 'அபஸ்மாரம்' எனும்

முயலகனை மிதித்துகொண்டு நிற்கின்றது. அது உயிர்கள் செய்த நல்வினை, தீவினைகளுக்குத் தக்கவாறு இறைவன் ஊட்டும் மறைத்தல் தொழிலை அறிவுறுத்துகின்றது. இடதுகால் தூக்கிய திருவடி ஆன்மாக்களுக்கு இறைவன் முத்தியை அளிக்கும் அருளல் தொழிலைக் காட்டி அருளுகின்றது. இதனை,

"தோற்றந் துடியதனில் தோயுந்தி தியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு"

என்ற உண்மைவிளக்கப் பாடலால் அறியலாம்.

ஐம்பெரும் பூதங்களில் அவன் நிறைந்து விளங்குகின்றான் என்பதனை

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

எனும் திருவாசகத்தால் அறியலாம். இதனை பஞ்சலிங்க ஸ்தலங்களில் அமைத்துக் காட்டுவர். பிருதிவிஸ்தலம் திருவாரூர், அப்பு திருவானைக்கா, தேயு திருவண்ணாமலை, வாயு திருக்காளத்தி, ஆகாயம் சிதம்பரம். சிதம்பரம் என்பதை சித் + அம்பரம் எனக் கொண்டு சிதாகாசம் என உணரலாம். நமது உடம்பில் இருதயத்தில் இருக்கும் பரவெளி இதனை உணர்த்துகின்றது. இதனைத் தகராகாசம் என்பர். இத் தகராகாசத்தில் ஒரு சித்துப்பொருள் உள்ளது. சிதம்பரத்தில் உள்ள பொன்னம்பலத்திலும், மதுரை வெள்ளியம்பலத்திலும், திருவாலங்காடு இரத்தின சபையிலும், திருநெல்வேலித் தாமிரசபையிலும், திருக்குற்றாலம் சித்திர சபையிலும் நடனமிடும் நடராஜனே நமது சித்தத்திலும் நடனம் புரிகின்றான். அதனாலேயே நமது உடம்பும் இயங்குகின்றது. அந்நடனம் நின்று விட்டால் நமது உயிரியக்கமும் நின்றுவிடும். இவன் ஓய்வின்றி எப்போதும் திருநடனம் புரிகின்றான் என்பதனையும், இவனது ஆட்டத்தால் அண்டங்கள் அனைத்தும் ஆடுகின்றன என்பதனையும் திருமந்திரத்தால் அறியலாம்.

"வேதங்களாட மிகு ஆகமமாட
கீதங்களாட கிளரண்டம் ஏழாடப்
பூதங்களாடப் புவன முழுதாட
நாதங் கொண்டாடினான் ஞானானந்தக் கூத்தே"

"தத்துவம் ஆடச் சதாசிவம் தான் ஆட
சித்தமும் ஆடச் சிவசக்தி தான் ஆட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் அம்பலக் கூத்தே"

நடராஜர் பஞ்சாக்கரத்தில் நடனம் செய்கிறார். அவரது திருவடியில் 'ந'கரமும், உதரத்தில் 'ம'கரமும், தோளில் 'சி'கரமும் திருமுகத்தில் 'வா' வும் திருமுடியில் 'ய'வும் விளங்குகின்றன. இதனை,

"ஆடும் படிகேணல் லம்பலத்தானையனே
நாடுந் திருவடியிலே நகரம் கூடும்.
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம் வாமுடியப் பார்"

என்ற பாடல் உணர்த்துகிறது.

கூத்து இலாஸ்யம், தாண்டவம் என இருவகைப்படும். மகளிர் ஆடுவது இலாஸ்யம் எனவும், ஆண்மகன் ஆடுவது தாண்டவம் என்றும் கூறப்படும். மாயா மலத்தை ஓட்டி, கன்ம மலத்தைச் சுட்டு, ஆணவ மலத்தை வலியடங்க அமுக்கி, அருளால் ஆன்மாவை மேலே எடுத்து ஆனந்தக்கடலில் மூழ்கி இருக்கச் செய்வதே திருநடனத்தின் கருத்தாகும். இதனை,

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள் தானெடுத்து – நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானமுத்தல்
தானெந்தை யார்பாதந் தான்"

என்பதால் அறியலாம்.

அண்டங்களையும், பகிரண்டங்களையும் ஆட்டிவைக்கும் ஆற்றல் வாய்ந்த அம்பலவன், அடியார்க்கு எளியவனாய் வந்தருள் புரியும்

அருமையும் உடையவன் என்பதனை, நந்தனார், பெற்றான் சாம்பான் இவர்களுக்குக் காட்டிய பேரன்பினாலும், சேரமான் பெருமானுக்குச் சிலம்பொலி காட்டி அருள் செய்தமையினாலும், சேக்கிழார் பெருமானுக்குத் திருத்தொண்டர் புராணம் இயற்ற "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்தமை முதலியவற்றாலும் அறியலாம்.

இக்கூத்தனின் முழுவுருவங் கண்டுகளித்த நாவுக்கரசர்,

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்று முழு ஓவியமாகப் பாடல் மூலம் சித்திரித்துக் காட்டுகிறார்.

திருமூலர் இத்திருநடனத்தைக் கண்டு களித்து,

"புளிக் கண்டவர்க்கு புன லூறுமாபோல்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாம்
துளிக்கும் அருங்கண்ணீர் சோர்நெஞ்சுருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத் தமுதூறும் உள்ளத்தே"

என்ற பாடலில் உணர்த்துகிறார். ஆதலால், நாமும் இத்தகைய தத்துவங்களும், மாண்புகளும் வாய்ந்த ஆனந்தக் கூத்தனின் அடிமலரினைக் கண்டுகளித்து ஆனந்தித்து வழிபட்டு உய்வோமாக.

11. முருகன்

ஐவகை நிலங்களுள் குறிஞ்சிநிலக் கடவுளாய் குமரன் விளங்குகின்றான். குன்றக் குறவர் குறத்தியரும், எயினர் எயிற்றியரும், அவனைச் சிறப்பாக வழிபடுகின்றனர். நம் தமிழகத்தில் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்ச் சோலை எனும் ஆறுதிருப்பதிகளிலும் அவன் சிறப்பாக

வீற்றிருந்தருள் புரிகின்றான். முருகனுக்குத் தனிக்கோயில்கள் பல உள்ளன. சிவாலயங்களில் முருகன் கோவிலும் வழிபாடும் சிறப்புற நடை பெற்று வருகின்றன. இம் முருகன் முழுமுதற் பரம் பொருளாகிய சிவபெருமானேயாவன்.

"ஈசனே அவன் ஆடலால் மதலையாயினன் காண்
பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்"

எனக் கந்தபுராணம் இயம்புகின்றது. தனக்கு நிகரிலாப் பரம்பொருளாகிய பரமன் முருகனாய்த் தோன்றக் காரணம் என்ன? அவன் எவ்வாறு தோன்றினன் என்பதை ஆராய்வோம்.

தக்ஷயாகத்தில் சிவநிந்தை நிகழ, அதனைக் கேட்டு நந்தி தேவர் சபிக்க, தேவர்கள் அனைவரும் அசுரர்களால் நலிவுற நேரிட்டது. அதன் பொருட்டே சூரபன்மனை சிவபிரான் தோற்றுவித்தார். வரம் பல பெற்ற சூரன் தனது அகங்காரத்தால் அடாத செய்கைகள் பல செய்து வந்தான். ஆதலால், அவனை அழிக்க வேண்டுவது அவசியமாயிற்று. வரம் கொடுத்த சிவபிரானே அவனை அழிப்பது முறையல்ல. வரபலம் பெற்ற அவனை அழிப்பது பிறர்க்கும் எளிதல்ல. ஆதலால், சிவபிரானே தனது ஆற்றல் அனைத்தையும் கொண்ட ஓர் குழந்தையைக் கொண்டு அதனை முடிக்கத் திருவுளங்கொண்டான். இதனை,

"வரமளித்த யாமழிப்பது முறையன்று வரத்தால்
பெருமை பெற்றுள்ள சூரனை அடுவது பிறர்க்கும்
அரிதெனப் பரன் உன்னயே தன்னுருவாகும்
ஒரு மகற்கொடு முடித்தும் என்றுன்னினான் உளத்தில்"

எனும் கந்தபுராணப் பாடலால் அறியலாம்.

தேவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கிய சிவபெருமான் தனது ஐந்து முகத்தோடு ஆறாவது முகத்தையுங் கொண்டு ஆறுமுகங்களிலுள்ள நெற்றிக் கண்களிலிருந்து, ஆறு தீப்பிழம்புகளை வெளிப்படுத்தினான். இவ்வாறும் சரவணம் சென்று ஆறுமுகக் கடவுளாகி அமர்ந்திருந்தது. அவர்க்குப் பாலூட்ட வந்த கார்த்திகைப் பெண்கள் அறுவருக்காக ஆறு

குழந்தைகளாயினர். அக்குழந்தைகளைப் பார்வதி தேவி அணைத்து எடுக்க முன்போல அறுவர் ஒருருவனார். அவரை இடப வாகனத்தில் ஏற்றிச் சிவனும் அம்மையும் இருமருங்கும் அமர்ந்து சிவலோகத்திற்கு அவரைக் கொண்டு சென்றனர்.

அவருடைய திருநாமங்கள் பற்பலவாகக் கூறப்படுகின்றன. அவற்றுள் ஒன்று முருகன் என்பது. முருகினை உடையவன் முருகன். முருகு என்பதற்கு இளமை, அழகு, நறுமணம், தேன், கடவுள்தன்மை என்பது பொருள். முருகனது அழகு என்றும் நிலைபெற்ற அழகாகும். அழகும் அழியா அழகே. இதனை "என்றும் இளையாய்; அழகியாய்" என்பதனால் அறியலாம். அவன் தெய்வத்தன்மை வாய்ந்தவன் என்பதை, "ஞானந்தான் உருவாகிய நாயகன்" என்பதாலும்.

"வேதக் காட்சிக்கும் உபநிடதத்து உச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்
மூதக்க..ர்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக்காதியாய் உயிர்க்குயிராய் நின்ற அமலன்"

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால்
அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடு நிமலமூர்த்தி"

என்னும் பாடல்களாலும் அறியலாம்.

சரவணப் பொய்கையில் தோன்றினதால் சரவணபவன் எனப் பெயர். (சரவணம் = நாணல் நிறைந்த பொய்கை.) ச – மங்களம். ர – ஒளி அல்லது கொடை. வ – சாத்வீகம். ந – போர். மங்களம், ஒளி கொடை, சாத்வீகம், போர் முதலிய தன்மைகளைக் கொண்டவரான படியால் சரவணபவன் எனப் பெயர் பெற்றார். மூலமந்திரம் "**ஓம் சரவண பவாய நம;**" என்பதாகும். மேலும் அவருக்கு வேள், குகன், கடம்பன், விசாகன், காங்கேயன், எனப் பல பெயர்கள் உண்டு. முருகனது மூர்த்தங்கள் பல உள. சுப்பிரமணியர், சண்முகர், சரவணபவர், ஞானசக்திதரர், தேவசேனாபதி, கல்யாணசுப்பிரமணியர், மயில்வாகனர் முதலியனவாம்.

முருகனது ஆறு திருமுகங்களில் ஒவ்வொரு திருமுகமும் செய்யும் தொழில்களை நக்கீரதேவர் திருமுருகாற்றுப்படையில் நன்கு சித்திரிக்கிறார்.

"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம்; ஒரு முகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகி
காதலினுவந்து வரங்கொடுத்தன்றே; ஒரு முகம்
மந்திரவிதியின் மரபுளி வழா அது
அந்தணர்வேள்வி ஓர்க்கும்மே; ஒரு முகம்
எஞ்சிய பொருள்களை ஏமுறநாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மே; ஒரு முகம்
செறுநர்தேய்த்துச் செல்சம முருக்கி
கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே; ஒரு முகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே"

(திருமுருகாற்றுப்படை.)

அ) ஒரு முகமானது பெருமையாகிய இருளையுடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும் பொருட்டு பல கிரணங்களையும் தோற்றுவித்தது.

ஆ) ஒரு முகமானது அன்பர்கள் துதித்ததால் அவர்கள் குற்றங்களை நீக்குவதற்கு உடன்பட்டு அவர்களுக்கு இனிதாய் நடந்து அவர்கள் மேற்சென்ற விருப்பத்தினாலே மகிழ்ந்து அவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்தது.

இ) ஒரு முகமானது மந்திரத்தையுடைய வேதத்திற் சொல்லிய முறைமை தவறாத பிராமணர்களுடைய யாகங்களிலே தீங்கு வராதபடி நிலையா நிற்கும்.

ஈ) ஒரு முகமானது வேதாகமங்களிலே மறைந்துள்ளவற்றை ஆராய்ந்து போதித்துச் சந்திரனைப்போலத் திசைகளெல்லாவற்றிலும் விளங்கும்.

உ) ஒரு முகமானது திருவுள்ளத்திலே நிகழா நின்ற சமத்துவத்தை ஒழித்துக் கோபம் கொண்ட திருவுள்ளத்துடனே பகைவராகிய அசுரர்களை வதைத்துப் போர்க்கள வேள்வியை வேட்டது.

ஊ) ஒரு முகமானது வேடருடைய மடப்பத்தையுடைய மகளும். கொடிபோலும் இடையினையுடைய இளம் பெண்ணுமாகிய வள்ளி நாயகியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று.

இவ்வாறு இவ்வறுமுகங்களும் அவ்வம்முகங்களுக்கு ஏற்ப ஒவ்வோர் தொழிலினைக் கொண்டு விளங்கும்.

முருகப் பெருமானுடைய பன்னிரண்டு கரங்கள் செய்யும் தொழில்கள் வருமாறு: ஒருகை தேவர்களையும் ரிஷிகளையும் பாதுகாக்க அமைந்தது. அதற்கிணையான ஒரு கை மருங்கிலே கிடந்தது. மூன்றாவது கை அங்குசத்தைச் செலுத்துகின்றது. அதற்கிணையான கை ஆடை உடுத்திய தொடையில் கிடக்கின்றது. ஐந்தாவதும் ஆறாவதுமாகிய கைகள் அழகிய பெரிய பரிசையோடு வேலாயுதத்தை வலமாகச் சுழற்றுகின்றன. ஏழாவது கை முனிவர்களுக்கு உரையிறந்த பொருளை உணர்த்த மார்போடு சேர்ந்து விளங்க, எட்டாவது கை மார்பில் தாழ்ந்து தொங்கும் மாலையுடனே சேர்ந்து விளங்குகிறது. ஒன்பதாவது கை வளைகளுடனே மேலே சுழன்று கள வேள்வியை வேட்கும் முத்திரை கொடுக்கின்றது. இதற்கிணையான கை மணியை மாறி ஒலிக்கப் பண்ணுகின்றது. பதினோன்றாவது கை மழையைப் பெய்விக்கின்றது. அதற்கிணையான மற்றொரு கை தெய்வப்பெண்களுக்கு மணமாலை சூட்டுகின்றது.

"வீறுகேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறிலாத வேல் அபயமே வலம்; இடம் வரத
மேறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த
ஆறிரண்டுகை அறுமுகங் கொண்டு வேளடைந்தான்"

என்ற கந்தபுராணப் பாடலால் முருகன் கொடி, வச்சிரம், அங்குசம், விசிகம், (பாணம்) வேல், அபயஹஸ்தம் என்பனவற்றை வலப்பாகத்திலும், வரதம், தாமரை, மணி, மழு, தண்டு, வில் என்பனவற்றை இடது பாகத்திலும் கொண்டுள்ளான் என்பது விளங்குகிறது.

முருகனைச் சார்ந்து விளங்கும் வடிவேல் ஞானசக்தியாகும். இது சிவபெருமானால் முருகனுக்குக் கொடுக்கப்பட்டது என்பதனையும் அதன் பெருமையினையும் கந்தபுராணப் பாடல் ஒன்று நன்கு விளங்குகின்றது. அப்பாடல் வருமாறு

"ஆயதற் பின்னரேவின் மூதண்டத்
தைம்பெரும் பூதமும் அடுவது
ஏய பல்லுயிரும் ஒருதலை முடிப்பது
ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிருந்திறலும் வரங்களுஞ் சிந்தி
மன்னுயி ருண்பது எப்படைக்கும்
நாயகமாவது ஒரு தனிச்சுடர்வேல்
நல்கியே மதலைகை கொடுத்தான்"

இவ்வேலின் வீரத்தினை திருமுருகாற்றுப்படையின் பின்னுள்ள தனிப்பாடல் ஒன்று நன்கு கூறுகின்றது.

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கை வேல் வாரி
குளித்தவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்த வேலுண்டே துணை"

சூரசங்காரம்

இறைவனது கருணை அறக்கருணை, மறக்கருணை என இரு வகைப்படும். நல்லவர்களை அறக்கருணையாலும், பொல்லாதவர்களை மறக்கருணையாலும் இறைவன் ஆட்கொள்ளுகிறான். சூரன் தான் பெற்ற வரத்தால் நன்மக்களுக்கும் தேவர்களுக்கும் துன்பம் பல செய்தான். அவன் மேலும் இவ்வுடலோடு நீண்டகாலம் இவ்வுலகில் தங்கினால் பலப்பல பாவச் செயல்களைச் செய்து மீளா நரகத்திற்கு ஆளாவான் என்பதனையும், தவத்தால் வரம்பல பெற்ற இவன் பெரும்பாவியாகிவிடக் கூடாது என்பதனையும் கருணையால் நினைத்து, இறைவன் குமர நாயகனாகத் தோன்றி வேலாயுதத்தால் அவனது உடலினைக் கூறாக்கி, அவற்றுள் ஒன்றினை மயில் வாகனமாகவும் மற்றொன்றினைச் சேவற் கொடியாகவும் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். இதனை விளக்கவே, திருவிழாக்களில் சூரசங்காரம் முடிந்ததும் முருகனை மயில் வாகனத்தில் ஏற்றுகிறார்கள். அப்பொழுது அவனுக்குச் சேவல் கொடியாகின்றது. இதிலிருந்து, முருகன் சூரனைக் கொல்லவில்லை என்பதும், மறக்கருணையால் ஆட்கொண்டான் என்பதும் நன்கு விளங்குகின்றன.

பெற்றோர்தம் பிள்ளைகளிடம் நோய் ஒன்று கண்டால் தாமே அந்நோயினை மாற்ற வேண்டியதைச் செய்கின்றார்கள். கத்தியால் அறுத்தும், சுட்டும், கடுந்துன்பம் செய்வித்தும் அதனைப் போக்குகின்றார்கள். இச்செயல் அவர்களுக்குப் பிள்ளைகளிட மிருக்கும் அன்பினைக் காட்டுகிறதா? பகைமையைக் காட்டுகிறதா? அன்பினை அல்லவோ காட்டுகின்றது; அதுபோல நம்மிடம் பற்றிய பாவங்களைத் தீர்ப்பதற்குப் பரமன், கருணையாலேயே இவை போன்றனவற்றைச் செய்கிறான். இதனை,

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள்
தஞ்சொலாற்றின்
வந்திடாவிடில் உறுக்கி வளாரினால்
அடித்துத்தீய
பந்தமும் இடுவரெல்லாம் பார்த்திடிற்
பரிவேயாகும்
இந்த நீர்முறைமையன்றோ ஈசனார்
முனிவுமென்றும்"

என வரும் சிவஞானசித்தித் திருவிருத்ததினால் அறியலாம்.

சூரன் ஆணவ மலம் நிறைந்த ஓர் உயிர். ஆணவ மலம் முதிர்ந்த உயிர் ஒருபோதும் இறைவனைக் காணாது. அம்முனைப்பு ஒடுங்கிய போது அஃது இறைவனைக் காணும். ஆணவ மலம் நிலைநிற்கும் காலம் வரை அது பிறந்து இறந்து பேதமையுற்றுத் தவிக்கும். ஆதலால் அம் முனைப்பினை அழித்தாலன்றி உயிருக்குப் பிணிமூப்புச் சாக்காடொழிந்து இறைவனோடு ஒன்றி வாழஇயலாது. அவ்வாறு ஆணவ மலத்தைப் போக்கும் ஆற்றலுடையவன் இறைவனே. அவன் உயிர்களிடத்துக் கொண்ட கருணையால், ஆணவ மலமாகிய சூரனது ஸ்தூல உடம்பைப்போக்கி ஆணவ மலம் நீங்கின ஆத்மாவை தன்னோடு சேர்த்துக் கொள்ளுகிறான் என்பது தத்துவம்.

சேவற் கொடி

இறைவன் நாதாதீதன். நாததத்துவம். அவன் நாதமும், நாதாந்த முடிவும் காணாத போதன். எல்லாம் நாதத்தில் ஒடுங்க, நாதம் இறைவனில் ஒடுங்கும் என்பர். சேவலானது "கொக்கறக்கோ" எனக்

கூவி அந்த நாத தத்துவத்தை முழக்குகிறது. கொக்கறக்கோ என்பதன் பொருள்; கொக்கு = சூரனாகிய மாமரத்தை, அறு = அறுத்து வீழ்த்திய, கோ = தலைவனாகிய முருகன் என்பது பொருள். எனவே நாதத்தை முழக்கும் சேவலைக் கொடியாகக் கொண்டு முருகன் விளங்குகிறான் என அறியலாம்.

வள்ளியம்மை தெய்வயானை திருமணம்

வள்ளியும் தெய்வயானையும் பூர்வத்தில் திருமாலின் புதல்வியராவர். அவர்களுக்குச் சுந்தரி, அமுதவல்லி என்பது பெயர். திருமாலின் புதல்வியராதலால் இவர்கள் சக்தியின் அம்சமாவர். இவர்களை இச்சாசக்தி, கிரியாசக்தி எனக் கூறுவர். அவர்கள் முருகனைக் குறித்துத் தவம் புரிந்தனர். அவர்கள் தவத்துக்கு இரங்கிய முருகன் அமுதவல்லியை இந்திரன் மகளாக தேவலோகத்திலும், சுந்தரியை குறவர் மகளாகப் பூலோகத்திலும் வளரும்படிக் கட்டளையிடுகிறான். முருகன், சூரபன்மன் முதலிய அசுரர்களைக் கொன்று தேவர் துயரினை அகற்றியதால் இந்திரன் மகிழ்ந்து தெய்வயானையை முருகனுக்கு மணம் புரிவிக்கின்றான். வள்ளியம்மை தினைப்புனங்காக்கும் பொழுது முருகனே வேடனாகவும், விருத்த வடிவிலும் சென்று திருவிளையாடல் புரிந்து வள்ளிக்குத் தன்காட்சியை நல்கி, அவளை மணம் புரிந்து கொள்ளுகின்றான்.

வள்ளி திருமணத் தத்துவம்

சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்தில் கூறியவாறு உயிர் தன்னியல்பறியாது கருவிகளின் இயல்பே தன்னியல்பென மயங்கி உணர்வற்றுக் கிடக்கும் பொழுது இறைவன் தோன்றி உணர்வினை நல்கி, உபதேசித்துத் தன்னோடு இரண்டறச் சேர்த்துக் கொள்ளுவான் என்பதே இதன் தத்துவம்.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னிய மின்மையில் அரன்கழல் செலுமே"

சிவஞான போதம்.

12. சண்டேசுவரர்

ஆலயங்களில் இறுதியாக சண்டேசுவரர் வழிபாடு அமைக்கப் பட்டிருக்கிறது. நமது ஆன்மார்த்த பூஜையிலும் அவ்வழிபாடே பூசை முடிவில் செய்யப்படுகிறது. இவரை வழிபடும் பொழுது மக்கள் கையால் மூன்று முறை தாளமிட்டு வணங்குவது வழக்கம். இதன் உட்பொருள் தெரியாமல் இதன் காரணத்தைப் பலர் பலவாறு கூறுவர். சிலர் இவர்முன் நூலையிட்டு வழிபடுவதும் உண்டு. அதற்கும் காரணம்தெரியாது செய்து வருகின்றனர். சண்டேசுரப்பேறு என்பது ஓர் அரிய பேறாகும். சண்டேசுரப்பேறு பெற்றவர்களுக்கு வீடுபேறு எளிதாகும். இதுவே சிவப்பிரஸாதம் பெறுவதற்கு உரிய பதம். சிவநிர்மால்யத்தால் சண்டேசுவர பூஜை செய்யப்பெறுகின்றது. வீடுபேற்றை விரும்புவோர் இவரை வழிபட்டு வருகின்றனர்.

சோழநாட்டில் மண்ணியாற்றங்கரையில் சேய்ஞலூரில் எச்சதத்தன் என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் பவித்திரை என்ற மனைவியை மணந்து விசாரசருமர் என்ற புதல்வரைப் பெற்றான். இவர் இளமையிலேயே எல்லாக் கலைகளையும் ஓதாது உணர்ந்தார். கன்றினை ஈன்ற பசு ஒன்றை, அதன் மகிமை அறியாது அதனை மேய்க்கும் ஆயன் ஒருவன் தடியால் அடிப்பதைக் கண்டு வருந்தி "யானே இனி இந்நிரை மேய்ப்பன்" எனக் கூறி பசுக்களை மேய்த்து வரலானார். இவரருகே சென்ற பசுக்கள் அன்பு மீதுர பாலைச் சொரிய சிறுவருக்கு சிவபூசையில் மனம் சென்றது. ஆற்றுமணலில் இலிங்கம் அமைத்து குடத்தில் பாலையேந்தி அபிடேகம் செய்து வரலானார். இதனை அறிந்த எச்சதத்தன் நேரில் வந்து பார்த்துப் பாற் குடத்தைக் காலால் இடறிச் சிந்தினான். இச்சிவாபராதத்தை கண்ட சிறிய பெருந்தகையார் கோலை எடுக்க அது ஒரு மழுவாயிற்று. அதனைக் கொண்டு தந்தையின் இரு கால்களையும் வெட்டினார். உடனே சிவபெருமான் தோன்றி "நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய்; அடுத்த தாதை இனி உனக்கு நாம்" என்றுரைத்து தொண்டர்களுக்கு அவரைத் தலைமையாக்கி "நாம் உண்ட பரிகலமும், சூடுவனவும், உடுப்பனவும் உனக்கே தந்தோம்" எனக் கூறி தன் முடியிலிருந்த கொன்றை மாலையைச் சூட்டியருளினார். இதனை

"அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி அனைத்துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக்காகச்
சண்டீ சனுமாம் பதந்தந்தோம் என்றங் கவர் பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்"

என்ற பெரியபுராணப் பாடலால் அறியலாம்.

திருவிழாக்களில் பஞ்சமூர்த்திகளில் ஒருவராக இவர் எழுந்தருளுகிறார். சண்டிகேசுவரைப் பற்றி திருமுறைகளில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. ஒன்றிரண்டு உதாரணத்திற்காக இங்கு எடுத்துக்காட்டுவோம்.

பீரடைந்த பாலதாட்டப் பேணாதவன் தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந்தான் தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்தென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே.

திருஞானசம்பந்தர் தேவாரம்

உறுவது அறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழுவால் வெட்டி மாலை பெற்றானே.

திருமந்திரம்

“தந்தை இருதாள் துணித்துத் தம்பிரான் தாள்சேர்த்த
எந்தை இருதாள் இணைக்கே இன்புறுவது எந்நாளோ”

தாயுமானவர்

என தாயுமானவர் இவரை ஏத்துகிறார்.

இவர் சிவபத்தியில் ஆழ்ந்த சிந்தையராய் ஆலயங்களில் வடக்குப் பிராகாரத்தில் கோமுகிக்கு அருகில் ஓர் சிறிய தனிக்கோவிலில் அமர்ந்திருக்கிறார். நாம் வழிபட்டு சிவதரிசன பலனை இவரிடமிருந்து பெறுகிறோம். எப்பொழுதும் இறைவனது தியானத்தில் இவர் அமர்ந்திருப்பதால் இவரை நேர்முகப்படுத்தி அருள்பெற மும்முறை கைத்தாளம் இடுகிறோம். மக்கள் கோவிலுக்குப் போகும் பொழுது ஆலய வழிபாட்டுக்குரிய பொருள்கள் எதுவேனும் கொண்டு போவது வழக்கம். நிவேதனப் பொருள்களே அன்றி, விளக்கேற்றுவதற்குரிய நூல்திரி, எண்ணெய், நெய் முதலியனவும் கொண்டு செல்வது வழக்கம். அவற்றை சண்டிகேசுவரர் சந்நதியில் வைத்துவிடுவர். அவற்றை ஆலய அர்ச்சகர்கள் அதனை எடுத்து ஆலயத்திற்குப் பயன்படுத்துவர். இந்த முறையில் வைக்கப்பட்ட நூல்திரிப் பழக்கம் காலப்போக்கில் மாறி தாங்கள்

கட்டியுள்ள வேட்டியிலிருந்து நூலை எடுத்துப் போடும் வழக்கமாக மாறிவிட்டது. சிலர் அறியாமற் செய்யும் இப்பழக்கத்தை அறவே தடுப்பது அறிஞர்களின் கடமையாகும்.

மேற்கூறிய மூர்த்திகளேயன்றி வைரவர், சூரியன், சனீச்சுவரன், துர்க்கை, நவக்கிரகங்கள் முதலிய மூர்த்திகளையும் கோவில்களில் அமைத்து வழிபட்டு வருகின்றனர். மேற்கூறியவற்றால் ஆலயங்களும், அதில் அமைக்கப்பட்டிருக்கும் மூர்த்திகளும் பிறவும் விளக்கப்பட்டன.

13. நாராயணர்

ஆலயம் என்ற பகுதியில் சைவ ஆலய அமைப்புகளைப் பற்றியும் அவற்றில் நிலைநிறுவப் பெற்றிருக்கும் மூர்த்திகளைப் பற்றியும் ஒருவாறு விளக்கினோம். இனி விஷ்ணுவாலயங்களைப் பற்றியும், விஷ்ணுவின் அவதாரங்களைப் பற்றியும் சிறிது விளக்குவாம்.

சிவாலயங்களைப் போலவே விஷ்ணுவாலயங்களிலும் கோபுரம், கொடிமரம், பிராகாரம், விமானம், மண்டபங்கள் முதலியன அமைக்கப்பட்டிருக்கின்றன. விஷ்ணு ஆலயங்களில் வைணவ சமயமூர்த்திகளும், அவதாரங்களும் சிறப்பாக நிலைநிறுவப் பட்டுள்ளன. மூலஸ்தான மூர்த்தி நாராயணரேயாவர். அவர்சில ஆலயங்களில் சங்கு, சக்கர, கதை, கட்க, கோதண்ட பாணியாய் நின்றும், இருந்தும், கிடந்தும் காட்சி அளிக்கின்றார்.

நடராஜர் கையில் இருக்கும் உடுக்கு ஓங்காரத்தை முழக்கி உலகைப் படைப்பதுபோல, நாராயணரும் 'பாஞ்சஜன்யம்' என்னும் சங்கினை முழக்கி உலகத்தைப் படைக்கிறார். நடராஜர் தன் கையில் அக்கினியைக் கொண்டு உலகத்தை அழிப்பது போல இவரும் 'சுதர்சன'மெனும் சக்கரத்தால் அழித்தலை உணர்த்துகிறார். இருவருடைய அபயகரங்களும் காப்பாற்றுதலைக் குறிக்கின்றன. 'கதாயுதம்' ஓயாது சஞ்சலம் நிறைந்த உலக வாழ்வாகிய பெரும்போரில் நம்மைத்தாக்கும் சுகதுக்க ரூபமான அம்புகளைத் தடுக்கும் தன்மையைக் குறிக்கின்றது. 'நந்தகம்' என்ற வாள் அஞ்ஞானத்தை அழிப்பதையும், 'சார்ங்கம்' என்ற வில் தீவினைகள் அடியாரை வந்து நலியாது பாதுகாப்பதையும் குறிக்கின்றன. 'கௌஸ்துபமணி' பிரபஞ்சத்துள் ஆடும் பரஞ்சோதியாகிய அந்தராத்மாவை உணர்த்துகின்றது. 'ஸ்ரீவத்ஸம்' எனும்

மறுசகலத்திற்கும் ஆதாரம் ஆகிய பிராதனம் எனும் தத்துவத்தை உணர்த்துகின்றது. இவரது கிடந்த திருக்கோலம் பாலாழியில் ஆதிசேடன் மீது படுத்து அறிதுயில் கொண்டு சயனித்திருப்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இவர் பாலாழியில் படுத்துறங்குவது பல அரிய தத்துவங்களை விளக்குகிறது. பால் பரிசுத்தமானது, களங்கமற்ற வெள்ளை நிறம் உடையது. இவ்வாறு பரிசுத்தமான உள்ளங்களில் இறைவன் அமர்ந்து அருள்புரிவான் என்பதனைக் குறிக்கிறது. பாற்கடல் சலனமற்றது. சஞ்சலமற்ற சாந்தம் உடையவரது உள்ளத்தில்தான் இறைவன் வீற்றிருப்பான் என்பதை உணர்த்துகிறது. மேலும், ஆண்டவனது திருவருள் பால் போல் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏகஉருவாய்க் கிடப்பதையும் உயிர்கள் அதனை அடைந்து அப்பரமானந்தத்தைப் பருகவேண்டும் என்பதனையும் குறிக்கிறது.

இறைவன் ஆதிசேடன்மீது சயனித்திருக்கிறார். பாம்பு தமோ குணமாகிய கோபம் நிறைந்தது. இதன் மீது அவர் சயனித்திருக்கிறார். 'சேடன்' என்ற சொல்லுக்கு சேடித்து இருப்பவன் என்பது பொருள். யுக முடிவில் இறைவன் எல்லாவற்றையும் சேடனாகிய தமோகுணத்தைக் கொண்டு அழிக்கின்றான் என்று அந்த ஆதிசேடனையும் அவர் அடக்கி ஆள்கின்றார் என்றும் சேடசயனம் உணர்த்துகின்றது. சேடன் பகவானைச் சுமந்து கொண்டு அவருக்குக் குடைபிடித்துக் கொண்டும் பணிவிடை செய்து வருகிறார். இவருக்கு அனந்தன் என்ற ஒரு பெயரும் உண்டு. அனந்தன் = அந்தம் அல்லது முடிவில்லாதவன் என்பது பொருள். இந்த அனந்தன் மீது பகவான் அறிதுயில் கொள்ளுகிறார். அது நமது உறக்கம் போன்ற உறக்கம் அல்ல. அறிவோடும் உறங்கும் உறக்கமாகும். எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி அவற்றைச் சரியாய் நடக்கச் செய்து தனக்கும் அவற்றிற்கும் எவ்விதத்தொடர்பும் இல்லையெனக் காட்டி நித்தியானந்தத்தில் மூழ்கினவராய் இருப்பதே அறிதுயிலாகும். இதனைத் தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுநிலை என்பர். இந்நிலையை ஆன்மாக்களும் பெற்று இன்புற வேண்டுமென்பது இறைவனது குறிக்கோள்.

ஆன்மாக்களாகிய நாம் ஜாக்ரம், ஸ்வப்னம், சுஷுப்தி, துரியம் துரியாதீதம் எனும் ஐந்தவத்தைப் பட்டுழலுகிறோம். இறைவன் அவ்வவத்தைகளுக்குட்படாதவன் என்பதையும் இந்த யோக நித்திரையால் அறியலாம். நாராயணர் நான்முகனைப் படைத்து அவரைக் கொண்டு உலகத்தை உண்டு பண்ணினார். அதனைக் காப்பாற்றும் பொறுப்பைத்

தாமே மேற்கொண்டார். இத்தொழில்களால் அவருக்குக் களைப்போ, காலதாமதமோ உண்டாவதில்லை. சங்கல்ப மாத்திரையால் அனைத்தையும் நடத்துகிறார். இவற்றை எல்லாம் செய்தாலும் அவர் எவ்வித விகாரமுமில்லாதவராயிருக்கிறார். இவை ஒன்றும் அவரைக் கட்டுப்படுத்தாது.

இவர் பாம்பையும் கருடனையும் பக்கத்தில் வைத்திருக்கிறார். விரோதிகளான இவை சிவபெருமானின் திருமுடியிலுள்ள சந்திரனும் பாம்பும் பகையின்றி இருப்பதைப்போல, பகையாது அமர்ந்துள்ளன. பகவான் ஒரு யோகி. யோக நித்திரை செய்பவர். ஆனால் அவர் பக்கத்தில் இலட்சுமி தேவியை வைத்துக் கொண்டிருக்கிறார். இல்வாழ்வான் ஐம்புலனடக்கி யோக நிலையை மேற்கொள்ளுவதே சிறப்பானதாகும். மன அடக்கம் எவருக்கும் இன்றியமையாதது. "நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை" என்ற தேவாரத்தாலும் இதனை அறியலாம்.

இதிலிருந்து திருமால் இல்லறத்தானும், துறவறத்தானும், இரண்டையும் கடந்தவனுமாவான் என்பது புலனாகின்றது. யோக நித்திரையை நிட்டை என்றும் கூறுவர். இராஜ யோகத்தினாலோ ஞானத்தாலோ எல்லா எண்ணங்களையும் அகற்றி மனத்தை அடக்கி இறைவனைத் தியானிக்க வேண்டுமென்பதே இதன் தத்துவமாகும்.

தசாவதாரங்கள்

தர்மத்திற்குக் குறைவும், நல்லோர்களுக்குத் துஷ்டர்களால், இடையூறுகளும் நேரிடும் பொழுது, நல்லோர்களை இரட்சித்து, துஷ்டர்களை அழித்து, தர்மத்தை நிலைநிறுத்த யுகங்கள் தோறும் நாராயணர் அவதாரமெடுப்பர். அப்படி இவர் எடுத்த அவதாரங்களில் முக்கியமானவை பத்தாகும். அவை தசாவதாரங்கள் என சிறப்பித்துக் கூறப்படும். அவை வருமாறு:

1. மச்சாவதாரம்

ஹயக்கிரீவன் என்ற அசுரன் வேதங்களைத் திருடிக் கொண்டுபோய் கடலில் ஒளித்திருந்தான். மகாவிஷ்ணு மச்சாவதாரமெடுத்துக் கடலுள் சென்று அவனைக் கொன்று வேதங்களை மீட்டு வந்தார்.

2. கூர்மாவதாரம்

கடலில் மந்தரமலையை மத்தாக நாட்டி வாசுகியாகிய பாம்பைக் கயிறாகக் கொண்டு கடையும் காலத்து மந்தரபர்வதம் ஒரு பக்கம் சாய அதனை நிமிர்த்துவான் வேண்டி விஷ்ணு அம்மலையின் அடிப்பாகத்தில் வலிமை மிக்க ஓட்டினையுடைய ஆமையாகித் தாங்கி, அம்மந்தரமலை தாழாது நிற்கச் செய்தார்.

3. வராகாவதாரம்

ஹிரண்யாக்ஷன் எனும் அரக்கன் பூமியைச் சுருட்டிக் கொண்டு போய் கடலுள் ஒளித்திருந்தான். விஷ்ணு வராகாவதாரமெடுத்துச் சென்று அவ்வசுரனைக் கொன்று பூமியைக் கோட்டின் மீது தாங்கி வெளிவந்தார்.

4. நரசிங்காவதாரம்

ஹிரண்யகசிபு என்ற அசுரன் "தானே கடவுள்; வேறெவரும் கடவுளர் அல்ல" என அகங்கரித்து நின்ற காலை, அவனது புதல்வன் பிரகலாதன் தெய்வீக உணர்வில் தலைசிறந்த வானாயிருந்தான். "அக்கடவுள் எங்கு உளன்? என்று தன் புதல்வனைக் கேட்க "தூணிலும் உளன்; துரும்பிலும் உளன்" என மைந்தன் கூற அப்படியானால் இத்தூணில் உள்ளானா என எதிரிலுள்ள தூணைக் காலால் உதைக்க அத்தூணின்றும் நரசிங்கமூர்த்தியாக விஷ்ணு தோன்றி அவனைக் கொன்றருளினார். மனிதர்களாலும், விலங்குகளாலும் மரணம் நேரக்கூடாது என்பது அவன் கேட்ட வரமாதலால் மனிதனும், விலங்கும் கூடிய வடிவில் உருவமெடுத்தார்.

5. வாமனாவதாரம்

மகாபலி என்ற அசுரனால் இந்திரனுக்கும், தேவர்களுக்கும் துன்பம் நேர, விஷ்ணு சிறிய உருவந்தாங்கிய வாமனனாகி மூன்றடி மண் அவன் பால் யாசிக்க, அவன் சம்மதித்ததும் உயர்ந்த வடிவத்தோனாய் ஓரடியால் உலகத்தையும், மற்றோரடியால் வானுலகையும் அளந்து மூன்றாவது அடிக்கு அவன் தலையில் காலை வைத்து பாதாளத்துள் அவனை அமிழ்த்தினார்.

6. பரசுராமாவதாரம்

இவர் கார்த்தவீரியார்ஜுனனைக் கொன்றார். தனது தந்தையை ஓரரசன் கொன்றான் என்பதற்காக அவ்வினத்தாரைக் கொன்று பழிக்குப்பழி வாங்கினார். இவரது விஷ்ணு அம்சம் தசரதராமரைச் சென்றடைந்தது.

7. தசரதராமர்

இராமரது வரலாறு அனைவரும் அறிந்ததே. இவர் தசரத புத்திரராய் அயோத்தியில் அவதரித்தார். இராமர் குருவாக்கிய பரிபாலனம், தந்தை தாய் வாக்கிய பரிபாலனம், சகோதர வாஞ்சை, சரணாகதி அளித்தல், துட்ட நிக்கிரக சிட்ட பரிபாலனம் செய்தல் முதலிய அருங்குணங்கள் நிறைந்தவர். அவற்றை முறையே இங்கு ஆராய்வோம்.

1. குருவாக்கிய பரிபாலனம்

தாடகையை இராமன் ஓர் பெண்ணென எண்ணினான். விசுவாமித்திரர், "அவள் ஓர் பெண்ணல்ல என்றும், அரக்கர்களில் ஆண்மகன் செய்யும் கொடுமையினும் மிகக் கொடிய செயல்களைக் கூசாது செய்கின்ற வலுவுடையவள் என்றும், அவளால் பல நற்கருமங்கள் தடைபடுகின்றன என்றும், ஆதலால், அவளைக் கொல்வது இராமனின் கடமை" என்றும் கூறினார். குருவாக்கிய பரிபாலனத்தின் பொருட்டு இராமன் அவளைக் கொன்றான்.

தாடகையாகிய பெண்ணை இராமன் கொன்றது குற்றம் எனச் சிலர் கூறுவர். பெண்ணைக் கொல்வது குற்றம் என்பது இராமனுக்குத் தெரியும். விசுவாமித்திரர் அவளுடைய தீய செயல்களை எடுத்துக்காட்டி அவளைக் கொல்வது அரச புத்திரனின் கடமையென வற்புறுத்திக் கூறிய பின்னரே இராமன் குருவின் கட்டளையை மறுத்தற்கஞ்சி கொன்றான்.

2. தந்தைதாய் வாக்கிய பரிபாலனம்

இராமன் சிற்றன்னையாகிய கைகேயிக்குத் தனது தந்தை கொடுத்த வரத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தந்தை கூறாமலே கானகம் ஏகியதால், தந்தை தாய் வாக்கிய பரிபாலனம் செய்தமை நன்கு விளங்குகின்றது.

3. சகோதர அன்பு

தம்பி பரதன் நாடாளப் போவதை அறிந்து மகிழ்ந்து அரசியலைத் துறந்து கானகம் ஏகியதிலிருந்தும், இதை அறிந்த பரதனே வந்து நாட்டிற்குத் திரும்பி வரும்படி வேண்ட, நாடாள மறுத்து, அவனைத்

தேற்றி அனுப்பியதிலிருந்தும், குகன், சுக்கிரீவன், விபீடணன் முதலிய பிறரையும் தன்னுடன் பிறந்தவர்களாகவே கருதியதிலிருந்தும் இவரது சகோதர அன்பு விளங்குகின்றது.

4. ஏகபத்தினி விரதம்

சூர்பனகையாகிய அரக்கி வலுவில் வந்து தன்னை மணம் புரிந்து கொள்ளும்படி வேண்டியும் அவளுக்கு இசையாது மறுத்து அவளை அடக்கி அனுப்பியதிலிருந்தும் சீதையையன்றி எந்தப் பெண்ணையும் சிந்தையாலும் தொடாத்தன்மையாலும் இவரது ஏகபத்தினி விரதம் இனிது விளங்குகிறது.

5. வாலிவதம்

இராமன் வாலியை மறைந்து நின்று கொன்றது கோழைத்தனம் எனச் சிலர் கூறுவர். இராமன் கோழை அல்ல; வீரன் என்பதை யாவரும் அறிவர். மறைந்து நின்று கொன்றதன் காரணம் சுக்கிரீவன் சரணாகதி அடைந்த பொழுது தான் அவனுக்களித்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதன் பொருட்டேயாகும். சரணாகதியென்பது அடைக்கலம் புகுந்தவரை எவ்வகையிலும் காப்பாற்றுவதேயாம். இராமர் இக்கொள்கையை மேற்கொண்டவர்.

சுக்கிரீவன் தனது அண்ணனாகிய வாலியின் கொடிய செய்கைகளுக்கு அஞ்சி ஒளிந்து வாழ்ந்து வந்தான். அனுமன் இராமனுக்கும், சுக்கிரீவனுக்கும் நட்பு ஏற்படச் செய்தான். சுக்கிரீவன் இராமனிடம் தன் குறைகளைக் கூறி சரணமடைந்தான். "அயோக்கியனாகிய வாலியைக் கொன்று உன்னை இரட்சிக்கிறேன்" என இராமன் அவனுக்கு அபயம்கொடுத்தான்.

வாலி மிக பலசாலி. எதிர்த்தவன் பலத்தில் பாதி அவனைச் சேரும், தம்பியினிடத்தில் அன்பில்லாமல் அவனைத் துரத்தியது அன்றி அவன் மனைவியையும் தன் மனைவியாக்கிக் கொண்டான். வலியால் அகங்கரித்த வாலி எந்தக் கொடிய செய்கைகளையும் தம்பிபால் கூசாமல் செய்து வந்தான். ஆதலால், அவனைக் கொல்வது குற்றமாகாது.

வாலி கொடியவனே எனினும், இராமன் வணங்கி வழிபடுவதற்கு உரியவன் என்பது தனது மனைவியாகிய தாரையிடம் அவன் கூறியதிலிருந்து விளங்குகிறது. இராமன் எதிர்த்து நின்று போர் புரியின்

வாலி அவரை வழிபட்டுச் சரணாகதி அடைவான் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அப்படி அவன் சரணாகதி அடைந்தால் அவனைக் கொல்வது நியாயமும் ஆகாது. முன் சுக்கிரீவனுக்குக் கொடுத்த சரணாகதியை நிறைவேற்றுவதற்கியலாது. ஆதலின் இராமன் வாலியை மறைந்து நின்று கொல்ல நேர்ந்தது.

6. இராமாயண ஆராய்ச்சி

தற்காலத்தில் இராமாயணத்தைப் பற்றிப் பற்பலர் பற்பல ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றனர். இராம, இராவண யுத்தத்தை ஆரிய, திராவிடப் போரெனச் சிலர் கூறுகின்றனர். இராவணனைத் திராவிடன் எனவும், இராமனை ஆரியன் எனவும் இவர்கள் பேசுகின்றனர். இராவணன் என்ற சொல்லுக்கு வடமொழியில் அலறச் செய்கிறவன் என்பது பொருள். தனது கொடிய செய்கைகளால் உலகத்தைக் கதறும்படி செய்துவந்தான். கும்பகர்ணன் என்பதற்கு குடம் போன்ற காதையுடையவன் என்றும், சூர்ப்பனகை என்பதற்கு முறம் போன்ற நகத்தை உடையவள் என்றும் பொருள். இராவணனும் அவனைச் சேர்ந்தவர்களும் வடமொழிப் பெயரையே கொண்டுள்ளனர். இராவணன் பூணூல் பூண்டு, சாமவேதம் ஓதி, சிவனை வழிபட்டவன் எனத் தெரிகிறது. சிவனுறையும் கயிலைமலையை எடுக்க முயன்றதிலிருந்து இவனுடைய திமிர் நன்கு விளங்குகின்றது. சூர்ப்பனகை வலுவில் வந்து இராமரை மணக்க விரும்பிய தன்மை திராவிடப் பெண் பண்பாட்டிற்கு உகந்ததல்ல. இராவணன் பிறன் மனைவியாகிய சீதையை விரும்பி அவளை வலுவில் தூக்கிச் சென்று பயப்படுத்தி மணம்புரிய விரும்பியதும் திராவிட ஆண்மக்களின் பண்புக்கு மாறுபட்டதாகும். இதிலிருந்து இராவணன் ஓர் திராவிடன் அல்லன் என்பது தெளிவாகிறது. ஆதலின், இராம இராவண யுத்தம் ஆரிய, திராவிடப் போரன்றென்பது நன்கு விளங்கும்.

8. பலராமாவதாரம்

இவரை ஆதிசேடன் அம்சம் என்பர். கண்ணனுக்கு முன் பிறந்தவர். கண்ணன் புரிந்த பால லீலைகளில், நடத்திய வீரச் செயல்களில் அவனுடன் இவரும் உடனிருந்து உதவியவர்.

9. கிருஷ்ணாவதாரம்

விஷ்ணுவின் அவதாரங்களில் இராமாவதாரத்தைப் போல கிருஷ்ணாவதாரமும் சிறந்ததாகும். கண்ணபிரான் "எல்லா ஜீவான்மாக்களும் இறைவனும், பிறப்பு அற்றவனும், எங்கும் வியாபித்திருப்பவனுமாகிய நான் எனது ஆத்ம மாயையால் ஜனிக்கின்றேன்" எனக் கூறுகின்றான்.

வாசுதேவருக்கும், தேவகிக்கும் புத்திரராய் கிருஷ்ணர் அவதரித்தார். ஆயர்பாடியில் நந்தகோபாலனுக்கும் யசோதைக்கும் புத்திரராய் வளர்ந்து வந்தார். வாசுதேவரின் புத்திரராகையால் வாசுதேவர் எனப்பெயர் பெற்றார். எல்லா உயிர்களினுள்ளும் வசிப்பவராகையால் வாசுதேவர் எனப் பெயர் பெற்றார் எனச் சிலர் கூறுவர். அவரது அவதார சரிதையை கோகுலநந்தனன், துவாரகா நாதன், பார்த்தசாரதி என மூன்றாகப் பிரித்து ஆராய்வோம்.

1. கோகுல நந்தனன்

கண்ணன் கோகுலத்தில் பதினாறு வயதுவரை வாழ்ந்து வந்தான். அக்காலத்தில் அவன் நடத்திய வீர, தீரச் செயல்கள், தெய்வீகச் செயல்கள் சிலவற்றிற்குச் சிலர் மாசு கற்பிப்பர். அம்மாசினை அகற்றும் முறையில் தக்க பதில் கூறுவாம்.

பூதனை வதம்

பூதனை என்ற பெண்பாலைக் கண்ணன் கொன்றது குற்றம் எனச் சிலர் கூறுவர். பூதனை தனத்தில் விஷம் தடவிக்கொண்டு பாலூட்டிக் கண்ணனைக் கொல்ல வந்தவளாதலால், அவன் அவளைக் கொன்றது குற்றமாகாது.

வெண்ணெய் திருடினமை

இவரைப் பால், தயிர், வெண்ணெய் திருடிக் கள்ளத்தனமாக உண்டவர் எனக் குற்றம்சாட்டுவர் சிலர். பால் போன்ற பரிசுத்தமும், வெண்ணெய் போன்ற மிருதுத் தன்மையும் உள்ள அடியார்களது உளங்கவர் கள்வனே தவிர, உணவின் பொருட்டுத் திருடித் தின்னும் கள்வனல்ல என்று உணரவேண்டும்.

சேலைகளைக் கவர்ந்தமை

கோபிகைகளின் சேலைகளைத் திருடி மரத்தில் ஏறி மறைந்து கொண்டது, புனித நீரில் ஆடையின்றி நீராடியது குற்றமென்பதையும், மானாபிமானங்களை அறவே கைவிட்டு இறைவனை அடைந்தவர்க்கே முத்திப் பேறளிக்கப்படும் என்பதனையும் உணர்த்துவதற்கேயாம்.

பெண்களின் நீராட்டை ஒருகுழந்தை காண்பது குற்றமுடையது அன்று. கண்ணனும் குழந்தைப் பருவத்திலேயே இத்தகைய சில விளையாட்டுகளைச் செய்தான். எனவே, இது குற்றமான செயலன்று.

குழலூதி மயக்கியது

கண்ணன் குழலூதி ஆயர்பாடிப் பெண்களை அழைத்து ஆடல், பாடல் புரிந்தது ஒரு காமுகனின் செயல் எனச் சிலர் கூறுகின்றனர்.

கண்ணன் குழலோசை கேட்டதும் ஆயர்பாடிப் பெண்களேயன்றிப் பசுக்கூட்டங்களும், ஏனைய உயிர்வர்க்கங்களும், ஆயர்பாடி ஆடவர்களும் கூட மதிமயங்கித் தன்வசமிழந்து சென்று அவனைக் காமுற்றனர். ஜீவாத்மாக்கள் பரமாத்மாவினை நேசித்து அவனைச் சென்றடைகின்றனவே ஒழிய அவன் எவ்விதச் சலனமுமின்றி நிர்க்குணனாயிருக்கிறான். எனவே, குழலூதி ஆயர்பாடி மங்கையர்களை மயக்கினான் எனக் கூறுவது தகாத கூற்றாகும்.

பதினாயிரத்தெட்டு கோபியர்களோடு இராஸக்கிரீடை செய்து இரமித்த கண்ணனும் ஒரு கடவுளா எனச் சிலர் கழறுவர். இத்தனை பெண்களோடும் இனிதுறைந்து வாழுவதற்கு இறையாற்றல் அற்ற எவருக்கும் இயலாது. எல்லாக் கோபிகைகள் வீட்டிலும் கண்ணபிரான் உருக்கொண்டு ஏககாலத்தில் உறைந்ததைக் கண்ட நாரதர் அவரது இறைத்தன்மையைக் கண்டு வியப்பெய்துகின்றார்.

மண்ணையுண்ட பொழுது யசோதை வாயினைத் திறக்கும்படி கூற, திறந்தவாயினுள் அண்டபிண்ட சராசரங்கள் அனைத்தையும் அவளுக்குக் காட்டியதும், மருதிடைத்தவழ்ந்து சென்று அம்மரங்களைக் கந்தர்வகளாக்கியதும், சகடம் விழ உதைத்ததும், கன்றால் விளவின் கனியுகுத்ததும், குன்றால் மழையில் குலந்தடுத்ததுமாகிய செயல்கள் அவரது தெய்வீகச் செயல்களை உணர்த்துகின்றன. இவையனைத்தும் இவரது பால லீலைகள் ஆகும்.

2. துவாரகை நாதன்

கிருஷ்ணர் துவாரகைக்கு அரசராய் அமர்ந்த காலத்து இல்வாழ்க்கையின் சிறப்பை எடுத்துக் காட்டினார். சிசுபாலன், தந்தவத்திரன் முதலிய தீயோர்களை அழித்தார்.

நல்லோர்களான பாண்டவர்களுக்காக துர்யோதனன் பால் தூது சென்று உத்தமதூதனின் இலக்கணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

3. பார்த்தசாரதி

கிருஷ்ணர், பார்த்தனுக்குச் சாரதியாகித் தேரோட்டியதி லிருந்து உத்தம நண்பனுக்கு உதவும் தன்மையை விளக்கியருளினார். யுத்த மத்தியில் திகைத்து நின்ற அர்ஜுனனுக்குக் கீதோபதேசம் செய்து, அவன் திகைப்பை நீக்கிச் சுத்த வீரனாக்கினார். கீதை இந்து மத நூல்களில் தலைசிறந்த ஞானநூலாகத் திகழ்கிறது. உலகிற்கே ஒளி காட்டியும் வருகிறது. கண்ணபிரானின் விரிவான வரலாற்றைப் பாகவதம், பாரதம் முதலிய நூல்களில் பரக்கக் காணலாம்.

10. கல்கி அவதாரம்

கலியின் முடிவில் விஷ்ணுவானவர் கல்கியாக அவதரித்துத் துட்டநிக்கிரகசிட்ட பரிபாலனம் செய்து தர்மத்தை நிறுத்துவார் என நூல்களில் கூறப்பட்டுள்ளது.

14. உலகத்தோற்றம்

நாம் காணும் இந்த உலகம் தோன்றியழியும் தன்மையுடையது. தற்காலத்தில் பூகம்பங்களாலும், புயல்களாலும், கடல்கொளல் முதலியவைகளாலும், உலகத்தில் சில பகுதிகள் அழிந்தும், தோன்றியும் வருவதை நாம் காண்கின்றோம். இவை சிறிய அளவில் அழிந்தும் தோன்றியும் வருகின்றன. எல்லா உலகங்களும் ஒரே காலத்தில் அழியும் என ஆன்றோர் கூறுவர். அது மகாசங்காரம் எனப்படும். மகாசங்காரத்தில் பஞ்சபூதங்களையும் மாயையில் இறைவன் ஒடுக்குகிறான். இறைவனும், அவனுடைய அருளும் எஞ்சி நிற்கும்.

“ஒடுக்குமம் மாசங்காரம் உஞற்றியோன் ஆண்டும் ஓய்ந்து படுக்கிலான் நடிப்பன்காணும்; பரை அருளால் பூசிப்பாள்.”

மாசங்காரம் செய்தபிறகும் இறைவன் ஓய்வெடுப்பதில்லை. இறைவனுக்கு ஓய்வென்பதே கிடையாது. ஒரு நிமிடம் அவன் ஓய்வெடுத்தால் உலகம் நடவாதாகும். உயிர்வர்க்கங்கள் அனைத்தும் அப்போது கேவலம் எனும் நிலையை அடைந்து அடங்கிக் கிடக்கும். அப்போது ஆன்மாக்கள் எவ்வித உடம்புமின்றி ஆணவத்தோடு அத்துவிதமாய்க் கிடக்கும்.

உயிர்களின் அழுக்கைப் போக்கி அவர்களை இறையருளுக்கு இலக்காக்க எண்ணிய அருளுருக்கொண்ட பராசக்தி இறைவனை நோக்கித் தவமாற்றுகிறாள்.

இறைவன் அவளது தவத்துக்கு இரங்கி அருள்புரிகின்றான். உயிர்களைப் பற்றிய அழுக்கைப் போக்க உலகத்தை உண்டு பண்ணுகிறான். அழுக்கை அழுக்கால் அகற்றுவது போல, உயிர் அழுக்கை உலக அழுக்குகளில் தோய்த்து விளக்கத் திருவுளங் கொள்ளுகிறான். பஞ்சபூதங்களில் ஒடுங்கி மாயையில் மாய்ந்து கிடக்கும் உலகைத் திரும்பவும் படைக்கின்றான். இதுவே உலகத் தோற்றத்தின் தொடக்கமாகும்.

கடவுள் ஏன் இந்த உலகைப் படைத்தாரெனின் நம்மைப் பற்றி நிற்கும் அழுக்கினை அகற்றி நம்மை ஆட்கொள்ளுவதன் பொருட்டேயாம். பிரபஞ்சத் தோற்றத்தைப் பற்றி சுவேதாசுவதர உபநிடதம் கூறுவதாவது :

“எந்தக் கடவுள் அக்கினியிலும், ஜலத்திலும், மரம், செடிகளிலும், அனைத்துலங்களிலும் பிரவேசித்திருக்கிறானோ அந்தக் கடவுளுக்கு வணக்கம்”.

உலகம் ஆதியில் அக்கினிஸ்வரூபமாயிருந்த காலத்தில் அதனிடையே வாழ்ந்த அநேககோடி அக்கினிஜ்வலரூமான ஜீவ ஜந்துக்களைக் கடவுள் சுகமாக வாழும்படிச் செய்தான். அந்த உலகத்தைச் சில ஆயிரம் வருடங்களுக்குப் பின்னர் ஜலமயமாக மாற்றினான். அதனிடையே எண்ணற்ற ஜலஜந்துக்களைப் படைத்து அதனைக் காத்தான். பின்னும் அநேகமாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த உலகத்தில் சமுத்திர ஜலத்தினிடையே ஒரு சிறு பகுதியில் தாவர வர்க்கங்களைப் படைத்து மழை முதலியவற்றால் அவற்றைப் போசித்தான்.

இவ்வாறே சில ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் விசித்திர ஜீவஜந்துக்களையும், பட்சிகளையும், விலங்குகளையும், மானிட ஜாதியினரையும் படைத்துச் சுகமாக வாழும்படிச் செய்தான்.

நாம் வசிக்கும் இந்த உலகத்தைவிட அனேக மடங்கு பருமனுள்ள சூரிய சந்திரர்களால் சூழப்பட்டு, அந்தரத்தில் அநேகமாயிரம் அண்டங்களைச் சிருட்டித்து, அந்த அண்டங்களிலும் ஜீவ ஜந்துக்களைப் படைத்து அவைகள் சுகமாக வாழவும் வழிவகுத்தான். அண்டங்கள் பல விண்ணில் சுழல்வனவற்றை மாணிக்கவாசகரும் திருவண்டப்பகுதியில்,

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"

எனக் கூறுகிறார்.

இவ்வாறு இறைவன் இந்நிலவுலகங்களைப் படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடி அருள்புரிகின்றான்.

15. ஓம்

'ஓம்' எனும் பிரணவம் ஓர் எழுத்துப்போல் தோன்றினும் அதில் 'அஉம்' எனும் மூன்று எழுத்துக்கள் அமைந்திருக்கின்றன. வடமொழி, தென்மொழி, தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் எல்லாம் அகரமே முதலெழுத்தாக அமைந்திருக்கின்றது. அவற்றுள் "அ ஆ அங்காப்புடைய" வாயைத் திறக்க, 'அஆ' பிறக்கும். அகரம் தனித்து நின்றும் எல்லா எழுத்துகளின் உள்ளும் கலந்து நின்றும் ஒலிக்கின்றது. ஆதலால், அகரம் முதன்மைபெற்றது. அதனாலேயே வள்ளுவர்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

எனக் கூறினார்.

இதன் பொருள், எழுத்துக்கள் அகரத்தை முதலாக உடையன; அதைப்போல உலகு இறைவனை முதலாக உடையது.

அகரம் தனித்தும், எல்லா எழுத்துக்களின் உள்ளும் கலந்து நின்று ஒலிப்பதைப்போல இறைவனும் தனித்தும், எல்லா உயிர்களின் உள்ளும் கலந்தும் விளங்குகின்றான்.

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து"

என்று திருவருட்பயன் இக்கருத்தை விளக்குகின்றது.

"உ ஊ ஒ ஓ ஔ இதழ்குவிவே", 'உ ஊ ஒ ஓ ஔ' எழுத்துக்கள் இதழ் குவிவதால் உண்டாகின்றன. "மேல் கீழ் இதழ் உற பம பிறக்கும்" மேலுதடும் கீழுதடும் சேர்வதால் 'ப ம' பிறக்கின்றன. வாயைத் திறந்தும், இதழைக் குவித்தும், உதட்டை மூடியும் 'அ உ ம்' எழுத்துக்களைப் பிறக்கச் செய்கின்றோம்.

அகர, உகர, மகரங்கள் சேர்ந்து உண்டான எழுத்தே 'ஓம்' எனும் எழுத்தாகும். சிறு குழந்தைகள் அம்மா! அப்பா! என அழைத்து அழுகின்றன. அது உண்மையில் அம்மாவையோ அப்பாவையோ அழைப்பதல்ல. வாயைத் திறந்ததால் 'அ' பிறந்தது. வாயை மூடியதால் 'ம' பிறந்தது. ஆகவே அம்மா என ஆயிற்று. வாயை வலித்து மூடினால் அப்பா என ஆகும். அழுகையில் உகரமுந்தொனிக்கிறது. கன்றுகள் தாயை அம்மா என அழைக்கின்றன. சிற்றொலி ஒலிக்கும் ஈக்களின் ஒலிமுதல் பேரொலியினை முழக்கும் யானையின் பிளிற்றொலி வரையிலும் ஓங்காரமே ஒலிக்கின்றது. மணிஓசையிலும், சங்கநாதத்திலும், இடி முழக்கத்திலும் பலவித வாத்திய கோஷங்களிலும், பல மக்கள் ஒன்றுசேர்ந்து முழக்கும் ஒலிகளிலும் ஓங்காரமே ஒலிக்கின்றது. ஆதியில், இறைவனிடத்திருந்து தோன்றிய ஒலி, நாதமும் பிந்துவுமாகும். நாதமும், பிந்துவும் சேர்ந்ததே ஓங்காரமாகும்.

ஓங்காரமே சிருட்டியின் முதற்பொருள், ஓங்காரத்திலிருந்தே அனைத்தும் உற்பவிக்கின்றன. தூலசூட்சம காரணங்கள் அனைத்தும் ஓங்காரத்தின் உட்பிரிவுகளாகிய அகர, உகர, மகரங்களின் பரிணாமங்களேயாகும்.

மூலகாரண மூர்த்தியாகிய விநாயகர் ஓங்கார வடிவினரே, உலகப்பொருள்கள் பஞ்சேந்திரியங்களால் அறியக்கூடியவை, மனத்தினால் அறியக்கூடியவை, ஞானத்தினால் அறியக்கூடியவை என மூவகைப்படும். ஓம் தத்ஸத். அது சத்தியமாக இருக்கிறது. ஓம் என்பது

எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கவல்லது. 'தத்' என்றால் ஆண், பெண், அலி எனும் தன்மையற்றது. 'ஸத்' என்றால் எப்பொழுதும் நிலைத்திருப்பது. ஆகவே, ஓம் என்பது, ஸத், சித், ஆனந்தம் என்ற மூன்றும் சேர்ந்த ஸச்சிதாநந்தமாகிறது.

ஓங்காரமே உலகமெனவும், உலகை விளங்கச் செய்வது அதுவேயெனவும், இதில் எவை இருந்தனவோ, இருக்கின்றனவோ, இருக்குமோ அவை அனைத்தும் ஓங்காரமயமே ஆம் எனவும், முக்காலத்துக்கும் மேலானது எதுவோ அதுவே ஓங்காரமெனவும் மண்டூக்யோபநிடதம் கூறுகின்றது. "விறகில் தீ போல ஓங்காரத்தினுள் பரமாத்மா அடங்கியிருக்கிறார்" என சுவேதாசுவதர உபநிடதம் கூறுகின்றது. ஓங்காரத்தால் என்னைப் புனிதமாக்குவாய் எனவும், ஓங்காரத்தை வில்லாகவும், ஜீவாத்மாவை அம்பாகவும் இறைவனைக் குறியாகவும் கொண்டு சலனமற்ற பக்தி செய்து பரப்பிரமத்தை அடையலாம் எனவும் உபநிடதங்கள் கூறுகின்றன. ஓங்காரமே ஆகாயம், அதுவே பிரமம், அதுவே கீதம் என சுருதி ஸ்மிருதி, சாத்திர, இதிகாச, புராணங்கள் முறையிடுகின்றன. ஓங்காரத்திலிருந்து பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் முதலிய உலகங்கள் உண்டாயிற்று என உபநிடதம் கூறுகின்றது. நம்மாழ்வார் திருவாய்மொழி முதற்பாசுரத்தில்

"உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மயர்நலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்"

எனும் முதல் மூன்றடிகளில் உள்ள முதலெழுத்துக்கள் ஓங்காரத்தின் உறுப்பெழுத்துக்களாகிய அகர, உகர, மகரங்களால் அமைக்கப்பட்டுள்ளன. அப்பர்

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே"

எனக் கூறுகிறார்.

விநாயகர் பிரணவ சொரூபராய் இருக்கிறார். விஷ்ணு ஆலயங்களிலும் இவர் தும்பிக்கை ஆழ்வாரெனும் பெயரில் போற்றப்படுகிறார். பிரணவமே எல்லா மந்திரங்களுக்கும் மூல மந்திரமாகும். 'ஓம்' எனும் பிரணவ மந்திரத்தை முதலில் கூறியே எல்லா மந்திரங்களையும் கூறவேண்டுமெனும் நியதி ஏற்பட்டுள்ளது. இவற்றிலிருந்து ஓம் என்பதே அனைத்திற்கும் மூலாதாரமாகும் என்பது நன்கு விளங்குகின்றது.

16. ஆன்மாக்கள்

நாம் இதுவரை இறைவனைப் பற்றியும், அவனது பலதிறப்பட்ட வடிவங்களைப் பற்றியும் ஆராய்ந்தோம். அதற்கு அடுத்த படியாக உயிர்களைப் பற்றி ஆராய்வோம். இவை நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு. எண்பத்துநான்குஇலட்சம் உருவவேற்றுமைகளோடு பிறக்கின்றன.

1. உயிர்வர்க்கம்

நால்வகைத் தோற்றமாவன:

1. அண்டஜம்:- முட்டையில் தோன்றுவன. பறவை, ஊர்வன, நீர்வாழ்வன.
2. சுவேதஜம்:- வேர்வையில் தோன்றுவன. கிருமி, பேன் முதலியன.
3. உத்பிஜ்ஜம்:- வித்து, வேர், கொடி, கொம்பு, கிழங்கு இவற்றில் தோன்றுவன. இவை தாவரங்கள்.
4. சராயுஜம்:- கருப்பையில் தோன்றுவன. மனிதரும், விலங்குகளுமாம்.

எழுவகைப் பிறப்புகளாவன:

1.	தேவர்	பதினொரு இலட்சம்	பேதம்
2.	மனிதர்	ஒன்பது இலட்சம்	”
3.	விலங்கு	பத்து இலட்சம்	”
4.	பறவை	பத்து இலட்சம்	”
5.	ஊர்வன	பதினைந்து இலட்சம்	”
6.	நீர்வாழ்வன	பத்து இலட்சம்	”
7.	தாவரம்	பத்தொன்பது இலட்சம்	”

ஆக எண்பத்துநான்குஇலட்சம் பேதங்கள்.

2. மானுடப் பிறப்பு

மேற்கூறிய எண்ணரிய பிறவிகளில் மானுடராய்ப் பிறத்தலே எல்லாப் பிறவிகளிலும் சிறந்த பிறவியாகும். அதனாலேயே ஔவையார். "அரிது அரிது மானுடராதல் அரிது" எனக் கூறினார். சிவஞான சித்தியாரிலும்.

"அண்டசஞ் சுவேதசங்கள் உற்பிச்சஞ் சாரயுஜத்தோடு
எண்தரு நாலெண்பத்து நான்கு நூறாயிரத்தாய்
உண்டுபல் யோனியெல்லாம் ஒழித்து மாநுடத்து உதித்தல்
கண்டிடிற் கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண்"

என்று கூறப்பட்டுள்ளது.

மனிதர்களைப் போல மிருகங்கள் முதலியனவும் ஐம்புலன்களால் ஆரஅமர அமர்ந்து இன்புறுகின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றால் மனிதன் அனுபவிக்க முடியாத இன்பங்களை இப்பிராணிகள் அனுபவிக்கின்றன. மனிதனால் கேட்க முடியாத ஓசையைக் கேட்பனவும், மோப்ப முடியாதனவற்றை மோந்தறிவனவும், காண முடியாதவற்றைக் கண்டறியவும் வல்லமையுள்ள பல உயிர்பிராணிகள். உள்ளன. ஒற்றுமை, சேமிப்பு, பிள்ளைப்பாசம், முதலிய அருங்குணங்கள் வாய்ந்த உயிர் வகைகளும் உலகில் உள்ளன. விலங்குகளின் கன்றுகள் பிறந்த அன்றே பெற்றதாயிடம் பால் இருக்கும் இடத்தைத் தானே அறிந்து எவ்வித உதவியும் இன்றித்தானே குடித்து மகிழ்கின்றன.

மனிதக் குழந்தைகளுக்கு இவ்வித ஆற்றல் சற்றும் இல்லை. தமக்குரிய உணவைத் தேடி தானே தெரிந்துகொள்ளும் பிராணிகளின் அறிவும் மனிதக்குழந்தைகளுக்கு இல்லை. இவ்வாறிருக்க மானுடப் பிறப்பு மற்றெல்லாப் பிறப்புகளையும் விடச்சிறந்ததெனக் கூறுவதன் காரணத்தை ஆராய்வோம்.

மனிதன் என்னும் சொல்லிலுள்ள 'மன்' என்பதற்கு நினைப்பவன் என்பது பொருள். மனம் என்ற ஒன்று உள்ளவன் மனிதன் எனவும் பொருள் கூறுவர். மற்றப் பிராணிகளுக்கு இல்லாத ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு மனிதனுக்கே அமைந்திருக்கிறது. இங்கு பகுத்தறிவு என்பது பூகோள, ககோள, கணித, இரசாயன, சாத்திர அறிவுகளுக்கு அப்பாற்பட்ட இறையுணர்வினையாகும். ஆதலால், இறையுணர்வுடையவனே மனிதன் எனப்படுவான். இறையுணர் வில்லாதவன் மனிதப் பிறப்பினை அடைந்தாலும் போலி மனிதனேயாவன்.

எண்ணில் கோடிமக்களில் இறையுணர்வுடையோர் ஒரு சிலரேயாவர். அவருட் சிலரே உண்மையை உணர்ந்து அதனைக் கடைப்பிடித்து ஒழுகுவோராயுள்ளனர். அத்தகைய மனிதரே மனிதரில் சிறந்தோராவர். மனிதரில் மிருகங்களும், மனிதரில் மனிதர்களும், மனிதரில் தேவர்களும் உளர்.

ஐயறிவுடைய விலங்கின் வர்க்கத்திற்கும், ஆறறிவுடைய மானுடவர்க்கத்திற்கும் உள்ள பேதங்கள் அறியாது, உண்டு, உறங்கி, மாய்பவர் மனிதரில் விலங்குகளாவர். உலகியல் அறிவுகளில் வல்லுனர்களாகிப் பொருள், புகழ், பட்டங்கள் முதலியன பெற்று அதனால் இன்புற்று வாழ்பவரே மனிதரில் மனிதராவர். நான் யார்? என்னை இயக்கும் பொருள் யாது? அதனை அடைய ஒட்டாது தடுக்கும் தடைகள் எவை? அதனை அடைவதற்குரிய மார்க்கங்கள் யாவை? அதனை அடைவதால் உள்ள பயன் என்ன? என்பனவற்றை ஆராய்ந்து இறையின்பம் எய்தி இன்புற்று மானுடப் பிறப்பின் பயனைப் பெறுகின்றவனே மனிதரில் தேவனாவன். கடவுள் மானுடப் பிறவியை வகுத்ததன் காரணத்தைச் சிவஞானசித்தியார்,

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத்தைந்து மாடும் அரன் பணிக்காக அன்றோ?"

என எடுத்துக்கூறுகின்றது.

மானுடராய்ப் பிறப்பினும் இயற்கை வளமும், இறையுணர்வுமுள்ள நாடுகளில் பிறப்பது அரிது. அவ்வாறு பிறப்பினும் கூன், குருடு, செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது. அப்படிப் பிறப்பினும் ஞானமும், கல்வியும், தானமும், தவமும் உள்ள மக்கள் குழாத்திடைப் பிறத்தல் அதனினும் அரிது. அத்தகைய குழாத்தில் பிறப்பினும் முத்திமார்க்கத்தை மேற்கொண்டொழுகும் இனத்தில் பிறக்கும் பாக்கியம் பகரொணாதாகும். அவ்வாறு பிறப்பினும் குலம், இளமை, கல்வி, செல்வம், அதிகாரமென்னும் செருக்கொழிந்து, வறுமையின்றி, மெய்யன்புடன் வாழும் சமய வாழ்வினைப் பெறுதல் சாலச் சிறந்ததாகும். ஆதலால், மானுடப் பிறப்பின் மகிமையை அறிந்து இப்பிறப்பிலேயே வீடுபேறாகிய பிறவிப்பயனை அடையத்தக்க வழிகளை மேற்கொண்டு ஒழுகி வாழ்வோமாக.

3. உடலும் உயிரும்

உடம்பை, ஊற்றைச் சடலம் என்றும், அழுக்கென்றும், செடி சேருடலமென்றும், நீரிற்குமிழி என்றும் பலர் பலவாறு இழித்துக் கூறியுள்ளனர். திருமூலர்,

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே"

எனக் கூறுகிறார்.

அப்பர்,

"காயத்தே யுளன் கானூர் முளையினை
வாயத்தால் வணங்கீர் வினை மாயவே"

எனப் பாடுகிறார்.

ஔவையார்,

"உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்"
"மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு"

எனக் கூறுகிறார்.

ஆன்மா அல்லது உயிர் எனும் சிறந்த பொருள் ஒன்று உடம்பினுள் அமைந்திருக்கிறது. உடம்பு, உயிர் எனும் இரண்டில் உடம்புக்கு உயிரை எடுக்க இயலாது. அது ஜடம். தாமாக எதையும் எடுத்துக்கொள்ளும் தன்மையற்றது. உயிர் உடம்பை எடுத்தது எனவும் கூறுவதற்கில்லை. ஏனெனில், உயிருக்கு அவ்வுரிமை இருந்தால் எல்லா உயிர்களும் கூன், குருடு, செவிடு முதலிய குற்றமற்ற நல்ல உடம்புகளை எடுக்கக்கூடும். அவ்வாறின்றி வேறுபட்ட உடம்புகளிலும், அது உறைவதால் உயிர் உடம்பை எடுத்ததாகக் கூற முடியாது. இவ்விரண்டையும் இணைத்துக் கூட்டுவிப்பவன் இறைவனே யாவன். இவ்வுயிர் உடம்பன்று ; இந்திரியங்களுமன்று. அந்தக்கரணங்களோ எனில் அதுவுமன்று. இவற்றுக்கெல்லாம் வேறாக தனிப்பொருளாய் இயந்திரம்போன்ற உடம்பினுள் அது அமைந்திருக்கின்றது.

4. கடவுளும் உயிரும்

கடவுளின் அருளால் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன, போகங்கள் கிடைக்கின்றன.

தனு

தனு என்பது மேற்கூறிய எண்பத்துநான்கு இலட்சம் ஜீவபேதங்களுக்கும் தனித்தனியே கொடுக்கப்படும் உடம்புகளே யாகும்.

கரணம்

கரணம் என்பது பூதங்கள் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, அந்தக்கரணம் நான்கு ஆகிய இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களும், வித்தியா தத்துவங்கள் ஏழும், சிவதத்துவங்கள் ஐந்தும் ஆக முப்பத்தாறு தத்துவங்களையும் அகக்கருவியாகவும், அறுபது தத்துவங்களை புறக்கருவியாகவும் கொண்டுள்ளது.

புறக்கருவிகள் அறுபதின் விபரம்:

பிருதிவியின் கூறு ஐந்து	:	மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை.
அப்புவின் கூறு ஐந்து	:	நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மஜ்ஜை.
தேயுவின் கூறு ஐந்து	:	ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்.
வாயுவின் கூறு ஐந்து	:	ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல்.
ஆகாயத்தின் கூறு ஐந்து	:	குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்.
பிருதிவியின் வழி நாடி பத்து	:	இடைகலை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, ஜீகுவை, அலம்புருடன், சங்கினி, வைரவன், குருதை.

வாயுவின் வழிநாடி பத்து	:	பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிதரன், தேவதத்தன், தனஞ்சயன்.
ஆகாயத்தின் வழி ஈஷணாத்திரயம் மூன்று	:	அருத்தம், புத்திரன், உலகம்.
வாக்காதிகளின் தொழில் ஐந்து	:	வசன, கமன, தான, விஸர்க்க, ஆனந்தம்
பிருதிவியின் வழிகுணம் மூன்று	:	சாத்வீகம், இராஜதம், தாமதம்.
விந்துவின்வழி வாக்கு நான்கு	:	வைகரி, மத்திமை, சூக்குமை, பரை.

ஆண்டவன் நமது உடம்பில் இந்தத் தொண்ணூற்றாறு தத்துவங்களையும் அகத்தும், புறத்தும் அமைந்துள்ளான்.

புவனம்

இறைவன் எண்ணில்லாத அண்டங்களையும், அவற்றில் ஒவ்வொன்றிலும் பல கண்டங்களையும் அமைத்துள்ளான். அவற்றில் எதுவேனும் ஓர் நாட்டில் ஓர் ஊரில் உயிர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கவாறு பிறக்கச் செய்கிறான்.

போகம்

உயிர்கள் ஐந்து இந்திரிய வழியாக நுகர விரும்பும் அனுபவங்களையும் இறைவனே கொடுக்கிறான். மேற்கூறிய தனு, கரண, புவன, போகங்கள் ஆருயிர்களுக்கு ஆண்டவன் கொடுக்கும் பேறுகளாம்.

பரமாத்மா அருள் வடிவமானது. ஜீவாத்மா அவ்வருளை நுகர்வது. பரமாத்மா நியமிப்பது. ஜீவாத்மா அந்த நியமத்துக்குட்பட்டது. முண்டகோபநிடத்தில் ஜீவாத்மா, பரமாத்மாக்களை இரண்டு பறவைகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

"அசுவத்தம் என்ற மரத்தில் அழகான இரண்டு பறவைகள் இணையாகவும் நட்புரிமையுடன் வசிக்கின்றன. ஒன்று அதிலுள்ள கனிகளை உண்ணும். மற்றொன்று உண்ணாமல் சாட்சி மாத்திரமாய் பார்த்துக்கொண்டிருக்கும்"

மேற்கூறிய உபநிடத் கருத்தில் பரமாத்மா ஜீவாத்மாவுக்கு பலனைக் கொடுத்து அது புசிப்பதைச் சாட்சிரூபமாயிருந்து நோக்குவதையும் ஜீவாத்மாவை புசிப்பித்துக் கொண்டிருக்கச் செய்வதையும் காண்கிறோம்.

அநாதிமுத்த சித்துரு ஆண்டவன்; அனாதிபெத்த சித்துரு ஆன்மா. சூரியன் இருளை அறியான், இருளும் சூரியனை அறியாது. நாம் இரண்டையும் அறிகிறோம். அதைப்போல, கடவுளும் பாசத்தை அறியார், பாசமும் கடவுளை அறியாது. உயிர் இரண்டையும் அறியும். ஆன்மா பாசத்தைச் சார்ந்து நின்றபொழுது பசுவாயும், சிவத்தைச் சார்ந்து நின்றபொழுது சிவமாயும் விளங்கும். ஆதலால், ஆன்மா சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடையது என்பர். இறைவன் அனைத்தையும் உணர்வான். உயிர் உணர்த்த உணரும். கடவுள் சுதந்திரர். ஆன்மா சுதந்திரமற்றது.

5. உயிர்கள்

உயிர்கள் இலக்கணத்தைச் சிவப்பிரகாசம் பின்வருமாறு இயம்புகிறது.

"எண்ணதாய் நித்தமாய் இருள் மலத்தில் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
அண்ணல் அருளால் நண்ணி அவை அவரா யதனால்
அலகில் நிகழ்போகங்கள் அருந்தும் ஆற்றால்
புண்ணிய பாவம் புரிந்து போக்கு வரவுடைத்தாய்ப்
புணரும் இருள் மலபாகம் பொருந்தியக்கால்
அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடும் நற் பசுவர்க்கம் என உரைப்பர்
உணர்ந்தே"

உயிர்கள் எண்ணமுடியாதனவாக உள்ளன. அவை செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப இன்பதுன்பங்களை அனுபவித்தற் பொருட்டு அதற்கேற்ற உடம்பினை ஆண்டவன் கொடுக்கிறான். உயிர்கள் அஃறிணை, உயர்திணை உடம்புகளால் எண்ணிறந்த போகங்களைப் புசிக்கின்றன. புசிக்கும் காலத்தும் புண்ணிய பாவங்களை மீண்டும் ஈட்டுகின்றன. அதனால் பிறத்தல், இறத்தல் மீண்டும் மீண்டும்

உண்டாகின்றது. இருவினை ஒப்பும், மலபரிபாகமும் வந்த இடத்து அருளால் தனக்குள்ளே சிவஞானம் விளங்கும். விளங்கவே உயிர் இறைவன் திருவடியைச் சாரும்.

எண்ணிறந்த உயிர்கள் உள்ளன என்பதை மேலே கூறினோம். அவை பதியாகிய இறைவனைப்போல் அநாதியாகும். உயிர்கள் ஆணவம், மாயை,. கன்மம் எனும் மும்மலத்தில் அழுந்திக்கிடக்கும். மலபரிபாகம் வந்த் இட்த்து சத்திநிபாதம் பெற்ற உயிர் குருவருள் வாய்க்கப் பெற்று இறைவன் திருவடியைச் சாரும்.

6. உயிர்களின் அவத்தைகள்

"கேவல சகல சுத்தமென்று மூன்றவத்தை ஆன்மா
மேவுவன் கேவலந்தன் உண்மைமெய் பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்தபோது சகலனாம் மலங்கள் எல்லாம்
ஓவினபோது சுத்தமுடையன் உற்பவந்துடைத்தே"

– சிவஞானசித்தியார்.

கேவலாவத்தை

உயிர்களுக்குக் கேவலம், சகலம், சுத்தம் என மூன்றவத்தை உண்டு. கேவலாவத்தையில் எவ்விதமான உடம்புமில்லாமல் ஆன்மா அஞ்ஞானத்தால் சூழப்பட்டுக்கிடக்கும். இறைவன் உலகைப் படைப்பதற்கு முன் உயிர்கள் இவ்விதக் கேவல நிலையில் இருக்கின்றன.

சகலாவத்தை

சகல நிலையில் இறைவன் ஆன்மாக்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களைக் கொடுக்கிறான். இந்நிலையில் ஆன்மாவுக்கு அறிவு சிறிது விளங்கும். ஆணவம் ஆன்மாவை மறைக்கும். அருளும், இருளும் இதனிடத்து அமையும். அருள் அறிவையும், இருள் அஞ்ஞானத்தையும் கொடுத்து நிற்கும்.

சுத்தாவத்தை

சுத்தாவத்தையில் ஆன்மாவுக்கு விருப்பு, வெறுப்பு இல்லாத இருவினை ஒப்பு ஏற்படும். வினைகள் அகலும். கன்மம் அழியும். அறிவை மறைத்த மாயா சக்தி அருட்சக்தியாக மாறி ஞானத்தை அருளும்.

ஆன்மாவுக்கு வேறொரு வகையில் ஐந்தவத்தை உண்டு

"படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போது இல்லில்
கடைதொறும் விட்டுவிட்டுக் காவலும் இட்டுப் பின்னர்
அடைதருந்தனியே அந்தப் புரத்தனில் அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சவத்தை உறும் உயிர்காவலாக"

– சித்தியார்.

ஓர் அரசன் அமைச்சர்களோடும், படைத்தலைவர்களோடும், பரிசனங்களோடும் உலாச்சென்று திரும்பி அரண்மனையினில் புகும் பொழுது வாயில்தோறும் அவரவர்களை விடைகொடுத்து நிறுத்திவிட்டு அந்தப்புரத்தில் தனித்துச் செல்கின்றான். அது போல, ஆன்மா ஜாக்கிர நிலையில் புருவ மத்தியில் நின்று முப்பத்தைந்து கருவிகளோடு தொழிற்படும். சுஷுப்தியில் பிராணவாயு, சித்தம், புருடத்தத்துவம் இவற்றோடு நெஞ்சில் தொழிற்படும். துரியத்தில் தொப்புளில் பிராணவாயு புருடத்தத்துவம் இவற்றோடு தொழிற்படும். துரியாதீதத்தில் மூலாதாரத்தில் புருடதத்துவம் ஒன்றே தொழிற்படும்.

அவத்தையும் இடமும் கருவியும் வருமாறு :–

அவத்தை	இடம்	கருவி
1. சாக்கிரம்	புருவநடு	முப்பத்தைந்து
2. சொப்பனம்	கழுத்து	இருபத்தைந்து
3. சுழுத்தி	இருதயம்	மூன்று
4. துரியம்	நாபி	இரண்டு
5. துரியாதீதம்	மூலாதாரம்	ஒன்று

7. பாசம்

உயிர்களை நல்வினை செய்யவொட்டாது தடுக்கும் தடைகள் சில உள. அவற்றைப் பாசம் எனக் கூறுவர். பாசம் ஆணவம், மாயை, கன்மம் என மூவகைப்படும். இவற்றை மும்மலங்கள் எனக் கூறுவர். இதனை சிவஞானசித்தியார்,

"மும்மலம் நெல்லினுக்கு முளையொடு தவிடுமிப்போல்
மம்மர்செய்து அணுவின் உண்மை வடிவினை மறைத்து நின்று
பொய்மை செய் போக பந்த போத்திருத்துவங்கள் பண்ணும்"

எனக் கூறுகிறது.

இம்மலங்களை ஒரு நெல்லிலுள்ள முளை, தவிடு, உமி இவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. நெல்லிலிருந்து தோன்றும் முளையைப் போல கன்ம மலமும்; தவிடுபோல மாயா மலமும்; உமியைப்போல ஆணவ மலமும் அரிசியைப் பொருந்தி நிற்கும்.

ஆணவம்

ஆணவம் என்பது அசுத்தம், சிறுமை, அஞ்ஞானம் எனப் பொருள்படும். ஆணவம் அநேக சக்திகளையுடையது. உயிர்கள் தோறும் செம்பில் களிம்பு போல் சேர்ந்திருப்பது. உயிர்களின் அறிவை மறைத்து அஞ்ஞானத்தைப் புகட்டுவது. இறைவனை உணர ஒட்டாமல் தடுப்பது.

கன்மம்

கன்மத்தை வினை எனவும் கூறுவர். மனிதனுடைய செயல்கள் யாவும் கன்மமே. நற்கருமங்களை நல்வினை எனவும், தீயகருமங்களை தீவினை எனவும் கூறுவர். நல்வினையால் வருவது புண்ணியம். தீவினையால் வருவது பாபம். புண்ணியம் இன்பத்தையும், பாபம் துன்பத்தையும் அளிக்கின்றது. புண்ணிய பாபங்களே பிறவிக்கும் காரணமாகிறது.

ஆன்மா முன் செய்த கன்மத்தின் பயனை அனுபவிக்கும் பொருட்டுப் பல பிறவிகள் எடுக்கின்றது. இக்கன்மம், சஞ்சிதம், பிராரப்தம் ஆகாமியம் என மூவகைப்படும். ஆன்மா பிறவிகள் தோறும் செய்த வினைகளின் நிலைக்களம் சஞ்சிதம் எனப்படும். இப்பிறவியில் அனுபவித்தற் பொருட்டுக் கொடுக்கும் இன்ப துன்பங்கள் பிராரப்தமெனவும், மேல் பிறவிகளில் அனுபவிக்க ஈட்டும் வினைகள் ஆகாமியம் எனவும் கூறப்படும்.

நல்வினைகள் ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், வழுக்கிலாத்தவம், தானம், வந்தனம், வணக்கம், வாய்மை, அழுக்கிலாத்துறவு, அடக்கம், உணர்வு, அர்ச்சனை என்பனவாம். கொலை, களவு, கட்குடி, காமம், பொய், தெய்வநிந்தனை, குரு நிந்தனை, பெற்றோர்நிந்தனை முதலியன தீவினைச் செயல்களாம்.

8. மாயை

ஆன்மாவை மயங்கச் செய்வதால் இது மாயை எனப்பட்டது. மனித உடம்பு மாயையினின்று தோன்றியது. உடம்பு காரணமாக ஆசையும், வெறுப்பும், இன்பதுன்பங்களும் உண்டாகின்றன. ஆன்மாவுக்கு கன்மம்,

ஆணவம் இரண்டும் மாயையால் உண்டாகின்றன. ஆதலால், மாயையும் பாசமாகும். மாயை உயிரின் அனுபவத்திற்காக பல கருவிகளையும், பொருள்களையும் அமைத்துத் தருகிறது. தனு, கரண, புவன, போகங்கள் அனைத்தும் மாயையே. ஆனால், மாயை ஜடம். இதனை இயக்க ஒரு சக்தி வேண்டும். அச்சக்தியே கடவுள் ஆவர்.

சங்காரகாலத்தில் யாவும் மாயையில் ஒடுங்குகின்றன. மாயை சுத்தமாயை, அசுத்தமாயை என இருவகைப்படும். சுத்தமாயை நாதம், விந்து, சாதாக்கியம், மாகேசுவரம், சுத்தவித்தை என ஐவகைப்படும்.

நாதம், விந்து, சாதாக்கியம், மாகேசுவரம், சுத்தவித்தை இவைகள் ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றும். இதற்கு அதிபர்கள் முறையே (சிவம், சக்தி, சதாசிவம், மகேசுவரன், உருத்திரன் என்பவர் ஆவர்) சிவம், சத்திமான், பிரம்மம், அனந்தர், சம்பான் என்பவர் ஆவர்.

சிவதத்துவங்கள்

நாதம்	விந்து	சாதாக்கியம்	மாகேசுவரம்	சுத்தவித்தை
சிவம்	சக்தி	சதாசிவம்	மகேசுவரன்	உருத்திரன்

அசுத்த மாயையிலிருந்து காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை எனும் வித்தியா தத்துவங்கள் ஏழும், ஆன்ம தத்துவங்கள் இருபத்துநான்கும் தோன்றும். மாயையினின்று தொண்ணூற்றாறு தத்துவங்களும் தோன்றும் எனக் கூறுவர். தொண்ணூற்றாறு தத்துவங்கள் எவை என்பதை கரணம் என்ற பகுதியில் முன்னரே விளக்கப்பட்டுள்ளது.

17. மரணத்தின் பின் மனிதர் நிலை

உலகில் பிறந்த எந்த உயிர்களும் இறப்பது உறுதி. "எப்போதாயினும் கூற்றுவன் வருவான்." 'இறப்பு' என்பது உறங்குவதை ஒக்குமெனவும், 'பிறப்பு' என்பது உறங்கி விழிப்பதைப் போன்றதெனவும் வள்ளுவர் கூறுகின்றார்.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

நாம் காணும் இப்பரு உடலினுள் ஒரு நுண்ணுடல் உளது. அதனை சூக்குமசரீரம் என்பர். இதனை யாதனாசரீரம், ஆவி, நுண்ணுடல், உள்ளுடம்பு என்றும் கூறுவர். ஸ்தூலத்திலிருந்து சூக்குமம் பிரிந்து செல்வதை 'பாடரக்' என்னும் ஆங்கிலேயர் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். ஸ்தூலசரீரத்தில் சூக்குமசரீரமும், சூக்குமசரீரத்தில் குணசரீரமும், குணசரீரத்தில் கஞ்சுகசரீரமும், கஞ்சுகசரீரத்தில் காரணசரீரமும் உள்ளன.

சூக்குமசரீரம் கனவு காணும் சரீரம். அதற்கு எவ்வித பாரமும் இல்லை. ஒரு நிழல்போல எங்கும் போக்குவரவு புரியும். காரண உடம்பு உயிரைப் போன்று காணமுடியாததாகும். ஸ்தூல, சூக்கும. உடம்பு வருவதற்குக் காரணம் காரண உடம்பேயாகும். சூக்கும உடல் ஸ்தூல உடலை இயக்குகின்றது. கனவில் ஸ்தூல உடலின் துணை சூக்கும உடலுக்கு வேண்டியதில்லை. ஜாக்கிர நிலையில் இரண்டு உடல்களும் ஒத்து இயங்குகின்றன. சூக்கும உடலின் துணையின்றி கனவு காண முடியாது. நமது ஐம்புலன்களும் உணர்வற்றுக் கிடக்கும் பொழுது சூக்கும உடல் தொழிற்படுகின்றது. உள்ளுடம்பை அழிக்கமுடியாது. அகால மரணம் அல்லது துர்மரணம் அடைந்தோர் சூக்கும சரீரத்தைக் கொண்டு ஆயுள் வரையறுக்கப்பட்ட காலம் வரும்வரை பலவித இன்னல்களை அடைந்து திரிவர்.

ஸ்தூல உடலைவிட்டு உயிர் பிரிவதை மரணம் என்கிறோம் சூக்கும சரீரத்தில் சப்த, ஸ்பர்ச, ரூப, இரஸ, கந்தம் என்ற தன் மாத்திரை ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்ற மூன்றும் உள்ளன. ஆன்மா செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கவாறு அருள் உலகங்களுக்கோ அல்லது இருள் உலகங்களுக்கோ செல்லுகின்றது.

"தான் அவனாகிய தற்பரந் தாங்கினோன்
ஆனவை மாற்றி பரமத்தி அடைந்திடும்
ஏனை உயிர்வினைக்கெய்தும் இடம் சென்றும்
வானும் நிலனும் புகுந்து வருந்துமே"

(திருமந்திரம்)

அருளாளர்கள் இருள் உலகம் புகாரெனக் குறள் கூறுகின்றது.

"அருள் சேர்ந்த நெஞ்சினார்கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்"

பாம்பு தோலாகிய சட்டையை விட்டுப் போவதைப் போலவும், பறவைகள் முட்டைத் தோட்டினை விட்டுத் செல்வதைப் போலவும், கூடு விட்டுக் கூடு பாய்பவர் அல்லது பரகாயப் பிரவேசிகள் முன் உடம்பினை விட்டு வேறு சரீரத்தில் புகுவது போலவும் உயிர் ஸ்தூல உடம்பினை விட்டுப் பிரிகின்றது.

"பன்னகம் அண்டசங்கள் பரகாயந் தன்னில் பாய்வோர்
துன்னுதோல் முட்டையாக்கை துறந்து செல்வதுவே போல
உன்னிய உயிர்கள் தூல உடல்விட்டு வானினூடு
மன்னிடும் நனவு மாறிக் கனவினை மருவுமாபோல்"

(சித்தியார்)

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு"

(குறள்)

முட்டையைப் பிரிந்த பறவையும், சட்டையை விட்டு போன பாம்பும் எப்படித் திரும்பவும் முட்டையிலும், சட்டையிலும் நுழையாவோ அதுபோல ஸ்தூலத்தை விட்டுப் பிரிந்த சூக்கும உடலும் திரும்ப ஸ்தூலத்தில் பிரவேசிக்காது. நனவு மாறிக் கனவு நிலை அடைவதைப் போல ஸ்தூல உடல்விட்டு சூக்கும உடலானது வானினூடு செல்கின்றது. சூக்கும சரீரத்தோடு இருக்கும் ஆன்மாக்களுக்கு ஸ்தூல சரீரத்தோடு இருப்பவர்களிடத்தில் பேசவும், விஷயங்களை அறிவிக்கவும், தொடர்பு வைத்துக்கொள்ளவும் முடியும். மரணத்தின் பின் இருள் உலகம் சார்ந்தவர்களுக்கு எவ்வித விடுதலையும் இல்லை. விருப்பம் போல் போக்குவரவு செய்ய இயலாது. புண்ணியப் பகுதியில் சென்றவர்களுக்குச் சுதந்திரம் உண்டு. எமலோகம், பிரமலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் முதலிய இடங்களுக்குப் போய்வரவும் வழிபடவும் முடியும். சூக்கும உடல்பற்றிச் சென்ற உயிர்கள் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி இன்ப துன்பங்களை நுகர்ந்த பின்னர் ஐசுவரியம் நிரம்பியவர்கள் மனையிலோ தரித்திரமிக்கோர் மனையிலோ வந்து பிறக்கும்.

"உண்டு நரக சுவர்கத்தில் உள்ளன
கண்டு விடும் சூக்கம் காரணமாச் செல்ல
பண்டு தொடரப் பரகாய யோகிபோல்
பிண்டம் எடுக்கும் பிறப்பு இறப்பெய்தியே"

(திருமந்திரம்)

"பூதனா சரீரம்போனால் புரியட்ட ரூபந்தானே
யாதனா சரீரமாகி இன்பத் துன்பங்களெல்லாம்
நாதனார் ஆணையுய்க்க நரகொடு சுவர்க்கந்துய்த்துத்
தீதிலா அணுவாயோநி சேர்ந்திடுஞ் சீவனெல்லாம்"

(சித்தியார்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள்)

என்ற குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவன் பின் தேவனாய் அவ்வறப்பயன் நுகர்தல் ஒரு தலையாகலின் தெய்வத்துள் வைக்கப்படும் என்றார். இதனால் உத்தம மனிதன் தேவனாவான் என்றும், அறப்பயன் நுகர்தற்கு தேவர்களின் இடமாகிய தேவலோகம் ஒன்று உளதென்றும் நன்கறியலாம்.

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்" (குறள்)

யான் எனதென்னும் அகங்காரம் இல்லாதவன் வானோர்க்கும் உயர்ந்த உலகத்தை அடைவான் என்பது இக்குறளின் கருத்தாகும். வானோர்க்கும் உயர்ந்த உலகம் என்பதற்கு, வானோர்க்கும் எட்டுதற்கரிய வீட்டுலகம் எனப் பரிமேலழகரும், தேவர்தம் மேலாகிய உலகத்தின் கண்ணே செல்லும் என மணக்குடவரும், வானோர்க்கு உயர்ந்த சிவலோகம் புகும் எனப் பரிதியாரும், வானோராகிய கடவுளர்க்கெல்லாம் மேற்பட்ட முழுப் பேரின்பமாகிய முத்தியைப் பெறுவான் எனக் காளிங்கரும் உரை கூறுகின்றனர்.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (குறள்)

ஈண்டு வாரா நெறி' என்றது பிறப்பற்று வீடு பேறெய்தலாம். உயிர்கள் தந்தம் தகுதிக்கேற்ப அந்தந்த உலகங்களுக்குச் சென்று திரும்பவும் பிறப்பெடுக்கும் என்றும், மெய்ப்பொருள் கண்டவர் பிறப்பினை நீத்து வீடுபேறெய்தி பெருவாழ்வு பெறுவர் எனவும் விளங்குகின்றது.

இவற்றிலிருந்து புண்ணிய உலகங்களும், இருள் உலகங்களும், அதற்குமேல் தேவலோகமும் அதற்கப்பால் பல உலகங்களும் உள்ளன

என்பதும், மரணத்தின் பின் உயிர்கள் அங்குச் சென்று இன்ப துன்பங்களை அனுபவித்து மீண்டும் வந்து பிறக்கின்றன என்பதும், பரிபக்குவமுள்ள ஆன்மா மீண்டுவாரா நெறியாகிய பரமுத்தியை அடைந்து இறைவனோடு ஒன்றி வாழும் என்பதும் விளங்குகின்றது.

18. முத்திமார்க்கங்கள்

ஒவ்வொரு மதத்தினரும் முத்தியைப் பற்றிப் பற்பல விதமாகக் கூறுகின்றனர். உலகாயத மதத்தினர் அழகிய பெண்களை மணந்து இன்புறுதலே முத்தியெனவும், மீமாம்ஸகர் யாகாதி கருமங்களைச் செய்து அம்மைக் கண்ணே ஸ்வர்க்காதிலோக போகங்களை நுகர்தலே முத்தியெனவும், பௌத்தர்கள் ஐந்து கந்தம் அறக்கெடுதலே முத்தியெனவும், ஜைனர்கள் எண்குணமடைதலே முத்தியெனவும், வைசேடிகர் கல்போல் கிடத்தலே முக்தியெனவும், சாங்கியர் தத்துவங்களைப் பகுத்துணரும் விவேக ஞானமே முத்தியென்றும், அத்வைதிகள் வேதாந்த விசாரத்தால் தோன்றிய ஞானத்தால் மாயைக்கு வேறாகிய பிரமரூபமே நான் என்றறிவதே முத்தியெனவும், சிவசமவாதிகள் சிவசாரூப முதலிய பதவிகளைச் செவ்விதாகப் பெறுதலே முத்தியெனவும், சித்தாந்த சைவர் சிவனடியைச் சேர்வதே முத்தியெனவும் கூறுகின்றனர்.

உள்ள மலம்நீங்கி ஓங்கு சிவானந்த
வெள்ளந் திளைத்துவாய் மேவுதலே கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தில்
சித்தாந்த முத்தியெனத் தேறு.

(முத்தி நிச்சியம்)

ஆன்மா ஆணவமல முதலானவற்றை நீக்கி, ஒருகாலமும் குறைவுபடாத சிவானந்தப் பெருங்கடலில் திளைத்து அச்சிவனும் ஆன்மாவும், ஒன்றுமன்றி இரண்டுமன்றி நின்ற அத்துவித நிலையைப் பெறுதலே சித்தாந்த முத்தியென முத்தி நிச்சயம் கூறுகின்றது.

பரமபதம் என்பது எல்லாவற்றினும் உயர்ந்த கதியாய், காண்பானும், காட்டுவதும், காண்பதுவும் தோன்றாது அனுபவித்து அறிவது எனவும், 'சிவசாயுஜ்ஜியம்' என்பது சிவனோடு இரண்டறக் கலந்து பிரியாது அவனைப் பெறுவதாகும் எனவும் கூறுவர். காந்தம் இரும்பை இழுப்பதுபோல் உயிர்களை இறைவன் தன்பக்கம் இழுத்துக் கொள்ளுகின்றான். நெருப்பிலிட்ட இரும்பை நெருப்பானது தன்மய மாக்குவதைப்போல உயிர்களைச் சிவன் தன்மயமாக்குகின்றான். நெருப்பு

தன்னில் இட்ட இரும்பின் கறையை நீக்கிச் சுத்திசெய்வது போல ஆண்டவன் தனது அருட்சக்தியால் உயிர்களின் ஆணவத்தை அழித்து முத்தியைக் கொடுக்கிறான். உப்பானது நீரில் கலந்து நீருக்கும் தன் தன்மையை அளிப்பதுபோல இறைவன் உயிர்களில் இலயித்து தனது குணங்களை எல்லாம் கொடுக்கிறான். இரசகுளிகை செம்பிலுள்ள களிம்பை நீக்கிப் பொன்னாகச் செய்வதைப்போல இறைவனும் ஆன்மாவின் ஆணவத்தை நீக்கி சிவமயமாக்குகின்றான். கருப்பஞ்சாறு, தேன், பால், கனி, இரதம், கற்கண்டு முதலியவைகளைக் கலந்து உண்டால் உண்டாகும் இன்பத்தைப் போல ஆன்மா முத்தி இன்பத்தை அனுபவித்து சிவனோடு அத்துவித நிலையில் நின்று சிவானந்தத்தில் திளைக்கிறது.

இவற்றிலிருந்து பற்பல சமயிகள் முத்தியைப் பற்பலவிதமாகக் கூறுகின்றனர் என்பதை நன்கறியலாம். முத்திப் பேற்றைப் பலர் பற்பல விதமாகக் கூறுகின்றனர். எனினும், ஆன்மா இறைவனை எவ்வகையிலும் சார்ந்து இன்புறுதலையே முத்தியெனக் கூறலாம். அவ்வாறு முத்தி அடைவதற்கு நமது ஆன்றோர் வகுத்த வழிகளைச் சிறிது ஆராய்வோம்.

முத்தி அடைவதற்கு உரிய மார்க்கங்களை நான்காகப் பகுத்துள்ளனர். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால்வகைப்படும். இவற்றை முறையே தாஸமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனவும் கூறுவர். இவற்றைக் கர்மம், பத்தி, யோகம், ஞானம் எனக் கூறுவாரும் உளர். இந்நெறிகளை மேற்கொண்டொழுகிய ஆன்மாக்கள் முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்ஜிய பதவிகளை அடைவர். முற்கூறிய மூன்று பதவிகளும் பதமுத்தியாகும். நான்காவதாகிய ஞானத்தால் அடையும் முத்தி பரமுத்தியாம்.

இதனை, சிவஞானசித்தியாரில்

> *"சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கந்*
> *தாதமார்க்கம் என்றும் சங்கரனை அடையும்*
> *நன்மார்க்கம் நாலவைதாம் ஞானயோக*
> *நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்*
> *சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய*
> *சாரூப்பிய சாயுச்சியம் என்று சதுர்விதமாம்*
> *முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி*
> *முடிவென்பர் மூன்றினுக்கு முத்தி பதமென்பர்"*

என்று கூறப்பட்டுள்ளது.

தாயுமானவர் இந்நால்வகை மார்க்கங்களையும் அரும்பு, மலர், காய், கனி இவற்றிற்கு ஒப்பிட்டுள்ளார்.

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர்காய்கனி போல் அன்றோ பராபரமே"

அரும்பின்றி மலரும், மலரின்றிக் காயும், காயின்றிக் கனியும் உண்டாகாதவாறு சரியையின்றிக் கிரியையும், கிரியையின்றி யோகமும், யோகமின்றி ஞானமும் உண்டாகாவாம். ஒரு மாணவன் ஆரம்பப் பள்ளியில் படித்து, பின்னர் மத்தியதர பள்ளிக்குச் சென்று, அதன் பின் உயர்தரப் பள்ளி:யில் படித்து, பின் கல்லூரிக்குச் சென்று உயர்தரப் பட்டங்கள் பெறுவதைப்போல முறையே சரியை, கிரியை, யோக, ஞானங்களை ஆன்மாவானது மேற்கொண்டொழுகி முத்தியைப் பெறுகின்றது.

முத்தி மார்க்கங்கள்

நாலு மார்க்கங்கள்		பதவி	அடையும் நிலை	உவமை
தாஸமார்க்கம்	சரியை	சாலோகம்	பதமுத்தி	அரும்பு
சற்புத்திரமார்க்கம்	கிரியை	சாமீபம்	,,	மலர்
சகமார்க்கம்	யோகம்	சாரூபம்	,,	காய்
சன்மார்க்கம்	ஞானம்	சாயுஜ்ஜியம்	பரமுத்தி	கனி

சாலோக்ய முத்தி : ஈசுவரன் திருமேனி கொண்டிருக்கும் உலகத்தை அடைந்து இன்புறுதலாம். சாமீப்பிய முத்தி : முற்கூறிய இன்பத்தோடு ஒரு புதல்வனைப் போல இறைவன் அருகில் அமர்ந்து இன்புறுதலாம். சாரூப்ய முத்தி : இறைவனின் திருவுருவம் போன்ற ஓர் உருவந்தாங்கி இறைஇன்பம் நுகர்தலாம். சாயுஜ்ஜி முத்தி : இறைவனோடு நித்தியானந்தம் அனுபவித்துப் பிறவியை அறுத்து நீடுவாழ்தலாம்.

1. சரியை அல்லது தாஸமார்க்கம்

உலகியலில் மண், பெண், பொன்னாசைகளில் சிக்கிக் கடவுளை மறந்து வாழும் மனிதர்களை முத்திப்பேற்றுக்குத் தகுதி ஆக்குதற் பொருட்டு வகுத்த மார்க்கங்களில் முதல் மார்க்கம் சரியையாகும். சரியை என்பதற்கு ஒழுங்கான வழியில் நடத்தல் என்பது பொருள். ஒரு எஜமானனிடம் ஒரு வேலைக்காரன் பயபக்தி விசுவாசத்துடன் ஊழியம் செய்து எஜமானனுடைய அன்புக்குப் பாத்திரமாகி அதனால்

அடையக்கூடிய பேறுகளைப் பெறுவதைப் போல, ஆண்டவனாகிய எஜமானனிடம் நாம் தொண்டாற்றி அவனால் அளிக்கப்படும் பேற்றினைப் பெறுவதற்கு உரியதாதலின் இதனைத் தாஸமார்க்கம் எனக் கூறுவர்.

வேலைக்காரன் எஜமானனிடம் நம்பிக்கை, விசுவாசம், கீழ்ப்படிதல், எஜமானனுக்கு விருப்பமான செயல்களைச் செய்தல், எஜமானனை எந்த இடத்தும் புகழ்ந்து பாராட்டுதல் முதலிய நற்குணங்களைக் கைக்கொண்டு ஒழுகுவதைப் போல, நாமும் நமது எஜமானனாகிய கடவுளிடத்தில் நம்பிக்கையும், பத்தியும்கொண்டு அதிகாலையில் எழுந்து, தூய நீராடி, தூய உடைதரித்து, இறைவன் விரும்புகிற விபூதி, உருத்திராக்கம், சந்தனம், குங்குமம், திருமண் முதலியவற்றை விதிப்படி தரித்துக்கொள்ள வேண்டும். பின் ஆலயத்திற்குச் சென்று ஆலயத்தைத் தூய்மை செய்து ஆண்டவனுக்குரிய மலர், பத்திரம், நிவேதனப் பொருள்கள் முதலியவற்றைக் கொடுத்து சந்நிதியில் நின்று இறைவன் பெருமையைப் புகழ்ந்துபாடி விதிப்படி ஆலய தரிசனம்செய்து தலையாரக்கும்பிட்டு வழிபடல் வேண்டும்.

ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகள் சிலவற்றைக் கூறுவாம். அவை, திருவலகிடல், (பெருக்குதல்) மெழுகிடல், நந்தனவனம் வைத்தல். மலர் பறித்தல், மாலை கட்டுதல், தூபதீபம் இடுதல், பசுமடம் கட்டல், பூஜைக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தல், அடியார்களுக்கு அன்னமிடுதல், அடியார்கள் பொருட்டுச் சத்திரம் சாவடி கட்டல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், வேதாகம, தேவார பாடசாலைகள் வைத்து நடத்தல், சமயப்பிரசார நிலையங்கள் அமைத்தல், அநாதைகளுக்கு அன்னசாலை அமைத்தல், இலவசக் கல்வி நிலையங்களும் கலாசாலைகளும் அமைத்தல் முதலியவைகளாம்.

சரியை மார்க்கத்திற்கான திருத்தொண்டுகளை அப்பர் சுவாமிகள் ஆரூர்த்தாண்டகத்தில் விளக்கியுள்ளார்.

"நிலைபெறுமாறு என்னுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா
சய போற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர்செஞ்சடை எம்ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

தாஸமார்க்கம் பற்றி சிவஞானசித்தியாரில்

"தாதமார்க்கஞ் சாற்றில் சங்கரன்றன் கோயில்
தலம் அலகிட்டு இலகு திருமெழுக்குஞ் சாத்திப்
போதுகளுங் கொய்து பூந்தார் மாலை கண்ணி
புனிதற்குப் பல சமைத்துப் புகழ்ந்துபாடி
தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்து திருவேடங் கண்டால் அடியேன் செய்வ
தியாது பணியீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவது இச்சரியை செய்வோர் ஈசனுலகிருப்பர்."

இவற்றுள் கூறியவாறு பணியாற்றி வந்தால் பழம் உண்டாவதற்கு மூல காரணமாகிய அரும்பு அரும்புவது போல சரியையாகிய அரும்பு உண்டாகும். அதுவே கிரியையாகிய மலராக மலரும்.

2. கிரியை அல்லது சற்புத்திரமார்க்கம்

கிரியையாவது தனது வழிபடு கடவுளை அகத்தும் புறத்தும் பூசித்து வழிபடும் செயலாகும். அப்பூஜை ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும். ஆன்மார்த்தம் தன்பொருட்டு தனது ஆத்மார்த்த மூர்த்தியை வழிபடும் வழிபாடாகும். பரார்த்தம் பிறர் பொருட்டு அவர் விரும்பும் மூர்த்தியை முறைப்படி பூசிப்பது ஆகும். அப்பரார்த்த பூஜை நித்தியம், நைமித்தகம், காமியம் என மூன்று வகைப்படும். மூர்த்திகளை வழிபடுவதற்கு மந்திரம், யந்திரம், தந்திரம் என்ற மூன்றும் வேண்டற்பாலன. சிவாகமங்கள் சிவபூஜை முறையைக் கூறுகின்றன. நறுமலர்கள், தூபதீபங்கள், சுத்தநீர் முதலிய பூஜைக்குரிய பொருள்களைக் கொண்டு ஆத்ம சுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி முதலானவை செய்து அந்த மூர்த்திக்குரிய மூலமந்திரம் ஜபித்து பீடம் இடவேண்டும்.

இந்த ஐந்து சுத்திகளையும் செய்வது ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்ற ஐவகைப் பாசங்களைக் களைத்தற்காகும். இதனை,

"பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப்
பஞ்சவித பாசமறப் பார்"

என்னும் சைவசமயநெறிச் செய்யுளாலறியலாம். அபிடேகப் பொருள்கள் வடித்தெடுத்த நீர், வாசனைத் திரவியங்கள் கலந்த நீர், இளநீர், பன்னீர்,

எண்ணெய், பால், பஞ்சாமிருதம், விபூதி, சந்தனம், களபம், புஷ்பம் முதலியவைகளாகும். அபிடேகம் செய்வதற்குக் காரணம் "அருளென்னும் புறவினையாட்டி" என்று காசிகண்டத்தில் கூறியபடி திருவருள் ஞானமே நீரெனப் பாவித்து அபிடேகம் செய்யின் மலநிவாரணம் ஏற்படும் என்பதாம்.

"தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம் வணங்கி
தம்அன்பால் மஞ்சன நீர் தாமாட்டி"

என்றபடி மருட்போதமே மலமாதலால் அம்மல அசுத்தத்தை அருள்நீர் கொண்டு சுத்தி செய்தல் எனும் பாவனையாம். திருவுருவங்களுக்கு வஸ்திரந்தரித்தல் திரோதான சக்தி நீங்குதல் பாவனையாம். பூஜையில் செய்யப்படும் உபசாரங்கள் பதினாறாகும்.

அவையாவன : ஆவாஹனம், தாபனம், சந்நிதானம், ஸந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்யம், பாநீயம், ஜபசமர்ப்பணம், ஆராத்திரிகம் (தீபாபாராதனை) என்பனவாம்.

பூஜையின் பொருட்டுக் கடவுளை மூலமந்திரத்தைக் (சொல்லி வரவழைத்து அமரச் செய்தல் ஆவாஹனமாகும்.

"தயாநிதியே! அடியேனை அனுக்கிரகிப்பதற்காக விக்கிரகத்தில் எழுந்தருளி இருக்க வேண்டும்" என்று அன்புடன் யாசிப்பது தாபனமாம்.

பூஜிக்கப்படுபவனாகிய கடவுள், அனுக்கிரகிக்கும் தன்மையையும், பூஜிக்கின்றவனாகிய தான் அனுக்கிரகிக்கப்படும் தன்மையையும் உண்டுபண்ணுவதே சந்நிதானமாகும். "பகவானே! எப்போதும் என்னிடத்தில் அனுக்கிரகத்தோடு இருக்க வேண்டும்.' என்று பிரார்த்திப்பதே ஸ்ந்நிரோதனமாகும். சிவலிங்கத்தைச் சுற்றிக் கவச மந்திரத்தினால் மூன்றகழ் உண்டானதாகப் பாவித்தல் அவகுண்டனமாம். கடவுளுக்கு முன்பாகப் பசுவின்மடி போன்றதொரு முத்திரை காட்டுதலே தேனுமுத்திரையாகும்.

மூலமந்திரத்தை 'நம' என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து ஜலத்தைத் திருவடிகளில் சமர்ப்பித்தல் பாத்தியமாம். மூலயந்திரத்தை 'ஸ்வதா' என்னும் இறுதியையுடையதாக உச்சரித்து மும்மூன்றுதரம் ஜலத்தை சமர்ப்பித்தல் ஆசமனீயமாகும். மூலமந்திரத்தை உச்சரித்துக் கடவுளுடைய சிரஸில் ஜலத்தை சமர்ப்பித்தல் அருக்கியம் எனப்படும்.

மூலமந்திரத்தை உச்சரித்துப் புஷ்பங்களைச் சாத்துதல் புஷ்பதானம் ஆகும். கிரியா சக்திரூபமாகிய தூபத்தைச் சிவசந்நிதானத்திலிடுவது, ஆணவ மலமாகிய அறியாமையைக் கிரியா சக்தியைக் கொண்டு நீக்குதல் எனும் குறிப்பினை உணர்த்துவதற்காகும். சிவபெருமானுக்குத் தீபம் சமர்ப்பித்தலின் கருத்து, சித்சக்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப் போக்கி ஞானத்தை விளக்குதல் என்பதாம். நைவேத்யமாவது, ஆன்ம குணமாகிய அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோகம் என்பனவற்றையே அமுதாகச் சமர்ப்பித்தல் எனும் பாவனையாம். வாசனை பொருந்திய தீர்த்தத்தைக் கடவுளுடைய திருப்திக்காகச் சமர்ப்பிப்பது பாநீயமாகும். மூலமந்திரத்தை நூற்றெட்டு உரு ஜபித்து அதைக் கடவுளிடத்திலேயே ஒப்புவித்தல் ஜபசமர்ப்பணமாம்.

ஆராத்திரிகம் என்பது பலவகையான தீபங்களைக் கடவுள் முன்பாகக் காட்டுதலாகும். ஒவ்வொரு தீபத்திற்கும் ஒவ்வொரு கருத்துண்டு. அவற்றுள் முக்கியமானவை ஐந்து தட்டுக்களும் குடமுமாம். இவற்றின் கருத்தாவது, ஐந்து தட்டுக்கள் ஈசான முதலியவற்றையும், குடம் சாதாக்கிய தத்துவத்தையும் குறிக்கின்றது. ஈசானம் முதலியன சாதாக்கியத்தில் ஒடுங்குகின்றன. அச்சாதாக்கியமும் சிவத்திடத்தே ஒடுங்குகின்றது என்பதாகும். கர்ப்பூரம் காட்டுவதன் உட்பொருள், கர்ப்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி, அக்னி பற்றியவிடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஒரு பற்றும் இல்லாமல் முற்றும் கரையப் பெற்று ஆகாயத்துடன் கலந்து விடுவது போல், ஆன்மாவானது சத்துவகுணத்தை அடைந்து, ஞானமாகிய அக்கினியுடன் சம்பந்தம் பெற்று, மூவகைச் சரீரங்களும் எல்லாப் பற்றுக்களும் நீங்கப்பெற்று, பரமுத்தி அடையும் என்பதாம். அட்டபுஷ்பம் சாத்துவதன் கருத்து, கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பவையே கடவுளுக்குகந்த மலர்கள் என்பதைக் குறிக்கின்றது.

இப்புத்திரமார்க்கத்தை சிவஞானசித்தியார்,

"புத்திரமார்க்கம் புகலிற் புதியவிரைப் போது
புகையொளி மஞ்சனமமுது முதல் கொண்டு ஐந்து
சுத்திசெய்து ஆசனம் மூர்த்தி மூர்த்தி மானாஞ்
சோதியையும் பாவித்து ஆவாகித்துச் சுத்த
பத்தியினா லருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரவினொடு எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும் இக்கிரியையினை இயற்றுவோர்கள்
நின்மலன்றன் அருகிருப்பர் நினையுங்காலே"

எனப் புகலுகின்றது.

கிரியையாகிய மலர் வெளித்தோற்றங்களாகிய இதழ், தேன், மகரந்தம் முதலிய அனைத்தையும் உதிர்த்து பிஞ்சாகி முதிர்ந்து யோகமாகிற காயாகும்.

3. யோகம் அல்லது சகமார்க்கம்

பக்தன் தனது வெளித்தோற்றங்களைத் துறந்து உள்ளடங்கி இறைவனோடு ஒன்றி இறையின்பம் நுகர்தல் யோகமெனப்படும். யோகம் என்பதற்குச் சேர்க்கையென்பது பொருள். ஜீவாத்மா பரமாத்மாவோடு உள்ளத்தால் சேர்ந்துறைதலாம். கீழும் மேலுமாகப் போகும் உச்வாஸ நிச்வாஸங்களாகிய வாயுக்களை அடக்கி சுஷூம்னையில் பிராணவாயு புகும்வண்ணம் நிறுத்தி, மனத்தை புறவிஷயங்களில் போகவிடாது செலுத்த வேண்டும். பின் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞையெனும் ஆறாதாரங்களை அறிந்து, அவ்வாதாரங்களில் உறையும் விநாயகர் முதலிய அதிதேவதைகளைத் தியானித்து, அசபாசக்தி இறைவடிவாய் நிற்கும் நிலையறிந்து மேலேறி பிரமரந்திரம் வரை சென்று, அங்குள்ள தாமரை முகையை அலரச்செய்து அம்மூல மண்டலத்தை மூலாக்கினியால் இளக்கி அவ்வழியாக ஒழுகும் அமுதத்தை தேகம் முழுவதும் நிரப்பி முழுச் சோதியை தியானிக்க வேண்டும்.

யோகமார்க்கம் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு வகைப்படும். இதனை அட்டாங்க யோகமெனக் கூறுவர். இந்த யோகத்தைத் திருமூலர்,

"இமய நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயாமம் பிரத்தி யாகாரம்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே"

என விளக்குகின்றார்.

இயமம் : (தன்னை அடக்குதல் இயமம்) அகிம்சை, உண்மை, கள்ளாமை, பிறர் பொருள் விரும்பாமை, பிர்மசரியம் என ஐந்தாம்.

நியமம் : (தன்னை நிச்சயித்துக்கொள்ளுதல் நியமம்) தவம், சுத்தி, திருப்தி, ஞான நூலாராய்ச்சி, ஈசுவர ஆராதனம் என ஐந்தாம்.

ஆசனம் : ஆசனம் என்பது மேற்கூறிய யோகத்தை ஒழுங்காய் நடத்தத்தக்க முறையில் உடம்பை அமரச் செய்தலாம். இது மயூராசனம், குக்குடாசனம் எனப் பலவகைப்படும். எந்த ஆசனம் தியானத்துக்கு தனக்கு அனுகூலமாகவுள்ளதோ அந்த ஆசனத்தை அவன் மேற்கொள்ளலாம். பிராணாயாமம் என்பது பிராண வாயுவினை அடக்குதலாகும். அது மந்த்ரஜபத்தோடு அடக்குவதும், ஒன்றுமின்றி அடக்குவதும் என இருவகைப்படும். பிரத்தியாகாரமாவது மனதை ஐம்புலவழிச் செல்லவிடாமல் தடுத்து ஒருவழிப்படுத்தலாம். இயற்கையில் சலன புத்தியுடைய குரங்குக்கு ஒருவன் மதுவைக் கொடுத்தான். உடன் ஒரு தேள் அதனைக் கொட்டியது. அத்துடன் ஒரு பேயும் அக்குரங்கைப் பற்றிக் கொண்டது. குரங்கின் நிலையைக் கூறுவானேன். அதைப்போல இயற்கையிலேயே சபல புத்தி வாய்ந்த மனக்குரங்கு இச்சையெனும் மதுவையருந்தி, பொறாமையெனும் தேளாற் கொட்டப்பட்டு, தற்பெருமை எனும் பிசாசினால் பிடிக்கப்பட்டு ஆடிக்கொண்டிருக்கிறது. இத்தகைய மனத்தை ஒருவழிப்படுத்துதல் என்பது எத்துணை அரிய செயலாகும். இது பற்றியே தாயுமானவரும், "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது" எனக் கூறியுள்ளார். இயம, நியம, ஆசன, பிராணாயாமநிலை பெற்றவர்களுக்கே இம்மனத்தை அடக்கும் ஆற்றல் உண்டாகும்.

தாரணை : முத்துச்சிப்பி கடலின் மேற்பாகத்திற்கு வந்து அசுவதி நட்சத்திரத்தின் உதயத்தில் விழும் ஒரு மழைத் துளிக்காக காத்திருக்கிறது. (சுவாதி நட்சத்திரம் என்றும் கூறுவர்). அத்துளி தன்னுள் விழுந்ததும் விரைவில் சிப்பியை மூடிக்கொண்டு கடலினடியில் சென்று பொறுமையோடு அதனைப் போற்றி வளர்த்து விலையுயர்ந்த முத்தாக்குகிறது. அதைப்போல முதலில் உபதேசம் பெற வேண்டும். அதன் பின் நமது மனத்தை வெளி விஷயங்களில் போகாமல் தடுக்க வேண்டும். அதன்பின் நிம்மதியான தியானத்தில் இருக்க வேண்டும் இதுவே தாரணையாகும்.

தியானம் : மனதை இறைவனிடத்தில் சலனமின்றி நிலைநிறுத்தி வழிபடல் தியானம் எனப்படும். அப்பொழுது யான், எனது என்னும் அகங்கார மமகாரங்கள் அறவே கெடும். அதுவே தியான நிலையாம். சமாதி: மனம் சுயபோதத்தை இழந்து இறையருளிற் தோய்ந்து நிற்கும் நிலையே சமாதியாம். போதாதீத நிலையென இதனைக் கூறுவர். சகமார்க்கமாகிய இந்த அட்டாங்க யோகமுறையை சிவஞான சித்தியார்,

"சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி இரண்டும்
சலிப்பற்று முச்சதுர முதலா தாரங்கள்
அகமார்க்கம் அறிந்துஅவற்றின் அரும்பொருள்கள்
உணர்ந்துஅங்கு
அணைந்துபோய் மேலேறி அலர்மதி மண்டலத்தின்
முகமார்க்க அமுத உடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தல் உழந்தவர் சிவன்றன் உருவத்தைப்பெறுவர்"

என விவரிக்கின்றது. யோகமாகிய காயே முதிர்ந்து, நற்சுவையும் நன்மணமும் உடையதாகி, ஞானமாகிய கனியாகின்றது.

4. ஞானம் அல்லது சன்மார்க்கம்

சன்மார்க்கம் என்பது கலைகள், புராணங்கள், வேதாகமங்கள் முதலிய சாத்திரங்கள் அனைத்தையும் ஆராய்ந்து, அவற்றிலுள்ள சாரத்தைக் குருவினிடம் கேட்டு, கேட்டவற்றைச் சிந்தித்து, சிந்தித்தவற்றைத் தெளிந்து, தெளிந்தவற்றைச் மேற்கொண்டு ஞானம் (அறிவு), ஞாதிரு (அறிபவன்), ஞேயம் (அறியப்படுபொருள்) இவற்றைக் கடந்து இம்மூன்றும் அல்லாத அத்விதீயமாய், அகண்டாகாரமாய், சச்சிதாநந்த சொரூபியாய் விளங்கும் பரம்பொருளில் நிர்விகற்ப ஞானத்தால் செய்யும் ஆராதனையாகும். இதனைச் செய்தவர் பரமுத்தி. அல்லது சாயுஜ்ஜியத்தைப் பெறுவர்.

சிரத்தையுள்ளவனுக்கு ஞானம் கிடைக்கிறது. அதனால் சாந்தி அடைகிறான். ஞானம் பதிஞானம், பசுஞானம், பாசஞானம் என மூவகைப்படும். பதிஞானம் தற்பிரகாசம், பரப்பிரகாசம் என இருவகைப்படும். தற்பிரகாசம் ஒளிஞானம், பரப்பிரகாசம் ஆன்மாவைக் காட்டுதல் ஆகும்.

பசுஞானம் தற்சொரூபத்தை அறியாது பலவகையில் சந்தேகப்பட்டு நிற்பதாகும். பாசஞானம் உலகப் பொருள்களைப் பற்றி ஒருவாறு அறியும் அறிவு ஆகும். பாசஞானமும், பசுஞானமும் ஞானமல்ல; பதிஞானமே ஞானம். அதுவே பிரமஞானம். ஞானமின்றி மேற்கொள்ளும் யோகத்தால் முத்தி பெறஇயலாது. அதனால் மோட்ச விருப்பமுள்ளவர் யோகத்தையும், ஞானத்தையும் மேற்கொள்ள வேண்டும். ஞானமாவது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல், என நான்கு வகைப்படும். கேட்க வேண்டுவனாகிய ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய விசயங்களை நல்லாசிரியனிடம் நன்கு கேட்க வேண்டும். அதனைப் பற்றி நன்றாய்

சிந்திக்க வேண்டும். சிந்தித்து நிச்சயித்தி பொருளை நன்கு தியானிக்க வேண்டும். இவ்வித தியானத்திலிருந்து இமைப்பொழுதும் நீங்காத பரமஞானிகள் பராபரமுதல்வனின் சாயுஜ்ஜிய பதவியாகிய பரமுத்தியைப் பெறுவர். சன்மார்க்க நெறியின் இலட்சணத்தைச் சித்தியாரில்,

"சன்மார்க்கஞ் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவு முணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம்
பதிபசு பாசந்தெரித்துப் பரசிவனைக் காட்டு
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவு நாடா வண்ணம்
பின் மார்க்கச் சிவனுடனாம் பெற்றி ஞானப்
பெருமையுடையோர் சிவனைப் பெறுவர் காணே"

எனக் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றில் மானிடப் பிறப்பின் நோக்கம் முத்தி அடைதலே எனவும், அதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு சிறந்த மார்க்கங்கள் உள எனவும், அவற்றை நன்கறிந்து கைக்கொண்டு படிப்படியாக அனுட்டித்து ஞானம் பெற்று இறையடி சேர்தலே அறிவுடைய மக்களின் கடப்பாடாகும் என்பதும் விளங்குகின்றது.

19. குரு

கு + ர் + உ = குரு. 'கு'காரத்திற்குச் சித்தியைக் கொடுப்பவன் எனவும், 'ர'காரத்திற்குப் பாபத்தைத் தகிப்பிக்கும் தீயென்றும், 'உ'கரத்திற்கு சிவன் என்றும் பொருள். இம்மூன்றும் நிறைந்தவனே குருவாவான். குரு மலத்தை நீக்குபவர். கு–மலம். ரு–நீக்குபவர். நாம் ஏதேனும் ஒரு புதிய இடத்திற்குச் செல்ல வேண்டுமானால் அந்த இடத்தை நன்கறிந்த வழிகாட்டி ஒருவன் வேண்டும். நாம் முத்தி அடைவதற்கு வழிகாட்டக் கூடிய குரு முற்றறிவினனாய் இருக்கவேண்டும். ஐயந்திரிபு அற வழிகளை நமக்கு எடுத்து உரைக்கும் ஆற்றல் அவனிடம் இருக்கவேண்டும். வழிகாட்டுபவனை நம்பி வழிநடக்கும் வழிப்போக்கனைப் போல குருவின் உபதேசத்தை நாமும் ஐயமின்றி மேற்கொண்டு ஒழுகத் தலைப்பட வேண்டும்.

ஆன்மீக விஷயத்தில் தடையாய் நிற்கும் பாபங்களை ஓட்டி இறைவனோடு குரு நம்மைச் சேர்க்கிறான். தற்காலத்தில் குருமார்கள்

பெருத்து, சீடர்கள் சிறுத்து வருகின்றனர். குருவாய் இருக்க எல்லோருக்கும் விருப்பமே. அவர்களை ஆன்மார்த்த குருவாகக் கொள்ளும் சீடர்கள் சிறுபான்மையினராகவே இருக்கின்றனர். சத்குரு என்பவர் இறைவனும், இறை அருள் பெற்றோருமே ஆவர். குருவை,

"குருர் பிரும்மா குரு விஷ்ணு;குருர் தேவோமகேச்வர;
குருசாட்சாத்
குருரேவ பரம் பிர்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம;"

என்று விதந்து கூறுவதால் குருவை நாம் எவ்வாறு போற்ற வேண்டும் என்பது விளங்குகிறது.

"குருவின் அடிபணிந்து கூடுவ அல்லார்க்கு
அருவமாய் நிற்குஞ் சிவம்"

"தலைப்பட்ட சற்குருவின் சந்நிதியில் அல்லால்வலைப்பட்ட
மானது வேயாம்"

ஒரு வலையில் அகப்பட்ட மான் போக்கிடம் தெரியாது வலையிற் சிக்கி மயங்குவது போல, தலைசிறந்த குருவின் உபதேசம் பெறாமல் மக்கள் மயங்கித் தவிப்பர். ஒரு கப்பலின் உதவியில்லாமல் கடலைக் கையால் நீந்தி கடக்க முடியாததைப் போல குருவின் உபதேசமின்றிப் பிறவிப் பெருங்கடலைக் கடத்தலும் இயலாது. இதனை, திருவிளையாடற் புராணத்தில் வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலச் செய்யுளால் அறியலாம்.

"கரவிலாத பேரன்பினுக்கு எளிவருங் கருணைக்
குரவனார் அருளன்றியிக் கொடிய வெம்பாசம்
புரையில் கேள்வியாற் கடப்பது புணையினாலன்றி
உரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவதொக்கும்"

விஷம் தீண்டிய ஒருவனது விஷத்தை விஷவைத்தியர் கருடோஹம்பாவனையால், கருடமந்திர ஜபத்தால், கருடதியானத்தால், கருடனேயாகி நோக்கி நீக்குவதைப்போல, சத்குரு சிவோஹம் பாவனையால், சிவமந்திர ஜபத்தால், சிவத்தியானத்தால், சிவனேயாகி சீடனை நோக்க அவனது பாசங்களும், பாபங்களும் பறந்தோடுகின்றன.

இதனை,

> "கருடன் உருவங் கருதும் அளவில்
> பருவிடந் தீர்ந்து பயங் கெடுமா போல்
> குருவின் உருவங் குறித்த அப்போதே
> திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே"

என்ற திருமந்திரத்தால் நன்கறியலாம். இவ்வாறன்றி நமது ஐயப்பாடுகளை அகற்றுவதற்கோ, பாபத்தைப் போக்குவதற்கோ ஆற்றலற்ற ஒருவரை நாம் குருவாகக் கொள்ளுதல் பேதமையாகும். அப்படிக் கொண்டால், அது குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதை ஒக்கும். அதன் பலனைத் திருமூலர் திருமந்திரத்தில் தெளிவாகக் கூறுகிறார்.

> "குருட்டினை நீக்குங் குருவினை கொள்ளார்
> குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
> குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
> குருடுங் குருடுங் குழிவிழு மாறே"

ஒரு நகரத்தில் மன்னன் ஒருவன் அரசு செலுத்தி வந்தான். அவனுக்கு ஐந்து வயதுடைய மைந்தன் ஒருவன் உண்டு. அவன் தந்தை காட்டிற்கு வேட்டையாடச் செல்வதை அறிந்து தானும் அவனுடன் செல்ல விரும்பினான். பிள்ளையின் பிடிவாதத்தை அறிந்த மன்னன் அவனையும் அழைத்துச்சென்று காட்டில்உள்ள கூடாரத்தில் அமரச் செய்தான். மைந்தன் சிறிது நேரத்தில் தூங்கிவிட்டான். மன்னன் கூடாரத்தைப் பூட்டிக் காவல் வைத்து விட்டு வேட்டைக்கு வேட்டையாட்களோடு சென்றான். அவனுக்குக் காவல் இருந்த சேவகன் தூங்கிவிட மைந்தன் விழித்து தந்தையைத் தேடிக் கூடாரத்தின் இடுக்கு வழியால் வெளியில் வந்து காடெலாம் தந்தையைத் தேடி ஓடினான். அவனை வேடன் ஒருவன் தூக்கிச் சென்று வேடர் சேரியில் வைத்து வளர்த்து வந்தான். அரசன் திரும்பிவந்து மைந்தனைக் காணாது மயங்கிக் காடெலாம் தேடினான். மைந்தன் காட்டு மிருகங்களுக்கு இரையானான் எனக் கருதி, கருத்தழிந்து நகர் சென்று சேர்ந்தான். மைந்தனோ வேடர் சேரியில் தானொரு அரசகுமாரன் என்பதனையே அறியாது வேடர் குமரனெனவே கருதி வாழ்ந்துவந்தான். ஆண்டுகள் பல சென்றன.

காட்டுக்குச் சென்ற சிலர் அவனைக் கண்டு அரசனுக்கு அறிவிக்க, அரசன் நேரில் வந்து மைந்தனைக் கண்டு அவனது வேடர் கோலத்துக்கு வருந்தி பிறப்புணர்த்தி, அவன் அரசகுமாரன் என்பதனை அவனுக்கு அறிவித்து காட்டு வாழ்க்கையை வெறுக்கச் செய்து, நாட்டு வாழ்க்கையில் விருப்புண்டாக்கி அழைத்துச் சென்று இளவரசனாக்கி, தனக்குரியவை அனைத்தையும் அவன் பெறுமாறு செய்தான். அதைப்போல, ஆன்மா ஐம்புலன்களாகிய வேடர் சேரியில் அகப்பட்டுத் துணைவனாகிய இறைவனை அறியாது துயரத்தில் ஆழ்ந்து கிடக்கும்பொழுது இறைவன் அருட்குருவாகி வந்து அவரில் பிரித்து மலங்களைப் போக்கித் தானாக்கித் தன் திருவடிக்கீழ் வைப்பன். இதனை சிவஞான சித்தியார்,

"மன்னவன்றன் மகன் வேடரிடத்தே தங்கி
வளர்ந்து அவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என் மகன் நீ என்ற வரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணுமா போல்
துன்னிய ஐம்புல வேடர் சூழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னும் அருட் குருவாகி வந்து அவரின் நீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பன்"

எனச் சாற்றுகின்றது. இவ்வாறு குரு தன் சீடனுக்குச் செய்யும் உபகாரத்தை தீக்ஷை எனக் கூறுவர். தமிழில் இதனைத் தீக்கையென்பர். தீ+க்ஷா = தீக்ஷா. ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தை நீக்குவது என்பது இதன் பொருளாகும். தீக்கை சமய தீக்கை, விசேட தீக்கை, நிர்வாண தீக்கை, என மூவகைப்படும். சரியை மார்க்கத்தைத் தொடங்குமுன் செய்யப்படும் தீக்கை சமய தீக்கை எனப்படும். கிரியைக்கு விசேட தீக்கையும், யோகத்திற்கும் ஞானத்திற்கும் நிர்வாண தீக்கையும் உரியன. தீக்கை செய்யும் முறை ஏழுவகைப்படும். அவை ஸ்பர்சம், நயனம், மானதம், வாசகம், மந்த்ரம், யோகம், ஔத்திரி என்பனவாம்.

1. ஸ்பர்ச தீக்கை

குரு தனது கரங்களால் சீடனைத் தொடுவது ஸ்பர்ச தீக்கை எனப்படும். மின்சார நிலையத்திலிருந்து (எலக்ட்ரிஸிட்டி பவர் ஹவுஸ்) இணைக்கப்படும் கம்பியின் வழியாக எண்ணெயும், திரியுமில்லாத கண்ணாடியில் விளக்கு எரிவதைப் போல, பரிபூரண ஞானம் பெற்ற குருவின் ஸ்பரிசத்தால் ஆன்மாவிற்கு ஞானம் உண்டாகின்றது. கோழி

தன் முட்டைகளைச் சிறகோடு அணைத்துக் குஞ்சுகளைப் பொரிப்பதைப் போல குருபரன் சீடர்களை அணைத்துப் பக்குவப்படுத்துகிறான். இதனால் கர்ம பாசம் விலகும்.

2. நயன தீக்கை

குரு தனது அருட்பார்வையால் மாணவனை நோக்குதல் நயன தீக்கை எனப்படும். அருட்பார்வையால் திருவருள் பெருகும். மீன் தன் முட்டைகளைக் கண்ணால் பார்த்துப் பொரித்துக் குஞ்சாக்கிப் பசியகற்றுவது போல, குரு தன் சீடனை அருள் நோக்கால் நோக்கித் தன்மயம் ஆக்குகிறான். மீனாட்சி எனும் அம்மையின் பெயர் மீன் தன் பார்வையால் முட்டைகளைக் குஞ்சாக்குவதைப் போல, பக்குவமில்லாத ஆன்மாக்களைத் தனது கடைக்கண் நோக்கால் பரிபக்குவப் படுத்துவதை உணர்த்தும். மெய்கண்டார் அருணந்தி சிவாச்சாரியாரை அருட்கண்ணால் நோக்க, அவரது ஆணவ மலம் அகன்றதென அறிகிறோம். இதிலிருந்து நயன தீக்கை ஆணவ மலத்தை அகற்றுவது என அறியலாம்.

3. மானத தீக்கை

குரு தன் மனத்தால் மாணாக்கனது மனத்தைத் தன்வயப் படுத்துகிறார். மாணாக்கனது மனத்தைப் பற்றியுள்ள கர்மத்தின் வலி இதனால் குறைகின்றது. கடற்கரையில் குழி தோண்டி முட்டையிட்ட ஆமை அம்முட்டையை மனதில் நினைந்து வேகமாய்ப் பாய்ந்துவரும் மனோவலியால் முட்டை குஞ்சாவதைப்போல, ஆசாரியன் மனோசக்தியால் சீடனை நினைக்கச் சீடன் பரிபக்குவம் எய்துகின்றான்.

4. வாசக தீக்கை

வாசகம் என்பது உபதேசம். இது குரு உபதேசம் எனப்படும். அறிவுடையோர் குரு உபதேசத்தால் தெளிவடைவர்.

"காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே"

என்ற மருதவாணரின் உபதேசத்தால் துறவு பூண்ட பட்டினத்தடிகளும் "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்" எனும் கேள்விக்கு "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" எனும் நம்மாழ்வார் விடையால் சித்தந்தெளிந்த மதுரகவி ஆழ்வாரும் இதற்குச் சான்றாவர்.

5. மந்த்ர தீக்கை

குருவானவர் ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்து முதலிய மந்திரங்களைச் சீடனுக்கு உபதேசித்து அருளுவதாம். இம்மந்திரங்களை உச்சரிப்பதால் சீடனது மலங்கள் அனைத்தும் அழிந்து செந்நெறி செழித்தோங்கும். இதன் பெருமையை,

"மந்திரம் அன பாவங்கள் மேவிய
பந்தனை யவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி னாமம் நமச்சி வாயவே"

எனும் திருஞானசம்பந்தர் வாக்காலும்,

"குலம் தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா எனும் நாமம்"

எனும் திருமங்கை மன்னன் வாக்காலும் அறியலாம்.

6. யோக தீக்கை

யோகம் என்பது சேர்க்கை. குரு மாணாக்கனை இறைவனோடு ஒன்ற வைப்பதால் இது யோக தீக்கை எனப்படும். யோக முறைகளைப் பயிற்றுவித்தலும் இத்தீக்கையின் பாற்படும்.

7. ஔத்திரி தீக்கை

இது ஹோமகுண்டத்தில் ஹோமாக்கினியில் மாணவனைப் பற்றி நின்ற மலங்களை ஈர்த்துத் தகிப்பித்து அவனைப் பரிசுத்தப் படுத்துவதாகும். குண்ட மண்டலங்களை ஹோமத்தோடு செய்வது கிரியாவதியென்றும், குண்டமண்டலங்களின்றி ஹோமத்தை மனதால் செய்வது ஞானவழியென்றும், இத்தீக்கை இருவகைப்படும்.

ஆதலின் இந்துக்களாய்ப் பிறந்த நாம் அனைவரும் அவரவருக்குகந்த தீக்கை முறைகளைக் குருவின்பாற் பெற்று அதனைக் கைக்கொண்டொழுகி, மலம் நீங்கி சுத்தமெய்தி இறைவன் மலரடி அடைந்து இன்புறுவோமாக.

20. ஜீவன் முத்தர்

இருவினை ஒப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமும், குருவருட் பேறும் பெற்று, பண்டைச் சிற்றறிவை ஒழித்து ஞானம் பெருகி இறைவன் திருவருளை நுகர்ந்து வாழ்பவர் முத்தரெனப்படுவர். அவர் ஜீவனோடு இவ்வுலகில் வாழும்வரை அவரை ஜீவன்முத்தரெனக் கூறுவர்.

இம்முத்தரிடம் ஆணவம், மாயை, கன்மம் முதலிய மலங்கள் அறவே அகன்றுவிடினும், காயம் வைத்திருந்த பெட்டியில் காயம் முழுவதும் செலவானாலும், அதில் காய மணம் கமழ்வதுபோல அவர்களிடம் அம்மலங்களின் வாசனை மட்டும் எஞ்சி நிற்கும். இது வாசனா மலம் எனப்படும். இந்த வாசனா மலம் எத்தகையோரையும் மயக்கி மலத்தில் ஆழ்த்தி வீடுபேறு அடையாமற் செய்துவிடும். காசிப முனிவர், விசுவாமித்திர முனிவர் முதலியோர் இதற்குச் சான்றாவர்.

இவ்வாசனா மலம் தம்மை அணுகாது பரிகரித்தற் பொருட்டு மெய்யன்பர்களாகிய அடியார்களோடு பயின்றும், அவரது திருவேடங்களையும், ஆலயங்களையும் இறைவன் எனத் தொழுது வழிபடல்வேண்டும். ஈசனிடத்து அன்பில்லாதவர்கள் எவ்வுயிரிடத்தும் அன்பில்லாதவர்களாகவே இருப்பர். அவர், தமக்கு உறுதி தருவதைச் செய்யாமையால் தம்மிடத்தும் அன்பில்லாதவரேயாவர். ஆதலால் ஜீவன் முத்தர் அவரை நீங்கி நல்லடியவரோடு சேர்ந்து இறைவனைக் கும்பிட்டுக் கூத்தாடி ஆலயங்களில் வழிபட்டு நிற்பர். இவர்களை வாசனா மலம் தாக்காது.

ஒரு வனத்தின் மத்தியில் குருகுலம் ஒன்றிலிருந்து, அக்குருகுலத்தின் குரு தனது சீடர்களைப் பார்த்து "வாசனா மலம் என்றோர் மலம் உளது; அது தாக்காதவாறு மல நீக்கம் பெற்றவர்களும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்" என உபதேசித்தார். உடனே சீடன் ஒருவன் குருவை நோக்கி "குருவே! வாசனா மலம் தங்களைத் தாக்குமா?" என்று கேட்டான். அதற்குக் குரு "வாசனா மலம் என்னையும் தாக்கும்; உன்னையும் தாக்கும்; எவரையும் தாக்கும்" என்றார். சீடன் "அது உம்மைத் தாக்கும்; என்னைத் தாக்காது" என்றான். குரு

"அவ்வாறாயின் நீ என்னிலும் மிகப்பெரியவன்; வாசனா மலத்தால் தாக்கப்படாத நீயே இக்குருகுலத்துக்கு குருவாயிருக்கத் தகுதியுடையவன்" எனக் கூறி அவனைக் குருவாக்கி விட்டு வனத்தில் மறைந்து விட்டார்.

சிறிது நாள் சென்றபின் புதிய குரு அவ்வனத்தில் சஞ்சரித்து வந்தார். அங்கே ஒரு குளம் தெரிந்தது. குளத்தின் படிக்கட்டுகள் பளிங்குக் கற்களால் அமைக்கப் பெற்றிருந்தன. தண்ணீர் படிகம் போன்று பரிசுத்தமாயிருந்தது. புதிய குரு அதன் இயற்கை அழகில் மயங்கி அதில் நீராட ஆரம்பித்தார். எதிர்த்துறையில் ஒரு அழகிய பெண் நீராடிக் கொண்டிருந்தாள். அதைக்கண்டு அத்துறையிலேயே நீராட அவரும் சென்றார். அவர்களின் பேச்சு, திருமணம் செய்து கொள்ளுவதற்கான நிலைவரை சென்றது. பெண் "என்னை நீர் திருமணம் செய்து கொள்ளுவதானால் கண்ணை மூடிக்கொண்டு, நான் சொல்லுவதுபோல் நீ கேட்பதாகச் சத்தியம் செய்து தர வேண்டும்" என்றாள். இவரும் அவ்வாறே கண்ணை மூடிக்கொண்டு கையிலடித்துச் சத்தியம் செய்தார். கையிலடித்துச் சத்தியம் செய்து தருகையில், கை பெண்ணின் கைபோன்று மிருதுத்தன்மையில்லாதிருந்ததால் கண்ணை விழித்துப் பார்த்தார். பழைய குருநாதர் தனது உண்மை வடிவைக் காட்டி "வாசனா மலம் உன்னைத் தாக்குமா தாக்காதா" எனக் கேட்டார். சீடர் பதறிப்போய் பதில் கூற முடியாமல் பெண்ணாக வந்தவர் குருவேயெனவும், அவருடைய சிருட்டியே குளம் முதலியன எனவும், எவ்வகையோரையும் வாசனா மலம் தாக்கும் என்னும் உண்மையை உணர்த்துவதற்காகவே இச்செயல் செய்தாரெனவும் உணர்ந்து பரவசமடைந்து குருவோடு குருகுலம் வந்து, "வாசனா மலம் என்னையும் தாக்கும்; யாரையும் தாக்கும்" எனக் கூறிக் குருவைப் பீடத்தில் அமர்த்தி வணங்கினார்.

குரு எல்லோரையும் பார்த்து "வாசனா மலம் மும்மலங்களை அறக்களைந்தவர்களாகிய ஜீவன் முத்தர்களையும் தாக்கும் எனவும், அது தாக்காவண்ணம் தடுப்பதற்கு உண்மை அடியவர்களையும் ஆலயங்களையும் இறைவனாகவே கருதி வழிபட்டு வரவேண்டும்" எனவும் உபதேசித்தார்.

"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

– சிவஞானபோதம்.

21. ஆலய நிர்மாணம்

நமது நாட்டில் சைவாகமங்களை ஒட்டியும், சாக்தேயம், பாஞ்சராத்திரிகம், தந்திரம் முதலியனவற்றையொட்டியும் ஆலயங்கள் நிர்மாணம் செய்யப்படுகின்றன. சிவாகமங்கள் இருபத்தெட்டோடு சைவ உபாகமங்கள் நூற்றுப்பதின்மூன்று உள்ளன. சாக்தேய ஆகமங்கள் அறுபத்துநான்காகும். பாஞ்சராத்ராகமங்கள் நூற்றெட்டென்பர். அவற்றுள் முக்கியமானவை பாஞ்சராத்ரமும், வைகானஸமுமாகும். குமாரதந்திரம் முதலிய தந்திர நூல்களை மேற்கொண்டு எழுந்த கோவில்களும் பல உள. இவை ஒவ்வொன்றும் ஆலய நிர்மாணம், பிரதிட்டை, நித்திய பூஜை, நைமித்திக பூஜை, திருவிழாக்கள், தீக்கைகள், மந்திரங்கள், முதலியவற்றைப் பற்றி விளக்கமாகக் கூறுகின்றன.

எந்த ஆகமத்தை ஒட்டி ஓர் ஆலயம் நிறுவப்பட்டதோ அந்த ஆகமத்தை ஆதாரமாகக் கொண்டு பூஜைகள் முதலியன நடைபெற்று வருகின்றன. ஆதலால் ஆலய பூஜை, பிரதிட்டை முதலியன பலவிதமாக நடந்து வருகின்றன. ஆலய நிர்மாணங்கள் ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், ஆந்திரதம் என நான்கு வகைப்படும்.

1. ஆவர்த்தம்

ஓர் ஆலயத்தைப் புதிதாகக் கட்டிமுடித்து முதன்முதலாக விக்கிரகஸ்தாபனம் முதலியன செய்து அனுக்ஞை முதல் கும்பாபிடேகம் வரை செய்து முடிப்பதாகும்.

2. அநாவர்த்தம்

ஆற்றுநீர்ப் பெருக்காலோ, விடாமழை பொழிந்ததாலோ, பூமி அதிர்ச்சிகளாலோ, மணல் மூடியதாலோ ஆலயங்கள் அழிந்துபோனால் திரும்பவும் அதைக் கடடிமுடித்து விக்கிரகங்கள் முதலியவற்றைப் புதிப்பித்துச் சீர்திருத்தம் செய்வதாகும்.

3. புனராவர்த்தம்

இதனை ஜீர்ணோத்தாரண அட்டபந்தன மகாகும்பாபிடேகம் என்பர். நடைமுறையில் இருக்கும் ஆலயத்தில் காலப்போக்கால் எவையேனும் சில பாகங்கள் சிதைந்து போனால், அவற்றைப் பூர்த்தி செய்து விக்கிரகங்கள் அலையாது அசையாது இருக்கும்படி மருந்துகள் சார்த்தி, எல்லாக் கிரியைகளையும் இனிது நடத்தி, யாக சாலைகளில்

கும்பங்களில் எழுந்தருளப் பண்ணியிருந்த மூர்த்திகளைத் திரும்பவும் கோவில் விக்கிரகங்களில் ஆவாஹனம் பண்ணுதலாம். எட்டு சக்திகளோடு இறைவனை இணைப்பதால் அட்டபந்தனம் என இதனைக் கூறுவர்.

4. அந்தரிதம்

சில ஆலயங்களில் திருடுதற் பொருட்டு அசுத்தம் நிறைந்த பொருள்களோடு திருடர்கள் புகுந்து ஆலயத்தை அசுத்தப்படுத்தி விடுகின்றனர். அவ்வசுத்த நீக்கத்தின் பொருட்டுச் சம்ப்ரோட்சனம் செய்யப்படும். அதுவே அந்தரிதம் ஆகும்.

பிரதிட்டைக்குரிய கிரியைகள்

பிரதிட்டைக்குரிய கிரியைகள் அறுபத்து நான்காகுமென ஆகமங்கள் கூறுகின்றன. அவற்றுள் இன்றியமையாக் கிரியைகள் சில உள.

1. அனுஞ்ஞை

ஆகம நூல்களை ஆராய்ந்தறிந்து, கிரியைகளை ஒழுங்குபடச் செய்யும் ஆற்றல் வாய்ந்த ஓர் ஆச்சாரியனைத் தேர்ந்தெடுத்து, இவ்வரிய செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனம் செய்வதாகும்.

2. கணபதி பூஜை

எடுத்தகாரியம் இடையூறின்றி இனிது நிறைவேற அருள் புரியும் மகாகணபதியை வணங்குதலாம்.

3. வாஸ்து சாந்தி

தேவர்களைப் பூசித்து இடையூறு வராமற் காக்கும்படி வேண்டுதலாகும். கும்பாபிடேகம் இனிது நிறைவேற வேண்டிய பணிகள் புரிபவர்களுக்கும், அதில் கலந்து கொள்பவர்களுக்கும் எவ்விதமான இடையூறும் வராமலும், அசுரசக்திகளின் தொந்தரவு ஏற்படாமலும் இருக்கச் செய்யும் கிரியையாகும்.

4. மண் எடுத்தல்

இந்திரன் முதலிய எட்டுத் திசை காவலரிடமும் அனுமதி பெற்று. சுத்தமான பூமியிலிருந்து மண் வெட்டி எடுத்து, எடுத்த பள்ளத்தில் அபிடேகப் பொருள்களால் அபிடேகம் செய்தலாகும்.

5. முளையீடு

பாலிகையெனும் மண்பாத்திரத்தில் மண்ணினை நிரப்பி வித்துகளைச் சிதறி முளை வளர விடுதல் ஆகும். இது இறைவன் உலகை சிருட்டிப்பதை ஒக்குமாதலால் முக்கியமாயிற்று.

6. காப்புக் கட்டு

கிரியைகளை நடத்தும் ஆச்சாரியனுக்கு இடையூறுகள் வராமல் காத்தற் பொருட்டுக் கடவுளை வேண்டி அவன் கையில் மந்திர பூர்வமாகக் கயிறு கட்டுதல் ஆகும்.

7. கும்பத்தாபனம்

ஒரு குடத்தைச் சுத்தமாக்கி அதனை ஓர் உடல்போலப் பாவித்து, அதன் தோலாக ஆடை அணிவித்து, அதன் இரத்தமாக மேல் மண்பூசி, அதன் மாமிசமாகச் சிலவற்றை இட்டு, அதன் நரம்புகளாக நூல்களைச் சுற்றி, அதன் தாதுவாக இரத்தினமிட்டு, அதன் ஜீவனாக மந்திரம் கூறி, குடத்தை வித்தியாதேகமாகப் பாவிக்கவேண்டும்.

8. கலாகர்ஷணம்

எந்த மூர்த்தியை எந்தக் குடத்தில் ஆவாகனம் பண்ணுகிறோமோ அந்த மூர்த்தி அக்குடத்தில் இருப்பதாகக் கருதி அக்குடத்திற்கு அலங்காரம் முதலியன செய்து பூசித்து வழிபாடாற்றுதலாம்.

9. யாகசாலை

ஆலயத்தில் கும்பாபிடேகத்திற்கு முன் யாகசாலை, ஒன்று, மூன்று, ஐந்து, ஒன்பது குண்டவிதானமாக அமைக்கப்படும். இக்குண்டத்தை எண்பத்தொன்று பாகமாகக் செய்து நடுவில் பிரமபதத்தினை அமைப்பர். அதனைச் சுற்றிப் பதினாறு, இருபத்துநான்கு, முப்பத்திரண்டு பதங்களாகப் பல பதங்களை அமைப்பர். அதில் தீயை வளர்த்து, இறைவனுக்குச் செய்யப்படும் பூஜைக்குரிய பொருள்களைத் தீயில் இட்டு எரிப்பர். அது இறைவனுக்கு 'ஹவிஸ்' எனும் பொருளாக மாறி அவரிடம் சேர்கின்றது.

10. பிம்பசுத்தி

விக்கிரகத்திலுள்ள அழுக்கு நீங்குதற்பொருட்டு பட்டை, தளிர், மண் இவைகளைக் கொண்டு தேய்த்து அபிடேகம் செய்தலாம்.

11. ஸ்பர்சாகுதி

யாகாசாலைக் குடத்திற்கும், மூலவிக்கிரகத்திற்கும் தர்ப்பைக் கயிறு, தங்கக்கம்பி, வெள்ளிக்கம்பி இவற்றால் இணைப்பு ஏற்படுத்தலாம்.

12. அட்டபந்தனம்

இது மூலஸ்தான மூர்த்திக்குச் செய்யப்படும் முக்கிய கிரியையாகும். மூர்த்தியையும், பீடத்தையும் ஒன்று சேர்த்தல் அல்லது பந்தித்தல் ஆகும். இவ்வாறு ஒன்று சேர்ப்பதற்கு மருந்து சார்த்தல் எனக் கூறுவர். மருந்துப் பொருள்கள் சுக்கான், கற்பொடி, குங்கிலியம், கொம்பரக்கு, காவிக்கல், செம்பஞ்சு, இலிங்கம் வெள்ளை மெழுகு, வெண்ணெய் என எட்டாகும். இந்த எட்டுப் பொருள்களால் பந்திப்பது பற்றி இது அட்டபந்தனம் எனப் பெயர் பெற்றது.

13. குடமுழுக்கு

யாகசாலையில் எந்த மூர்த்திக்கு எந்தக் குடம் வைத்துப் பூஜிக்கப்படுகிறதோ அந்தக் குடத்து நீரை மூர்த்திக்கு அபிடேகித்தலாம். அப்போது அந்த மூர்த்தி அந்த விக்கிரகத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்றார். அந்த விக்கிரகத்திலிருந்து பலவித சக்திகள் வெளிவருகின்றன. அவை, அதனை வழிபடும் மக்களுக்குப் பல வகையில் அருள்புரிகின்றன.

14. மகாபிடேகம்

கும்பாபிடேகம் கழிந்த பிறகு இறைவன் எழுந்தருளியிருக்கும் விக்கிரகத்திற்கு முறைப்படி அபிடேக, அலங்கார, நிவேதனம் செய்தல் மகாபிடேகமாகும்.

15. மண்டலாபிடேகம்

மகாகும்பாபிடேகம் ஆகி மூன்று பட்சம் கழித்து செய்யப்படும் அபிடேக ஆராதனைக்கு மண்டலாபிடேகம் என்று பெயர்.

22. பூஜை

பூஜை ஆத்மார்த்தம் எனவும், பரார்த்தம் எனவும் இருவகைப்படும். ஆத்மார்த்த பூஜை என்றால் பூஜிப்பவன் தனக்கும், தன் குடும்பத்திற்கும் நன்மை உண்டாவதன் பொருட்டுத் தன் வீட்டில் தன் சக்திக்கியன்றவாறு பூஜிப்பதாகும். இலிங்கம், சாளக்கிராமம், பிம்பம், சக்கரம் முதலியவற்றை வைத்துப் பூஜிப்பர். இதற்குள்ள விதிகள் ஒருவாறு ஆலய பூஜை விதிகளை ஒக்கும். மந்திரம், யந்திரம், தந்திரம் இவற்றை இதன் அங்கங்களாகவும் கொள்வர். மந்திரத்தோடு செய்து பதினாறு உபசாரங்களால் பூஜிப்பர். குருமுகமாகத் தீக்கை பெற்றவர்களே இப்பூஜைக்கு உரியவர்கள் ஆவர்.

பரார்த்த பூஜையென்பது ஆலயத்தில் இருக்கும் மூர்த்திகளுக்கு ஆகமமுறைப்படி ஆச்சாரியர்களைக் கொண்டு பூஜைசெய்வித்தல் ஆகும். அது நித்தியம், நைமித்திகம், காமிகம் என மூன்று வகைப்படும். நித்திய பூஜையென்பது நாள்தோறும் செய்யப்படும் பூஜையாகும். நாள்தோறும் பகலில் நான்கு காலங்களும், இரவில் நான்கு காலங்களுமாக எட்டுக்கால பூசை செய்யப்படும் ஆலயங்கள் சில உள. பகலில் மூன்றும், இரவில் மூன்றுமாக ஆறுகால பூஜை நடக்கும் கோவில்களும், பகலில் இரண்டும், இரவில் இரண்டுமாக நான்குகால பூஜை நடக்கும் கோவில்களும், பகலில் ஒன்றும், இரவில் ஒன்றுமாக இரண்டுகால பூஜை நடக்கும் கோவில்களும் பல உள்ளன. ஆலயங்களின் பொருள் வருவாய்க்கேற்பப் பூஜைக் காலங்கள் நடந்து வருகின்றன.

பஞ்ச சுத்தி

பூஜை செய்பவர் உடல் சுத்தமும் உளச்சுத்தமும் உடையவராக இருத்தல் வேண்டும். உடல் சுத்தத்திற்கு நீராடுதல், தோய்த்துலர்ந்த ஆடைகட்டுதல், விபூதி, உருத்திராக்கம் அணிதல், நாமதாரணம், துளசிமணிமாலை அணிதல் முதலியன இன்றியமையாதவைபாகும். உளச்சுத்தத்திற்கு ஐம்புலனடக்கலும், தீக்கை பெறுதலும் அவசியமானவை. பூஜை முறைகளைக் காரிய காரணத்தோடு அறிந்திருத்தல் நலம். இவ்விதச் சுத்திகளை பஞ்சசுத்தி எனக் கூறுவர். பஞ்சசுத்தி என்பது ஆத்ம சுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தியென ஐந்துவகைப்படும். ஆத்ம சுத்தியில் அந்தர் யாகமும், சமாதியும் அடங்கும்.

1. ஆத்தும சுத்தி

பூஜை செய்யும் ஆச்சாரியன் தனது உடம்பைத் திருக்கோவில் உள்ளிருக்கும் திருமேனிபோல சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

2 ஸ்தான சுத்தி

பூஜிக்கும் ஆலயமும், மூலமூர்த்தி இருக்கும் கர்ப்பக்கிரகமும், இதர மூர்த்திகள் வீற்றிருக்கும் இடங்களும் எப்பொழுதும் சுத்தமான தாயிருக்கச் செய்ய வேண்டும். அர்க்கிய நீரைப் பூமியில் தெளித்து இடத்தைச் சுத்திகரிக்க வேண்டும்.

3. திரவிய சுத்தி

பூஜைக்குரிய பாத்திரங்கள் நான்றாகக் கழுவி, சங்குநீர் முதலிய பூஜைக்குரிய பதார்த்தங்களில் அர்க்கிய நீரைத் தெளித்து சுத்தி செய்யவேண்டும்.

4. மந்திர சுத்தி

பீஜாட்சர மந்திரத்தை சுஷும்னை நாடியில் அடக்கி அந்தந்த மூர்த்திக்குரிய மூலமந்திரத்தைப் பத்துமுறை ஜபிக்கவேண்டும்.

5. இலிங்க சுத்தி

அபிடேக பாத்திரத்தில், நீர்நிரப்பி, கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களை அதில் ஆவாகனம் செய்து, இலிங்கத்தில் அபிடேகம் செய்யவேண்டும். விக்கிரகங்களில் ஒட்டிக்கிடக்கும் மெழுக்கினைக் களைந்து சுத்த ஆடை கட்ட வேண்டும்.

"பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காக
பஞ்சவித பாசமறுப் பார்"

(சைவசமயநெறி)

"பஞ்சவித சுத்தி செய்து பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே"

(தாயுமானவர்)

சோடசோபசாரங்கள்

இது இறைவனுக்குரிய பூஜையில் செய்யப்படும் பதினாறு உபசாரங்களாகும்.

1. ஆவாகனம்

இறைவனை வரவழைத்து நேர்முகப்படுத்தி, விக்கிரகத்தில் சேர்ப்பதற்கு ஆவாகனம் என்று பெயர். இது மூலாதாரத்திலுள்ள

ஜீவசைதன்யத்தை எடுத்துச் சுஷும்னை வழியாக மேலேற்றிக் கொண்டு வந்ததாகச் சங்கற்பம் செய்தல்.

2. ஸ்தாபனம்

இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருள வேண்டுமெனப் பிராத்தித்து பீடத்தில் உள்ள விக்கிரகத்தில் இறைவனை அமர்த்துதல்.

3. சந்நிதானம்

இது பூசிக்கப்படும் மூர்த்தி நமக்கு அனுக்கிரகம் செய்யும் முறையும், பூஜகன் அருள் பெறும் முறையுமாகும்.

4. சந்நிரோதனம்

இறைவா! அடியேனிடம் என்றும் கருணையோடு இருக்கவேண்டும் என வேண்டி, பூஜை முடிவுவரை சாந்நித்யம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுதலாம்.

5. அவகுண்டனம்

விக்கிரகத்தைச் சுற்றிக் கவசமந்திரத்தால் மூன்று அகழ் உண்டாக்கித் தடைகள் வராமல் அம்மந்திரத்தாலேயே அதனை மூடவேண்டும்.

6. அபிடேகம்

எண்ணெய், மாப்பொடி, நெல்லிமுள்ளி, மஞ்சள்பொடி, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், தயிர், தேன், கரும்பு, வாழைப்பழம், எலுமிச்சம் பழச்சாறு, இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், பத்ரோதகம், கும்போதகம் இவற்றை வரிசைப்படி அபிடேகம் செய்ய வேண்டும். அபிடேகத்திற்குத் தேனு முத்திரை காட்டவேண்டும். தேனு முத்திரை என்பது பசுவின் அகடு போன்ற முத்திரையாகும்.

7. பாத்யம்

சந்தனம், அறுகு, வெண்கடுகு, விலாமிச்சை இந்த நான்கு பொருள்களையும் பாத்திய நீரில் கலந்து பாதத்தில் விட வேண்டும்.

8. ஆசமநீயம்

நீரில் ஏலக்காய், கிராம்பு, பச்சைக் கற்பூரம், நாவற்பழம், ஜாதிக்காய் கும்குமப்பூ என்ற பொருள்களை இட்டுச் சம்கிதா மந்திரம் சொல்லி பாதத்தினடியில் வைக்க வேண்டும்.

9. அர்க்கியம்

இறைவனுக்கு மூலமந்திரம் கூறி எள், யவநெல், தர்ப்பைநுனி, பால், அரிசி, புஷ்பம், வெண்கடுகு முதலியவை கலந்த நீரால் அர்க்கியம் கொடுக்க வேண்டும்.

10. மாலை சாத்தல்

அழகிய புஷ்பங்களால் இறைவனை அலங்கரித்துக் கண்கள் குளிரக் கண்டுகளிக்க வேண்டும்.

"உன்னை அலங்கரித்து உன் அழகைப் பாராமல்
என்னை அலங்கரித்து இழந்தேன் மனோன்மணியே"

என்ற பாடல் இறைவனை அலங்கரித்து பார்ப்பதன் சிறப்பைக் கூறுகின்றது.

11. தூபம்

சந்நிதியில் சாம்பிராணிப் புகை புகைத்தல் தூபம் எனப்படும். இது கிரியா சக்தியைக் குறிக்கும். ஆணவ மலமான அஞ்ஞானத்தை கிரியா சக்தியால் அகற்றலாம் என்பது தத்துவம். அகில், கீழாநெல்லி, சாம்பிராணி, குங்கிலியம் முதலியவை தூபப்பொருள்களாகும். தூபம் பாபங்களை அகற்றும்.

12. தீபம்

தீபம் ஆத்மாவின் மலத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுக்கிறது. தீபத்திற்குத் திரி, கர்ப்பூரம், துணி, நூல், பஞ்சு இவைகளில் எதையாவது உபயோகிக்கலாம். பசுவின் நெய் உபயோகிப்பது உத்தமம். எண்ணெய் மத்திமம். தீபத்தை ஏற்றி நிரீட்சணம் செய்து பூக்களால் அர்ச்சித்துத் தீப முத்திரை காட்டி, மணி அடித்து மந்திரங்கள் கூறிக் கிரீடம் முதல் பாதம் வரை காட்ட வேண்டும்.

13. நைவேத்தியம்

இதற்கு நெல்லரிசி, கோதும்பை, முளைஅரிசி இவை உத்தமம். வெள்ளை அரிசியைவிட சிவந்த நெல்லரிசி நிவேதனத்துக்கு மிக உத்தமம். நெல், கல், உமி, ரோமம் இவை அரிசியில் கலந்திருக்கக்கூடாது. சுத்த அன்னம், பாயசம், பொங்கல் முதலிய சித்திரான்னங்களும் நிவேதனத்துக்கு உகந்தவையாகும். ஆத்மாவின்

குணமாகிய அகங்காரம், சங்கற்பம், கோபம், மோகம் இவைகளை அன்னமாக வேகவைத்து இறைவனுக்குச் சமர்ப்பிப்பதை இது குறிக்கிறது.

14. பாநீயம்

வாசனையுள்ள தீர்த்தத்தை ஈசுவரப் பிரீதிக்காகச் சமர்ப்பித்தலாம்.

15. ஜபசமர்ப்பணம்

மூலமந்திரத்தை நூற்றெட்டு உருஜபித்து அதை ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

ஜபம், பூஜை, ஹோமம் முதலிய எல்லாப் புண்ணியச் செயல்களையும் அர்ச்சகர் ஈசுவரனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். பகவான் அதனை ஏற்றுக்கொண்டு பத்தி, முத்திகளை நமக்கு அருளுகிறான்.

16. தீப ஆராதனை

பலவித தீபங்களை ஈசுவர சந்நிதியில் காட்டிச் செய்யும் ஆராதனைக்குத் தீபாராதனை என்று பெயர். தீபாராதனை வேளையில் உண்டாகும் மேலதாளங்களும், மணி ஒலிகளும், சங்கநாதங்களும் அரக்கர், பிசாசர், பிரமராட்சசர் முதலியோரை வெகுதொலைவில் ஒட்டுகின்றன. தீபாராதனை பதினாறு வகைப்படும் அவையாவன:

1. தூபம் 2. புஷ்பதீபம் 3. நாகதீபம் 4. விருஷபதீபம் 5. மேருதீபம் 6. புருஷாமிருகதீபம் 7. கும்பதீபம் 8. ஆராத்திரிகம் 9. நட்சத்திரதீபம் 10. கற்பூரதீபம் 11. பஸ்மோபசாரம் 12. கண்ணாடி காட்டல் 13. குடை பிடித்தல் 14. கொடிகாட்டல் 15. சாமரம் வீசுதல் 16. விசிறி வீசுதல்.

தீபாலங்காரங்களின் தத்துவம் : ஊர்வன, பறப்பன, விலங்குகள் எனும் முறையில் விரிந்து, பஞ்சபூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கி, இறுதியில் கற்பூரதீபம் போல் எரிந்து எவ்வித மிச்சமுமின்றி இறைவனோடு ஒன்றி விடுதல் ஆகும்.

குண்டலினி ஆறு ஆதாரங்களின் வழியாக மேலேறிச் செல்லும் பொழுது அந்தந்த ஆதாரங்களில் உண்டாகும் அனுபவங்கள் ஒளி, ஒசை, தீபம், ருசி, தரிசனம் முதலியவற்றைத் தீபம், வாத்தியம், அலங்காரம், நைவேத்யம், மூர்த்தி என்று விளக்கப்பட்டுள்ளது. அர்ச்சகர்கள் ஞான ஒளியால் இறைவனைக் காட்ட ஜீவன் இறைவனைக் கண்டுகளிக்கிறான்.

மேற்கூறியதிலிருந்து ஆத்மார்த்தமாகவும், பரார்த்தமாகவும் பூஜை செய்ய வேண்டிய முறைகளும் அவற்றின் தத்துவங்களும் விளக்கப்பட்டுள்ளன.

23. ஆலய வழிபாடு

ஆலயத்தைப் பற்றியும் அதன் உறுப்புகளைப் பற்றியும், அதில் உறையும் மூர்த்திகளைப் பற்றியும், முன்னர் ஆலயம் என்ற பகுதியில் விளக்கியுள்ளோம். ஆலய வழிபாடு அனைவருக்கும் இன்றி அமையாதது. ஆலயத்திற்குச் சென்று வழிபட விரும்புவோர் மேற்கொள்ளவேண்டிய சிலமுறைகள் உள்ளன. அம்முறைகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் ஆலய வழிபாட்டாலாகிய நன்மையைப் பெறலாம். நீராடாதவர்களும், சுத்தமான ஆடை உடுத்தாதவர்களும், வீட்டில் ஜனன மரண ஆசௌசங்கள் உடையவர்களும், வீட்டிற்கு விலக்கான பெண்களும் ஆலயத்தினுள் செல்லக்கூடாது.

ஆலயத்துக்குப் போகுமுன் ஆறுகுளங்களில் வேட்டி முதலியவற்றை நன்கு தோய்த்து நீராடி, பின்னர் தோய்த்துலர்ந்த ஆடை கட்டிக்கொள்ளவேண்டும். தீக்கை பெற்றவர்கள் அனுட்டானம் முடித்து உணவு அருந்தாமல் ஆலய வழிபாட்டிற்கு ஏகவேண்டும். சைவர்கள் விபூதி, சந்தனம், உருத்திராக்கம் முதலியவைகளையும், வைணவர்கள் நாமம், துளசிமணிமாலை முதலியவற்றையும் மற்றையோர் அவரவருக்குரிய சமயச் சின்னங்களையும் தரித்துக் கொள்ளவேண்டும்.

1. விபூதி

புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை, அக்கினியில் நீற்றிஎடுக்கும் பொடியே விபூதியாம். விபூதியைப் புதுத்துணியால் வடிகட்டி, நறுமலரிட்டுப் புதிய பாத்திரங்களில் வைத்து, அவசியத்திற்குத்தக்கபடி பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். அது தன்னைத் தரித்தவர்க்கு ஐசுவரியத்தைக் கொடுத்தலால் பூதியென்றும், இரட்சித்தலால் இரட்சையென்றும், சிவத்துவத்தை விளக்குவதால் பசிதம் என்றும், பாவங்களை நீக்கலால் பஸ்மம் என்றும், மலத்தைக் கழுவுவதால் குட்சாரம் என்றும் பெயர் பெறும்.

துர்நாற்றத்தைப் பசுவின் சாணம் அகற்றுவது யாவரும் அறி உண்மை. அதுபோலவே நமது உடலிலுள்ள துர்நாற்றங்களை அகற்ற சாணத்தால் தயாரிக்கப்படும் விபூதி மிகவும் அவசியமானதாகும். சிரசிலுள்ள நீர்த்தோசம், தலைவலி முதலியவற்றை அகற்றவும் இது பயன்படுகிறது. அன்றியும், இத்திருநீறு யாவரும் "முடிவில் பிடி சாம்பராவர்" என்ற நிலையாமையை நமக்கு உணர்த்தி, "நீயும் இத்தகைய நீறாய்ச் சிறிதுகாலத்திற்குள் முடிவாய்; ஆதலால் உன் வாழ்க்கை தூய்மையுடனும், இறைவன் மீது உற்றபற்றுடனும் இருத்தல் வேண்டும்" என எச்சரிக்கின்றது. பசுவாகிய ஆன்மாவின் மலம் நீறாகிய பின்னரே ஜீவன் சிவனாகிறான் என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. எனவே, விபூதி மத சம்பந்தமாகவும், ஆரோக்கிய சம்பந்தமாகவும் பயன்படுதலின் நமக்கு இது இன்றியமையாததாகும்.

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் நின்று விபூதியைப் பூமியில் சிந்தாதபடி நடுவிலுள்ள மூன்று விரல்களால் எடுத்து அண்ணாந்து சிவ சிவ என்று சொல்லிச் சிவனைத் தியானித்துப் பூசுதல் வேண்டும். காலை மாலைகளிலும், குளித்த உடனும், பூஜைக்கு முன்னும், ஆலய வழிபாட்டுக்கு முன்னும், சாப்பாட்டிற்கு முன்னும் அணிதல் வேண்டும்.

சமயதீட்சைமுறைப்படி விபூதி தரிப்பது தகுதியுடையது. எனினும், தீட்சை பெற்றுக்கொள்ளும் வரை விபூதியைத் தண்ணீரிலே குழைத்து "ஈசானமூர்த்தயே நம;" என்று சொல்லிச் சிரசிலும் "தத் புருஷ வக்த்ராய நம;" என்று சொல்லி நெற்றியிலும் "அகோர ஹிருதயாய நம;" என்று சொல்லி மார்பிலும் "வாமதேவ குஹயாய நம;" என்று சொல்லி கொப்பூழிலும் "ஸத்யோஜாதமூர்த்தயே நம," என்று சொல்லிப் புஜங்களிலும், கைமுட்டுகளிலும், மணிக்கட்டுகளிலும், இடுப்புகளிலும், கால்முட்டுகளிலும் தரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஞானசம்பந்தர் பாண்டியனின் வெப்புநோயைப் போக்கிய "மந்திரமாவது நீறு" என்ற திருநீற்றுப்பதிகத்தில் உள்ள சிலபாடல்களை ஓதியும் தரித்துக்கொள்ளலாம். அப்பாடல்களில் சிலவருமாறு:

மந்திர மாவதுநீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவதுநீறு சமயத்தில் உள்ளதுநீறு
செந்துவர் வாயுமை பங்கன்திருவால வாயான்திருநீறே.

பூச இனியதுநீறு புண்ணிய மாவதுநீறு
பேச இனியதுநீறு பெருந்தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பதுநீறு அந்தம தாவதுநீறு
தேசம் புகழ்வதுநீறு திருவால வாயான்திருநீறே

ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றை
போற்றிப் புகலிநிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன்உடலுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள்பத்தும் வல்லவர் நல்லவர்தாமே

விபூதியைத் தரித்துக்கொண்டு "ஓம் நமச்சிவாய" என்ற பஞ்சாட்சர மந்திரத்தினைப் பலமுறை ஜபித்துக் கடவுளை வணங்க வேண்டும்.

2. உருத்திராக்கம்

சிவபெருமானது மூன்று திருக்கண்களிலிருந்தும் பொழிந்த நீரில் தோன்றியதாக எண்ணிச் சிவனடியார்கள் அணிந்து கொள்ளும் மணிக்கு 'உருத்திராக்கம்' என்று பெயர். உருத்திராக்கம் என்பது ருக்கினை அல்லது சம்ஸார துக்கத்தை திரவிப்பது அல்லது இல்லாமற் செய்வது. உருத்திராக்கம் சிவனது கண்ணோட்டம் எனவும் கூறுவர். நல்ல உருத்திராக்கத்தை உரைத்துப் பார்த்தால் பசும்பொன்னின் மாற்றிருக்கக் காணலாம். இதனுள் மக்கள் உடலுக்கு நன்மை பயக்கும் சிலபொருள்கள் இருக்கின்றன. இதனை உரைத்து மருந்தோடு கலந்து குடித்தால் பல நன்மைகள் உண்டாகின்றன என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். உருத்திராக்கத்தின் வழி உடலிற் பாயும் நீர் புனிதமானது.

"இலங்குமாமணி உருத்திர அக்கம் ஒன்றணியில்
விலங்கெயிற்று வெம்பூதங்கள் முதலிய மேவா"

என்றபடி உருத்திராக்கம் அணிபவரை எவ்வித உபாதிகளும் வந்தடையமாட்டா.

உருத்திராக்கத்தை அணிந்து கொள்வதற்கு எவன் கூசுகிறானோ அவனைக்காண்பதற்கு இறைவனும் கூசுகிறான்.

"பூண்பதற்குக் கண்டியினை கூசியிடும் புல்லியரை
காண்பதற்குக் கூசும் அரன் கைத்து"

ஆதலால், கோவில் அர்ச்சகர்களும், அடியார்களும், துறவிகளும் உருத்திராக்கத்தை அவசியம் தரித்தல் வேண்டும்.

இதில் ஒரு முகமணி முதல் பதினாறு முகமணிவரை உண்டு. கழுத்தில் முப்பத்திரண்டு மணிகளை ஒருங்கு சேர்த்து மாலையாக அணியலாம். மார்பில் நூற்றெட்டு, ஐம்பத்துநான்கு, இருபத்தேழு எண்ணிக்கையில் பொடி மணிகளை மாலையாகக் கோர்த்து ஜபத்திற்கும் பயன்படும்படித் தரித்துக் கொள்ளலாம்.

3. சந்தனம்

சந்தனம், மிகக் குளிர்ச்சியுடையதும் மணமுடையதுமாகும். அஃது, உடலிலுள்ள வெப்பத்தை நீக்கித் தண்மை (குளிர்ச்சி) யைத் தந்து உற்சாகத்தை உண்டு பண்ணுகிறது. பல நரம்புகள் புருவ மத்தியில் ஒன்று கூடுவதால் அவைகட்கு வெப்பம் ஏற்படாதிருக்கக் குளிர்ச்சியுடைய சந்தனத்திலகம் இடல் வேண்டும். பரமசிவனது நெற்றிக்கண்ணை நினைப்பூட்டுதற்கும் அடியார்கள் திலகம் அணிந்து கொள்ளுகின்றனர்.

4. திருமண்

நாமம் ஒருவகைத் திருமண்ணால் இடப்படுவது. எல்லாம் முடிவில் மண்ணாய் விடும் என்பதை இது உணர்த்துகின்றது. அன்றியும், இறைவனது திருவடியல்லாது உயிர்களுக்கு வேறுகதியில்லை என்பதை உணர்த்தத் திருமாலின் திருவடியின் சாயலாய்த் திருமாலடியார்கள் இதனை இடுகின்றார்கள்.

எனவே, இந்துமதச் சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம், சந்தனம், நாமம் முதலியவற்றை அவரவர்கள் சமயாசாரப்படி அணிந்து இறைவன் திருவடிக்கு ஆளாக வேண்டும் என்பது பெறப்படும்.

5. விக்கிரகங்கள்

ஆலயங்களில் நிலைநிறுவப் பெற்றிருக்கும் திருவுருவங்களுக்கு 'விக்கிரகம்' என்று பெயர். அரசர்கள், ஜனநாயகத் தலைவர்கள் முதலியோரது பிறந்த நாள் முதலிய விசேட விழாக்களில் அவர்களது திருவுருவப் படங்களை வைத்துக் கொண்டாடி வருகிறோம். நமது தாய் தந்தையர்களை நினைத்து மகிழவும் அவ்வுருவப் படங்கள் உதவுகின்றன. உண்மைக் காதலர்கள் ஒருவர் படத்தை மற்றொருவர் பார்த்து மகிழ்கின்றனர். இந்நாகரீக காலத்திலும் பெரியோர்களுக்கு படத்திறப்பு விழாக்களும், உருவச்சிலை நாட்டுதலும் ஏராளமாக நடைபெற்று வருகின்றன.

இவையனைத்தும் தங்களின் மதிப்புக்குரிய பெரியவர்கள் பால் இவர்கள் வைத்த பேரன்பினை நன்கு விளக்குகின்றது. இவற்றை யாரும் குறை கூறுவதற்கில்லை. அதைப்போல இறைவனிடம் பேரன்புகொண்ட அடியவர்கள் இறைவனது திருவுருவத்தைப் படங்களிலும், ஆலய விக்கிரங்களிலும் வணங்கி வருகின்றனர். ஒரு பெரியவரின் உருவப் படத்தை ஒருவன் எவ்வகையிலேனும் இழிவுப்படுத்தினால் அப்பெரியோரிடம் பேரன்பு கொண்டோர் அதனைப் பொறுக்கமாட்டார்கள். அதைப்போல ஆலய விக்கிரங்களை இழிவுபடுத்துவதையும் இறைவன் அடியார்கள் பொறுக்கமாட்டார்கள்.

இறைவனை நேரிற்கண்ட பெரியோர்கள் நமது இந்து மதத்தில் பலர் உண்டு. அவர்கள் இறைவனைக் கண்டவிதத்தை அல்லது அவனது அங்க அடையாளங்களை, தமது தெய்வீகப் பாடல்களில் படம் பிடித்துக் காட்டியுள்ளனர்.

திருநாவுக்கரசர்,

"பாலின் மொழியாள் ஓர்பாகங் கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டங் கண்டேன்
நெற்றிநுதல் கண்டேன் பெற்றங் கண்டேன்
காலைக் கதிர்செய் மதியங் கண்டேன்
கரந்தை திருமுடிமேல் தோன்றக் கண்டேன்
மாலைச் சடையும் முடியுங் கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே"

என்று தாம் பரமனைக் கண்டவிதத்தைப் பாடலின்கண் நிருபிக்கின்றார்.

பேயாழ்வார்,

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணி நிறமுங் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
என் ஆழிவண்ணன்பால் இன்று"

என்று தாம் திருமாலினைக் கண்ட வண்ணத்தை கவினுறப் பாடுகிறார். இவர்களது காவியத்திலிருந்து இத்திருவுருவங்களின் உண்மை ஓவியம் நமக்கு நன்கு விளங்குகிறது.

விக்கிரங்களில் சில சுயம்புவாகவே முளைத்தவையும் உண்டு. தேவர்கள், ரிசிகள் முதலியவர்களாலும் பிரதிட்டிக்கப்பட்டவையும் உள்ளன. பூஜையின் பொருட்டு எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளை மூலமந்திரங்கள் சொல்லி ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆகமம் உணர்ந்த ஞானிகள் ஆவாகனம் செய்கின்றார்கள். அதன் பின் "தயாநிதியே! அடியேனை அனுக்கிரகிப்பதற்காக இவ்விக்கிரகத்தில் எழுந்தருள வேண்டும்" என்று அன்புடன் யாசித்து ஸ்தாபனம் செய்கிறார்கள். இதனை "அலையாது அழுந்த நிலைபெறல் தாபனம்" என்பதால் அறியலாம். அதன்பின் பலவகைப் பூஜைகளாலும், நைவேத்தியங்களாலும், நித்திய, நைமித்திக ஆராதனைகளாலும், கடவுள் சக்தியை அங்கே நிலைநிறுத்தி, வழிபடுவோர் அதிலிருந்து பயன்பெறும்படி செய்துள்ளார்கள். ஆலய விக்கிரகத்தை வைணவர் அர்ச்சை எனக் கூறுவர்.

சூரியன் முன் சிறிது பஞ்சைக் காட்டினால், பஞ்சில் தீப்பிடிப்பதில்லை. சூரியனுக்கும், பஞ்சுக்கும் இடையில் ஒரு சூரிய காந்தக் கண்ணாடியைக் காட்டினால் அது சூரியகிரணத்தை அதிகமாக இழுத்து வெகு சீக்கிரமாகப் பஞ்சில் தீப்பற்றியெரியும்படி செய்கிறது. அது போல, பஞ்சாகிய நமது உள்ளத்தில் இறைவனது அருளாகிய தீ வெகு துரிதமாகப் பற்றுவதற்குக் கண்ணாடியாகிய் விக்கிரகம் மிக உதவுகின்றது. பசுவின் உடலெங்கும் வியாபித்திருக்கும் பால், அதன் மடிவழியாகச் சுரப்பது போல, பரந்து கிடக்கும் ஆண்டவனது அருள், விக்கிரக வழியாக நமக்குக் கிடைக்கின்றது. கடவுள் பாலில் நெய் போல் எங்கும் வியாபித்திருப்பினும் விக்கிரகங்களில் தயிரில் நெய்போல விளங்குகின்றார்.

"கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே" எனக் கூறியதன் கருத்து, கல் செம்பு முதலியவற்றில் மாத்திரம் அல்ல கடவுள் இருப்பது; எங்கும் நிறைந்து விளங்குகின்றார் என்பதை விளக்குவதற்கேயாம்,

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றி வந்து முணுமுணென்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"
"பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே"
"தீர்த்தலிங்க மூர்த்தியென்று தேடியோடுந் தீயரே"

என்றெல்லாம் கூறியவர்கள்,

"பஞ்ச சுத்திசெய்து நின்னை பாவித்துப் பூசை செய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே"

எனவும்,

"தீர்த்த லிங்கம் உம்முளே தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்த லிங்கம் தானதாய்த் தெளிந்ததே சிவாயமே"

எனவும் ஏன் கூறல் வேண்டும். அவர்கள் சிவாலய வழிபாட்டைப் பற்றிக் கூறியது, சிவாலய வழிபாட்டின் தத்துவத்தை உணராது செய்கின்ற கிரியைக்ள் சீக்கிரம் பயன் தராவாதலால், அவற்றின் உண்மைகளை மக்கள் அறிய வேண்டும் என்பதை வற்புறுத்தவே ஆகும்.

சரியைவான்கள் முதல் ஞானவான்கள் வரை எல்லா மக்களுக்கும் விக்கிரக வழிபாடு இன்றியமையாததே. ஞானிகளாகிய திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், இராமகிருஷ்ண பரமஹம்சர் முதலியோர் விக்கிரக வழிபாடு செய்தே மேனிலையுற்றனர். இவர்களைப் பாமரர்கள் என்று சொல்லலாமா? இவர்கள் விக்கிரங்கள் வாயிலாகவே அருள் பெற்றதை நோக்குமிடத்து விக்கிரக வழிபாடு பரமஞானிகள் வரை யாவருக்கும் இன்றியுமையாதது என்பது விளங்கும்.

6. வழிபாடு செய்யும் முறை

கோயிலின் பக்கத்திற் சென்றதும் கைகால்களைக் கழுவிக் கொண்டு கோபுரத்தின் முன்சென்று, நின்று இரண்டு கரங்களையும் தலைமேற்குவித்து மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டும், தோத்திரப் பாடல்களைப் பாடிக்கொண்டும், வேறு விசாரங்கள் ஒன்றுமில்லாமல் கோபுரத்தை ஸ்தூல லிங்கமாகவும், கடவுள் பாதங்களாகவும் பாவித்து வணங்கிக் கோயிலுக்குள் போக வேண்டும். கொடிமரத்தின் பக்கத்திற் சென்றதும் புருடர்கள் தலை, செவியிரண்டு, கையிரண்டு, புஜங்களிரண்டு, மோவாய்க் கட்டை ஆகிய எட்டு அவயவங்களும் பூமியிற்படும்படி வணங்கல் வேண்டும். இது அட்டாங்க வணக்கம் என்று கூறப்படும். பெண்கள் தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு ஆகிய ஐந்து அவயங்களும் பூமியிற்படும்படி வணங்கல் வேண்டும். இதனைப் பஞ்சாங்க வணக்கம் என்பர்.

கொடிமரத்தைக் கண்டதும் இறைவனை அடைந்தவர் அழிவற்ற ஆனந்தத்தில் நிலைத்திருப்பர் என நினைத்து, அதனை சூட்சமலிங்கமாக

எண்ணி வணங்க வேண்டும். மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு பிராகாரங்களை வலம்வரல் வேண்டும். ஐந்து பிராகாரங்கள் உள்ள இடங்களில் அந்த ஐந்து பிராகாரங்களையும் பஞ்சகோசங்களாக மதித்து, ஒவ்வொகு கோசத்திலும் ஆத்மா உழன்று தெளிந்து அதைவிடுத்து மேலே செல்வதாக நினைக்க வேண்டும். ஐந்து பிராகாரங்களையும் கடந்தால் கடவுளது சாமீப்யபதத்தை அடையலாம் என்பதை உணர்தல் வேண்டும். பிராகாரங்களை வலம் வந்து, பலிபீடத்தின் அருகிற் சென்று, நம்மிடம் உள்ள காமம், குரோத, லோப, மோக, மத, மாற்சரிங்களைப் பலி கொடுக்க உறுதி செய்து கொள்ள வேண்டும். பின் கன்னிமூலையில் உள்ள விநாயகர் சந்நதியில் சென்று வலக்கையை இடக்கையின் முன் வைத்து வலக்கையால் இடப்புறத்திலும், இடக்கையால் வலப்புறத்திலும் மண்டையில் மூன்று முறை குட்டுகளிட்டு, வலக்கையால் இடக்காதையும், இடக்கையால் வலக்காதையும் பிடித்துக்கொண்டு மூன்றுமுறை தோப்புகரணமிட்டு, விநாயகர் தோத்திரம் கூறி வணங்கல்வேண்டும்.

தேவர்கள் கயமுகாசுரனின் சந்நிதியில் தோப்புக்கரணம் இட்டு வந்தனர். அவனை விநாயகர் சங்கரித்த பிறகு அவன் முன்னர் இட்ட தோப்புக்கரணத்தையும், தலைக்குட்டுதலையும் நன்றியறிவு காரணமாக விநாயகரின் திருமுன்பு செய்தனர்.

ஒரு குற்றவாளி தான் செய்த குற்றத்திற்குத் தண்டனை தானே விதித்துத் தானே அனுபவித்தல் போல், இறைவனின் சமீபத்தில் செல்லுதற்குத் தகுதியில்லாதபடி குற்றம்செய்யும் மக்கள் தாமே தண்டனைகள் செய்து கொள்ளுகிறார்கள்.

தலையின் இரு பக்கங்களிலும் குட்டிக்கொள்ளும் பொழுது உணர்ச்சி அற்ற நரம்புகள் உணர்ச்சி பெறுகின்றன. தமக்கு வாழ்க்கையில் எவ்வித இடையூறுகளும் குறுக்கிடா வண்ணம் இருப்பதற்காகவே விக்கினங்களைப் போக்கியருளும் விநாயகரை முதலில் மக்கள் வழிபடுகின்றனர். இவர் முன் தேங்காயை விடலை இடுவர். அது சிதறுவதைப் போல தனது பாவங்களை அல்லது விக்கினங்கள் சிதற வேண்டும் என்பது விடலையிடுவோர் உள்ளக்கருத்தாகும். விநாயகரை வணங்கிய பிறகு துவாரபாலக விக்கிரங்கள் முன் சென்று, "அடியேன் இறைவனை வணங்குவதற்கு அனுமதி செய்தருளும்" என்று வேண்டிக் கொண்டு சந்நிதியிற் சென்று, இறைவனை வணங்கித் தோத்திரப்பாக்கள் கூறல்வேண்டும். தேங்காய், பழம் முதலிய நிவேதனப் பொருள்களை கொடுத்து நிவேதிக்கச் செய்யலாம். கர்ப்பூரதரிசனம் செய்து, திருநீறு பெற்றுக்கொண்டு, மூலஸ்தான மூர்த்தியை நன்றாய் மனதில்

பதியவைத்து எலும்புகள் எல்லாம் நெக்கு நெக்குருகக் கண்ணீர் அருவிபோலப் பாயக் கசிந்துருகித் துதித்து வெளிவரல் வேண்டும். அம்பிகை சந்நிதியிலும் இவ்வாறே செய்தல் வேண்டும்.

உட்பிராகாரங்களில் இருக்கும் ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கிக் கொண்டே வலம் வரல் வேண்டும். தட்சிணாமூர்த்தி விக்கிரகத்தின் முன்னர் சென்று அவரை குருவாகப் பாவித்து வணங்கல் வேண்டும். (இவரது இதரப் பெருமைகளை தட்சிணாமூர்த்தி எனும் தலைப்பில் முன்னர் கூறப்பட்டுள்ளது.)

பின்னர் முருகப்பெருமானிடம் சென்று வணங்கித் தோத்தரித்து சண்டேசுரர் சந்நிதியை அடைந்து, சிவத்தியானத்தில் இருக்கும் இவரிடம் மூன்றுமுறை கையால் கொட்டி, அவர் நம்மைப் பார்ப்பதாகக் கருதிச் சிவதரிசன பலனைத் தருமாறு பிரார்த்திக்க வேண்டும். கையைத் தட்டுவதனால் உண்டாகும் ஒலி அவருக்குப் பிரீதி அளிப்பதால் அவரை ஒலிச்சண்டேசுவரர் எனவும் கூறுவர். பின்னர் நவக்கிரகங்கள் முதலியவைகளை வணங்க வேண்டும். கோள்கள் மனிதர்களுக்குச் செய்யும் தீமைகளைக் குறைப்பதற்காக நவக்கிரக ஆராதனை வணக்கமும், "சனீசுவர பகவானே! உனைத் தொழுவேன்; எனைத் தொடாதே" என வேண்டித் தீவினை நம்மை . அணுகாதிருக்கவும் நவக்கிரக சனீசுவர ஆராதனை கோவில்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விஷ்ணு ஆலயங்களில் இறைவன் திருமுன்பு வீற்றிருக்கும் பெரிய திருவடியாகிய கருடாழ்வாரை வணங்கி உட்சென்று மூலஸ்தான மூர்த்தியின் முன்நின்று திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பாடித் துதித்துத் துளசியும், தீர்த்தமும் பெற்று, சடாரி சாத்தப்பெற்று, மூர்த்தியைத் தியானித்துத் தாயார் சந்நிதானத்துக்கும் சென்று அங்குத் தாயாரைச் சேவித்துக் கொண்டு வலம் வரும்பொழுது உட்பிராகாரத்தில் காணப்படும் மூர்த்திகளை வணங்கி வெளியே வரல் வேண்டும்.

இந்தவிதமாக ஆலய தரிசனம் உள்ளே முடிந்த பிறகு கொடி மரத்திற்குச் சற்றுதூரம் விலகியிருந்து உள்ளேயுள்ள மூர்த்தியின் மூலமந்திரத்தை (சிவத்தியானத்துக்குரியது "ஓம் நமசிவாய" விஷ்ணுத் தியானத்துக்குரியது "ஹரி ஓம் நமோ நாராயணாய") நூற்றெட்டு முறைக்குக் குறையாமல் ஜபித்து மூர்த்தியை தியானித்துக்கொண்டு மௌனமாக வீட்டிற்கு வரல் வேண்டும்.

7. தலங்களும் திவ்விய தேசங்களும்

ஆலயங்களில் சைவசமய குரவர்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற ஆலயங்கள் மிகச்சிறப்புடையன. தேவாரப்பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் 'தலங்கள்' என்றும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பெற்ற ஆலயங்கள் 'திவ்விய தேசம்' என்றும் பெயர்பெறும். ஆழ்வார்கள் பாடல்களை ''மங்களா சாசனம்'' எனச் சிறப்பித்துக் கூறுவர். சமயாச்சாரியர்களால் பாடல் பெற்ற தலங்கள் இருநூற்று எழுபத்து நான்காகும்.

விபரம் :

சோழ நாடு	190
தொண்டை நாடு	32
நடு நாடு	22
பாண்டி நாடு	14
மலை நாடு	1
துளுவம்	1
கொங்கு நாடு	7
ஈழ நாடு	2
வட நாடு	5
ஆக தலங்கள்	274

இதனை,

"துங்கவட கயிலாய முதலா ஐந்துதுளு ஒன்று
தொண்டை வடநாட்டு எண்ணான்கு
தங்கு நடுநாட்டு இருபத்திரண்டு பொன்
னித் தலம் நூற்றுத் தொண்ணூறு
மலை நாட்டு ஒன்று
கொங்கேழு சிங்களத்தில் இரண்டு
வைகைகொழி தமிழ் நாட்டு
ஈரேழ முதலாஞ் சூலச்
செங்கையார் தலம் இருநூற்று
எழுபா நான்கு..."

என்ற பாடலால் அறியலாம்.

ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திருப்பதிகள் நூற்றெட்டாகும். விவரம் :

சோழ நாடு	40
பாண்டி நாடு	18
மலை நாடு	13
நடு நாடு	2
தொண்டை நாடு	22
வட நாடு	12
பரமபதம்	1
ஆக திருப்பதிகள்	108

இதனை,

"ஈரிருபதாஞ் சோழம் ஈரொன்பதாம் பாண்டி
ஓர் பதின்மூன்றாம் மலைநாடு ஓரிரண்டாம் சீர் நடுநாடு
ஆறோடு ஈரெட்டு தொண்டை அவ்வடநாடு ஆறிரண்டு
கூறு திருநாடு ஒன்றாகக் கொள்"

எனும் பாடலால் அறியலாம்.

8. இதரச் சிறப்புப்பெற்ற தலங்கள்

திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திருக்கோணமலை இவற்றைத் தென்திசைக் கயிலை எனக் கூறுவர்.

அட்டவீரட்டங்கள் : சிவபிரான் புரிந்த எட்டு வீரச்செயல்களை தன்னகத்தே கொண்ட தலங்களை 'அட்டவீரட்டங்கள்' என்பர். அவை திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருவழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவூர் முதலியனவாம்.

சில மூர்த்தி விசேட தலங்கள் : விநாயகர் வலஞ்சுழி, திருகுமரன் திருவேரகம், தட்சிணாமூர்த்தி ஆலங்குடி, சண்டேசர் சேய்ஞலூர், நந்தி திருவாவடுதுறை, வடுகன் (வைரவர்) சீர்காழி, சபாபதி தில்லை, தியாகராஜர் திருவாரூர்.

காசிக்குச் சமமான தலங்கள் : திருவெண்காடு, திருவையாறு, திருமயிலாடுதுறை (மாயூரம்), திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு, திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), திருவாஞ்சியம்.

நவ திருப்பதிகள் : 1. ஸ்ரீவைகுண்டம், 2. ஆழ்வார்திருநகரி, 3. தென்திருப்பேரை, 4. தொலைவில்லிமங்கலம், 5. திருக்குளத்தை, 6. புளிங்குடி, 7. திருக்கோளூர், 8. வரகுணமங்கை.

குறிப்பு : தொலைவில்லிமங்கலத்தில் அரவிந்தலோசனன் சன்னிதி தனியாக ஒன்றிருக்கிறது. அதையும் சேர்க்க ஒன்பது திருப்பதிகளாகும். ஆலய வழிபாட்டினை முறைப்படி செய்தவர்கள் அடைந்த பேறுகளுக்கு அளவில்லை.

தாயுமானவர்,

"மூர்த்தி தலம்தீர்த்தம் முறையாய்த் தொடங்கி னர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

எனக் கூறுவதால், நாம் இறைவனைத் தலங்கள்தோறும் சென்று வழிபட்டு உய்வோமாக.

24. மந்திரம்

மனனம் செய்பவனை திராணனம் செய்வது அல்லது இரட்சிப்பது மந்திரமாகும்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்பது தொல்காப்பியச் சூத்திரமாகும்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

எனத் திருவள்ளுவர் கூறுகிறார்.

இதற்குப் பரிமேலழகர் "நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே காட்டும்" என உரை வகுக்கின்றார்.

"மந்த்ரம் விநாக்ரியா நாஸ்தி
கர்ஷணாத் யர்ச்சநாந்தகா"

(காரணாகமம்)

கர்ஷணத்திலிருந்து அர்ச்சனை வரை மந்திரம் இல்லாத கிரியையே கிடையாது என்பது இதற்குப் பொருளாகும். மந்திரம் சித்தம், ஸாத்யம், ஸ்வசிதம், ரிபு என நான்கு வகைப்படும்.

1. மந்திரங்களின் மகத்துவம்

மந்திரத்தை ஜபிக்க மந்திரத்திற்குரிய தேவதை ஜபிப்பவன் முன் தோன்றுகிறது. என்பதை பாரிஸ் நகர விஞ்ஞானி ஒருவர் மெய்ப்பித்திருக்கிறார். பைரவ மந்திரம் ஜபிக்க நாயுடன் கூடிய பைரவர் காட்சியளித்ததாகக் கூறுவர்.

மந்திரத்தால் யானை முதலிய மிருகங்களும், பாம்பு முதலிய விஷ ஐந்துக்களும் கட்டுப்படுகின்றன. நமது நாட்டு மெய்ஞ்ஞானிகள் மந்திர ஜபத்தால் பலவிதப் பயன்களைப் பெற்றுள்ளார்கள். அதனால் பற்பல அற்புதச் செயல்களைச் செய்துள்ளார்கள். சைவ சமயாச்சாரியர்களும், ஆழ்வார்களும் முறையே பஞ்சாக்கர, அட்டாட்சர மந்திரங்களை நவின்று செயற்கரிய செயல்களை பலவற்றைச் செய்திருக்கிறார்கள்.

மந்திரங்களைச் சந்தஸ்தவறாமல் உச்சரிப்பதால் அதற்குரிய தேவதையின் திருவுருவமே சூட்சம வடிவில் எழுந்தருளி உபாஸகனின் பார்வையில் தோன்றும். ஆகவே, மந்திரத்தால் சூட்சம சலனங்களை உண்டுபண்ணி செயற்கரிய செயல்களைச் செய்வதோடு இறைவன் திருவருளையும் பெறமுடியும் என்பது தெளிவாகின்றது.

2. சில மூலமந்திரங்கள்

1. சிவன்மூலமந்திரம் – ஓம் நமசிவாய :
2. விஷ்ணு மூலமந்திரம் – ஓம் நமோ நாராயணாய :
3. தேவி மூலமந்திரம் – ஓம் உமா தேவ்யை நம :
4. கணபதி மூலமந்திரம் – ஓம் கணபதயே நம :
5. சுப்பிரமணியர் மூல மந்திரம் – ஓம் சரவண பவாயநம :
6. சாஸ்தா மூலமந்திரம் – ஓம் சாஸ்த்ரு மூர்த்தயே நம :

3. மந்திர ஜபமுறை

ஜபம் மானஸம், மந்தம், வாசகம் என மூவைப்படும். மனதிற்குள் ஜபிப்பது மானஸமாகும். தனக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெல்ல உச்சரிப்பது மந்தமாகும். பிறர் அறிய உச்சரிப்பது வாசகம் எனப்படும். மனதிற்குள் உச்சரிப்பது உத்தமம். மெல்ல உச்சரிப்பது மத்யமம். பிறர் அறிய உச்சரிப்பது அதமமாகும்.

4. பஞ்சாக்கரம்

பஞ்சாக்கரம் 'ஓம் நமச்சிவாய' என்பதாகும். சிவாய – சிவனுக்கு நம:– வணக்கம். சிவனுக்கு வணக்கம் எனப் பொதுவாகக் கூறுவர். இதிலுள்ள சிகரம் சிவனையும், வகரம் சக்தியையும் உணர்த்துவதால் 'சிவ சிவ' என மந்திரம் ஜபிப்பாரும் உளர். ந, ம, ய என்ற எழுத்துக்களுக்கு அரிய பொருள்கள் உள. நகாரம் திரோதாயியை (மறைத்தலை) யும், யகாரம் உயிரினையும், மகாரம் ஆணவம் முதலிய மலங்களையும் குறிக்கின்றது. ஆகவே, இறைவன் உயிர்களின் மலத்தை ஒழித்து அருளால் ஆட்கொள்வதை இம்மந்திரம் உணர்த்துகின்றது. "அம்மையப்பரே! உங்களை நான் வணங்குகிறேன்; என்னைப் பற்றி நிற்கின்ற ஆணவத்தையும், மறைத்தலையும் நீக்கி உமது அருளால் ஆட்கொண்டு அருள் புரிதல் வேண்டும்" என்பது பஞ்சாக்கரத்தின் திரண்ட பொருளாகும்.

"பஞ்சாக்ஷர மயம சம்பும் பரப்பிரஹ்ம ஸ்வரூபிணம்
நகாராதி யகாராந்தம் ஜ்ஞாத்வா பஞ்சாக்ஷராம் ஜபேத்"

என யஜுர்வேதம் பஞ்சப்ரஹ்மோபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. பரப்பிரம்மஸ்வரூபமாயுள்ள பஞ்சாக்கரத்தைப் பரமேசுவரன் தன் வடிவமாகக் கொண்டவன் என்பது இதன் பொருளாகும்.

பஞ்சாக்கரத்தைவிட மேலான தாரகமந்திரம் வேறெதுவும் இல்லையென பஸ்மஜாபாலோபநிஷதம் கூறுகின்றது. "நமசிவாயச நமசிவதராயச" என்று ருத்ராத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது. அதற்கு "மிகவும் அன்பு செய்கிறவனாகிய சிவனுக்கு வணக்கம்" என்பது பொருள். இந்தப் பஞ்சாக்கர மந்திரம் வேதத்தின் இதயத்தில் ஒளி வீசிக்கொண்டு விளங்குகிறது.

"வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம்நமசி வாயவே" (சம்பந்தர்)
"அருமறையின் அகத்தானை" (அப்பர்)
"பழுத்தன ஐந்தும் பழமறை யுள்ளே" (திருமந்திரம்)

"அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்த பஞ்சாக்கரம்
அஞ்செழுத் தாகிய அக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தானே" (திருமந்திரம்)

பஞ்சாக்கரம் நடுவேதமாகிய யஜுர் வேதத்தில் உள்ள ஏழு காண்டங்களில் நடுக்காண்டத்தில், நடுசம்ஹிதையில், ருத்ராத்யாயத்தில், நடுநாயகமாகக் கூறப்படுவதால், வேதம் அனைத்தும் பஞ்சாக்கரமயம் எனக் கூறலாம். வேதப் பொருளாகிய சிவபெருமானுக்குச் சிரம் போன்று விளங்கும் யஜுர்வேதத்தில், முகம் போன்று விளங்குவது ருத்ராத்யாயமாகும் அதன் கண்மணி போன்று 'சிவ' எனும் இரண்டெழுத்துக்கள் விளங்குகின்றன. "பதினெட்டு வித்யைகளிலும் சுருதியே சிறந்தது; அதனினும் சிறந்தது பஞ்சாக்கரமாகும்; அதனினும் அதனுள் விளங்கும் 'சிவ' எனும் எழுத்துக்கள் மிகச் சிறந்தனவாகும் என பிரமணங்கள் கூறுகின்றன.

பலவித சித்திகளுக்கும் பஞ்சாக்கரம் உதவுகின்றது. ஸ்தம்பனம், மோகனம், வசியம், ஆகர்ஷணம், உச்சாடனம், வித்வேடணம், பேதனம், மாரணம் எனும் அட்டகாம வித்தை முதலிய சித்திகளையும் இது கொடுக்கின்றது.

ஐந்து முகங்களும், பஞ்சாக்கர விளக்கமும்

முகங்கள்	எழுத்துக்கள்	சித்திகள்	உச்சரிக்க வேண்டிய எண்ணிக்கை
ஈசானமுகம்	நகரம்	உச்சாடனம்	இருபத்தைந்து முறை
தத்புருடம்	மகரம்	வித்வேடணம்	”
அகோரம்	சிகரம்	ஸ்தம்பனம்	”
வாமம்	வகரம்	பேதனம்	”
சத்யோஜாதம்	யகரம்	மாரணம்	”

பஞ்சாக்கரமும் பிரணவமும்

பஞ்சாக்கரம் பிரணவத்தின் உள்ளூறுப்பாகும். பஞ்சாக்கரமே பிரணவம். பிரணவமே பஞ்சாக்கரமாகும். இதனை,

"ஓங்காரமாம் ஐந்தெழுத்தால் புவனத்தை உண்டு பண்ணிப்
பாங்காய் நடத்தும் பொருளே"

எனும் தாயுமானவர் வாக்கால் அறியலாம். 'ஓம் நமசிவாய' என்பதற்கு ஓங்காரமாகிய நமசிவாய என்பது பொருளாகும். பஞ்சாக்கரம் ஸ்தூல, சூட்சம, காரண, மகாகாரண, மகாமநு என ஐந்து வகைப்படும்.

பஞ்சாக்கரம்	அட்சரங்கள்	பயன்
1. ஸ்தூல பஞ்சாக்கரம்	நமசிவாய	இம்மை மறுமைப் பயன் அளிக்கும்
2. சூட்சம பஞ்சாக்கரம்	சிவாயநம	மலத்தை நாசம் பண்ணும்
3. காரண பஞ்சாக்கரம்	சிவாயசிவ	பாசத்தைக் கெடுக்கும்
4. மகாகார்ண பஞ்சாக்கரம்	சிவ	அருள், சிவத்தொடு சேர்ந்து இன்பமளிக்கும்
5. மகாமநு	சி	சிவமேயாக்கும்

1. ஸ்தூல பஞ்சாக்கரம்

இது நகாரம் முதலாகவும், யகரம் இறுதியாகவும் உள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் முதலியோர் "நமசிவாயப்" பதிகம் பாடியுள்ளனர்.

ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் நமசிவாயவே எனப் போற்றப் பட்டுள்ளது.

அப்பர்,

"நமசி வாயவே ஞானமுங் கல்வியும்
நமசி வாயவே நானறி விச்சையும்
நமசி வாயவே நாநவின் றேத்துமே
நமசி வாயவே நன்னெறி காட்டுமே"

என முதலில் வைத்துப் போற்றியுள்ளார்.

மாணிக்கவாசகர் இதனைச் திருச்சதகத்தில்,

"போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி"

எனத் துதித்துள்ளார்.

எழுத்துக்கள்	பஞ்சபூதங்கள்	அதிதேவதை
1. நகாரம்	பிருதிவி	இராமன்
2. மகாரம்	அப்பு	விஷ்ணு
3. சிகாரம்	தேயு	சிவன்
4. வகாரம்	வாயு	மகேசுவரன்
5. யகாரம்	ஆகாசம்	சதாசிவம்

2. சூட்சமபஞ்சாக்கரம்

சூட்சம பஞ்சாக்கரம் சிவாய நம என்பதாகும்.

"...சிவாய நமவென்று நீறணிந்தேன்" (அப்பர்)

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்" (மாணிக்கவாசகர்)

"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை" (ஔவையார்)

3. காரண பஞ்சாக்கரம்

காரண பஞ்சாக்கரத்தை "சிவாய" என்றும், "சிவாய சிவ" என்றும் கூறுவர்.

“விண்ணினார் பணிந்து ஏத்த வியப்புறு
மண்ணினார் மறவாது சிவாய என்று
எண்ணினார்க் கிடமா எழில் வானகம்
பண்ணினார் அவர் பாலைத் துறையரே” (அப்பர்)

“ஆனந்த மூன்றும் அறிவிரண்டு ஒன்றாகும்
ஆனந்த சிவாய அறிவார் பலரில்லை”

“சிவாய சிவ சிவ என்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே” (திருமந்திரம்)

4. மகாகாரண பஞ்சாக்கரம்

‘சிவ’ எனும் இரண்டெழுத்துக்களைக் கொண்ட இந்த மகாகாரண பஞ்சாக்கரத்தின் மகிமையைத் திருமூலர்,

“சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே”

எனச் சிறப்பித்துக் கூறுகிறார்.

5. மகாமநு

இந்தச் ‘சி’ எனும் எழுத்தில் ச், வரி வடிவு. அ, பிரணவாட்சர மூலமாகும்; இ, அம்மூலத்தை விளக்கும் பூரணமாம். இம்மூன்றின் தோற்றமும், அசைவும் விந்துவாகும்; இதன் ஒலியே நாதம். இவ்வைந்தும் சேர்ந்ததே ‘சி’ எனும் எழுத்தாகும். இதுகாறும் கூறிய விளக்கங்களால் பஞ்சாக்கரத்தின் மகிமை இனிது விளங்கும்.

6. அட்டாக்கரம்

விஷ்ணுகாயத்திரியில் புகழப்பெற்ற நாராயணமந்திரத்தில் வாஸுதேவாய, நாராயணாய, விஷ்ணு எனும் மூன்றில் முக்கியமானது நாராயண மந்திரமாகும். அதனை ‘ஓம் நமோ நாராயணாய’ என உச்சரிப்பர். இதனை அட்டாக்கரம் என்பர். இந்த மந்திரத்தை ஜபித்தால்

சகல பாக்கியங்களும் கிடைக்கும், நாராயணரது சௌலப்பிய குணங்கள் நம்மில் பிரகாசிக்கும். இது ஒரு மங்கல நூல்போன்றது. மூன்று சரடாய் ஒரு மங்கல சூத்திரம்போல் எட்டு எழுத்துக்களால் மூன்று பதங்களாலாகியது.

எட்டு அட்சரங்கள் ஓம், ந, ம, நா, ரா, ய, ணா, ய என்பன வாகும். ஓம் (பிரணவத்தை) முதலில் உச்சரித்தும், நம: என்ற பதத்தை இரண்டாவதாகவும், நாராயணாய என்ற பதத்தை அதன் பின்னரும் உச்சரிக்கவேண்டும். பிரணவத்தோடு (ஓம்) சேர்ந்தே அட்டாக்கரம் ஆகிறபடியால், பிரணவத்தை நீக்கி உச்சரித்தல் கூடாது. பிரணவத்தை மூன்று மாத்திரை அளவு நீக்கி உச்சரிக்க வேண்டுமென்பதை,

"மூலமாகிய ஒற்றை எழுத்தை மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி
வேலை வண்ணனை மேவுதிராகில் விண்ணகத்திலு மேவலுமாமே"

என்ற பெரியாழ்வார் வாக்கினாலும் உணரலாம். 'ஓம்' என்பதின் அ + உ + ம் என்ற மூன்று எழுத்துக்களும் அடங்கியுள்ளன. இதிலுள்ள அகரம், சகலமும் நாராயணனின் உடைமை என்பதைக் குறிக்கும். உகரம் ஏவகாரப் பொருளைக் குறிக்கும். ஆத்மாக்கள் அனைவரும் பரதந்திரர் என்பதையும் உணர்த்தும். மகாரம் ஜீவாத்மாவைக் குறிக்கும். நம: என்றால் நான் சுதந்திரன் அல்லன்; பரதந்திரனே என்பதாகும். நாராயணாய என்பதை நார அயனனுக்கு அழியாத வஸ்து என்று பொருள். ர–அழியும்பொருள்; ந–இல்லை. நார = நித்தியமானவஸ்து. அயன என்றால் இருப்பிடமாயுள்ளவன் என்பது பொருள். ஆய என்றால் எல்லாக் கைங்கர்யங்களையும் செய்யும் கடமையுடையவனாயிருப்பேன் என்பது பொருள். நாராயணாய என்றால், எல்லா நித்தியவஸ்துக்களுக்கும் இருப்பிடமாயுள்ள நாராயணனுக்கு எல்லாக் கைங்கர்யங்களையும் செய்யக் கடவேனாகுக என்பது பொருளாகும். இந்த மந்திரத்தின் பிரபாவத்தைத் திருமங்கை மன்னன் பாடிய "வாடினேன் வாடி" எனும் பத்துப் பாசுரங்களிலும் காணலாம். அவற்றுள் ஒன்றை இங்கு எடுத்துக்காட்டுவோம்.

"எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
எனக்கரசு என்னுடை வாழ்நாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுத்த எம் அண்ணல்
வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள்! உய்யநான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்."

இதுகாறும் கூறிய விளக்கங்களால் அட்டாக்கரத்தின் பிரபாவம் இனிது விளங்கும்.

7. காயத்திரி மந்திரம்

காலை மாலைகளில் சந்தியாவந்தனம் செய்து முடிந்ததும், காயத்திரி மந்திரம் ஜபிக்க வேண்டும். காலையில் சூர்யோதயத்துக்கு முன்னும், மாலையில் சூர்யாஸ்தமன வேளையிலும் பிராணாயாம நியமத்தோடு காயத்திரியை ஜபிக்க வேண்டும். காயத்திரி மந்திர ஜபத்தால் பாபங்கள் அழியும்; சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் எனும் வினைகள் ஒழியும்; பிறப்பறும்; விதேககைவல்ய பதவி கிடைக்கும். காயந்தம் + த்ராயதே = காயத்திரி. காயந்தம் த்ராயதே = ஜபிப்பவனை இரட்சிப்பது என்பது இதன் பொருளாகும். பிராணனை இரட்சிப்பது எனவும் பொருள் கொள்ளலாம். இம்மந்திரத்தில் இருபத்துநான்கு எழுத்துக்கள் உண்டு. அவை, எல்லாத் தேவர்களையும் சுட்டி நிற்பதால் இம்மந்திரஜபம் எல்லாத் தேவதைகளுடைய அருளைப் பெறுவதற்கும் உரியதாயுள்ளது.

"ஓம் பூர், புவஸ்ஸுவ; தத்ஸவிதுர் வரேண்யம், பர்க்கோ தேவஸ்ய தீமஹி; தியோயோந; பிரசோதயாத்."

காயத்திரி மந்திர விளக்கம்

ஓம் என்ற பிரணவம் அ + உ + ம் எனப்பிரிந்து ஸ்திதி, இலய, சிருட்டியைக் குறிக்கிறது. இறைவனை சிருட்டி. ஸ்திதி, இலயகாரணனாக இது காட்டுகிறது, உலகின் ஆதிஅந்த நாதனாகவும் இது விளக்கிக் காட்டுகிறது. பூ :– பூமி, புவ :– ஆகாசம், ஸுவ:– தத்பரமான இடம். இந்த மூன்றும் சேர்ந்து உலகங்களைக் குறிக்கிறது, பூ:– எனும் சொல் ஆத்மாவையும் குறிக்கிறது. மூன்றும் சேர்ந்து பிராண ஆத்மாக்களை உணர்த்துகிறது.

தத்ஸவிது தேவஸ்ய அப்பிதாவான இறைவனது எல்லா விதப் பேறுகளையும், வரேண்யம் பர்க்க: = பெறத் தகுதி வாய்ந்த, ஒளியை, தீமஹி = நாங்கள் மனத்தில் தியானக்கிறோம். ய: ந: திய: பிரசோதயாத் அப்பேரொளி எங்களுடைய புத்தியை நல்லவழியில் போகும்படி பிரேரிப்பதாகுக.

25. திருவிழாத் தத்துவம்

ஆலயங்களில் பத்து அல்லது பன்னிரண்டு நாட்கள் மிகச் சிறப்பாகப் பூசைகள் நடத்தி, அங்குள்ள மூர்த்திகளின் திருவுருவங்களைப் பலவித வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து, கோயில் பிராகாரங்களிலும் வீதிகளிலும் நடத்தும் விழாவுக்குத் 'திருவிழா' என்று பெயர். இதனை 'மகோத்ஸவம்' எனவும், 'பிரமோத்ஸவ'மெனவுங் கூறுவர். மஹா – பெரிய, உத் – உயர்வான, ஸவ – சிருட்டி முதலிய காரியங்கள். உயர்ந்த சிருட்டி முதலிய ஐந்தொழில்களைக் குறிக்கும் குறி என்பதாகும். 'பிரமோத்ஸவம்' என்பதற்குப் பெரிய திருவிழா என்பது பொருள்.

கொடியேற்றம் முதல் கொடியிறக்கம் வரை உள்ள நாட்களில் எழுந்தருள் மூர்த்தியைப் பலவித வாகனங்களில் காலை மாலைகளில் பவனி வரச்செய்வர். பல்லாயிரக்கணக்கான மக்கள் விழாக்களைத் கண்டுகளிப்பர். விழாக்களின் தத்துவம் அறியாமலேயே விழாவைக் கொண்டாடி வருகின்றனர். தத்துவத்தையும் அறிந்தால் மேலும் பெருமக்கள் பெருந்திரளாகக் கூடி விழாக்கொண்டாடுவர் என்பதில் ஐயமில்லை. ஆதலின், விழாக்களின் தத்துவத்தை விளக்கத் துணிந்தோம். ஆலய அமைப்பு, திருவுருவ அமைப்பு, பூஜை முறை, திருவிழாக்கள் முதலியவனவற்றில் தத்துவங்கள் நிறைந்துள்ளன. அவற்றைப் பொதுமக்கள் அறிய வேண்டுவது மிகவும் அவசியமாகும். முற்கூறிய மூன்றையும் முன்னர் விளக்கினோம். திருவிழாக்களின் தத்துவங்களை மட்டும் இங்கு விளக்குவாம்.

எந்த ஆலயம் எந்த ஆகமத்தையொட்டி அமைக்கப் பெற்றதோ அந்த ஆகமரீதியாகவே நித்திய, நைமித்திக பூஜைகளும், திருவிழாக்களும் நடந்த வேண்டுமென்பதே ஆகம விதி, ஆகமங்கள் பலவாயிருப்பதால், திருவிழாக்கள் முதலியனவும் பலதிறமாக அமைந்துள்ளன. ஊர்கள் தோறும், கோவில்கள் தோறும், திருவிழாக்களின் வேறுபாடுகள் காண்பதற்கு இதுவே காரணம்.

திருவிழா நாட்கள்

திருவிழா நடந்த வேண்டிய நாட்களைப் பற்றியும் ஆகமங்கள் வேறு வேறாகக் கூறுகின்றன. ஒரு நாள் முதல் இருபத்தொரு நாட்கள் வரை திருவிழாக்கள் நடைபெறுகின்றன. கொடியேறி கொடியிறங்கும் வரை பத்து நாட்களுள் விழா நடத்தப்படுவனவும் உள. கொடியேற்றத்துக்கு முன்தினம் விநாயகர் விழா நடத்துவதுண்டு. திருவிழாக்களில் முக்கியமாக நடத்த வேண்டிய கிரியைகள் பதினெட்டாகும். அவை 1. வருடயாகம், 2. துவஜாரோகணம், 3. ப்ரம்ஹத்தாளம், 4. அங்குரம், 5. யாகசாலை, 6. அஸ்த்ரயாகம், 7. பலிதானம், 8. யானக்ரமம், 9. பரிவேடம், 10. நீராஜனம், 11. கௌதுகம், 12. தீர்த்த சங்க்ரஹணம், 13. சூர்ணோத்ஸவம், 14. தீர்த்தகம், 15. அவரோகணம், 16. ஸ்நபனம், 17. திருக்கலியாணம், 18. பக்தோத்ஸவம் என்பனவாம். இவற்றோடு ரதாரோஹணம், மிருகயாத்திரை, பூர்ணாகுதி, மௌனோத்ஸவம் முதலியவற்றைச் சேர்த்தும் கூறுவர். இதில் ஒவ்வொன்றையும் விரிக்கிற் பெருகும். இவை அனைத்தையும் ஆராய்ந்து பார்க்குமிடத்து சில முக்கியமான சடங்குகள் இன்றியமையாதனவாகக் காணப்படும். அவை மண் எடுத்தல், முளையிடுதல், திருவிழா நாட்களில் காலை மாலை பலவித வாகனங்களில் மூர்த்தியை எழுந்தருளச் செய்தல், யாகம் செய்தல், திருக்கலியாணம் செய்தல், தீர்த்தம்கொடுத்தல், கொடியிறக்கம், திருவூடல், சண்டேசுவர உத்ஸவ பூர்த்தி முதலியனவாம்.

திருவிழாக்களின் பொதுத் தத்துவம்

எல்லா உலகங்கட்கும் நிமித்த காரணமாகிய இறைவன் ஐந்து தொழில்களை இனிது நடத்தி வருகிறான். அவை, சிருட்டி (உண்டாக்குதல்) ஸ்திதி (காப்பாற்றுதல்) சம்ஹாரம் (அழித்தல்) திரோபவம் (மறைத்தல்) அனுக்கிரகம் (அருளல்) என்பனவாம். இந்த ஐந்தொழில்களையும் பத்துநாள் திருவிழாக்களில் அமைத்துள்ளனர்.

மண் எடுத்தல், முளையிடுதல், கொடியேற்றம் முதலியவைகள் சிருட்டி அல்லது படைத்தல் தொழிலை உணர்த்துகின்றன. வாகன உத்ஸவங்கள், யாகம், பலியிடுதல் முதலியன ஸ்திதி அல்லது காத்தல் தொழிலைக் குறிக்கும். தேர்த்திருவிழா, பரிவேட்டை, சாந்தணிதல் முதலியன ஸம்ஹாரம் அல்லது அழித்தல் தொழிலை உணர்த்துகின்றன. சத்தமிடாமல் மௌனமாக நடத்தும் திருவிழா திரோபவத்தை (மறைத்தலை)க் குறிக்கும். நடராஜர் உத்ஸவம், மட்டையடி, திருவூடல் முதலியன அனுக்கிரகத்தை (அருளை) க் குறிக்கும். பத்து நாள் திருவிழாக்களில் முதலைந்து நாள் விருத்திக்கிரம ஐந்தொழில்கள்

நடக்கின்றன என்றும், பிற்பகுதி ஐந்து நாள் இலயக்கிரம ஐந்தொழில்கள் நடைபெறுகின்றன என்றும் கூறப்படுகிறது. இதற்குத்தக்கபடி வாகனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல கோவில்களில் பல ஆகமங்களை ஒட்டி வாகனங்களைப் பலவிதமாக எழுந்தருளப் பண்ணிவருவதால் இன்ன திருவிழாவில் இன்ன வாகனத்தை எழுந்தருளப் பண்ணவேண்டுமென்று வரையறை செய்து கூற வழியில்லாமல் இருக்கிறது.

துவஜாரோகணம் (கொடியேற்றம்)

முதல் திருவிழா அன்று எல்லாக் கோவில்களிலும் கொடியேறுகின்றது. அந்தந்த ஆலயத்தில் உள்ள மூர்த்தியின் வாகனத்தின் உருவத்தை ஒரு கொடியில் எழுதி அதற்குப் பூஜைகள் செய்து கொடிமரத்தின் உச்சியில் ஏற்றுவதாகும். உமாபதி சிவாச்சாரியார் தாம் பாடிய 'கொடிக்கவியில்' கொடியேற்று விழாத் தத்துவத்தை விளக்கியுள்ளார். தத்துவங்கள் தோன்று முறையினைக் கொடியேற்றுவிழா விளக்குகின்றது. மக்கள் நன்றாக வாழவேண்டுமென்று வேண்டப்படுகின்றது. சிவாலயங்களில் ஏற்றும் கொடியில் உள்ள ரிஷபம் தர்ம உருவமாகவும், ஆத்மாவின் உருவமாகவும் மதிக்கப்படுகிறது. ஆத்மாக்களையும், தர்மத்தையும் கீழ்நிலையிலிருந்து உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் இறைவனின் கருணை இத்திருவிழாவில் விளக்கப்படுகிறது. பொதுவகையில் உயிர்வர்க்கங்களுக்கு அருள்புரியும் இறைவன், சிறப்புவகையில் அருள்புரிய இப்பத்து நாளும் ஆயத்தமாகக் காத்திருக்கிறான் என்பதை இக்கொடி உணர்த்துகிறது. கொடியேற்றம் முதல் தீர்த்தவாரி வரை யாகசாலையில் யாகம் நடைபெறும். இது ஸ்திதி, என்ற காப்பாற்றுதலைக் குறிக்கிறது.

முதல் நாள் இரவு மரத்தடியில் சிவபெருமான் வீற்றிருப்பதாக விளக்கும் விருட்சவாகனம் எழுந்தருளும். இதை 'விருத்திக்கிரம சிருட்டிக் கோலம்' என்பர். மரத்தின் கிளைகளும், இலைகளும் தத்துவங்களாகவும் உயிர்வர்க்கங்களாகவும் உள்ளன. இவற்றின் அடியில் இறைவன் இருந்து சிருட்டிக்கெல்லாம் வேர்போல் தாம் இருந்தருளுவதை இது உணர்த்துகின்றது.

இரண்டாவது நாள் காலை சூரியப் பிரபை, மாலை சந்திரப் பிரபை, இரு விருத்திக்கிரமஸ்திதிக் கோலம். சூர்யனால் உலகத்திற்கு வெப்பம், மழை, அதன்மூலமாக தனதான்யவிருத்திகள் உண்டாகிறது. அத்தகைய சூரியனைக் கொண்டு உலகத்தைக் காப்பாற்றும் கருணையை இது

குறிக்கிறது. சந்திரன் தனது தண்ணொளியால் உயிர்களுக்கு இன்பத்தை அளிக்கிறான். அதைப்போல சந்திரப் பிரபையைக் கொண்டு உலக வெப்பத்தால் தவிக்கும் உயிர்களுக்கு இறைவன் சாந்தி உண்டுபண்ணுகின்றான் என்பதை இது விளக்குகிறது.

மூன்றாம் நாள் காலையில் அதிகார நந்தி, மாலையில் பூதவாகனம். இவை விருத்திக்கிரம சங்காரக் கோலங்கள் என்பர். அதிகார நந்தி மான். மழு, சதுர்ப்புஜம், முக்கண் முதலிய குறிகளோடு சாரூப்பிய பதவியைப் பெற்றவர். இவர் விஞ்ஞான கலர் ஏனும் ஆன்மாக்களுள் சிறந்தவர் ஆவர். கைலையில் சிவ சந்நிதானத்தில் அதிகாரம் செலுத்துபவர். ஆதலால், அதிகார நந்தி எனப் பெயர்பெற்றார். இவரது அதிகாரத்தை

"வந்திறை யடியில்தாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள்சிந்த வேத்திரப் படையால்தாக்கி"

எனும் திருவிளையாடற் புராணச் செய்யுளால் அறியலாம்.

நான்காம் நாள் நாகவாகனம், நாகம், படத்தையும் நஞ்சையும் மாணிக்கத்தையும் மறைத்துவைத்திருந்து வேண்டும்பொழுது வெளிப்படுத்தும். தானும் மறைந்திருந்து வேண்டும் பொழுது வெளிவரும். ஆதலால், இது மறைத்தல் தொழிலாகிய திரோபாவத்தைக் குறிக்கிறது எனலாம். குண்டலினி சக்தி சுழுமுனைநாடி முதலியவற்றோடு நாகத்தை ஒப்பிடலாம். ஐந்தாந்திருநாள் விருஷபவாகனம். விருஷபவாகன சேவை மிகவும் முக்கியமானது. அடியார்களுக்கு ஆண்டவன் அருள் புரிய விருஷபவாகனத்தில் எழுந்தருளிவருவதை புராணாதிகளால் நன்கறியலாம். அருள்பெற்ற ஆன்மா விருஷபமாகும். அதன் வெள்ளைநிறம் அதனிடத்து எவ்வித மாசும் இல்லை, என்பதை உணர்த்தும்.

தர்மம் என்ற அறத்தையே நான்கு கால்களாகக் கொண்டுள்ளது. சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கம் என்ற நான்கறங்களும் நான்கு கால்களாய் அமைந்துள்ளன. மாசற்ற அறவடிவமான ஆன்மாக்களிடத்து இறைவன் வந்து அமர்வான் என்பதை இது குறிக்கின்றது. இது அனுக்கிரகக் கோலம். இந்த ஐந்து திருவிழாக்களும் முறையே இறைவன்து ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் உணர்த்துகின்றன எனக் கூறலாம்.

ஆறாந் திருவிழாவில் யானைவாகனத்தின் மீது இறைவன் ஏறி எழுந்தருளுகிறான். இது இலயக்கிரம சிருட்டிக் கோலமாகும். இலயக்கிரமம் என்பதற்கு ஒடுங்கும் முறை என்பது பொருள். உலகப்பொருள்கள் அனைத்தும் இறைவனிடம் ஒடுங்கி ஒரே பிண்டமான யானையின் உடம்புபோல் பருமனாய்க் கிடந்து ஒடுங்குதலாகும். அதிலிருந்து திரும்பவும் தோன்றுவது இலயத்தின் பின் சிருட்டி தொடங்குவதைக் குறிக்கும். யானையின் நான்கு பாதங்கள் பிண்டாகார உற்பவஜடத்வம், சுவாசசூக்குமம், வாஜிஜீவத்வம், பிராணாயாமம் இவைகளைக் குறிக்கின்றது. இவை யானையைப்போல ஆத்மஞானத்தில் தோன்றி துதிக்கையை ஒத்த சுஷும்னையில் நிலைநிற்கும். யானையின் மேல் வைக்கும் அம்பாரி முதலியன வெளித்தோற்ற அண்டாகாரமாகும். உற்பவ, சூக்கும, ஜீவ, மாயாஞானங்கள் ஆத்ம ஞானத்திலும், அவை ஈசுவர சைதன்யத்தும், ஈசுவர சைதன்யம், பிரம சைதன்யத்திலும் இலயிக்கிறது என்பதைக் குறிக்கிறது.

ஏழாம் நாள் இராவணனது உடம்பின் மேலுள்ள கைலாச பர்வதத்தில் இறைவன் எழுந்தருளுகிறான். இவ்வாகனம் கைலாச பர்வதவாகனம் எனக் கூறப்படும். இராவணன் ஆணவ மலம் முதிர்ந்த ஜீவாத்மா. அகங்காரத்தால் எதுவும் செய்யக் கூசாதவன். அவன் தனது திமிரால் கைலாச பர்வத்தைக் தூக்கி எடுக்க, சிவபெருமான் கால்விரலை ஊன்ற, அவன் அலறி கை நரம்பால் வீணை உண்டாக்கி சாமகானம் பாடினான். இறைவன் மகிழ்ந்து அவனுக்கு அருள்புரிந்தார். இது ஸ்திதி அல்லது காப்பாற்றுதலைக் குறிக்கும். இதனை நாவுக்கரசர்,

"எடுத்தனன் எழிற்கயிலை இலங்கையர் மன்னன் தன்னை
அடுத்தொரு விரலால் ஊன்ற அலறிப்போய் அவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைநரம்பால் வேத கீதங்கள் பாடக்
கொடுத்தனர் கொற்றவாழ்நாள் குறுக்கை வீரட்டனாரே"

எனப் பாடியுள்ளார்.

இதிலிருந்து இறைவனுக்குத் தீங்கு செய்தவர்களும் அடங்கி நின்று வழிபடுவாராயின் அவனுக்கும் இறைவன் அருள் புரிவான் என்பதும், அவனது பெருந்தகைமையும் நன்கு விளக்குகின்றது. ஏழாந்திரு நாளன்று சில இடங்களில் தேர்த்திருவிழா நடைபெறுவதும் உண்டு.

எட்டாந்திருவிழா அசுவ (குதிரை) வாகன ஆரோகணம். இது ஸம்ஹாரக் கோலமாகும். தர்ம, அர்த்த, காம, மோட்சங்களாகிய (அறம்,

பொருள், இன்பம், வீடு) எனும் நான்கு கால்களையும், கிரியை, ஞானம் எனும் இரண்டு காதுகளையும், பரஞானம், அபரஞானம் எனும் இரண்டு கண்களையும், விதியாகிய முகத்தையும், நிடேதமாகிய வாலையும், ஆகமங்கள் என்கிற ஆபரணங்களையும், மந்திரங்கள் எனும் பாதஸரத்தையும், கடிவாளம் எனும் பிரணவத்தையும், அண்ட கோடிகளாகிய முதுகையும், உபநிடதங்காளகிய சேணத்தையும் கொண்ட வேதக்குதிரையில் இறைவன் சவாரி செய்கிறான் என்பதனையும் உணர்த்துகிறது. எட்டாந்திருவிழா மாலையில் பிட்சாடனத் திருக்கோலத் திருவிழா நடைபெறும்.

தாருகாவனத்து ரிஷிகளும், ரிஷிபத்தினிகளும் ஆணவ மலத்தால் தாங்கள் சுதந்திரர்களென எண்ணிக் கடவுளை மறந்தனர். அவர்கள் பரதந்திரர்களென உணர்த்துதற் பொருட்டு இறைவன் பிட்சாடன மூர்த்தியாய்ச் செல்ல, ரிஷிபத்தினிகள் அவரழகில் ஈடுபட்டனர். விஷ்ணு மோகினியாச் செல்ல அவ்வழகில் ரிஷிகள் ஈடுபட்டனர். இவ்விரண்டு செயல்களாலும் ரிஷிகளும், அவர் பத்தினிமார்களும் பரதந்திரர்களேயென அவர்களை உணரச் செய்து பரமன் மறைந்தருளினான். இவ்வநுக்ரக பராக்ரமக் கோலமே பிட்சாடனக் கோலமாகும். ஒன்பதாந்திருநாள் தேர்த் திருவிழாவாகும். தேரின் அமைப்பு அண்ட பிண்டத்திற்குச் சமானம். விசுவவிராட் சொரூபமே எட்டு அடுக்குகளாகும். உச்சியிலிருக்கும் கும்பம் சோடசாந்தம்; அதற்கடுத்த கீழடுக்கு துவாதசாந்தம்; அதற்கடுத்தது மஸ்தக ஆதிஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக மத்தியஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக அந்தஸ்தனம்; அதற்கடுத்தது புருவமத்தியஸ்தானம்; நடுவில் தாங்கும் குத்துக்கால்கள் தத்துவக்கால்கள்; முன் மூன்று துறைகள் மூன்று கண்கள். பின்னவை, சிகையும் இட, வலக்காதுகளுமாகும்; இறைவன் எழுந்தருளியிருக்கும் கேடய பீடம் முப்பாழ்; குதிரைகள் சூரிய, சந்திரகலைகள்; சாரதி அக்கினிக்கலை இவை நாசியாகும்; அடுத்த அடுக்கு கண்டஸ்தானம்; அதை அடுத்த அடுக்கு இருதய ஸ்தானம்; அதை அடுத்த அடுக்கு நாபி; அதற்கு அடுத்த அடுக்கு குண்டலி ஸ்தானம்; பத்துச் சக்கரங்களும் தசவாயுக்கள். இறைவன் இதற்குக்கர்த்தா தான்ஒருவனே என்றுணர்த்தி இவ்வாறமைந்த பிண்டத்துவ சரீரமாகிய இரதத்தில் தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி, அசைவற்ற மனத்தை உந்தி, குண்டலியிலிருந்து நாபிக்கும், அதிலிருந்து கண்டத்திற்கும், அதிலிருந்து வாய்க்கும் ஏற்ற இலயப்படுத்தி, முறையே இரதக்குதிரையாம் நாசிக்கும் அங்கிருந்து கண்வழியாகவும் நடுவழியாகவும் மேல்நோக்கி ஆறாம் அடுக்காகிய புருவமத்திக்கும் ஏற்றி இலயப்பட்டு சும்மா இருந்தபடி இருக்கும் நித்திய சுகியாய் இருந்திடல் வேண்டும் என்ற இலயக்கிரமத்தைக்

காட்டுகிறது. மேலும் தேர் திரிபுராதிகளைச் சிவன் சிரித்து எரித்து ஆன்ம கோடிகளைக் காப்பாற்றிய ஸ்திதித் தொழிலுக்கும் அறிகுறியாகிறது.

பத்தாந்திருநாள் தீர்த்தவாரி. காலையில் நடராஜர் திருவீதியில் உலாவருவர். இது பஞ்சகிருத்தியங்களை உணர்த்தும். இவர் சபையை விட்டுப் புறப்படுதல் சிருட்டியையும், அபிடேகம் ஸ்திதியையும், கருஞ் சாந்தணிதல், அலங்கார தீபாராதனை முதலியன சங்காரத்தையும் வெள்ளைச் சாந்துப்பொடி திரோபவத்தையும், வீதிவலம் வந்து மட்டையடி தரிசனம் அநுக்கிரகத்தையும் குறிக்கிறது. பத்து நாட்களில் இரண்டு பகுதிகளாக நடத்தப்படும் ஐந்தொழில்களையும் பத்தாந் திருநாளில் ஒரே காலத்தில், ஒரே நாளில் தொகுத்துக் காட்டப்படுகிறது. இதன் பின்னர் தீர்த்தவாரி நடைபெறும். பொங்கித்ததும்பிப் பூர்ணமாய் ஏக உருவாய்க்கிடக்கும் இறையின்ப வாரியில் ஆன்மாக்கள் முற்றும் ஆழ்ந்து ஆனந்திப்பதைத் தீர்த்தவாரி குறிக்கின்றது. இதனை மகாருத்ரபாத தீர்த்தம் என்பர். மேற்கூறிய திருவிழாக்களையன்றி வேறு பல திருவிழாக்களையும் மேற்கூறிய திருவிழாக்களோடு இணைத்தும், தனித்தும் நடத்தி வருகிறார்கள்.

26. இதரத் திருவிழாக்கள்

1. திருக்கலியாணத் திருவிழா

இத்திருவிழா ஆலயங்களில் ஆறாந்திருநாள் அல்லது ஏழாந் திருநாளிலும் வேறு சில இடங்களில் தனித்தும் நடைபெற்று வருகின்றது. மனிதர்கள் ஆணும் பெண்ணுமாக மணந்து கொள்வது கலியாணமாகும். இறைவனும் இறைவியும் புரிந்து கொள்ளும் கலியாணம் திருக்கலியாணம் எனப்படும். இறைவன் எடுக்குந் திருமேனிகள் போகி, யோகி, வேகி என மூவகைப்படும். போகியாயிருந்து உயிர்களுக்குப் போகத்தைப் புரிகின்றான். யோகியாயிருந்து யோக முத்தியை அருளுகின்றான். வேகியா (கோரவடிவா)யிருந்து உயிர்களின் வினையை வீட்டுகின்றான். இதனைச் சிவஞானசித்தியார்,

"போகியா யிருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியாய் யோகமுத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியானாற் போற்செய்த வினையினை வீட்டல் ஓரார்
ஊகியா மூடரெல்லாம் உம்பரில் ஒருவன் என்பர்"

எனக் கூறுகின்றது.

எறும்பு முதல் யானை ஈறாக உள்ள உயிர்வர்க்கங்கள் அனைத்தும் போகந்துய்த்து இனவிருத்தி செய்துவருவதை நாம் அறிகிறோம். மனிதர்களும் போகந்துய்த்து மக்கட்பேறு பெற்று வாழ்ந்து வருகின்றனர். தேவர்கள் தேவமாதர்களோடு காட்சியால் மாத்திரம் போகந்துய்க்கிறார்களேயன்றி மனிதர்களைப்போல உடலுறு புணர்ச்சியால் இன்பந்துய்க்கவில்லை. இதனை "கடவுளர் புணர்ச்சி யென்னக் காட்சியில் இன்பந்துய்த்து" எனும் கந்தபுராணப் பாடலால் அறியலாம். தேவர்கள் புணர்ச்சியே இத்தகையதாயின் தேவாதி தேவனாகிய இறைவனது திருக்கலியாணம் எத்தகையது என்பதை இயம்புவதற்கு இயலுமோ? உலகிலுள்ள எண்பத்து நான்கு இலட்சம் ஜீவ பேதங்களுக்கும் உடம்பினை அளித்து அவை போகித்து சந்ததி விருத்தி செய்யச் செய்கிறான். சிவதத்துவத்திலிருந்து சத்திதத்துவம் தோன்றியும் சத்திதத்துவத்திலிருந்து சாதாக்கியம் தோன்றியும், இருவரும் புணர்ந்து உலகுயிர் அனைத்தும் ஈன்றாலும் சிவபிரான் பிரமசாரியாகும். சக்தி கன்னியாவாள். பரமஞானிகள் இதன் உண்மையைத் தெரிந்து கொள்வார்கள். இதனைச் சிவஞானசித்தியாரில்,

"சிவம் சக்தி தன்னையீன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்து இருவரும் புணர்ந்து இங்கு உலகுயிர்எல்லாம் ஈன்றும்
பவன் பிரமசாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கு இத்தன்மைதான் தெரியு மன்றே"

எனக் கூறியிருக்கிறது.

நமது தாய் தந்தையார் திருமணம் செய்துகொண்டு போகியாய் வாழாமற் போனால் மக்களாகிய நாம் எவ்வாறு பிறந்திருக்கக் கூடும்? நமது பாட்டனும் பாட்டியும் அவ்வாறே வாழாமற் போனால் நமது பெற்றோர் எவ்வாறு பிறந்திருப்பர்? பல தலைமுறைகளுக்கு முற்பட்ட மூதாதையர்கள் முதற்கொண்டு வழிவழியாக போகியராய் வாழ்ந்ததனால் அன்றே நாமும் போகியாய் வாழ முடிந்தது.

இறைவன் போகவடிவில் வாழாமற் போனால் உலகத்து உயிர்கள் அனைத்தும் போகியாய் வாழ இயலாது. ஆதலின், இறைவன் திருக்கலியாணம் புரிவது நம் பொருட்டேயாகும். நமது பெற்றோர்களது திருமணத்தை நம்மால் பார்க்க முடியாது. ஆயினும் அவர்களது சட்டிஅப்தபூர்த்தி விழாவில் சந்ததிகள் அனைவரும் அந்தத் திருமணத்தைக் கண்டுகளிக்கின்றனர். அதுபோல, இறைவனது திருமணத்தையும் நாம் கண்டதில்லை. ஆயினும், ஆண்டுக்கு ஒருமுறை

ஆலயங்களில் இறைவனுக்குத் திருக்கலியாணம் நடத்தி ஆர்வத்தோடு கண்டுகளிக்கின்றோம். சட்டிஅப்தபூர்த்தி விழாவை சில சற்புத்திரர்கள் நடத்திக் களிப்பர்; பெற்றோர்களுடைய ஆசியைப் பெற்றுக்கொள்வர். அதைப்போல அடியார்கள் இறைவனது திருக்கலியாணத்தைச் சிறப்புற நடத்தி. அவரது அநுக்கிரகத்தைப் பெற்று மகிழ்கின்றனர்.

இறைவனோ நித்தியகலியாணசுந்தரர். இறைவியோ நித்திய கலியாணசுந்தரி. நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஆதலின், ஆண்டுக்கு ஒரு முறை ஆலயங்களில் கலியாணம் நடத்துகிறோம். தேவி மனிதப்பெண போன்றவள் அல்லள்; இறைவனிடமிருந்து என்றும் நீங்காது கலந்துறைகின்றாள். தீயும் சூடும் போலவும், மணியும் ஒளியும் போலவும், பாலும் சுவையும் போலவும் அவள் பரமனோடு உறைகின்றாள். அர்த்தநாரீசுவர வடிவத்தில் இறைவனது ஒரு பகுதி உடம்பைத் தனக்காகவே பெற்றுக்கொண்ட பெருமாட்டியாவள். அவளது திருமணத்தை நமது திருமணம் போல் நினைத்தல் கூடாது. நமது தாயோ நமது சகோதரர்களாகிய சிலரைப் பெற்றாள். ஆனால், பராசக்தியோ உலகன்னையாகி உயிர்வர்க்கங்கள் அனைத்தையும் ஈன்றாள். பராசக்தியோ தட்சன் மகளாய் தாட்சாயணி எனும் நாமத்தோடும், பர்வதராஜன் மகளாய் பார்வதி எனும் பெயரோடும், மலயத்துவச பாண்டியன் மகளாய் தடாதகைப் பிராட்டியெனும் பெயரோடும் தோன்றித் தவமாற்றி அப்பரமனையே பதியாக அடைந்தாள். அம்மையாற்றிய அருந்தவத்துக்கு இறைவன் மகிழ்ந்து காட்சிகொடுத்து அவளைத் திருமணம் புரிந்துகொண்டமையை இத்திருக்கலியாணத் திருவிழா நினைவுறுத்துகிறது. தற்போதும் கன்னியாகுமாரியில் பகவதியம்மை, கடுந்தவம் புரிவதைக் கண்கூடாகவும், பாரதியாரின்,

"நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவம் செய்யும் குமரி"

எனும் வாக்கினாலும் அறியலாம்.

உலகில் உள்ள ஆணோ, பெண்ணோ யாவராயினும் தவமாற்றுவராயின் இறைவன் அவர்கள் முன் தோன்றி காட்சிகொடுத்து அருள்புரிவான் என்பதே இத்திருக்கலியாண விழாவின் தத்துவமாகும். சலனமின்றி அசைவற்று விளங்கும் சந்திரன், அலையால் அலையும் நீரில் அசைவதாகத் தோன்றுவதைப் போல இறைவனது சிற்சில விளையாடல்கள் நமது கண்ணுக்கு நமது அறிவுக்கு தக்கவாறு மாறுபடாகத் தோன்றும். பரமசிவன் புரிந்துகொண்ட பார்வதி திருமணம்,

மீனாட்சி திருமணம் போலவே, அருள்மிகு நாராயணர் புரிந்துகொண்ட ஆண்டாள் கலியாணமும், அருள்மிகு சுப்பிரமணியர் புரிந்துகொண்ட வள்ளியம்மை, தெய்வானை கலியாணங்களும் திருக்கலியாணம் என்பதில் அடங்கும்.

பள்ளி அறையில் மணமக்களைப் புகவிடுவதுபோல இறைவினையும் இறைவியையும் கோவில் பள்ளி அறைக்கு ஆடம்பரத்தோடு எழுந்தருளப் பண்ணுவதும் மேற்கூறிய போகநிலையை உணர்த்துவதற்கேயாம். இறைவனது திருவடியைப் பள்ளிஅறைக்குப் பல்லக்கில் எழுந்தருளச் செய்கிறார்களே தவிர இறைவனுடைய திருவுருவத்தைப் பெரும்பாலும் பள்ளியறைக்குக் கொண்டு செல்வதில்லை.

காலை முதல் இரவு வரை இறைவனையும் இறைவியையும் பிரித்து வைத்து வணங்கி, இறுதியில் அவர்களைச் சேர்த்து வைத்துப் பூசித்துப் பள்ளியறையில் வழிபாடாற்றுகின்றனர். இவ்வழிபாடு, அருளையன்றி சிவமும், சிவத்தை அன்றி அருளும் இல்லை என்பதனை உணர்த்துகின்றது. பள்ளியறையில் 'பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையிருந்த" கோலத்தை வழிபடின்,

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை"

2. விநாயக சதுர்த்தி விழா

விநாயகர் தனக்கு ஒரு நாயகர் இல்லாதவர். ஒப்பற்ற ஓங்காரப் பிரணவ சொரூபியாகி விநாயகருக்கு ஆவணி மாதம் அமாவாசை கழிந்த நான்காம்நாள் சதுர்த்தியன்று ஆண்டுக்கொருமுறை விழாக் கொண்டாடி வருகின்றோம். இது விநாயக சதுர்த்திவிழா என்று கூறப்படும். இவ்விழாவை எல்லா ஆலயங்களிலும், ஆலயமில்லாத இடங்களிலும், வீடுகளிலும் மக்கள் நடத்தி மகிழ்கின்றனர். ஆலயமில்லாத இடங்களில் தற்காலிகமாக மஞ்சள், சந்தனம், கோமயம் (சாணம்), களிமண் முதலியவற்றால் விநாயகர் உருவம்செய்து வழிபட்டு வருவதும் உண்டு. இவற்றை வழிபாடு முடிந்தபின் நீரில் கரைத்து விடுவர்.

விநாயகர் ஆதிமூலப்பொருள். அவரே ஓங்காரத்தின் வரிவடிவம். இறைவனிடத்திலிருந்து முதற்கண் தோன்றிய ஒலியே ஓங்காரமாகும். ஆதலின் அவரை அனைவரும் வழிபட்டு இடர்களைந்து

இன்புறுகின்றனர். சிவபெருமானை வழிபடுவோரது இடர் களையவே அவரை இறைவன் தோற்றுவித்தனன் என்பர்.

முன் ஒருகாலத்தில் கஜமுகாசுரன் எனும் அசுரன் ஒருவன் தோன்றினான். அவன் தன்னை மனிதர்களாலும் விலங்குகளாலும் ஆயுதங்களாலும் யாரும் கொல்லமுடியாதபடி வரம்பெற்றான், அவ்வரபலத்தால் நல்லோர்கள் பலரை நலிவுறச் செய்து வாழலாயினன். ஆதலின், அவனைக்கொன்று அமரர் இடர்களைந்து அருள இறைவன் திருவுளம்பற்றினான். ஆவணி மாத சதுர்த்தியன்று விநாயகரை யானை முகத்தோடும் மனித உடலோடும் தோற்றுவித்து அசுரனைக் கொல்லும்படி அனுப்பி வைத்தார். விநாயகர் தனது கொம்புகளில் ஒன்றை ஒடித்து அதனால் அவனைக் கொன்றார். அவன் ஒரு பெருச்சாளியாய் வந்து எதிர்க்க, இவர் அதன் மீது ஏறி இருந்து அதனை வாகனமாய்க் கொண்டு நடத்தினார். தங்களுக்கு நேர்ந்த சங்கடங்கள் அகன்றதால் சதுர்த்தி அன்று தேவர்களும் மற்றுள்ளோர்களும் அவரை வழிபட்டு கஜமுகாசுரனுக்குத் தாங்கள் செய்த மரியாதைகளாகிய தலையில் குட்டிக்கொள்ளுதல், கன்னத்தில் அறைந்துகொள்ளுதல், தோப்புக்கரணம் போடுதல் முதலியவற்றை விநாயகருக்குச் செய்யத்தலைப்பட்டனர்.

ஒரு முறை நாரதர் ஒரு மாங்கனியை சிவபெருமானுக்குச் சமர்ப்பித்தார். சிவபெருமான் தன் மக்களில் யாருக்கு இதனை அளிப்பது எனப் பிரமதேவரைக் கேட்டார். பிரமதேவர் முருகனுக்கு அளிக்கலாம் என்று மொழிய, அதனைக் கேட்ட விநாயகர் வெகுண்டார். சந்திரன் அதனைக் கண்டு சிரிக்க, விநாயகர் "பெரியோர் முன்னிலையில் சிரித்துப் பரிகசித்த உனது ஒளி உலகில் பரவாதிருக்கக்கடவது" எனச் சபித்தார். சாபநீக்கம் செய்தருள வேண்டுமென்று அங்கிருந்த அனைவரும் விநாயகரை வேண்ட, "ஆவணி சதுர்த்தி அன்று சந்திரனைப் பாராமல் தன்னைச் சிறப்பாகப் பூசிக்கின்றவர்களுக்குத் தனது அருளைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், மற்றை நாட்களில் சந்திரனது ஒளியை அனைவரும் அனுபவிக்கலாம்" எனவும் கூறியருளினார்.

இவ்விரு வரலாறுகளாலும் விநாயக சதுர்த்தி விழாவின் விளக்கம் கண்டோம். அன்றியும், ஆவணி மாத வளர்பிறை நான்காம் நாள் சந்திரனைப் பார்த்துக் களிப்பது உடம்புக்குப் பலவித தீமைகளை விளைக்குமெனவும் அன்று அச்சந்திரன் ஒளி தம்மைத் தாக்காதிருக்க இடர் களையும் விநாயகரை இறைஞ்சி வேண்டுதல் இன்றியமையாதது எனவும் நமது பெரியோர் கண்டனர்.

3. நவராத்திரி விழா

நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவு என்பது பொருள். புரட்டாசி மாதத்தில் அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்கள் இரவில் பராசக்தியை பலவடிவாகப் பூசித்து விழா நடத்தி வருகின்றனர். முதன் மூன்று நாட்களில் பார்வதி தேவியையும், நடு மூன்று நாட்களில் இலட்சுமி தேவியையும், இறுதி மூன்று நாட்களில் சரஸ்வதி தேவியையும் முறையே பூஜித்து, பத்தாம் நாள் விஜயதசமி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். வடநாட்டிலும், தென்னாட்டிலும் உள்ள எல்லா ஆலயங்களிலும் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. தசராத்திரி அல்லது பத்து இரவுகள் விழா நடந்து வருவதால் இதனை தசரா எனச் சிலர் கூறுகின்றனர்.

முன்னொரு காலத்தில் மகிடாசுரன் என்ற ஓர் அரக்கன் பராசக்தியின் அருளால் சத்துருவின் பலத்தை அருந்தும் வலிமையையும், பல சாம்ராஜ்யங்களை அடக்கி ஆளும் சக்தியையும் பெற்று, நல்லோர்கள் பலருக்கு நலிவுகள் பல செய்துவந்தான். அதனைப் பொறுக்க முடியாத தேவர்கள், நாரத முனிவரின் உபதேசத்தால் பார்வதி தேவியை நோக்கித் தவமாற்றினர். இவர்களின் பாதுகாப்பின் பொருட்டுச் சக்தியின் அருளால் ஒரு மாயைக் கோட்டை தோன்றியது. அதனுள்ளே எவருக்கும் புகமுடியாது. அசுரன் இதை அறிந்து தேவர்களைக் கொல்லக் கோட்டை வாயிலைக் குறுகினான். கோட்டையை உடைக்கவோ, கோட்டையின் உள் புகவோ முடியாது போய்விட்டான். தேவர்கள் இக்கோட்டையை அசுரனே அமைத்தனன் என நினைத்து வருந்தினர். பின் தேவியை நோக்கித் தவம்புரிய, தவச்சாலையில் உள்ள யாககுண்டத்தில் தேவி லலிதையெனும் காமேசுவரியாகத் தோன்றித் தேவர்களது இடுக்கண்களை அகற்றுவதாகக் கூறி அருள்புரிந்தாள். அந்த லலிதையை காமேசுவரராகிய பரமேசுவரன் திருமணம் செய்து கொண்டார். அவருடைய அனுமதியோடு அவள் அஸ்த்ரம் முதலியன பெற்றுப் போருக்குப் புறப்பட்டாள். அசுரனது தம்பியர் விசுக்ரன், விடங்கன் என்பவர்கள் வந்து எதிர்த்தனர். தேவி தன்னிடத்தில் தோன்றிய துர்கையை அனுப்ப அவள் அவர்கள் இருவரையும் விழுங்கினள் அதன் பின் லலிதாதேவி எதிர்த்த மகிடாசுரனை சங்கரித்துத் தேவர்களது இடுக்கண்களை அகற்றினாள். இவ்வாறு நிகழ்ச்சியே நவராத்திரி ஆகுமெனத் தேவிபாகவதம் கூறுகின்றது.

முதல் மூன்று நாள் மலைமகள் அல்லது பார்வதி ஆராதனை நடைபெறும். பார்வதி அருள் வடிவம், "அருளது சத்தியாகும் அரன்

தனக்கு", அவள் ஞானசொரூபி. பச்சைநிற வடிவினள். கண்ணோட்டம், ஈகை, அன்பு, ஒப்புரவு முதலியவை அமைந்தவள். அவள் ஞான வடிவினள். "சத்திதன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்". இவளது நிறம் பச்சை அல்லது நீலமாகும். இது வளமையையும் செழுமையையும் குறிக்கும். அவளது அருளும் அனுக்கிரகமும் பெறும் குறிக்கோளுடனேயே நவராத்திரியில் முதல் மூன்று நாளும் பராசக்தியைப் பூஜிக்கின்றோம். இலட்சுமி சிவப்பு அல்லது பொன்னிற வடிவினள். இதனை, "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்ற பேயாழ்வார் வாக்கால் அறியலாம். சிவப்பு நிறம் அழகு, செம்மை, தியாகம் முதலியவற்றைக் குறிக்கும். செல்வத்துக்கு இலட்சுமி அதிதேவதை. இவ்வுலக வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது. "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை.'' இம்மைக்கும், அம்மைக்கும் பொருள் இன்றியமையாதது. இதனாலேயே இறைவனை "திருவேயென் செல்வமே" எனவும், ".....ஒண்பொருளும் நீ", "இப்பொன் நீ'', "இம்மணி நீ'', "இம்முத்து நீ", எனவும் ஆன்றோர் கூறினர். ஆதலால், பொருள் வளர்ச்சி நோக்குடன் விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள் அனைவரும் நவராத்திரியில் நடுநின்ற மூன்று நாட்களில் இலட்சுமி தேவியைப் பூஜிக்கின்றனர். இறுதி மூன்று நாட்களில் கலைமகளைப் பூஜிக்கின்றனர். இவள் "வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்." வெள்ளை நிறம் மாசின்மை, வாய்மை, தூய்மை முதலிய அருங்குணங்களைக் குறிக்கிறது. இவள் கலைகள் அனைத்துக்கும் அதிதேவதையாவள். இதனை, "ஆயகலைகள் அறுபத்து நான்கினையும், ஏய உணர்விக்கும் என்னம்மை" என்பதால் அறியலாம். அவள் படிகம் போன்ற நிறத்தினள்; பவளச் செவ்வாயினள். இவை அனைத்தும் பரிசுத்தத்தின் அறிகுறியாகும்.

நமது முன்னோர்கள் கலைகளைக் கடவுள்தன்மையுடையனவாகக் கருதி வழிபட்டு வந்தனர். தாங்கள் பெற்ற கலைகளின் திறத்தை நவராத்திரி விழாவில் அரசர், அமைச்சர், அறிஞர், செல்வந்தர்கள் கூடிய அவைக்களத்தில் பல்லோரும் வியக்கக்காட்டிப் பரிசு பெற்றுவந்தனர். ஞானவளர்ச்சியை விரும்புவோர் கலைமகள் விழாவைக் கொண்டாடுவர். புதிய கலைகளைப் பத்தாம் நாள் விஜயதசமியன்று தொடங்கிப் பயில ஆரம்பிப்பர். பள்ளிக்கு வைத்தல் முதல் பரமயோக ஞானக்கலைகள் வரை பயிலத் தொடங்குவது விஜயதசமி நாளேயாகும்.

விஜயதசமி விழாவில் அரசர்கள் தங்கள் நால்வகைப் படையுடனும், நானில மக்களுடனும் போர்க்கோலம் பூண்டு நகர்புறம் புறப்பட்டுச் சென்று அம்பு எய்து, வெற்றி முழக்கத்துடன் திரும்புவர். ஆலயங்களில் அன்று பிரதான மூர்த்தியைக் குதிரை வாகனத்தில் ஏற்றி அம்புபோடும்

இடத்திற்குக் கொண்டு சென்று அம்பெய்து, வெற்றிப் பிரதாபத்துடன் ஆலயத்திற்கு மீளக்கொணர்வர். நவராத்திரி விழாவை நன்கு கொண்டாடுவதன் பயனை,

"கன்னி மதியின் வரையுயிர்த்த கன்னி மகிழப் பேரன்பால்
மன்னு நவராத்திரி பூசை மரபினியற்று முறைமையோர்
நன்னருலகம் பணிகேட்ப நவைதீர் செல்வத்திடை மூழ்கி
முன்னுங்கதி இனிதுறீஇ முடிவிலின்பம் நுகர்வரால்"

எனும் பாடலால் அறியலாம்.

4. கந்தவிரத் விழாக்கள்

கலியுகவரதனாகிய கந்தக் கடவுளை நினைந்து தவமாற்று வதற்குறிய விரதங்கள் மூன்று ஆகும். அவை வாரவிரதம், நட்சத்திர விரதம், திதி விரதம் எனப்படும். வாரவிரதம் வெள்ளி நாள் விரதமும், நட்சத்திர விரதம் கார்த்திகை விரதமும், திதி விரதம் கந்தசஷ்டி விரதமும் ஆகும்.

1. வாரவிரதம் (வெள்ளி விரதம்)

"வெள்ளிநாள் விரதந்தானே விண்ணவர் உலகைக் காத்த
வள்ளல்தன் விரதமாகும் மற்றது புரிந்த மேலோர்
உள்ளமேல் நினைந்த வெல்லாம் ஒல்லையின் முடியும்மன்றே"

எனும் கந்தபுராணச் செய்யுளால் வெள்ளிநாள் விரதத்தை முறைப்படி ஆற்றிவருபவர் உள்ளத்தில் நினைந்தவெல்லாம் விரைவில் நிறைவேறப் பெறுவர் என்பதை நன்கறியலாம்.

2. நட்சத்திர விரதம்

மாதந்தோறும் வரும் கிருத்திகை நட்சத்திரத்தன்று விரதமிருந்து முருகனை வழிபடுதல் கிருத்திகை விரதமெனப்படும். சூரன் முதலிய அரக்கர்களின் கொடுமைக்கு அஞ்சிய தேவர்கள் கைலாயம் சென்று பரமேசுவனிடம் முறையிட தனது ஐந்து முகத்தோடு அதோ முகமும்கொண்டு திருமுகங்கள் ஆறாகிய ஆறுநெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு தீப்பிழம்புகளை வெளிப்படுத்தினன். அதனை வாயு அக்கினியிடம் சேர்க்க, அக்கினி கங்கையிலிட, கங்கை சரவணத்தில் கொண்டு சேர்க்க, அப்பிழம்புகள் ஆறுமுகமும்,

பன்னிரண்டு கரங்களும், ஒரு திருமேனியும் உடைய முருகனாய் அமைந்தது. சரவணம் என்பது நாணற்காட்டைக் குறிக்கும். சரவணபவன் என்பதற்கு நாணற்புல் நிறைந்த தடாகத்தில் தோன்றினவன் என்பது பொருள். 'சர' என்பது இருபத்தைந்து எனும் எண்ணைக் குறிக்கும் என்பர்,. இருபத்தைந்து தத்துவங்களின் கூட்டமாகிய பிரபஞ்சமே சரவணமாகும். முருகன் அப்பிரபஞ்சத்திற்கு நாயகனாய் அமர்தல் சரவணத்தடாகத் தோற்றம் விளக்குகிறது.

முருகனது தோற்றத்தைக் கண்ட தேவர்கள் கார்த்திகை மாதரை அழைத்து அவனுக்குப் பாலூட்டி உபசரிக்கும்படிக் கட்டளையிட்டனர். கார்த்திகைப் பெண்களும் ஆவலோடு சரவணம் வந்து சண்முகனைக் கண்டு வியப்பெய்தி ஆறுமுகம்கொண்ட குழந்தைக்கு எவ்வாறு பாலூட்டுவது என்பதனை அறியாமல் மயங்கி, தங்களிடம் பால் அருந்துமாறு முருகனை வேண்டிக் கொண்டனர். "உறுநர்கள் தமக்கு வேண்டிற்றுதவுவோன் ஆதலாலே, அறுமுக ஒருவன் வேறாய் அறுசிறார் வடிவம்கொண்டான்''. இதைக்கண்ட கார்த்திகைப் பெண்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு குழந்தைக்குப் பாலூட்டி உபசரித்தனர். அக்கார்த்திகை மாதரின் நாளாகிய கிருத்திகையில் முருகன் தோன்றினதால் 'கார்த்திகேயன்' எனும் நாமத்தைக் கொண்டதோடு அந்நாளில் தம்மை வழிபடுவோர்க்கு எல்லாவித நன்மைகளும் பெருகும் எனவும் அருள் புரிந்தான்.

திதிவிரதம் (கந்தசஷ்டி விரதம்)

காசிப முனிவனுக்கும் மாயையெனும் அரக்கிக்கும் புதல்வர்களாய்ப் பிறந்த சூரன், சிங்கமுகன், தாரகன் எனும் அசுரர்கள் கடுந்தவம் புரிந்து சிவபெருமானிடம் வரங்கள்பெற்று வீரமகேந்திரம், ஆஸுரபுரி, மாயாபுரி எனும் இடங்களில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தேவர்கள் முதலிய நல்லோர்களுக்குப் பலவிதத் தீங்குகளை வரபலத்தால் செய்து வந்தனர். அவர்களை அழிக்க யாவராலும் முடியாது போயிற்று. தேவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கி இறைவன் முருகனாய்த் தோன்றி அவனோடு ஆறுநாட்கள் அமர்தொடுத்தனன். அந்த ஆறு நாட்களும் தேவர்கள் முதலிய அனைவரும் உணவு அருந்தாமல் முருகனையே தியானம் செய்துவந்தனர்.

சூரனது தம்பியரும் தனையர்களும் முருகன் சேனையால் அழிந்தும், சூரன் ஆணவ மல முதிர்ச்சியோடு முருகனை எதிர்த்து நின்று அமர்புரிந்தான். அவ்வமரில் அவனது ஆணவ மலம் சிறிது அகன்றது.

அப்போது அவன் முருகன் உருவில் ஈடுபட்டான் முருகன் தன்னிடம் யுத்தத்திற்கு வந்தது அருளேயாகுமெனத் தெளிந்தான். இதனை,

"அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின்காறும்
எண்ணிலா ஊழிகாலம் எத்திற நோக்கினாலும்
கண்ணினால் அடங்காதுன்னிற் கருத்தினால் அடங்கா தென்பான்
நண்ணினான் அமருக்கென்கை அருளென நாட்டலாமே"

எனும் செய்யுளால் அறியலாம். முருகனை வழிபட அவனது உறுப்புக்கள் அனைத்தும் விரும்பின. எனினும் மானம் அவனைத் தடுத்தது.

இதனை,

"சூழுதல் வேண்டுந்தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டுஞ் சென்னி துதித்திடல் வேண்டுந்தாலும்
ஆழுதல் வேண்டுந் தீமையகன்று நானிவற்கு ஆளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சந் தடுத்தது மானமொன்றே"

எனும் பாடலால் அறியலாம்.

சூரன் ஒரு சுத்த வீரன். போருக்கு எண்ணித் துணிந்தான். வாழ்வு அல்லது சாவு என முடிவுகட்டினான். தன் ஆற்றல் அனைத்தையும் காட்ட ஆரம்பித்தான். ஒரு மாமர வடிவைக் கொண்டான்.

"வன்னியின் அலங்கல் கான்று வான்தழை புகையி னல்கிப்
பொன்னென இணர்கள் ஈன்று மரகதம் புரையக் காய்த்துச்
செந்நிற மணிகள் என்னத் தீம்பழங் கொண்டு கார்போல்
துன்னு பல்கவடு போக்கிச் சூதமாய் அவுணன் நின்றான்"

தீ போன்ற தளிர்களையும், புகைபோன்ற தழைகளையும், பொன் போன்ற பூங்கொத்துக்களையும், மரகதம் போன்ற காய்களையும், செம்மணிபோன்ற பழங்களையும், கார்போன்ற கிளைகளையும் உடைய ஒரு மாமரமாகி சூரன் கடலினுள் மறைந்து நின்றான். இதனை அறிந்த முருகன் அவனைக் கொல்ல வேலாயுதத்தை விடுத்தான். வேல் சென்று அவன் மீது பாய்ந்து அவனை இருகூறாக்கியது. எனினும் அவன் இறக்கவில்லை. அது அவனது தவத்தின் வலிமையாகும். இதனை,

"ஆடல்வே லெறிதலோடும் ஆமிர வடிவாய் அண்ட
கூடமு மலைத்தகள்வன் அரற்றோடு குறைந்து வீழ்ந்தும்
வீடிலன் என்ப மன்னோ மேலைநாள் வரத்தின் என்றால்
பீடுறு தவமேயன்றி வலியது பிறிதொன் றுண்டோ"

எனும் கவியால் உணரலாம். பின்னர் சூரன் சேவலும் மயிலுமாகி முருகனை எதிர்த்தான். அவன்மீது முருகனது அருட் கண்ணோட்டம் விழுந்தது. கரும்பொன் செம்பொன் ஆகியதுபோல மாறினான். முருகனது அருளுக்கு இலக்கானான். முருகன் சேவலைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் கொண்டான். இச்செய்கைகளிலிருந்து,

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுனுற்றால்,
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்"

என்பது தெளிவாகிறது.

சூரனை அவனது கிளையுடன் அழித்து அருள்புரிந்த முருகனை, தேவர்கள் முதலியோர் அமர் நடந்த ஐப்பசி மாதம் வளர்பிறை ஆறு தினங்களும் வாழ்த்தி வணங்கினார்கள்.

"வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டிய தனிவேற்செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாருஞ்
சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கந்தன்னில்
முற்பகலாதியாக மூவிரு வைகல் நோற்றார்"

துலையின் திங்கள்—ஐப்பசி மாதம். மூவிரு வைகல்—ஆறுநாட்கள். அம்முறையே நாமும் ஐப்பசி மாதம் அமாவாசை கழிந்த ஆறு நாட்களிலும் சஷ்டிவிரதம் இருந்து ஆறுமுகக் கடவுளை வழிபட்டு வருகின்றோம்.

சஷ்டி நோன்புமுறை

இந்த ஆறு நாட்களிலும் காலையில் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடை கட்டி இரவினில் தம்பம், விம்பம், கும்பங்களில் முருகனைப் பூஜித்து, வெல்லம் சேர்த்து, நெய்யில் சமைத்த மோதகத்தை நிவேதித்து, பிற உபசாரங்களையும் செய்து, கந்தபுராணம் ஆதியோடந்தமாகப் படித்து, உபவாசத்தோடு தியானித்துச் சூரசங்காரத்தைத் திருவிழாவாகக்

கொண்டாட வேண்டும். ஏழாம் நாள் அடியார்களுக்கு அன்னமளித்து. பாரணம் செய்து வந்தால் எல்லாவித நலன்களும் பெற்று வாழலாம் முசுகுந்தன் என்பவன் கந்தசஷ்டி விரதத்தை மேற்கொண்டு உலகத்திற்கே அதிபதியானான்.

விழாத் தத்துவம்

முருகன் பதியையும், தேவர்கள் பசுக்களையும், சூரன் அகங்காரத்தையும், சிங்கமுகன் குரோதத்தையும், தாரகன் மோகத்தையும், கஜமுகி சஞ்சலத்தையும் உணர்த்துகின்றனர். பானுகோபன் அகங்காரத்தில் தோன்றிய துர்க்குணத்தையும், அதிசூரன் முதலிய மக்கள் குரோத மோகத்தால் தோன்றும் காரியங்களையும் நிகர்ப்பர்.

மாயாபுரி தூல சரீரத்தையும், ஆஸுரபுரி சூட்சம சரீரத்தையும், வீரமகேந்திரம் காரண சரீரத்தையும் நிகர்க்கும். பாசம் இறைவனை அணுகாது. உயிர்களையே தளைந்து நிற்கும். ஆணவ மலம் போன்ற சூரனது அடாத செயல்கள் பசுக்களாகிய தேவர்களையே துன்புறுத்தின.

ஆணவ மலம் முத்தியிலும் அழியாது வலுக்குறைந்து நிற்கும் என்பதை சூரன் முற்றும் அழியாது மயிலாய் மாறி நின்றது உணர்த்தும். இந்நிகழ்ச்சிகளையும் தத்துவங்களையும் உணர்ந்து கொள்ளவே ஆண்டுக்கு ஒருமுறை கந்தர்சஷ்டி விழாக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

5. திருக்கார்த்திகை விளக்கீடு விழா

கார்த்திகை மாதம் பௌர்ணமி நாளில் கார்த்திகை நட்சத்திரம் வருவதால் அம்மாதம் காரத்திகை எனப் பெயர்பெற்றது. கார்த்திகை மீன் (மீன்–நட்சத்திரம்) ஆரல். இறால், அறுவாய், அளக்கர் எனவும் பெயர்பெறும். அறுமீன் என இதற்கு ஒரு பெயர் உண்டு. ஆறு உடுக்கள் (உடுக்கள் – நட்சத்திரங்கள்) ஒரே கூட்டமாகக் கூடியிருப்பதால் அது இப்பெயர் பெற்றது. சூரியன் கார்த்திகை நட்சத்திரத்தைக் குறுகும்பொழுது அக்கினி நட்சத்திரம் ஆரம்பமாகும்.

கார்த்திகை நாளில் வரிசை வரிசையாகத் திருவிளக்கேற்றி எங்கும் கொண்டாடும் வழக்கம் மிகப்புராதன காலந்தொட்டு இருந்து வருகிறது. களவழி நூல், "கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்றனவே" எனக் கூறுகின்றது. சாற்றில்; சாறு – விழா.

"துளக்கில் கபாலீச் சரத்தான் தொல்கார்த்திகை நாள்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"

– சம்பந்தர்

கார்த்திகை நாளில் மலையில் விளக்கிடுவதைச் சிந்தாமணியில்,

"...குன்றில்
கார்த்திகை விளக்கிட்டன்ன"

எனக் கூறும் பகுதியால் அறியலாம். கார்த்திகை விழாவைப் பற்றிப் பலர் பற்பலவிதமாகக் கூறுகின்றனர். ஆயினும் கார்த்திகை விழாவின் உண்மைக் கருத்தினை ஆராய்வாம்.

மண், நீர், அனல் (தீ), அநிலம் (காற்று), வான், சூரியன் சந்திரன், ஆன்மா எனும் அட்டமூர்த்தங்களாய் இறைவன் விளங்குகிறான். இதனை,

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய்
எரியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய்
அட்டமூர்த்தி ஆகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும்ஆணும் பிறருருவுந்தம்
உருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்
புன்சடையடிகள் நின்றவாறே"

எனும் அப்பர் வாக்கால் உணரலாம்.

அட்ட மூர்த்தங்களில் அக்கினி, சூரியன், சந்திரன், ஆன்மா எனும் நான்கும் தீயின் அம்சமாகும். இறைவன் அழல் உருவினன் என்பதை,

"பாசுபதா பரஞ்சுடரே" (தேவாரம்)
"தழலுருவாம் சங்கரன்" (தேவாரம்)
"எரியலால் உருவமில்லை" (தேவாரம்)
"சோதியே சுடரே" (திருவாசகம்)
"அலகிற் சோதியன்" (பெரிய புராணம்)

எனும் வாக்குகளால் அறியலாம்.

தீ அதனை அடைந்த பொருள்களின் அழுக்கைப் போக்கித் தன் மயமாக்கும். அதுபோல, இறைவன் உயிர்களின் ஆணவ அழுக்கை அகற்றித் தன்மயமாக்குவான். தீ ஒன்றைப் பற்றி நின்று தோன்றுவதைப் போல இறைவனும் சிவஞானிகளின் அறிவில் தோன்றி விளங்குகிறான். ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகளை ஏற்றுவதைப் போல சிவத்திடமிருந்து பலவடிவங்கள் தோன்றுகின்றன. சிவமாகிய ஒளியை யோக நிலைபாலேயே காணலாம். இது எல்லோருக்கும் எளிதான காரியமல்ல. அதனால் சரியையெனும் தாஸமார்க்கத்தில் "தீதில் திருவிளக்கிட்டு" என சித்தியாரிலும், "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" எனத் தேவாரத்திலும் கூறுமாறு அநேக அடியார்கள் ஆலயங்களில் திருவிளக்கிட்டுப் பேறு பெற்றுள்ளார்கள். யோக நெறியால் அன்றிக் காணமுடியாத தெய்வஒளியைக் கார்த்திகை நாளில் பலவித எரிகளை சிவ, விஷ்ணு ஆலயங்களின் முன் உண்டு பண்ணி அடியார்கள் அதனை இறைவனாகக் கருதி வழிபட்டு வருகின்றனர். இறைவனும் அதனையேற்று அருள்புரிகின்றான். இந்த அழல் வழிபாடு தரிசனம் திருவண்ணாமலையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது. அன்று அண்ணாமலை அழற் சோதிமலையாய், அருணாசலமாய், சோணகிரியாய் இலங்கும். (அருணம், சோணம் = சிவப்பு நிறம்) இம்மலை ஏறத்தாழ மூவாயிரம் அடி உயரத்தில் உள்ளது. கார்த்திகை அன்று மலைமேல் பெரிய பாத்திரம் ஒன்றில் நெய் பெய்து, துணியிட்டு, கர்ப்பூரத்தை ஏராளமாகச் சொரிந்து விளக்கிடுவர். பல மைல்களுக்கு அப்பால் பல நாட்கள் இச்சோதி ஒளிவீசும். இம்மலையை அடுத்த இடங்களில் உள்ள ஆவினங்கள் சிவப்புநிறம் பொருந்தியனவாகவே காணப்படுகின்றன.

தீபம் ஏற்றி வழிபட முடியாத இடங்களில் சிவ, விஷ்ணு ஆலயங்களின் முன்னர் பனை ஓலையால் சொக்கப்பனை வேய்ந்து சுவாமியை எழுந்தருளப் பண்ணிச் சொக்கப்பனையைக் கொளுத்துவர். சொக்கப்பனை ஏக ஜோதி மயமாய் ஒளிவடிவினனாகிய இறைவனை உணர்த்தும். சொக்கப்பனை வணங்குவது சொக்கப் பனையாகும். சொக்கப்பனாகிய சிவனை ஒளி வடிவாகக் காண்பிப்பதால் இது சொக்கப்பனை எனப் பெயர்பெற்றது.

பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில், "வேலின் நோக்கிய விளக்க நிலையும்" என்பதற்குக் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு என்பது பொருள். ஆகவே, மேற்கூறியதிலிருந்து கார்த்திகை விழா நமது ஆணவ இருளைப் போக்கி ஞானஒளியைப் பெருக்குவதற்கு உகந்த விழாவாகும் என்பது விளங்குகிறது.

6. திருவாதிரைத் திருவிழா

மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இவ்விழா கொண்டாடப் பெறுகிறது. ‘திரு’ எனும் அடைமொழி சேர்ந்த நட்சத்திரங்கள் திருவாதிரையும், திருவோணமுமாகும். திருவாதிரை சிவபெருமானுக்கும், திருவோணம் நாராயணனுக்கும் உகந்த நன்னாளாகும். மாதங்களில் மார்கழி மாதம் சிறந்ததாகும். கண்ணபிரான் கீதையில், "மாதங்களில் நான் மார்கழி மாதமாயிருக்கிறேன்" என அருளுகிறார். இந்த மாதம் தேவர்களுக்கு விடியற்காலை வேளையாகும். மார்கழி மாதத்தில் பௌர்ணமியை ஒட்டித் திருவாதிரை நட்சத்திரம் வருகின்றது. இந்தத் திருவாதிரையில் நடராஜரை வழிபட வேண்டுமென்று காரணாகமம் கூறுகிறது. சிவபெருமானையே ஆதிரையன் எனக் கூறுவர். கார்த்திகை விழாவுக்குத் திருவண்ணாமலை சிறந்த இடமாய் விளங்குவதுபோல மார்கழித் திருவாதிரைக்குச் சிதம்பரம் சிறந்த இடமாய்த் திகழ்கிறது. திருப்பெருந்துறை என்ற ஆவுடையார் கோவிலிலும் இவ்வுற்சவம் நடைபெற்று வருகிறது.

இறைவனின் திருக்கூத்தின் பெருமைகளை முன்னர்க் கூறியுள்ளோம். திரு + ஆ + திரை = திருவாதிரை. திருவென்பது அடைமொழி. ஆ – ஆன்மா; திரை – மறைத்தல். ஆன்மாவை மறைத்தல் என்பது பொருள். செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்றவாறு இன்பதுன்பங்களை இறைவன் ஊட்டும் திரோபவச் செயலை இது உணர்த்துகின்றது.

திருவாதிரைத் திருவிழா நடைமுறை

கொடியேற்றத்தன்று மாணிக்கவாசகரை எழுந்தருளப் பண்ணி அபிடேகம், அலங்காரம், நிவேதனம் முதலியன முறைப்படி செய்வித்துத் திருவெம்பாவை இருபது பாடல்களையும் ஓதி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தீபாராதனை எடுக்க வேண்டும். தேவாரம் முதலிய இதரத் திருமுறைகளுக்குத் திருக்காப்பிட்டுத் திருவெம்பாவையையே ஓதுவர். திருவிழாத் தத்துவத்தில் முன்பு கூறியபடி பத்து நாள் விழாக்களையும் நடத்த வேண்டும். திருவாதிரை நாளில் நடராஜப் பெருமானுக்கு மிகச்சிறப்பாக அபிடேகம் நடைபெறும் மார்கழித் திருவாதிரையேயன்றி, சித்திரை ஓணம், ஆனி உத்திரம், ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் சுக்கிலபட்ச சதுர்த்தசி திதிகளிலும் அபிடேகம் சிறப்பாக நடைபெறும். இந்த விதமாக ஆறு சிறந்த அபிடேகங்கள் நடராஜப் பெருமானுக்குப் நடைபெறுவது உண்டு.

மார்கழித் திருவாதிரையில் உமையம்மையார் கண்டு மகிழ இறைவன் திருக்கூத்தாடினதால் நாமும் அந்நாளில் கூத்தன் தரிசனம் கண்டு குதூகலிக்கின்றோம்.

7. வைகுண்ட ஏகாதசி விரத விழா

மார்கழி மாதத்தில் வரும் சுக்லபட்ச ஏகாதசியை வைகுண்ட ஏகாதசி என்பர். விஷ்ணுவாலயங்களில், முக்கியமாக ஸ்ரீரங்கத்தில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படும். திருமாலடியார்கள் அன்று உபவாசம் இருந்து இறைவனை வணங்குவர். இம்மாதத்தில் ஆண்டாளின் திருப்பாவையை அனைவரும் பாடி மகிழ்வர்.

8. தைப்பூசத் திருவிழா

தைமாதப் பௌர்ணமியன்று பூசநட்சத்திரத்தில் இவ்விழாக் கொண்டாடப்பெறும். திருவிடைமருதூர், மதுரை முதலிய தலங்களில் இவ்விழா நடைபெறுகிறது. திருவிடைமருதூர்த் தேவாரத்தில் இவ்விழாவைப் பற்றிப் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு ஒன்று எடுத்துக்காட்டப்படும்.

"பூசம் புகுந்தாடிப் பொலிந் தழகாய
ஈசன் உறைகின்ற இடைமரு தீதோ"

(சம்பந்தர்)

இவ்விழாவைப் பற்றிச் சம்பந்தர் பூம்பாவையை எழுப்பிய பதிகத்தில், "தைப்பூசங் காணாதே போதியோ" எனப் பாடுகின்றார்.

9. சிவராத்திரி விரத விழா

சிவராத்திரி விழா மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசியில் நடைபெறும் விரத விழாவாகும். அன்று சிவாலயங்களில் இரவு நான்கு கால பூஜைகள் நடைபெறும். அன்று கண்விழித்துப் பகலும் இரவும் உபவாசமிருப்பர். இவ்விழாவை விழாநிசி (இன்பராத்திரி) பிரம சொரூபம், மகாதபசு, பிரகாசம், யசஸு, சகல புவனம், சத்தியம் எனவும் கூறுவர். திரயோதசி திதியானது அம்பிகையின் வடிவமாகும். சதுர்த்தசி திதி சிவஸ்வரூபமாகும். அந்தத் திரயோதசி, சதுர்த்தசி இரண்டினுடைய சேர்க்கையானது, சிவயோகத்தைக் குறிக்கிறதென சுப்பிரபேதாகமம் கூறுகிறது.

சிவராத்திரி என்பது மக்கள் தினந்தோறும் தூங்குகின்ற இரவன்று; அவ்வுயிர்வர்க்கங்கள் தீவினை காரணமாகப் பாதாளத்தில் கிடந்துழலும் நரக இருளுமன்று; தேவர்களது தட்சிணாயன இரவுமன்று; பின்யாதோ எனின், மாட்சிமையுள்ள பஞ்சபூதங்களையும் முறையே மாயையில் ஒடுக்கி அனைவரும் இல்லாதபடி சங்கரிக்கும் ஒரு நாளாகும். இதனை மாசங்காரம் என்பர்.

இதனை,

"மாணில முதலா ஐந்தும் மாயையில் முறை யொடுக்கி"

என்பதால் உணரலாம்.

எல்லா உலகையும் ஒடுக்கி மாசங்காரம் செய்த மகாருத்திரர் அவ்விடத்தும் தூங்காதவராய் நர்த்தனம் செய்வர். அதனை சிவகாமி அம்மையார் உயிர்களின் மீது வைத்த கருணையால் கண்டு அவ்விறைவனை பூசிப்பள். இப்பூசையே சிவராத்திரி பூசையாகும். இதனை இந்நூலில் உலகத்தோற்றம் எனும் பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

சச்சிதானந்த சொரூபியாகிய பரமசிவன் ஞானசக்தியாகிய உமையோடு ஒன்றி நின்று திரும்பவும் உலகை சிருட்டி செய்யத் தொடங்கினான். உலகம்மையின் பூஜையை ஏற்று உயிர்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களை அளித்தான். அதன் பின் அவ்விரதத்தைத் தேவர்களும், முனிவர்களும், பத்தரும், சித்தரும், முத்தரும் மேற்கொள்ளலாயினர்.

சிவராத்திரியில் திருவருள் பெறத்தக்கோர், ஆகமங்களை ஆராய்ந்து, அவற்றில் சொல்லியருளிய பூசையை அன்பினாலே செய்ய வேண்டி மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றும் சிறந்து விளங்கும் தலத்தை அடைந்து அங்கே வீற்றிருந்தருளுகின்ற மூர்த்தியைத் தரிசித்து, உபவாசமிருந்து வழிபடக்கடவர். ஒவ்வொரு யாமத்திலும் நீராடி நிறைந்த அன்புடன் அடியிற் கூறுமாறு பூசிக்க வேண்டும்.

அபிடேக ஆராதனை முறைகள்

யாமம்	அபிடேகம்	பூச்சு	மலர்கள்	நிவேதனம்
முதல் யாமம்	பஞ்சகவ் வியம்	சந்தனம்	வில்வம் அல்லது தாமரை	பச்சைப் பயற்றுப் பொங்கல்
இரண்டாம் யாமம்	சர்க்கரை, தேன், பால், நெய், தயிர் கலந்த ரஸபஞ்சா மிர்தாபி டேகம்	அகில்	துளசி அல்லது தாமரை	பாயசம்
மூன்றாம் யாமம்	கொம்புத் தேன்	பச்சைக் கர்ப்பூரம்	ஜாதி மல்லிகை அல்லது வில்வம்	தில(எள்) அன்னம்
நான்காம் யாமம்	கருப்பஞ் சாறு	குங்குமப்பூ	நந்தியா வர்த்தம் அல்லது நீலோற் பலம்	சுத்தான்னம்

சிவராத்திரி இரவில் இவ்வாறு பூசித்து மறுநாள் காலை பாரணம் செய்வதன் பலனை,

"காலையில் தீர்த்தமாடிக் கடனெலாம்முடித்து ஆசானை
சால அன்பொடு வணங்கிச் சைவவேதியர்கட்கு ஊட்டி
ஏலுமாறு உடுக்கை சொன்னம் ஈந்து பாரணமும் செய்து அப்
பா(ல்) அமுதருந்தி வாழ்தி பரம பாக்கியவான் நீயே"

எனும் பாடலால் அறியலாம்.

இந்நோன்பை அனுட்டித்தால் அறம் பெருக்கி, செல்வமனைத்தும் ஈட்டி, இன்பத்திறம் பெற்றுத் திளைக்கலாம். சிவனருட்பதிவுண்டாகும்.

இதனால் சிவராத்திரி விரத விழாச்சிறப்பினையும், அதனை மேற்கொள்ளவேண்டிய முறையினையும், அதன் பயனையும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

10. மாசி மகவிழா

மாசி மாதம் பௌர்ணமியன்று மகநட்சத்திரத்தில் இவ்விழா கொண்டாடப்பெறும். சில இடங்களில் இறைவன் சமுத்திர தீர்த்துக்குச் சென்றுவருவதுண்டு.

இதனை ஞானசம்பந்தர் பாடிய பூம்பாவைப் பதிகத்தில்,

".. மாசிக்
கடலாட்டுக்கண்டான்"

எனும் வாக்காலறியலாம்.

11. பங்குனி உத்திர விழா

பங்குனி பௌர்ணமியில் உத்திர நட்சத்திரத்தில் இவ்விழா நடைபெறும். திருவாரூரில் இவ்விழாச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது.

12. சித்ரா பௌர்ணமி (சைத்ரோத்ஸவம்)

சித்திரை மாதம் பௌர்ணமியில் சித்திரை நட்சத்திரத்தில் இவ்விழா நடைபெறும். மதுரையில் இவ்விழா பிரபலமாக நடைபெற்று வருகின்றது.

13. வைகாசி விசாகம்

வைகாசி மாதம் பௌர்ணமியில் விசாக நட்சத்திரத்தில் இவ்விழா நடைபெறும். திருப்பாதிரிப்புலியூர், திருச்செந்தூர் முதலிய இடங்களில் இவ்விழா நடைபெறுகிறது.

14. ஆனி உத்திரம்

ஆனி மாதத்தில் உத்திர நட்சத்திரத்தில் சிதம்பரம், திருப்பெருந்துறை முதலிய இடங்களில் நடைபெறுகின்றது. இது ஆனித் திருமஞ்சனம் எனக் கூறப்படும்.

15. ஆடிப் பூரம்

சிவதலங்களில் அம்பாளுக்கும், திருவில்லிப்புத்தூரில் ஆண்டாளுக்கும் இவ்விழா சிறப்புற நடந்துவருகின்றது.

பிரதோஷம்

ஒவ்வொரு மாதத்திலும் வளர்பிறை, தேய்பிறையாகிய இருபட்சங்களிலும் வரும் திரயோதசி அன்று பிரதோக்ஷ விரதம் மேற் கொள்ளப்படுகின்றது. இவ்விரதத்தை சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் எதுவேனும் ஒன்றில் நோன்பு நோற்க ஆரம்பிக்க வேண்டும். அன்று சனிக்கிழமையாயிருப்பின் மிகவும் சிறந்தது.

பிரதோஷத்தன்று மாலையில் மூலலிங்க மூர்த்திக்கும், நந்திக்கும் விசேட அபிடேக ஆராதனைகள் நடத்தி, பிரதோஷ நாயகரை இடப வாகனத்தில் ஏற்றிக் கோவில் பிராகாரத்தில் எழுந்தருளச்செய்வர். பிரதோஷத்திற்கும், ஏகாதசி, துவாதசி ஆகிய இரு விரதங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் ஒன்றுண்டு. அது புராண வரலாறாகும்.

முன்கோபியாகிய துர்வாச முனிவர் சிவபூசைசெய்து சிவப் பிரசாதமாகக் கிடைத்த மலரை எடுத்துக்கொண்டு தேவலோகம் சென்று அங்கு ஐராவதத்தின்மீது பவனிவரும் இந்திரனுக்குக் கொடுத்தார். அதை அவன் அலட்சியமாக வாங்கி வெள்ளை யானையின் தலைமீது வைத்தான். அதை வெள்ளை யானை தனது துதிக்கையால் எடுத்துக் கீழே எறிந்தது.

துர்வாசர் அதைக்கண்டு பெருங்கோபம் கொண்டார். இந்திரனை நோக்கி, "யான் அளித்த சிவப்பிரசாதத்தை நீ அலட்சியம் செய்தனை; வெள்ளை யானையின் மத்தகத்தின்மீது வைத்தனை; அதை யானை தரையில் தள்ளி மிதித்தது; சிவப்பிரஸாதத்தின் அருமை அறியாது அதனை அவமதித்தனை; உன் செல்வச் செருக்கே இதற்குக் காரணம்; ஆதலால், உனது விலையுயர்ந்த செல்வங்களாகிய கற்பகமும், காமேதேனுவும், சிந்தாமணியும் பிறசெல்வங்களும் உன்னைவிட்டு நீங்குவனவாகுக" எனச் சபித்தார். உடனே தேவர்கள் தங்கள் செல்வங்கள் அனைத்தையும் இழந்தனர்.

தேவர்கள் திருமாலின் உபதேசப்படி அசுரர்களையும் உடன் கொண்டு, மந்தர மலையை பாற்கடலில் மத்தாக நாட்டி, வாசுகியை கயிறாக அம்மலையில் சுற்றிக் கடலைக் கடைய ஆரம்பித்தார். அதில் தேவர்களின் மறைந்த செல்வங்களும், அமுதமும், விடமும்

ஒவ்வொன்றாகத் தோன்றலாயின. விடத்தைக் கண்டு அஞ்சித் தேவர்கள் சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். கருணைக் கடலாகிய சிவபெருமான் அதை உண்டார். அது அவருடைய கண்டத்தில் தங்கியது. அவர் கண்டம் நீலநிறம் பொருந்தியதாயிற்று. இதனை நீலகண்டர் எனும் அவரது நாமத்தால் அறியலாம். அன்றையத் தினம் தேவர்கள் உபவாசம் இருந்து சிவனை வழிபட்டனர். அதுவே ஏகாதசியாகும். மறுதினம் தேவர்கள் பாரணை செய்தனர். அது துவாதசி திதியாகும். அதற்கு மறுநாள் மாலை ஏழரை நாழிகை நேரம் ஆனந்தத் தாண்டவம் செய்தருளினார். அவ்வேளையே பிரதோஷ காலமாகும்.

இவ்வரலாற்றிலிருந்து சிவப்பிரசாதத்தை இகழாது மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும், அதனைத் தன் சிரசில் தரித்துக்கொள்ள வேண்டுமே தவிர வேறு எதன் மீதும் இகழ்ச்சியோடு இடுதல் கூடாது என்பதும், அவ்வாறு இடின் தன் செல்வமனைத்தும் நீங்கிப் பெரும்அல்லலிற்பட்டு அவதிப்பட நேரிடும் என்பதும் விளங்குகின்றது.

27. இந்துக்களின் சடங்கு முறைகள்

இந்துக்களுக்குப் பிறப்பதற்கு முன்னும், பிறந்து வாழும் காலத்திலும், இறந்த பிறகும் சடங்குகள் விதிக்கப்பட்டுள்ளன. இச்சடங்கினை கிரியை என்பர். ஆசிரியர் தொல்காப்பியனார் இதனைக் கரணம் எனக் கூறினார். மந்திரத்தோடு விளக்கமாகச் செய்யப்படும் கரணங்கள் சிறப்பாகும். மந்திரம் அதிகம் கலவாமல் செய்யும் சடங்கு பொதுவாகும். இவை சோடாசஸம்ஸ்காரங்கள் எனப்படும். அவற்றில், சிலமட்டிலும் தற்காலத்தில் நடைமுறையில் இருக்கின்றன.

1. பும்ஸவனம்

ஒரு பெண் கருக்கொண்ட மூன்றாவது மாதத்தில் கர்ப்பத்திற்கு எவ்வித ஊறும் உண்டாகாதவாறு இறைவனைப் பிரார்த்திப்பதாகும்.

2. ஸீமந்தம்

பெண் கருக்கொண்ட நான்காவது அல்லது எட்டாவது மாதத்தில் குழந்தையின் இரட்சையின் பொருட்டுச் சில தேவர்களை வேண்டுதலாகும். கர்ப்பிணியின் தலைமுடி வகுத்தல், கீதங்கள் பாடுதல், வளைகாப்பிடுதல் முதலியன இக்கிரியையின் சடங்குகளாகும்.

விரதங்களின் பட்டியல்

எண்	மாதம்	விசேடம்	தேவதை	விரதமுறை	பலன்
1.	ஆவணி	சதுர்த்தி	கணபதி	கணபதி ஹோமம்	ஜனரஞ்சனம்
2.	,,	ஓணம்	விஷ்ணு		
3.	,,	அஷ்டமி ரோகிணி	கிருஷ்ணன்	பாதி இரவுவரை உறக்கமின்மை	புத்திரப்பேறு
4.	புரட்டாசி	ஆயில்யம்	சர்ப்பம்	சர்ப்பபலி முதலியன	சர்ப்பப் பிரீதி
5.	,,	நவராத்திரி	தேவி	தேவி, இலட்சுமி, சரஸ்வதி, மூவரையும் பூசித்தல்	ஆற்றல், செல்வம் கலை வளர்ச்சி
6.	ஐப்பசி	தீபாவளி நரகசதுர்த்தசி	கிருஷ்ணன்	எண்ணெய் தேய்த்துக் குளித்தல், புத்தாடை உடுத்தல்	மகிழ்ச்சி
7.	கார்த்திகை	கிருத்திகை	சுப்பிரமணியர்	விளக்கேற்றல் ஜோதி தரிசனம்	பாவநிவர்த்தி
8.	கார்த்திகை மார்கழி	தநுர்மண்டலம் 41 நாள்		பஜனை வழிபாடு	வாக்சுத்தி
9.	மார்கழி	சுக்ல ஏகாதசி	விஷ்ணு	உபவாசம்	ஆத்ம சுத்தி
10.	மார்கழி	ஆதிரை	சிவன்	நடராஜர் வழிபாடு	ஆனந்தம்
11.	தை தை	சங்கிராந்தி அமாவாசை	சூரியன் பிதுர்க்கள்	சூரிய பூஜை தர்ப்பணம் சிராத்தம்	தானிய சம்பத்து வமிச விருத்தி
12.	மாசி	சிவராத்திரி	சிவன்	இரவில்நான்குகாலபூஜை செய்தல்	சிவானுக்கிரகம்
13.	பங்குனி	பரணி	பத்திரகாளி	காளியைப் பூஜித்தல்	வீரம்
14.	சித்திரை	விஷு	சூரியன்	ஆலய வழிபாடு	பொருட்பேறு
15.	வைகாசி	விசாகம்	சுப்பிரமணியர்	ஆலய வழிபாடு	அட்டசித்தி

3. ஜாதகர்மம்

இது குழந்தை பிறந்தவுடன் செய்யவேண்டிய கிரியையாகும். தேனும் நெய்யும் கலந்து தேவதைகளுக்கு நிவேதிப்பர். வந்திருந்தோர்களுக்குப் பழமும் சர்க்கரையும் வழங்குவர். குழந்தை நீண்ட ஆயுளோடு வாழவும், அதற்குப் புத்தி உண்டாகவும், இந்திரன் தனசம்பத்தைக் கொடுக்கவும், சாமர்த்தியம், அழகு முதலியன பெறவும் பிரார்த்திப்பர்.

4. நாமகரணம்

தந்தையின் தந்தை பெயரையோ, தாயின் தந்தை பெயரையோ, தெய்வத்திருநாமத்தையோ பிள்ளைக்குச்சூட்டி ஆசீர்வதிப்பதாகும்.

5. புண்ணியாவாசனம்

இதில் விசேட மந்திரக்கிரியைகள் எதுவும் இல்லை. புண்ணியாவாசனம் செய்து சுத்தியின்பொருட்டு அந்நீரை மாவிலைகளால் வீட்டின் பலபகுதிகளிலும், மனிதர்கள்மீதும் தெளிப்பர்.

6. நிஷ்க்ராமணம்

குழந்தை பிறந்து நான்கு மாதங்கள் ஆனபிறகு முதன் முதலாகக் குழந்தையை வீட்டைவிட்டு வெளியில் கொண்டு செல்வர். குழந்தையின் யாத்திரைகள் அனைத்தும் மங்களமாகக் கடவதும் எனப்பிரார்த்திப்பர்.

7. அன்னப்பிராசனம்

ஆறாம் மாதத்தில் சோறும், தயிரும், நெய்யும், தேனும் கலந்து பிள்ளைக்கு முதன் முதலாகச் சோறூட்டுதலாகும். குழந்தை உடல்வலியோடும், நீண்ட நாள் உணவு முட்டின்றி உண்டுவாழவும் அனுக்கிரக்கிக்க வேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்தித்துச் சோறூட்டுவர்.

8. வித்யாரம்பம்

இது பள்ளியில் வைத்தல் எனப்படும். குழந்தைக்கு ஐந்து வயதானதும் நவராத்திரி விழா முடிவான விஜதசமியிலோ, வேறு நல்லநாளிலோ முதன்முதலாகக் கல்வி பயிற்றுவித்தல் ஆகும். "ஹரி ஸ்ரீ கணபதயே நம:" எனக்கூறிக் குழந்தையை கணபதியை வணங்கச்செய்து, பின்னர் "குருவாழ்க! குருவே துணை" எனக்கூறச் செய்து, குருவை வணங்கும்படிச் செய்யவேண்டும். பின் சரசுவதி

தேவியை வணங்கி அரிசியில் அரியென்னும் எழுத்தை எழுதச் செய்து சொல்லும்படிச் செய்ய வேண்டும்.

9. கர்ண பூஷணம் (காதுகுத்தல்)

காதுகுத்தலின் நோக்கம் குண்டலம், தோடு முதலிய காதணிகளைத் தொங்கச் செய்வதற்காகும். தங்கத்தின் வழியாகப்பாயும் நீர் உடம்புக்கு ஆரோக்கியம் தருகிறது. நல்ல விஷயங்களை செவியின் உள்ளே செலுத்தவேண்டும்; தீய விஷயங்களை உள்ளே செலுத்தாது துளை வழியாக வெளியே செலுத்திவிட வேண்டும் என்பதனையும் இத் "துளை" குறிக்கிறது.

10. சௌளம் (குடுமிவைத்தல்)

குழந்தைக்கு முதன் முதலாக சவரஞ் செய்து வைத்தலாகும். தாயின் மடியில் குழந்தையை வைத்துத் தந்தையும் உடன் இருந்து செய்யும் கிரியையாகும்.

11. உபநயனம்

குழந்தைக்கு ஏழு வயதானதும் உபநயனம் அல்லது பூணூல் இடுதல் எனும் சடங்கை நடத்திவைக்கவேண்டும். இதில் முக்கிய அம்சம் காய்த்திரி மந்திரோபதேசமாகும். உபநயனக் கிரியை செய்யாதவர்களுக்குத் தீக்கை செய்துவைக்கவேண்டும். உபநயனம் அல்லது தீக்கை பெறுவதற்குமுன் ஒரு பிறப்பும், உபநயனம் அல்லது தீக்கைபெற்றபின் ஒரு பிறப்பும் ஆக ஒரு மனிதனுக்கு ஒரு பிறப்பில் இருபிறப்பு உண்டென இந்துமதம் கூறுகின்றது.

12. குருகுலவாசம்

குழந்தைகள் குருகுலத்தில் குருவுடன் இருந்து கல்வி பயின்று வருவது நமது பூர்வீக வழக்கமாகும். குருக்குலத்தில் வைத்து அவர்களுக்குக் கல்வியும், நன்னடையும் கற்றுக்கொடுக்கப்படும். மாணவர் குரு கூறிய பணிவிடைகள் அனைத்தையும் செய்து வருவர். ஆடம்பர வாழ்க்கையின்றி அமைதியோடும், கீழ்ப்படிதலோடும் பயில்வர்.

13. திருமணம்

குருகுலவாசம் முடிந்தபின்னர், குருவின் அனுமதி பெற்றுத் திருமணம் செய்துகொள்வர். இச்சடங்கில் சங்கற்பம், புண்யாகம்,

பஞ்சகவ்வியம், இரட்சாபந்தனம், அங்குரார்ப்பணம், கும்பபூஜை, அக்கினிகாரியம், மூர்த்தி பூஜை, தானம் முதலியன முறையே செய்யற்பாலன.

குறிக்கோள் பகர்தல் (சங்கற்பம்)

குறிக்கோள் பகரும்பொழுது காலத்தையும், இடத்தையும், செயலையும் விளக்கிப் பிரார்த்திக்க வேண்டும். சங்கற்பம் விவாகம் முதலியவற்றை வடமொழியில் முறையாய் நடத்துவது உசிதம். இயலாதவர்கள் அடியிற் கூறுமாறு சங்கற்பம் முதலியன நடத்தலாம். பாரத நாட்டில் திருநெல்வேலியில் – மகனுக்கும் – மகளுக்கும் திருமணம் செய்துவைத்தற் பொருட்டுப் பூஜை தொடங்குகிறேன்; அருள் புரிக எனப் பகர்தல்.

புனிதநீர் சுத்தி (புண்யாவாசனம்)

உடம்பையும் உளத்தையும் சுத்தி செய்தற் பொருட்டு புனித நீர் சுத்தி செய்ய வேண்டும். தண்ணீரை திருவருள் பெருக்காகக் கருதி மணமக்கள் உடம்பில் தெளித்து அவர்களைப் புனிதமாக்க வேண்டும்.

புனிதநீர் அமைக்கும்முறை (பஞ்சகவ்வியம்)

அரிசியைக் கீழே பரப்பிக் கும்பம் வைத்து, தர்ப்பையிட்டு, மும்மூர்த்திகளைத் தியானித்து, ஐந்து எழுத்து ஓதி, பால், தயிர், நெய், கோசலம், கோமயம் எனும் பசுவிலிருந்து கிடைக்கும் ஐந்து பொருட்களை ஒன்று சேர்த்துப் பஞ்சகவ்வியமாக்கி மணமக்களை குடிக்கச் செய்ய வேண்டும்.

காப்புக்கட்டுதல் (இரட்சாபந்தனம்)

திருமணம் நடக்கும்பொழுது இடையூறு வராமல் இருக்க ஆணுக்கு வலது கையிலும், பெண்ணுக்கு இடது கையிலும் மஞ்சள் நூலில் மஞ்சள் துண்டைக்கட்டிப் பிள்ளையாரை வணங்கிக் காப்புக்கட்டவேண்டும்.

முளையிடுதல் (அங்குரார்ப்பணம்)

இந்துக்களுக்கு உழவு மிகவும் முக்கியமானதால் அதைச் சிறப்பிக்கும் முறையிலும், சந்ததி விருத்தியின் பொருட்டும், விவாக காலத்தில் செந்நெல், பயிறு, எள்ளு, வெண்கடுகு, உளுந்து, மொச்சை முதலிய தானியங்களை பன்னிரண்டு மண்பாலிகைகளில் இட்டு வளர்க்க வேண்டும்.

குடவழிபாடு (கும்ப பூஜை)

கும்பத்திலுள்ள நீர்வழியாகக் கடவுளை வழிபடுவது ஆதலால் குடவழிபாடு அவசியமாயிற்று. ஓர் இடத்தில் கோலமிட்டு மாப்பொடி, மஞ்சள் பொடி தூவி, எள்ளும் அரிசியும் ஒன்றின் மேல் ஒன்றாக விரித்துக் கும்பம் வைத்து அதில் நீரை நிரப்பி நூல் சுற்றி மாந்தளிர், அரசிலை, தேங்காய், பழம், தர்ப்பை முதலியன வைத்து எந்தக் கடவுளைப் பூஜிக்கின்றோமோ அந்தக் கடவுள் அதில் வீற்றிருப்பதாகக் கருத வேண்டும்.

எரியோம்பல் (அக்கினிகாரியம்)

தூய மணலில், உமி விரித்து ஆல், அரசு, மா, புரசு, முருக்கு முதலியவற்றின் குச்சிகளை வைத்து தீ மூட்டி நெய், பொரி, தானியம் முதலியன பெய்து, எரியும் தீயை இறைவனாகக் கருதி வழிபட வேண்டும்.

வடிவ வழிபாடு (மூர்த்தி பூஜை)

இறைவனை ஒரு வடிவத்தில் அங்கு எழுந்தருளியிருப்பதாக வழிபட்டுத் தோத்திரங்கள் பாட வேண்டும்.

தானம்

இந்நாளில் ஏழை எளியவர்களுக்கும், வறிஞர் முதலி யோர்களுக்கும் பலவகைப் பொருள்களைத் தானமாகக் கொடுத்தல் வேண்டும்.

கைப்பிடித்துக்கொடுத்தல்

மணமக்களுக்கு மாலை மாற்று, ஊஞ்சல் முதலியன நடத்தி மணமக்களை மணமேடையில் அமர்த்தவேண்டும். மணமகளின் தந்தை தன் மகளின் கையை மணமகன் கையில் வைத்து "என் அருமைப் புதல்வியைத் தங்களுக்கு வாழ்க்கைத் துணையாக உள்ளும் புறமும் ஒத்து அளிக்கின்றேன்; நீங்கள் இரண்டுபேரும் பூவும் மணமும் போலப் பொருந்தி வாழ்வீர்களாக" என வாழ்த்த வேண்டும்.

மணமகன் மணப்பெண்ணைப் பார்த்து "நான் உன்னை எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்கிறேன்; உன்னுடைய நல நட்டங்களில் நான் பங்குகொள்வேன்; உன்னுடன் உடலும் உயிரும் போலவும், கண்ணும் இமையும் போலவும் கலந்து வாழ்ந்து வருவேன்"

எனக்கூறல் வேண்டும். மணமகள் மணமகனை நோக்கி "தங்களை எனது வாழ்க்கைத் துணைவராக உள்ளும் புறமும் ஒத்து ஏற்றுக் கொள்ளுகிறேன்; தங்களையே கடவுளாகக் கருதி வாழ்வேன். தங்கள் மனம் நோக நான் ஏதும் செய்யேன்; உத்தமப் பதிவிரதையாக வாழ்ந்து வருவேன். இல்லற நெறியை இனிது நடத்தி நல்லறம் பேணி வருவேன்" எனக் கூறல் வேண்டும்.

திருமங்கல நாண்பூட்டல்

பெரியோர்களின் ஆசீர்வாதத்திற்குப்பின் மணமகன் தனது சகோதரியின் உதவியோடு திருமங்கல நாணை ஆச்சாரியன் கொடுக்க மணமகள் கழுத்தில் பூட்ட வேண்டும்.

பின்னர் மணமக்களுக்குக் கண்ணேறு (திருட்டி) கழித்தல், வேண்டும். மங்கலப் பொருட்களுடன் மணமக்கள் மணமேடையைச் சுற்றி வலம்வந்து மனையினுட் புகுந்து பால் பழம் உண்ணல் வேண்டும். மறுதினம் பூஜை முடித்து மறுவீடு சென்றுவரல் வேண்டும்.

சஷ்டி அப்த பூர்த்தி
(அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா)

இவ்விழா கணபதி, தட்சிணமூர்த்தி, துர்க்கை, நந்தி, வைரவர், நவக்கிரகங்கள் முதலியோர்களை வழிபட்டுச் செய்யும் கிரியையாகும். பெற்றோரிடத்து நன்றி செலுத்துவதன் பொருட்டும் அவர்கள் உடல்நலம் குன்றாது திடம்பட்ட நலத்துடன் நீடித்து வாழ வேண்டும் எனவும் கருதிச் செய்யப்படும் சடங்காகும்.

திக்பாலர்களுக்கும், முனிவர்களுக்கும் சிறப்பு வழிபாடு செய்யலாம். அன்று உருத்திராக்க மாங்கல்யம் பூட்டுவர். சிற்றின்ப வாழ்க்கையை வெறுத்துக் கடவுள் பணியை மேற்கொண்டு இனிமேல் ஆன்மீக நெறியில் நிலைநிற்க வேண்டுமென அத்தம்பதியர் சங்கற்பம் பூண்பதை இது விளக்குகின்றது.

சதாபிடேகம்

எண்பது அல்லது எண்பத்து நான்கு ஆண்டுகளில் செய்யும் சடங்குக்கு சதாபிடேகம் என்று பெயர். என்பது ஆண்டுக்கு. மேல் வாழ்ந்தவர்களை "ஆயிரம் பிறை கண்டவர்" எனக் கூறுவர்.

அபரக்கிரியை

ஒரு மனிதர் இறந்தபின் அவனது ஆன்மா நலம் அடைதற்பொருட்டு, அவனது மக்கள் முதலியோர் செய்யும் கிரியைக்கு அபரக்கிரியை என்று பெயர். அபரம் – பிந்தியது. மக்கள் செய்யும் கிரியை இறந்தவனை ஈடேற்றுகின்றது. மகனைப் புத்திரன் என்பர். புத்திரன் என்பதற்குப் புத்தென்னும் நரகத்தில் தந்தை விழாமல் கரையேற்றுபவன் என்பது பொருளாகும். இதனாலேயே வள்ளுவர்,

"தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையால் வரும்"

எனக் கூறியுள்ளார்.

இறந்தவர்களுக்குப் புதல்வர் முதலியோர் செய்யும் கிரியைகள் அவர்களுக்குச் சாந்தி அளிக்கின்றன. ஆதலால், தாய் தந்தையர்க்கு அவர்கள் இறந்த பிறகு பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகளை முட்டுப்பாடின்றிச் செய்தல் வேண்டும். அதுவே அபரக்கிரியை யாகும். அந்த அபரக்கிரியை அந்தியேட்டி, (அந்திய + இட்டி = அந்தியேட்டி, இறுதியில் செய்யப்படும் யாகம்) அத்தி சஞ்சயனம், பாஷணபூசை, சிராத்தம் என நான்கு வகைப்படும்.

1. அந்தியேட்டி

ஆன்ம சுத்திக்காகச் செய்யப்படும் சமய அனுட்டானத்தில் நேர்ந்த குறைகள் அனைத்தும் இதனால் நீங்கும். பேரிகை அடித்துக் கும்ப பூசை செய்யவேண்டும். கும்பதீர்த்த நீரை பிரேதத்தின்மேல் ஊற்றவேண்டும். பின்னர் மஞ்சள்பொடி, மாப்பொடி முதலியவற்றை நீரில் கலந்து அதனையும் ஊற்றி பிரேதத்துக்கு ஆடைகட்டி அதனைப் பாடையின்மேல் வைத்து மேளதாளங்களுடன் சுடலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும். சுடலையில் ஆச்சாரியன் யாகேசுவரி பூசை, கும்ப அக்கினி பூஜை முதலியன செய்யவேண்டும். கிரியை செய்வோன் ஸ்நானம் செய்து சிவகும்பத்தைத் தலையில் வைத்துக் கும்பத்தில் துவாரம் செய்து சிதையை மூன்று தரம் சுத்தி தலைப்பக்கத்தில் நின்று உடைத்து, பிரேதத்தின் வாயில் அரிசி இட்டு, குண்டாக்கினியை எரியப் பண்ணி நெய், தேன், பால் இவற்றைச் சிரசில் இட்டு, பூர்ணாகுதி செய்யவேண்டும். அந்த மந்திரக்கருத்தாவது: "அக்கினிதேவனே! மந்திரத்தால் பரிசுத்தமாயிருக்கிற பிரேதத்தினது மந்திரத்தால் உண்டான பூர்ணாகுதியை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

2. அத்தி சஞ்சயனம்

அத்தி சஞ்சயனம் என்பதற்கு எலும்பைச் சேகரித்தல் என்பது பொருள். நெருப்புத் தணிந்தபிறகு பிருதிவி முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் பூசித்து, சிதையில் நீரைச் சொரிந்து, பிரித்து, கால், கை, மார்பு, நெஞ்சு, முகம், தலை முதலிய பகுதிகளின் எலும்பை அதற்குரிய மந்திரத்தைக் கூறி எடுத்துப் பாத்திரத்தில் வைத்து, அதை புண்ணியதீர்த்தத்தில் போடவேண்டும். சாம்பலை ஆழ்ந்த நீரில் இடவேண்டும்.

3. சிராத்தம்

சிரத்தையுடன் செய்யப்படுவது சிராத்தமாகும். பிதுர்க்கள் இறந்த நாளில் அவர்களின் மேல்கதிக்காக சந்ததிகள் சிரத்தையுடன் செய்யும் கிரியையாகும். இறந்த நாளேயன்றி அமாவாசை, வருடப்பிறப்பு முதலிய நாட்களிலும், சிறந்த தீர்த்தம், கோவில் உள்ள இடங்களிலும் இது செய்யவேண்டும்.

சிராத்தம் கொடுக்கும்பொழுது சொல்லவேண்டிய மந்திரத்தின் பொருள்:

"கலியுகத்தில், ஜம்புத்தீவில், 'பரதகண்டத்தில், – ஆண்டில், – அயனத்தில், – ருதுவில், – மாசத்தில், – பட்சத்தில், – திதியில், – வாரத்தில், – நட்சத்திரத்தில் எனது பிதா – நாமமுடையவர்க்கு சிவயோகம், சிவகரணம் சித்திப்பன் பொருட்டு அவரது புத்திரனாகிய நான் இந்த சிராத்தத்தைச் செய்கின்றேன். இதனை ஏற்றருளி ஆசீர்வதித்து அருளப் பிரார்த்திக்கின்றேன்".

மனித வாழ்வு பிறந்தது முதல் இறப்பது வரையில்தான் உண்டு எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், நமது இந்துமதம் மனிதன் பிறப்பதற்கு முன்பும், பிறந்து வாழும்பொழுதும், இறந்தபின்பும் அவ்வாழ்வு உண்டென வலியுறுத்தி அதற்குரிய கிரியைகளையும் வகுத்துள்ளது.

அக்கிரியைகளை தவறாது ஒவ்வொரு இந்துவும் கைக் கொண்டு ஒழுகித் தாங்களும் கடைத்தேறி, தங்கள் முன்னோர்களையும் கடைத்தேற்ற வேண்டும் என்பதை இதுகாறும் கூறிய சடங்கு முறைகள் இனிது விளக்குகின்றன.

28. அடியார்கள்

சிவாலயங்களில் சமயகுரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியோர்களுக்கும் திருத்தொண்டத்தொகையில் உள்ள இதர நாயன்மார்களுக்கும் உருவச்சிலை அமைத்து முறைப்படி வழிபாடு நடத்துவதோடு விழாக்களும் நடத்திவருகின்றனர். அதுபோலவே, விஷ்ணு ஆலயங்களிலும் ஆழ்வாராதிகளுக்கு உருவச்சிலை அமைத்து முறைப்படி வழிபாடாற்றி விழாக்கொண்டாடி எழுந்தருளப் பண்ணி வருகின்றனர். நமது ஆலயங்களில் இவ்வடியார்களுக்கு இத்தகைய மதிப்புகள் கொடுத்திருப்பதன் காரணத்தை ஆராய்வோம்.

தொண்டர் பெருமை

அடியார்களை நாயன்மார்கள், பத்தர்கள், தொண்டர்கள், ஆழ்வார்கள் எனப் பலவகையாகக் கூறுவர். "அளவிலாத பெருமையராகிய அடியார்" எனச் சேக்கிழார் சுவாமிகள் கூறுவதிலிருந்து அவர்களிடத்தில் மிகப்பெரும் பெருமைகள் இருந்தன என்பது விளங்குகிறது. பின்னும் அவர், திருக்கூட்டச் சிறப்பில்,

"மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்
தேசி னால்எத் திசையும் விளக்கினார்
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்"

எனவும் கூறுகின்றார்.

இதிலிருந்து அவர்களது உள்ளம் பரிசுத்தமுடையது எனவும், அவர்கள் தங்கள் ஒளியால் எத்திசையும் விளக்கினார் எனவும், அவர்கள் பெருமை அளவிடமுடியாது எனவும் விளங்குகின்றது. இவர்கள் எதுவரினும் இறைவன் அடியை மறவாது அவனுக்குப் பணிபுரிந்து வாழ்பவர் எனவும், குற்றமற்ற குணத்தினர் எனவும் கூறுகின்றார். மேலும்,

"கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

எனக் கூறுகின்றார்.

மிகுதியும் குறைவுமின்றி ஒரே நிலையில் இருத்தலும், பிச்சை எடுப்பினும், செல்வப் பெருக்கிலும் மனம் மாறாது என்றும்போலவே இருந்து பணிபுரிவர். இருவினை ஒப்பு வந்தாலன்றி இந்நிலை மற்றவர்க்கு ஏற்படாது. இறைவனோடு அன்னியமின்றிக் கூடுதற்குக் காரணமாகிய அன்போடு அவனை வழிபடும் பிறப்பேயன்றி, முத்தியையும் விரும்பாதவர் ஆவர்.

"ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ"

எனச் சேக்கிழாரே கூறுவாரெனில் அடியார் பெருமையை யாவரே அளவிடவல்லார். அதனாலேயே ஔவையாரும், "தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே" எனக் கூறினர்.

சிவஞானசித்தியாரில், "ஜீவன்முத்தன் மும்மலங்களையும் அறக்களை வன், பத்தர்களோடு இணங்கி நிற்பவன் எனவும் பத்தரது வேடத்தைச் சிவனெனக்கண்டு வழிபடுவன்" எனவும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய பெருமை வாய்ந்த அடியார்கள் வாழ்க்கை வரலாற்றினையும், அவர்கள் செய்த அற்புதச்செயல்களையும், இறைவன் மீது அவர்கள் பாடிய தோத்திரப் பாமாலைகளையும் அவர்களது சரித்திர, தோத்திரங்களால் நாம் விளங்க அறியலாம். இங்கு விரிக்கிற் பெருகுமாதலால் சுருக்கி விளக்கம் கூறுவோம்.

சிவபெருமான் சுந்தரருக்குத் "தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என அடியெடுத்துக் கொடுக்க, சுந்தரர் திருத்தொண்டர்த் தொகையைப் பாடியருளினார். அதன் வழிநூலாக திருத்தொண்டர்த் திருவந்தாதியை நம்பியாண்டார் நம்பிகள் பாடிஅருள, அதனைச் சேக்கிழார் சுவாமிகள் விரித்துரைத்தார். இது பெரியபுராணமெனவும் கூறப்படும். இதில் அந்தணர்கள் இருந்தனர்; அரசர் இருந்தனர். வேளாளர் இருந்தனர்; வேளார் (குயவர்) இருந்தனர்; வீரர்கள் இருந்தனர். ஆண்பாலரேயன்றிப் பெண்பாலரும் இருந்தனர். இவர்களை எவ்வித வேற்றுமையுமின்றி ஆலயங்களில் வழிபட்டு வருகின்றனர். வைணவத்திலும் அந்தணரும், அரசரும், ஆணும் பெண்ணும் பேதமின்றி ஆழ்வார்களாக விளங்கினர்.

மாணிக்கவாசகர்

சமயம் ஒரு காலத்தில் செழிப்புற்று வளரும்; மற்றொரு காலத்தில் மெலிவுற்றுத் தளரும். அச்சமயம் இறையருளால் இணையிலாப் பேரடியார்

தோன்றுவர். ஒரு காலத்தில் பௌத்த மதத்திரனரால் நமது இந்து மதம் தாக்கப்பெற்று தளர்ச்சியுற்றது. அவ்வேளையில் மாணிக்கவாசகர் திருவாவூரில் அவதாரம் செய்தார். பாண்டிய நாட்டின் மந்திரியாகத் திகழ்ந்து, பெருந்துறையில் குருவருள்பெற்று, திருவாசகம் பாடியருளி, சிதம்பரத்தில் பௌத்தர்களை வாதில் வென்று, ஊமைப் பெண்ணை பேசச்செய்தார். திருச்சிற்றம்பலம்உடையார் "பாவைபாடிய வாயால் கோவை பாடுக" என அகப்பொருள்துறை அமைந்த திருச்சிற்றம்பலக் கோவையாரையும் பாடியருளினார்.

இவர், "செய்ய திருவாசகங்கள் அறுநூறும், திருக்கோவை நானூறும்" மொழிந்தருளினார். ஆனி மாதம் மகநட்சத்திரத்தில் சிற்றம்பலத்தில் இறைவனுடன் ஐக்கியமாயினார்.

இறைவன் இவர்பொருட்டு நரிகளைக் குதிரைகளாக்கினார். வையை நதியை பெருக்கெடுத்தோடச் செய்தார். பிட்டுக்கு மண்சுமந்தார். பிரம்படிபட்டார். ஏடு எழுத்தாணி கொண்டு இவர் மொழிந்தவற்றை எழுதினார். இந்த அற்புத நிகழ்ச்சிகளை பின்வரும் பாடல் விளக்குகின்றது.

பெருகும் வையை தனை அழைப்பிக்குமே
பிரம்படிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெலாம் பரியாக நடத்துதுமே
நாடி மூகைதனைப் பேசுவிக்குமே
பாரிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரமன் ஏடெழுதக் கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் பாடலுமே
வாதவூரர் வண்தமிழ்ப் பாடலே.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

சீர்காழிப்பதியில் சிவபாதஇருதயர் திருமகனாய் அவதரித்து, மூன்றாம் ஆண்டில் அம்மை திருமுலைப்பால் உண்டு, ஞானம் பெற்று, தேவாரம் அருளிச் செய்து அம்மையப்பரைக் கண்குளிரக் கண்டுகளித்தார். பின் திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்று, திருவரத்துறையில் முத்துப் பல்லக்கு, முத்துக்குடை, முத்துச் சின்னம் முதலியன பெற்று, திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லி மழவன் மகளின் முயலகநோயை தீர்த்து, பட்டீச்சரத்தில் முத்துப்பந்தர் பெற்று,

திருவாவடுதுறையில் பொற்கிழி பெற்று, திருமருகலில் பாம்புகடித்திறந்த வணிகனை உயிர்பெறச் செய்து, திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று, திருமறைக் காட்டின் (வேதாரண்யம்) கதவின் அடைக்கப்பாடி, பாண்டியன் நாட்டில் வெப்பு நோய் தீர்த்து, சமணர்களை வென்று சமயத்தை நிலைநிறுவினார். சமணர்களை வெல்லும் வாதப்போரில் அக்கினியில் தமது ஏட்டை இட்டு வேகாமல் பசுமையுடன் எடுத்தும், வையை ஆற்று நீரில் எதிர்த்தோடும் படியாகவும் செய்தருளினார்.

திருக்கொள்ளம்பூதூரில் பதிகம் பாடி ஓடத்தை ஓடச்செய்து, திருவோத்தூரில் ஆண்பனையை பெண்பனையாக்கி, திருமயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணாக்கி, திருநல்லூர்ப் பெருமணத்தில் வைகாசி மூலநட்சத்தித்தில் முத்திபெற்றார்.

இவர் நிகழ்த்திய அற்புதங்களைக் குறிக்கும் பாடல் வருமாறு:

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை யாகுமே
பழைய என்புபொற் பாவையது ஆகுமே
சின அராவிடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

திருநாவுக்கரசர்

இவர் திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில், வேளாளர் மரபில் புகழனார்க்கும், மாதினியார்க்கும் புதல்வராய்த் திருவவதாரம் செய்தார். திலகவதியார் இவரது தமக்கையாவர். இவரது பிள்ளைத்திருநாமம் மருணீக்கியார் என்பதாகும்.

புகழனார் புகழே அனையார். கீர்த்தியையே வடிவமாகக் கொண்டவர். மாதினியார் – மாதர்களில் மிகவும் மேலான குணமுடையவர். திலகவதியார் – முகத்திற்கு அழகு செய்யும் குணமும், மணமும் உடைய திலகம் (பொட்டு) போன்று சிறந்தவர். மருணீக்கியார் – அஞ்ஞான இருளைப் போக்கி மெய்ஞ்ஞான ஒளியை அளிப்பவர். மருள் + நீக்கியார் – மருணீக்கியார்.

மருணீக்கியார் சமண மதம் சார்ந்து 'தருமசேனர்' எனும் பெயர்பூண்டு அம்மத நூல்களில் வல்லவரானார். திலகவதியார் திருவதிகையில் சிவத்தொண்டு செய்து வந்தார். இறைவன் இவருக்குச் சூலை நோயைக் கொடுக்க அதற்கு ஆற்றாது தமது தமக்கையார் பால் வந்து சேர்ந்தார். ஆலயத்திற்குச் சென்று சூலை நீங்கும் வண்ணம் தேவாரம்பாடி நோய் நீங்கினார். சைவ சமயத்தைச் சார்ந்தார்.

இச்செயலை அறிந்த பல்லவன் இவரை நீற்றறையில் வைத்தும், விடத்தைக் கொடுத்தும், இவர் முன்னர் யானையை ஏவியும், இவரைக் கல்லில் பிணித்துக் கடலில் தள்ளியும் பலவித இன்னல்களைச் செய்ய இறையருளால் அவற்றை வென்றார்.

திருத்தூங்கானைமாடத்தில் தனது தோளில் இடப, சூல முத்திரைகளைப் பொறிக்கப் பெற்றார். அப்பூதியார் மகனை அரவு தீண்ட, அவ்விடத்தை நீக்கியருளினார். திருமறைக் காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்ட கதவினைப் பதிகம்பாடித் திறக்கச் செய்தார். திருவையாற்றில் கயிலைக் காட்சி கண்டார். திருப்புகலூரில் சித்திரை மாதம் சதயநாளில் இறைவன் திருவடியில் சேர்ந்தார். இவர் செய்த அற்புதங்களை விளக்கும் பாடல் வருமாறு:

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழலின் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் யானை குனிந்து பணியுமே
கூர்அரா விடந் தீரெனத் தீருமே
கலைகொள் வேதவனப் பதி தன்னுளே
கதவு மீண்டு கடுகத் திறக்கும்
அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாடலே.

சுந்தர மூர்த்தி சுவாமிகள்

திருக்கயிலாயத்தில் ஆண்டவனுக்குத் திருத்தொண்டு செய்து வந்த ஆலாலசுந்தரர் திருநாவலூரில் சடையனார், இசைஞானியார் என்பவர்களுக்குப் புத்திரராய் அவதரித்தார். இவருக்கு விவாகம் நடந்த காலத்து இறைவன் அடிமை ஓலை காட்டி மணந்தடுத்து இவரை ஆட்கொண்டான். பின் திருவதிகையில் இறைவனின் திருவடி

சூட்டப்பெற்றார். ஆரூரில் பரவையாரை மணந்தார். அடியார்களது பெருமையை விளக்கும் திருத்தொண்டத்தொகையைப் பாடி அருளினார். குண்டையூரில் நெல்மலை பெற்றார். திருப்புகலூரில் இறைவனருளால் செங்கல்லைப் பொன்னாக்கிக் கொண்டார். திருமுதுகுன்றில் இறைவன் அளித்த பொன்னை ஆற்றிலிட்டு, திருவாரூர்க்குளத்தில் எடுத்துக்கொண்டார். திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தார். பரவையார் ஊடலை இறைவனைத் தூது விடுத்துப் போக்கிக் கொண்டார். திருவையாற்றில் காவிரி நீர்ப்பெருக்கடங்கி வழிவிடப் பதிகம் பாடினார். அவிநாசியில் முதலை வாய்ப்பிள்ளையை மீட்டருளினார். ஆடி மாதம் சுவாதி நாளில் வெள்ளையானையில் அமர்ந்து சேர வேந்தருடன் கயிலாய மலை சென்று முன்னைய திருத்தொண்டைச் செய்து வந்தார். இவர் செய்த அற்புதங்களை பின்வரும் பாடலால் அறியலாம்.

வெம்கரா வுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரண மீதில் இருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே
செங்கல் ஆனது தங்கம தாகுமே
திகழும் ஆற்றிட்ட செம்பொன் அளிக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துலங்க சுந்தரர் செந்தமிழ்ப் பாடலே

திருத்தொண்டத் தொகையில் எழுபத்திரண்டு அடியார்கள் கூறப்பட்டுள்ளனர். இதில், தில்லை வாழ்அந்தணர், பொய்யடிமையில்லாப் புலவர், (இவர்கள் நக்கீரர், பரணர், கபிலர் முதலியோர் ஆவர்) பத்தராய்ப் பணிவோர், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன் பாலேவைத்தார். திருவாரூர்ப் பிறந்தார், முப்பொழுதும் திருமேனி தீண்டுவார், முழுநீற் பூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் எனும் ஒன்பது அடியார்களும் தொகை அடியார் ஆவர். ஏனைய அறுபத்து மூன்று அடியார்களின் பெயர்களும், அவர்கள், இறைவன் திருவடியை அடைந்த மாதம், நட்சத்திரம் முதலியனவும் இங்கு கூறப்படும்.

எண்	அடியார்கள்	மாதம்	நட்சத்திரம்
1	திருநீலகண்டர்	தை	விசாகம்
2	இயற்பகையார்	மார்கழி	உத்திரம்
3	இளையான்குடி மாறர்	ஆவணி	மகம்
4	மெய்ப்பொருள் வேந்தர்	கார்த்திகை	உத்திரம்
5	விறன்மிண்டார்	சித்திரை	திருவாதிரை
6	அமர்நீதியார்	ஆனி	பூரம்
7	எறிபத்தர்	மாசி	அத்தம்
8	ஏநாதிநாதர்	புரட்டாசி	உத்திராடம்
9	கண்ணப்பர்	தை	மிருகசீரிஷம்
10	குங்கிலியக்கலயர்	ஆவணி	மூலம்
11	மானக்கஞ்சாறர்	மார்கழி	சுவாதி
12	அரிவாட்டாயர்	தை	திருவாதிரை
13	ஆனாயர்	கார்த்திகை	அத்தம்
14	மூர்த்தியார்	ஆடி	கார்த்திகை
15	முருகர்	வைகாசி	மூலம்
16	உருத்திரபசுபதியார்	புரட்டாசி	அசுவனி
17	திருநாளைப்போவார்	புரட்டாசி	ரோகிணி
18	திருக்குறிப்புத் தொண்டர்	சித்திரை	சுவாதி
19	சண்டேசுவரர்	தை	உத்திரம்
20	திருநாவுக்கரசர்	சித்திரை	சதயம்
21	குலச்சிறையார்	ஆவணி	அனுடம்
22	பெருமிழலைக்குறும்பர்	ஆடி	சித்திரை
23	காரைக்கால் அம்மையார்	பங்குனி	சுவாதி
24	அப்பூதி அடிகள்	தை	சதயம்
25	திருநீலநக்கர்	வைகாசி	மூலம்
26	நமிநந்தியார்	வைகாசி	பூசம்
27	திருஞானசம்பந்தர்	வைகாசி	மூலம்
28	ஏயர்கோன்கலிக்காமர்	ஆனி	ரோகிணி
29	திருமூலர்	ஐப்பசி	அசுவனி
30	தண்டி அடிகள்	பங்குனி	சதயம்
31	மூர்க்கர்	கார்த்திகை	மூலம்
32	சோமாசிமாறர்	வைகாசி	ஆயிலியம்
33	சாக்கியர்	மார்கழி	பூராடம்
34	சிறப்புலியார்	கார்த்திகை	பூராடம்
35	சிறுதொண்டர்	சித்திரை	பரணி
36	சேரமான்பெருமாள்	ஆடி	சுவாதி

எண்	அடியார்கள்	மாதம்	நட்சத்திரம்
37	கணநாதர்	பங்குனி	திருவாதிரை
38	கூற்றுவர்	ஆடி	திருவாதிரை
39	புகழ்ச்சோழர்	ஆடி	கார்த்திகை
40	நரசிங்கமுனையரையர்	புரட்டாசி	சதயம்
41	அதிபத்தர்	ஆவணி	ஆயிலியம்
42	கலிக்கம்பர்	தை	ரேவதி
43	கலியர்	ஆடி	கேட்டை
44	சத்தியார்	ஐப்பசி	பூசம்
45	ஐயடிகள் காடவர்கோன்	ஐப்பசி	மூலம்
46	கணம்புல்லர்	கார்த்திகை	கார்த்திகை
47	காரியார்	மாசி	பூராடம்
48	நெடுமாறர்	ஐப்பசி	பரணி
49	வாயிலார்	மார்கழி	ரேவதி
50	முனையடுவார்	பங்குனி	பூசம்
51	கழற்சிங்கர்	வைகாசி	பரணி
52	இடங்கழியார்	ஐப்பசி	கார்த்திகை
53	செருத்துணையார்	ஆவணி	பூசம்
54	புகழ்த்துணையார்	ஆவணி	ஆயிலியம்
55	கோட்புலியார்	ஆடி	கேட்டை
56	பூசலார்	ஐப்பசி	அனுடம்
57	மங்கையர்க்கரசியார்	சித்திரை	ரோகிணி
58	நேசர்	பங்குனி	ரோகிணி
59	கோச்செங்கட்சோழர்	மாசி	சதயம்
60	திருநீலகண்டயாழ்ப்பாணர்	வைகாசி	மூலம்
61	சடையனார்	மார்கழி	திருவாதிரை
62	இசைஞானியார்	சித்திரை	சித்திரை
63	சுந்தரமூர்த்திசுவாமிகள்	ஆடி	சுவாதி

சிதம்பரத்தில் தாண்டவம் புரியும் நடராஜப்பெருமானுக்குத் திருத்தொண்டு செய்துவரும் அந்தணர்களே தில்லை வாழந்தணர்கள் எனப்படுவர். இவர்கள் மூவாயிரவர் ஆவர். ஓதல், ஓதுவித்தல், வேட்டல். வேட்பித்தல், ஈதல், ஏற்றல் எனும் அறுதொழில் ஓம்பிவந்தனர். நான்மறை ஆறங்கங்களில் வல்லவர்கள்.

திருநீலகண்டர் தில்லையில் வாழ்ந்தவர். இளமை மீதூர, அருந்ததியனைய கற்பின்மிக்க மனைவியிருந்தும், இன்பத்துறையில்

எளியராகி ஒரு பரத்தைபால் அணைந்து வந்தார். அதைக்கண்ட அவர் மனைவியார், "மானம் முன்பொறாது வந்த ஊடலால்" உடனுறைவுக்கு இசையாராயினார். "கணவர் வேண்டுவ இரந்து கூறி" அருகில் செல்ல, "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டமென்றார்."

இறைவன் மீது ஆணை கேட்ட பெரியவர், எம்மை என்றதனால் மற்ற பொதுமாதர்களையும் என் மனத்தினாலும் தீண்டேன் என்று கூறி விலகினார். மாதர்மீது வைத்த காதலை அறவே துறந்து இறைவன்மீது வைத்த பேரன்பினைப் பெரிதாய் மதித்ததால் இவர் பெரியாராயினர். இவ்விரதத்தை இனிது பேணிய இவரது இறைஅன்பின் திறத்தை உலகிற்கு அறிவித்து இறைவன் அருள்புரிந்தான். உலக இன்பங்களினும் இறையின்பமே ஏற்றமுடையது என்பதை இவரது சரிதை விளக்குகின்றது.

இயற்பகை நாயனார்பால், இறைவன் விபூதி தரித்த காமுகனாக வேடம் பூண்டுவந்து இவர் மனைவியை வேண்டி நிற்க இவர் மகிழ்ந்து மனைவியை அழைத்து, "உன்னை இவருக்குக் கொடுத்தேன்" என்றனர். மனைவியார் கணவனாரிடம், "தங்கள் கட்டளைப்படி நடப்பதே என் கடமை; என் உயிருக்கும் துணைவராகிய நீர் சொன்னபடி செய்வதையன்றி வேறு சிந்திப்பதற்கு யாதும் இல்லை" எனக்கூறி இசைந்து சென்றார். சுற்றத்தார் சினந்து வந்து இயற்பகையை எதிர்க்க அவர்கள் மீது வாளமர் புரிந்து வெற்றி பெற்றார். இறைவன் இவரது செயற்கருஞ்செயலைக் கண்டு மெச்சி இவருக்குச் சிவலோக பதவி கொடுத்தருளினார்.

நாம் உலகில் அனுபவித்து வரும் மண், பெண், பொன் எனும் செல்வங்கள் இறைவனுக்கே உரியன. அதை இறைவனோ, இறைவன் அடியார்களோ வேண்டுமென விரும்பும் பொழுது கொடுத்துவிடுவதே மறையாகும் அதனையே இயற்பகையார் கைக்கொண்டார்.

இளையான்குடிமாறர் சரித்திரத்தால் அடியார்கள் இம்மைச் செல்வமனைத்தையும் இறைவன் அடியார்களுக்கு அளிக்கச் சிறிதும் தயங்காதவர்களென்று தெரிகிறது.

மாறனார்,

'செல்வ மேவிய நாளில் இச்செயல் செய்வதன்றியும்மெய்யினால்
அல்லல் நல்குரவு ஆனபோதிலும் வல்லர் என்று அறிவிக்கவே"

இறைவன் வறுமையைத்தர இச்சோதனையிலும் இவர் வெற்றி பெற்றார். சிலர் அடியார்களை இறைவன் கடினமாகச் சோதிக்கின்றான் என இறைவன் மீது குற்றம்சாட்டுகின்றனர். எவ்விதச் சோதனையாலும் அடியார்கள் தோல்வி அடையார்கள் என்பதை உலகிற்கு விளக்குவதே ஆண்டவனது குறிக்கோளாகும்.

மெய்ப்பொருள் நாயனார் வரலாறு மிகவும் வியப்பினை விளைவிப்பதோர் அற்புதச் செயலாகும். மனிதனது பற்று மண்ணில், பெண்ணில், பொன்னில், மக்களில், ஆட்சியில், உறுப்பில், உடம்பில் என முறையே ஏறிச் செல்லுகின்றது. இறுதியாக,

"என்னில் ஆரும் எனக்கு இனியா ரில்லை
என்னினும் இனியான் ஒருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே" (அப்பர்)

என்ற முடிவுக்கு வந்து சேருகின்றான். அவனியில் இந்த அற்பப் பொருள்களைப் பெரிதாகக் கருதாமல் ஆண்டவனேயே பெரிதாக மதிக்கின்றவர்களே அடியவர் ஆவர்.

மாறுவேடம் பூண்டுவந்த முத்தநாதனை இவர் வரவேற்பதிலிருந்தும், அவனிடம் உபதேசம் கேட்க முறைப்படி அமர்ந்ததிலிருந்தும், இவரது பண்பாடு நன்கு விளங்குகிறது. புத்தகம் அவிழ்ப்பான் போலப் பையிலிருந்து ஆயுதத்தை எடுத்து இவருக்கு ஊறு செய்தபோது அவனைத் தொழுது நின்றதிலிருந்து, சிவனடியார்களைச் சிவனெனப் பாவிக்கும் இவரது சிறப்பு விளங்குகின்றது. இதனால் சேக்கிழார்,

"இன்னுயிர் செகுக்கக்கண்டும் எம்பிரான் அன்பரென்றே
நன்னெறி காத்த சேதி நாதனார்"

எனச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

சிறுத்தொண்டர் தனது அருமைப் புதல்வனை அடியாருக்கு அமுதூட்ட வாளால் அரிந்தார். குழந்தையிடத்தில் இவர் வைத்திருந்த அன்பு அளவற்றதெனினும், இறைவனடியாரை அமுதூட்டி உபசரிக்கும் பேற்றின்முன் அவ்வன்பு பெரிதாக மதிக்கப்படாதாயிற்று.

கண்ணப்பர் தனது கண்ணைப் பிடுங்கி இறைவனது கண்ணில் அப்புவதற்குச் சிறிதும் யோசிக்கவில்லை. இறைவன் கண் இரத்தமின்றி இருக்க வேண்டித் தனது கண்ணை அன்பின் மிகுதியால் பிடுங்கி இறைவன் கண்ணின் மீது அப்பினார். மகிழ்ச்சியோடு சிறிதும் வருத்தமின்றிச் செய்தார். நலங்கண்ட பொழுது நனி மகிழ்வு எய்தினார்.

மற்றொரு கண்ணில் மீண்டும் இரத்தம் வடிந்தபொழுது தனது மற்றைக் கண்ணையும் தோண்டத் துணிந்து, இடம் அறிய வேண்டிச் செருப்புக்காலால் மிதித்துக் கொண்டு கண்ணைப் பிடுங்கும் பொழுது இறைவன், "நில்லு கண்ணப்ப!!" என்று தடுத்து நிறத்தித் தன்பக்கத்தில் நிறுத்திக்கொண்டார். இவரது செயல்களை சிவகோசரியாருக்குக் கனவில் இறைவன்,

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம் என்றும்"

உணர்த்தியருளினார். இது கண்ணப்பரின் அன்பின் திறத்தைக் காட்டுகிறது. இவரது செயலை,

".. தொண்டு செய்து,
நாளாறில் கண் இடந்து அப்பவல்லேன் அல்லேன்"

என முற்றும் துறந்த பட்டினத்துஅடிகள் வியந்து கூறுகின்றார்.

சேரமான் பெருமாள் யானை மீது பவனி வரும் பொழுது உவர்மண் சுமந்து வெண்ணிற மேனியனாய் வந்த வண்ணானை வணங்கினார். வண்ணான் மிகவும் அஞ்சி, தான் வண்ணான் என அறிவித்த பிறகும் வணங்கி,

"திருநீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர்
வருந்தா தேகும் என"

விடுத்ததிலிருந்தும், அரசாட்சி ஏற்றுக்கொள்ள மந்திரிகள் முதலாயினோர் வந்து விண்ணப்பித்த பொழுது, "இன்பம் பெருகும் திருத்தொண்டுக்கு இடையூறாக இவர் மொழிந்தார்'' எனக் கூறியதிலிருந்தும் இவரது உள்ளத்தின் உயர்வு விளங்குகின்றது.

சிவகாமி ஆண்டாரது பூக்கூடையை புகழ்ச்சோழரது பட்டத்து யானை பறித்து எறிந்ததை அறிந்த அடியார் குறைகளைக் கண்டவிடத்து உண்டாகும் இவரது மனநிலையையும், இறைவனது பூஜைப் பொருள்களில் இவர் வைத்திருந்த மதிப்பையும் விளக்குகின்றது.

மானக்கஞ்சாறர் மணப்பெண்ணாகிய தனது மகளின்கூந்தலை அடியவர்க்கு அறுத்துக் கொடுத்தலிருந்து அவரது அடியார் பக்தியை அறிந்து கொள்ளலாம்.

திருநாளைப்போவார் திருப்புன்கூரில் இறைவன் அருளால் நந்தி விலகத் தரிசனம் செய்ததும், தில்லைக் கூத்தன் தரிசனம் பெற விரும்பிச் சிதம்பரம் சென்று இறை அருளால் ஜோதியில் கலந்ததும், இறைவன் அன்பு செய்வாரை ஆட்கொள்ளுபவன் என்பதை விளக்குகின்றது.

அப்பூதி அடிகள் திருநாவுக்கரசரின் பெருமை உணர்ந்து அவரது பெயரையே தண்ணீர்ப் பந்தல் முதலிய நிலையங்களுக்கும், தனது மக்களுக்கும் இட்டு வழங்கியதிலிருந்தும், தண்ணீர்ப்பந்தலில் உமது பெயர் எழுதாமல் வேறொரு பெயர் எழுதக் காரணம் என்னவென்று நாவுக்கரசர் கேட்டபொழுது,

"..........மன்னவன் சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ வேறொருபேர்"

எனக் கூறியதிலிருந்தும், மைந்தன் இலைஅறுக்கச் சென்ற விடத்து அரவு தீண்டி இறக்க, அதனைப் பொருட்படுத்தாது குருவுக்கு அமுதூட்டும் செயலைப் பெரிதாகக் கருதியதிலிருந்தும், இவரது குருபக்தி இனிது விளங்கும். ஏயர்கோன் கலிக்காமர், சுந்தரர் இறைவனைத் தூதுவிடுத்ததறிந்து வெகுண்டதும், சூலை நோய் நீக்கச் சுந்தரர் வருவதை அறிந்து தனது வயிற்றைக் கிழித்துக் கொண்டதும் இறைவனைத் தொண்டர்கள் தூயகாரியங்களுக்கே பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதை விளக்குகிறது.

திருத்தொண்டத்தொகை அடியார்களில் ஆண்பாலரைப் போலவே பொண்பாலரும் அடியார்களாய் அமர்ந்திருந்தனர். அவர்கள் மங்கையர்க்கரசியார், காரைக்கால் அம்மையார், இசைஞானியார் என்போர் ஆவர். இவர்களுள் மங்கையர்க்கரசியார், "மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்" என்று சேக்கிழார் சுவாமிகளால் பாராட்டப் பெற்றுள்ளார்.

பாண்டி நாட்டில் சைவம் தளர்ந்து சமணம் வளர்வதைப் பாண்டிமா தேவியார் கண்டு வருந்தி, திருமறைக்காட்டிலிருந்த சம்பந்தரை மதுரைக்கு வரவழைத்ததும், பாண்டியன் நெடுமாறன் சுரநோய் உற்றபொழுது சம்பந்தரைக் கொண்டு தீர்க்கச் செய்ததும், சம்பந்தருக்கு சமணர்கள் இடையூறு செய்வார்களோ என வருந்தியதும், அம்மையாரின் சமயப்பற்றை இனிது விளக்குகின்றது. சம்பந்தர் சமண மதத்தை அழித்துச் சைவத்தை நிலை நிறுவ உறுதுணையாயிருந்தவர் இவ்வம்மையாரேயாவர்.

சம்பந்தர்,

"மங்கையர்க்கரசி வளர்கோன்பாவை வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி"

என இவரைப் பதிகத்தில் பாராட்டியுள்ளார்.

காரைக்காலம்மையின் கணவனாகிய வணிகன் அனுப்பிய இருகனிகளில், அம்மையார் ஒரு கனியை அடியவருக்கு இட்டு அமுதருத்தியது அவர் கொண்ட அடியவர் பத்தியை இனிது விளக்குகின்றது.

மற்றொரு கனியை கணவனுக்குப் படைத்தபொழுது அதனை உண்ட அவர் கணவன் இரண்டாவது கனியையும் கொண்டு வரும்படிக் கூற, தனியிடத்தில் சென்று இறைவனை வேண்டிக் கனியைப் பெற்றதிலிருந்து இவர் இறையருள் பெற்றவர் என்பது புலப்படுகின்றது. மீண்டும் ஒருகனியைப் பெற்றபொழுது இவரது தெய்வீகத்தை உணர்ந்த இவர் கணவன் இவரைத் தெய்வமாகக் கருதி விட்டகன்றதிலிருந்து இவர் ஒரு தெய்வமாது என்பதும் தெரிகின்றது.

இந்த அற்புதங்களை வெளியிடாத அம்மையாரின் பண்பு இறையருளை வெளிப்படுத்துதல் கூடாது என்பதை விளக்குகின்றது. அம்மையாரை அவரது கணவன், தனது இரண்டாவது மனைவி மக்களுடன் சேர்ந்து வணங்கியது அம்மையார்பால் அவன் வைத்த மதிப்பினை வெளிப்படுத்துகின்றது எற்புடம்பு (பேய் வடிவம்) பெற்றதும். மீண்டும் ஆலங்காட்டில் இறைவன் அடிக்கீழ் அமர்ந்ததும் அம்மையாரின் அருட்பேற்றை விளக்குகின்றது.

இறைவன் மீது அம்மையார் பாடிய பதிகங்களும், இரட்டை மணி மாலையும், அற்புதத் திருவந்தாதியும் அம்மையாரின் கவித்வ சக்தியைக் காட்டுகின்றது.

இசைஞானியார் சடையனாருக்கு இசைந்த ஞானியாராகி சடையனாரது மனைவியராய் இல்வாழ்க்கை நடத்தி, சுந்தரரை மகனாராகப் பெறும் பேறுபெற்றார்.

திலகவதியார் அவரது பெற்றோர் தனக்கென மணம் பேசிய கலிப்பகையார் இறக்க, அது கேட்டுத் தானும் உயிர்விடத் துணிந்ததிலிருந்து அவரது உயர்ந்த பண்புகள் விளங்குகின்றது. தம்பியாராகிய நாவுக்கரசர் உயிர் வாழ வேண்டித் தவநிலை ஏற்று உறைந்ததும், சமணம் சார்ந்த தம்பியை சைவ சமயத்தில் சாரும்படிச் செய்ததும் அவரது சைவப் பண்புகளை நன்கு விளக்குகின்றது.

இதர அடியார்களின் சரிதங்களைப் பெரிய புராணத்தில் கண்டு இவ்வாறு ஆராய்ந்து, அடியார்களிடத்து மதிப்பு வைத்து, அவர்களது குருபூசை விழாவினைக் கொண்டாடி அடியார்க்கடியாராகி, நாம் ஆண்டவன் அருள் பெற்று வாழ்வோமாக.

சந்தானாச்சாரியர்கள்

மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் எனும் நால்வரும் சந்தானாச்சாரியர்கள் எனக் கூறப்படுவர். (சந்தானம் – பரம்பரை). சந்தானம் அகச்சந்தானம், புறச்சந்தானம் என இருவகைப்படும். கைலை மலையில் வாழ்வோர் அகச்சந்தானத்தார். அப்பரம்பரையில் நிலவுலகத்தில் தோன்றிய மெய்கண்டதேவர் முதலியோர் புறச்சந்தானத்தார் ஆவர்.

அகச்சந்தானாச்சாரியார்கள் ஸ்ரீகண்ட பரமசிவனிடம் சிவஞான உபதேசம் பெற்ற நந்தி தேவர், சனற்குமாரர், சத்திய ஞானதரிசனிகள், பரஞ்சோதியார் முதலியோர் ஆவர். இவர்கள் கைலையில் வாழ்வோர்.

பரஞ்சோதி முனிவரிடம் மெய்கண்ட தேவரும், அவரிடம் அருணந்தி சிவமும். அருணந்தி சிவத்திடம் மறைஞானசம்பந்தரும், மறைஞான சம்பந்தரிடம் உமாபதி சிவமும் உபதேசம் பெற்றனர். இதை மெய்கண்ட

சந்தானா பரம்பரை என்பர். இப்பரம்பரையைச் சார்ந்தவர்களே திருவாடுதுறை ஆதீன குரவர்களும், தருமபுர ஆதீன குரவர்களும் ஆவர்.

சமயகுரவர்கள் தோத்திர வடிவில் கூறியவற்றை, சந்தானாச் சாரியர்கள் சாத்திர வடிவில் வடித்துக் காட்டினர்.

மெய்கண்ட தேவர்

திருப்பெண்ணாகடத்தில் அச்சுதக் களப்பாளர் பிள்ளையாய் இவர் அவதரித்தார். இவருக்குக் குழந்தைப் பருவத்திலேயே பரஞ்சோதியார் சிவஞானபோதத்தை உபதேசம் செய்தருளினார். இவரால் அருளிச் செய்யப்பட்டதே சிவஞ்னபோதம் எனும் சிறந்த நூலாகும். திருவெண்ணெய் நல்லூரில் ஐப்பசி சுவாதியில் சிவபிரான் திருவடி நீழலிற் கலந்தார்.

அருணந்தி சிவாச்சாரியர்

இவர் திருத்துறையூரில் அவதரித்தார். இவருக்குச் சகலாகம பண்டிதர் எனும் ஒரு பெயர் உண்டு. இவர் மெய்கண்ட தேவரின் தந்தையாருக்குக் குருவாயிருந்தார். பின்னர் மெய்க்கண்ட தேவரின் சீடரானார். சிவஞானசித்தியாரையும், இருபா இருபஃது எனும் நூலையும் இயற்றி அருளினார். சித்தியார் சுபக்கம், பரபக்கம் எனும் இரு பிரிவுகளுடையது. இவர் திருத்துறையூரில் புரட்டாசி மாதம் பூர நட்சத்திரத்தில் இறைவன் திருவடிக்கீழ் உறைந்தார்.

மறைஞான சம்பந்தர்

இவர் திருப்பெண்ணாகடத்தில் வசித்தவர். அருணந்தி சிவத்திடம் உபதேசம் பெற்றவர். சிதம்பரத்தை அடுத்த திருக்களாஞ்சேரியில், ஆவணி உத்திரத்தில் இறையடி நிழலில் கலந்தார்.

உமாபதி சிவம்

தில்லை மூவாயிரவரில் இவரும் ஒருவர். மறைஞான சம்பந்தரிடம் உபதேசம் பெற்றவர். சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த அட்டகம் எனும் எட்டு நூல்களை இவர் இயற்றியுள்ளார். தில்லையில் ஏறாதிருந்த கொடியைக் 'கொடிக்கவி' பாடி ஏற்றினார். கொற்றவன்குடியில் சித்திரை மாதம் அத்த நட்சத்திரத்தில் இறையருளில் கலந்தருளினார்.

வைணவ அடியார்கள்
ஆழ்வார்கள்

ஆழ்வார்கள்,

"பொய்கை பூதன் பேயார் பொன் மகிழைக் கோன்மாறன்
செய்ய மதுரகவி சேரர்பிரான் வையகமென்
பட்டர்பிரான் கோதை தொண்டர்பாதப்பொடி
கட்டவிழ்த்தார் வாட்கலியன்"

எனப் பன்னிருவராவர்,

ஆழ்வார்கள்	அம்சம்	பாடிய பாசுரம்
1. பொய்கை ஆழ்வார்	பாஞ்சசன்யம்	100
2. பூதத்தாழ்வார்	கதை	100
3. பேயாழ்வார்	நந்தகம்	100
4. திருமழிசை ஆழ்வார்	சக்ரம்	216
5. மதுரகவி ஆழ்வார்	வைநதேயர்	11
6. நம்மாழ்வார்	நாம்சம்	1296
7. குலசேகராழ்வார்	கௌஸ்துபம்	105
8. பெரியாழ்வார்	கருடன்	473
9. ஆண்டாள்	பூமிதேவி	173
10. தொண்டரடிப் பொடி ஆழ்வார்	வனமாலி	55
11. திருப்பாணாழ்வார்	ஸ்ரீ வத்ஸம்	10
12. திருமங்கை ஆழ்வார்	சார்ங்கம்	1361

முதலாழ்வார்கள்

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் முதலில் தோன்றியதால் முதலாழ்வார்கள் எனப்படுவர். இவர்கள் மூவரும் தாயின் வயிற்றில் பிறவாது மலர்களில் தோன்றியவர்கள்.

1. பொய்கை ஆழ்வார்

இவர் பாஞ்சசன்யத்தின் அம்சமாக பூவுலகம் பொலிவுறக் காஞ்சிபுரத்தில் ஒரு தாமரைத் தடாகத்தில், ஒரு பொற்றாமரையில் அவதரித்தார். இறைவனிடம் பேரன்பு பூண்டவர். இவர் பாடிய பாசுரங்கள்

நூறு. அதற்கு முதல்திருவந்தாதி என்று பெயர். பொய்கையில் அவதரித்ததால் பொய்கை ஆழ்வார் என்ற நாமம் பெறறார்.

2. பூதத்தாழ்வார்

இவர் இறைவனது கதாம்சமாவர். மகாபலிபுரத்தில் குருக்கத்தி மலரில் தோன்றினார். எம்பெருமானிடம் பக்தி நிறைந்தவராய் இரண்டாம் திருவந்தாதியைப் பாடி அருளினார்.

3. பேயாழ்வார்

இவர் பரமபதத்திலிருந்து நீங்கி நந்தகாம்சமாய் திருமலையில் மாதவப்பெருமாள் கோவிலுக்கு அருகாமையில் கூவத்தின் (கிணற்றின்) இடையில் மலர்ந்திருந்த செவ்வல்லி மலரில் தோன்றினார். திருமாலிடம் இடையறாப் பத்திபூண்டு தொண்டு செய்து வந்தார். இவர் பாடியது மூன்றாம் திருவந்தாதியாகும்.

முதலாழ்வார்கள் மூவரும், 'நாராயணனே முத்தி தரத்தக்கவன்' எனும் முடிவையுடையவர்கள். இவ்வுலக மக்கள் திருமாலின் திருவடிகளைச் சேரவேண்டும் என்னும் முயற்சியை மேற்கொண்டவர்கள்.

இம்மூவரும் இறைவனுடைய தாசர்களாகிப் பலதலங்களில் பரந்தாமனை வழிபட்டுத் திருக்கோவிலூர் வந்தடைந்தனர். இவர்கள் ஒருவரை ஒருவர் முன் அறியாதவர்கள் என்பர்.

பொய்கையார் ஒரு பாகவதர் வீட்டின் இடைகழியில் சயனித்துக் கொண்டிருக்க, சிறிது நேரத்தில் பூதத்தாழ்வார் அங்குவர இருவரும் இருந்தனர். பின்னர் பேயாழ்வார் வர மூவரும் நின்று கொண்டிருந்தனர். இவர்களோடு நாராயணனும் வந்து நின்றுகொண்டு மேலும் நெருக்கத்தை உண்டுபண்ண, அந்த இருளில் இவர்கள் தங்கள் ஞான ஒளியால் இறைவனைக் கண்டு மகிழ்ந்தனர்.

4. திருமழிசை ஆழ்வார்

திருமழிசை என்ற தலத்தில் அவதரித்தவராகையால் இவர் திருமழிசை ஆழ்வார் எனப் பெயர் பெற்றார்.

இவர் சக்ராம்சமாக அவதரித்தவர். சிவவாக்கியர் எனும் பெயரோடு சைவ சமயத்தில் இருந்தவர் என்றும், பேயாழ்வாரிடம் உபதேசம் பெற்று

வைணவத்தைச் சார்ந்தவர் எனவும் கூறுவர். இவர் ஒரு குகையில் வாழ்ந்து வருகையில் முதலாழ்வார்கள் மூவரையும் கண்டார் என்பர். திருச்சந்தவிருத்தம் நூற்றிருபதும். நான்முகன் திருவந்தாதி தொண்ணூற்றாறுமாக, இருநூற்றுப்பதினாறு பாசுரங்கள் பாடியுள்ளார்.

5. மதுரகவி ஆழ்வார்

இவர் பார்வையின் எதிரே ஜோதி ஒன்று தோன்ற, அதைக் காண விரும்பி அதன்வழிச் சென்று திருக்குருகூரில் (ஆழ்வார் திருநகரி) நம்மாழ்வாரைக் கண்டு, "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத்தின்று எங்கே கிடைக்கும்" என்று கேட்க, அதற்கவர், "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என அருளிச் செய்ய, தம்மை அங்கீகரித்தருள வேண்டும் என்று பிரார்த்தித்து அவருக்குச் சீடரானார். நாம்மாழ்வாரை, "கண்ணி நுண் சிறுத்தாம்பு" எனும் பாசுரத்தால் துதித்துள்ளார்.

6. நம்மாழ்வார்

இவர் சேநாம்சமாய்த் தோன்றியவர். தமிழ் வேதங்களை அருளிச் செய்தார். திருக்குருகூரில் வேளார் மரபில் காரி என்பவர்க்கும் உடைய நங்கைக்கும் புத்திரராய் அவதரித்தார். ஒருகால் இவர்கள் திருவண பரிசாரத்திலிருந்து திருக்குருகூருக்கு வரும்பொழுது திருக்குறுங்குடி இறைவனைச் சேவித்து, தங்கட்குப் புத்திரப்பேறு அருளிச் செய்ய வேண்டினர். இறைவன், "நாமே உமக்குப் புத்திரனாவோம்" என அருளினார்.

உடையநங்கை கருகொண்டு நம்மாழ்வாரைப் பெற்றெடுத்தனர்கள். திருப்புளி ஆழ்வார் அடியில் ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டிலில் கிடத்தி, மாறன் எனத் திருமாமம் சூட்டினர். குழந்தை தொட்டிலிலிருந்து வழுவித் தரையில் வந்து பத்துமாசனமிட்டு ஞான முத்திரையோடு வீற்றிருந்தது. குழந்தையான ஆழ்வார் பதினாறு வயதுவரை லௌகீகரைக் கண்திறந்து பாராது மௌனியாய் இருந்தனர். மதுரகவி ஆழ்வார் தன்பால் வர அவர்பால் அருட் கண்ணோட்டம் செலுத்தி, அவர் கேள்விக்கு விடை அளித்து அவரை ஆட் கொண்டனர். நம்மாழ்வார் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று பாசுரங்கள் பாடி அருளினார். அதற்குத் திருவாய்மொழி என பெயர் கூறுவர்.

7. குலசேகராழ்வார்

சேரநாட்டில் கோழிக்கோடு எனும் இராஜதானியில் திரடவிரதன் எனும் மன்னனுக்கு மகனாய்த் தோன்றினார். இவரது திருநாமம் குலசேகரன் என்பதாகும். குலசேகரன் என்பதற்குக் குலத்திற்குச் சிரோபூடணமாக உள்ளவன் என்பது பொருள். இவர் சோழ, பாண்டியர்களை வென்று அவ்விரு நாடுகளையும் அடக்கி ஆண்டார் என்பது, "கொல்லி காவலன், கூடல்நாயகன், கோழிக்கோன்குலசேகரன்" என்பதால் அறியலாம். இவருக்கு மகாவிஷ்ணுவே சிறந்த தெய்வமெனத் தோன்றியதால், திருமாலின் விபவாவதாரமான இராமாவதார, கிருஷ்ணாவதாரங்களிலும், அர்ச்சாவதாரத்தில் திருவரங்கம், திருவேங்கடம் முதலிய நாதர்களிடத்தும் பத்திபூண்டு ஒழுகினார். இராமாயண காலசேபம் இவர் முன் நடக்கும். வடமொழியில் முகுந்த மாலையும் பாடியுள்ளார்.

அடியார்களிடத்தில் மிகுந்த பத்தியுடையவர். இவர் பாடியது பெருமாள் திருமொழி எனப்படும். பெருமாள் திருமொழி என்பதற்குப் பெருமாளாகிய குலசேகராழ்வார் பாடிய சிறந்த வார்த்தை எனவும், பெருமானாகிய திருமாலின்மீது ஆழ்வார் அருளிய பாடல் எனவும் பொருள் கூறுவர். இத்திருமொழி நூற்றைந்து பாசுரங்களைக் கொண்டதாகும். முதல் மூன்று திருமொழியில் திருவரங்கம் பெரிய கோயிலைப் பற்றியும், நான்காம் திருமொழியில் திருவேங்கடத்தைப் பற்றியும், ஐந்தாம் திருமொழியில் விற்றுவக்கோட்டைப் பற்றியும், ஆறாம் திருமொழியில் ஆய்ச்சியர் ஊடலைப் பற்றியும், ஏழாம் திருமொழியில் தேவகியின் புலம்பலைப் பற்றியும், எட்டாம் திருமொழியில் நாமரின் தாலாட்டைப் பற்றியும், ஒன்பதாம் திருமொழியில் தசரதன் புலம்பலைப் பற்றியும், பத்தாம் திருமொழியில் இராமாயணக் கதைச் சுருக்கத்தைப் பற்றியும் பாடியுள்ளார்.

8. பெரியாழ்வார்

பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிப்புத்தூரில் முகுந்தர் என்பவருக்கும், பதுமை என்பவருக்கும் கருடாழ்வார் அம்சமாய் அவதரித்தார். இவருக்கு விஷ்ணுசித்தர் எனும் பெயரும் உண்டு. கண்ணபிரானது பாலலீலைகள் பலவற்றைப் பாசுரங்களில் பாடியுள்ளார். இறைவனுக்குப் பூமாலை கட்டிச் சமர்ப்பிப்பதைச் சிறந்த தொண்டாகக் கருதி நந்தனவனம் அமைத்து,

மலர் கொய்து மாலைகட்டி வடபெருங்கோயிலுடையானுக்குச் சமர்ப்பித்து வந்தார். நாராயணர் கனவில் கூறியபடி மதுரையில் பாண்டியன் அவைக்களம் சார்ந்து திருமாலே பரம்பொருள் என நிறுவிக் கிழியை இறுத்தார். இவர் நானூற்று எழுபத்துமூன்று பாசுரங்கள் பாடியுள்ளார்.

9. ஆண்டாள்

ஆண்டாள் ஸ்ரீவில்லிப்புத்தூரில் பூமிப்பிராட்டியின் அம்சமாக, பெரியாழ்வார் வடபெருங்கோயில் உடையானுக்கென அமைத்த நந்தனவனத்தில் திருத்துழாய் (துளசி)ச் செடியின் கீழ் திருவாடிப் பூரத்தில் அவதரித்தாள். பெரியாழ்வார் அக்குழந்தையை எடுத்து, "சுரும்பார் குழல்கோதையென" திருநாமம் இட்டு வளர்த்து வந்தார். குழந்தை ஆண்டாள் பரமனிடம் பரமபத்தியோடு வழிபட்டு வந்தனள்.

தந்தை இறைவனுக்குக் கட்டிவைக்கும் பூமாலைகளைத் தனது குழலில் சூட்டிக்கொண்டு, கண்ணனுக்கு உகந்த அழகு தன்னிடம் இருக்கிறதா எனக் கண்ணாடியில் தனது அழகைப் பார்த்துப் பரவசம் அடைவாள்.

தினமும் இவ்வாறே பெருமானுக்குரிய மாலையை சூடிக்களைந்து வைப்பதை ஒருநாள் பட்டர்பிரான் கண்டு கோதையைக் கடிந்துகொண்டார். பின் வேறு மாலை கட்டிக்கொண்டு போய் பெருமானுக்குச் சாத்தினார். பெருமாள் அன்றிரவு அவர் கனவில், "உம்முடைய கோதை சூடிக்கொடுத்த மாலையே நமக்கு உகந்த மாலையாகும்" எனத் தெரிவிக்க, ஆழ்வார் ஆனந்தமடைந்து தன்னை ஆண்டாள் எனவும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும், கோதையைப் புகழ்ந்து கொண்டாடினார்.

கோதையும் யௌவனப் பருவமடைந்தாள். கண்ணபிரானது திவ்விய லீலா விநோதங்களில் ஈடுபட்டாள். ஸ்ரீவில்லிப்புத்தூரை ஆயர்பாடியாகவும், அங்குள்ள பெண்களை ஆய்ச்சியர்களாகவும் கருதினள்.

"மானிடவொருவர்க்கு என்னைப்பேச லொட்டேன்
மாயிருஞ் சோலை எம்மாயற்கல்லால்"

என்றும்,

"மானிடர்க்கு என்று பேச்சுப்படின்
வாழகில்லேன்"

எனவும் கூறி உறுதி பூண்டு கனவிலும், நனவிலும் கண்ணனையே கணவனாய்க் கருதினாள். கண்ணனது பாஞ்சசன்யம் அடைந்த பெரும் பேற்றைப் பாடிப் பத்திக்கடலில் மூழ்கினள்.

திருப்பாவை முப்பதும். திருமொழி நூற்றுநாற்பதும் ஆக நூற்றொழுபது பாசுரங்கள் பாடினாள். அரங்கனை அடைய ஆறாக்காதல் கொண்டாள். இதனை அறிந்த அரங்கநாதன், ஆழ்வார் கனவில் தோன்றி, "நாமே கோதையை மணந்துகொள்வோம்; அவளைத் திருவரங்கத்துக்கு அழைத்து வருக" எனக் கட்டளையிட்டான்.

ஆழ்வார் கோதையை அழைத்துக்கொண்டு திருவரங்கம் வந்து சேர்ந்தார். பங்குனி உத்திரத்தன்று கோதையை அணிஅரங்கன் முன்னர் அழைத்து வந்தார். கோதை அனைவரும் காண உள்ளே புகுந்து நாகணையை மிதித்து ஏறித் திருவரங்கனைச் சார்ந்து ஆனந்த பரவசத்தில் மூழ்கினாள்.

10. தொண்டரடிப்பொடி ஆழ்வார்

இவர் சோழ வளநாட்டில் மண்டங்குடியில் அவதரித்தார். இவர் வைஜயந்தி எனும் வனமாலையின் அம்சமாகும். விப்பிரநாராயணர் என்பது இவரது பிள்ளைத் திருநாமம். இறைவனுக்குப் பூமாலை கட்டித் தொண்டு செய்யத் திருவுளங்கொண்டார். நந்தனவனம் அமைத்தார். பிச்சையேற்று உண்டுவந்தார்.

உத்தமர் கோவிலில் தேவமாதர் அம்சமாகப் பிறந்த தேவ தேவியெனும் தாசி, ஒரு நாள் தனது தோழிமார்களுடன் இவரது நந்தனவனத்தில் அமர்ந்து இளைப்பாறினாள். பூக்கொய்து. புனலாடி பொழுது போக்கினாள். அவள் விப்பிரநாராயணரைக் கண்டு காதலித்து நிற்க, இவர் அவளைப் பாராது திருத்தொண்டில் ஈடுபட்டார். "இவரை நான் எவ்விதமும் அடைவேன்" என்று கூறி, காவி உடுத்து இவரைச் சரணமடைந்து அவருக்குத் தொண்டு செய்ய விரும்பினவள் போல் நடித்தாள். இவள் அவரைத் தனது வல்லமையால் மயக்கி அவரோடு வாழ்ந்து பின் தன்னிருப்பிடம் சென்றாள். இவரும் அவளைத் தொடர்ந்து சென்று அவள் வீட்டு வாயிலில் மயங்கி நின்றார். திருமால் ஆலயத்தில் உள்ள பொன் வட்டிலைத் தாசிக்கு அளித்து, அதன் மூலம் விளைந்த

விளைவுகளால் இவருக்கு நற்புத்தியைப் புகட்டினார். இதன் பரிகாரமாகப் பாகவதர்களின் பாததீர்த்தத்தை இவர் உட்கொண்டு பாகவத பத்தியோடு அவர்களது பாததூளியைச் சிரமேற்கொண்டு ஒழுகிவாழ்ந்தார். அதனால் இவர், 'தொண்டரடிப்பொடி' எனும் நாமத்தைப் பெற்றார்.

11. திருப்பாணாழ்வார்

சோழ வளநாட்டில் உறையூரில் ஸ்ரீவத்ஸாம்சமாய் நெற்பயிரிடையே அவதரித்தார். அக்குழந்தையைப் பாணர் குலத்துப் பிறந்த ஒருவன் வளர்த்து வந்தான்.

இவர் யாழ் இசைத்துப்பாடி இறைவனை வழிபட்டு வந்தார். அரங்கநாதனுக்குத் தொண்டு செய்ய விரும்பிய இவர் ஸ்ரீரங்கத்தில் அடியெடுத்து வைக்கத் துணியாமல் திருக்காவிரியின் தென்கரையிலேயே நின்று, திசைநோக்கித் தொழுது வந்தார். இவர் ஒரு கானஞானி. இவரைத் தீண்டத்தகாதவர் எனக் கருதிச் சிலர் கல்லால் எறிய இவரது நெற்றியில் இரத்தம் பெருக ஆரம்பித்தது. இவர் அதனை வருத்தமின்றிப் பொறுத்துக் கொண்டார். அரங்கநாதன் நெற்றியிலும் இரத்தம் பெருகக் கண்ட அர்ச்சகர்கள் பயந்து அதிகாரிகளுக்கும், அரசனுக்கும் அறிவித்தனர். பத்தருக்கு இரங்கும் பரமன் லோகசாரங்கர் கனவில் தோன்றி, "நமக்கு நல்லவரான பாணர் பெருமாளை இழிவாக நினையாமல் அவரைத் தோள்களில் எழுந்தருளப் பண்ணிவாரும்" என்றும் ஆக்ஞாபிக்க, அவ்வாறே அவர் இவரைத் தோளில் ஏற்றிக்கொண்டு அரங்கநாதன் திருமுன்புவிட, அனைவரும் காண இவர், "அமலன் ஆதிப்பிரான்" எனும் பாசுரம் பாடி அரங்கனுடன் ஐக்கியமாயினர்.

12. திருமங்கை ஆழ்வார்

திருவாலியெனும் திவ்விய தேசத்திற்கு அடுத்த திருக்குறையலூரில் நீலன் என்னும் குறுநில மன்னன் கள்ளர்குடித் தலைவனாக வாழ்ந்து வந்தான். அவன் சைவ சமயத்தினன். இடைவிடாமல் அவன் சிவபத்தி செய்துகொண்டிருந்தான். அவன் மகனாகச் சார்ங்காம்சமாய் திருமங்கை ஆழ்வார் அவதாரம் செய்தார். இவருக்குப் பரகாலன், கலியன் எனும் இதரப் பெயர்களும் உண்டு. கள்ளர் தலைவனாகிய நீலன், தன் பெயரையே மகனுக்கும் சூட்டினார். அழகும், இளமையும் வாய்ந்தவனாக நீலன் வளர்ந்து வந்தான். சில

தினங்களில் கள்ளர் தலைவனாகிய நீலன் இறக்க, மைந்தன் நீலனைச் சோழ மன்னன் வரவழைத்து, நீலனது ஆற்றல் அனைத்தையும் கண்டு, தந்தை ஆண்ட நாட்டை ஆண்டு வரும்படிப் பணித்தான்.

இவர், "நாராயணனே நமது தெய்வம்; அவரது திருவடிகளே நமது செல்வம்; அவனது திவ்விய குணானுபவமே இன்பம்; ஸ்ரீவைகுண்டமே அடைய வேண்டிய இடம்" என்று உறுதி பூண்டார். இருப்பினும், இவர் சிற்றின்பப் பிரியராய் காலங்கழித்து வந்தார்.

திருநாங்கூர் பாகவதர் ஒருவர் திருவாலிநகரை வணங்கித் தடாகக்கரையில் பகவத்தியானம் செய்துக்கொண்டிருந்தார். அங்கு திருவாலி நாதரை வணங்க வந்த தேவமாதர்கள் ஒரு தேவ கன்னிகையை விட்டுச் செல்ல, இவர் அவளுக்குக் குமுதவல்லியெனப் பெயரிட்டுத் தன் புத்திரியாக வளர்த்து வந்தார்.

நீலன் அப்பெண்ணைத் திருமணம் செய்துக்கொண்டு அப்பெண்ணின் நிபந்தனைப்படி தினம் ஆயிரத்தொட்டு வைணவர்களுக்கு ஆராதனை செய்து, அவர்களது பாததீர்த்தத்தை உட்கொண்டு வாழ்ந்து வந்தார்.

இதனை அறிந்த சோழ மன்னன் பகுதிப் பணத்தை வாங்கி வர ஆட்களை அனுப்பினான். ஆழ்வார் பகுதிப்பணத்தைத் தராததால் சோழன் சேனையோடு வந்து அமர்தொடுத்தான். ஆழ்வாரைப் பட்டினி கிடக்கும்படிச் செய்தான். பகவான் கனவில் தோன்றி, "உமக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுக்கிறோம்; நீர் காஞ்சிக்கு வாரும்" என்று கூறி மறைந்தார். அவ்வாறே காஞ்சிக்குச் சென்று வேகவதிக் கரையில் புதையல் ஒன்றைக் கண்டு எடுத்து, அதைப் பகுதித்தொகையாகக் கட்டித் திரும்பவும் வந்து குமுதவல்லியோடு களித்து வாழ்ந்தார். இதனை அறிந்த சோழன் இவர்பால் வந்து, தான் இவரை வருத்தியதற்கு மனம் வருந்திக் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும்படி வேண்டி, ஆழ்வாருக்கு வேண்டிய செல்வத்தைக் கொடுத்துச் சென்றான். ஆழ்வார், அடியார்களுக்கு ஆராதனையைக் கடன்பட்டும் குறைவுறாது நடத்தி வந்தார். ஒரு நாள் பொருளின்றி ஆராதனம் முட்டுப்பெற, வழிப்பறி செய்தேனும் நடத்தும்படி குமுதவல்லி கூற, இவரும் அவ்வாறே செய்து வந்தார். இவருக்கு இறையருள்கிட்டும்படியான நற்காலப் பேறு உண்டாயிற்று.

இவர் ஒரு நாள் வழிப்பறிச் செய்யச் சென்றபொழுது விஷ்ணு, இலட்சுமி சமேதராக சர்வாபரண பூட்சிதராய்வர, இவர் அவர்களின் ஆபரணங்களைக் கழற்றிக் கொடுக்கும்படிக் கூற, அவர்களுக்கு கொடுத்தனர். கையிலுள்ள மோதிரத்தைக் கழற்றும்படி கூற, அது தன்னால் கழட்ட முடியவில்லை என, இவர் பற்களால் கடித்து இழுக்க, "இவர் கலியனோ" எனக் கூறிச் சிரசின் மேல் ஒரு கையை வைத்து அழுத்தினார். இவர் ஆபரணங்களை எடுக்க நினைக்க, அவை எடுக்க முடியாமல் போக இவர் திகைத்து "உன்னிடம் ஏதோ ஒரு மந்திரம் உள்ளது; அதை எனக்குக் கூறுக" என இறைவனை நோக்கி வற்புறுத்தினார். இறைவன் அட்டாட்சர மந்திரத்தை இவரது செவியில் ஓதி இவருக்குக் காட்சி தந்தருளினான். உடனே இவர் திருவடியில் விழுந்து இறைஞ்சித் தாம்செய்த தீச்செயல்களுக்கு வருந்தினார். திருமந்திரப் பிரபாவத்தைப் பாடி அருளினார்.

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மொடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

அதன்பின் பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருஎழுகூற்றிருக்கை, பெரிய திருமடல், சிறிய திருமடல் எனும் ஆறு பிரபந்தங்களை திருவாய் மலர்ந்தருளியபின் புத்தர்களை வாதில் வென்று, ஸ்ரீரங்கம் சென்று ரங்கநாதரை வழிபட்டு வரும்பொழுது அவர் காட்சி தந்தருளினார். பின்னர் திருக்குறுங்குடி வந்து சேர்ந்து ஜவகை நம்பிகளையும் வழிபட்டுச் சேவித்து, அழகியநம்பியின் அருளினால் வைகுந்த பரமபதம் அடைந்தார்.

முருகன் அடியார்

முருகன் அடியார்களில் சிறந்தவர்கள் நக்கீரர், அருணகிரி நாதர், குமரகுருபரசுவாமிகள் எனும் மூவர்களுமாவர்.

1. நக்கீரர்

நக்கீரர் மதுரைக் கணக்காயனார் மகனாராவர். கடைச்சங்க நூலாகிய பத்துப்பாட்டில் முதல் பாட்டாகிய திருமுருகாற்றுப்படையைப் பாடினார். முருகன் அருளால் பூதத்தினால் நேர்ந்த இடர்நீங்கி இன்புற்றார். இவர் பாடிய திருமுருகாற்றுப்படை முருகப்பெருமானுடைய அருளைப் பெற நம்மனோர்க்குச் சிறந்த வழிகாட்டி நூலாகும். முருகனது ஆறுபடை வீடுகளையும், அவற்றில் சென்று வழிபட வேண்டிய முறைகளையும் இவர் இனிது எடுத்து இயம்பியுள்ளார்.

2. அருணகிரியார்

இவர் முருகப்பெருமான்மீது திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தரனுபூதி, திருவகுப்பு முதலிய நூல்களைப் பாடி அருளினார். இவருடைய வரலாற்றைப் பலர்பலவிதமாகக் கூறுகின்றனர். சிவன், சக்தி, விஷ்ணு, இலட்சுமி, இராமர், கிருஷ்ணர், முதலியோர்களை முருகனுடன் இணைத்துப் புகழ்ந்துள்ளார். இதிலிருந்து இவரது சமரச ஞானம் விளங்குகின்றது.

வேதம், ஆகமம் முதலியவைகளை ஒப்புக்கொண்டு, அதன் வழி ஒழுக உபதேசிக்கின்றனர். அருணைக் கோபுரத்தில் தங்கியிருந்து முப்பத் தாறாயிரம் திருப்புகழ்ப் பாடல்களையும், திருவகுப்புகளையும் பாடியபின் முருகன் இவருக்கு மயில்மீது வந்து காட்சி தந்தான் என்று கூறப்படுகின்றது. மயில் விருத்தம், வேல் விருத்தம் பாடினார். திருச்செந்தூர் சென்று செந்திலாண்டவன் உவந்து கேட்கத் தனது பாடல்கள் அனைத்தையும் பாடி அருளினார். அதன் பின் பல இடங்களுக்கு யாத்திரை செய்து அருணைக் கோபுரத்தில் வந்து தங்கி இருந்தார்.

அருணகிரியார் சைவ சமயக் கொள்கைகளைத் தமது பாடல்களில் பல இடங்களில் இனிதாக விளக்கியுள்ளார். "வாக்கிற்கு அருணகிரி" எனப்படுவதால் இவரது வாக்கின் பெருமை இனிது விளங்குகிறது. இவர் பற்பல அற்புதங்கள் இயற்றி முருகன் திருவடி நீழலை அடைந்தார்.

3. குமரகுருபரர்

பாண்டி நாட்டில் ஸ்ரீவைகுண்டத்தின் அருகாமையில் கைலாசபுரம் என்னும் ஊரில் சண்முகசிகாமணிக் கவிராயருக்கும், சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் புதல்வராய் அவதரித்தார். இவருக்குக் குமரகுருபரர் எனப் பெயரிட்டனர். இவர் ஐந்தாண்டுகள் வரை ஊமையாய் இருந்தார். செந்திலாண்டவன் அருளால் ஊமை நீங்கப்பெற்று. அப்பெருமான்மீது கந்தர் கலிவெண்பா பாடினார். பின் கைலைக்கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக்கலம்பகம், முத்துக் குமாரசாமிப்பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களைப் பாடியருளினார். இவரது ஞானசாரியர் தருமபுர ஆதீனத்தில் மகாஸந்நிதானமாக வீற்றிருந்த ஸ்ரீமாசிலாமணி தேசிக சுவாமிகளாவர்.

இவர் காசிக்குச் சென்று அங்கு மடம் ஒன்று கட்டிச் சைவத் தொண்டாற்றி வந்தார். இவர் காசியில் வைகாசி மாதம் கிருஷ்ணபட்சம் திருதியை திதியில் இறைவன் திருவடிநிழலை அடைந்தார்.

இதுவரை சைவ, வைணவ, முருகனடியார்களின் வரலாறுகளின் சுருக்கம் கூறப்பட்டது. இதன் பெருக்கத்தை அவற்றைப் பற்றிக் கூறும் நூல்களில் விரிவாய் அறிந்து கொள்ளலாம்.

29. தொகுப்புரை

1. இணைப்பு

இவ்வுலகில் பற்பல மதங்கள் உள்ளன. அவை எத்தகைய பெருமைகளையுடையனவாயிருப்பினும், பல்வேறு கிளைகளாகப் பிரிந்து, பல்வேறு கொள்கையுடையன போல பற்பல மக்களால் கைக்கொள்ளப்பட்டுப் பிளவுபடுமேல், அப்பிளவுகளின் அளவுக்குத் தக்கவாறு அம்மதமும் விரைவில் அழிவுறும்.

அம்மதத்தைப் பற்றி, அம்மதத்திலுள்ளவர்களே குறை கூறுவது எவ்வளவு அதிகரிக்கிறதோ, அவ்வளவு விரைவில் அம்மதமும் நலிவுறும்.

மதத்தின் தத்துவங்களை அறியாத மக்கள் எவ்வளவுக்குப் பெருகுகிறார்களோ அவ்வளவுக்குத் தக்கவாறு மதமும் தளர்வுறும்.

தம் மதத்தை விட்டு வேறு மதங்களுக்கு மக்கள் எவ்வளவு அதிகமாகப் போகிறார்களோ அவ்வளவுக்கு அம்மதம் வலுக்குன்றும்.

ஒரு மதத்தைப் பற்றிய பிராசாரம் எவ்வளவுக்குக் குறையுமோ அவ்வளவுக்கு அதன் வளர்ச்சி குன்றும்.

ஆதலின், நமது இந்துமதத்தில் தற்போது இருக்கும் எண்ணிலாக்கிளை மதங்களை இணைத்து, அவற்றின் சாராம்சமான பொதுகொள்கைகளை உருவாக்கினால், அது அம்மதத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை பயப்பதாக அமையும்.

கிளைமதங்களை இணைப்பதால் சுயக்கொள்கைகளைக் கைவிட நேரிடுமோ என யாரும் கருதவேண்டாம். அவரவர்களுடைய மதக் கொள்கைகளை அவரவர்கள் கடைப்பிடித்து ஒழுகலாம். ஆனால், பிற இந்துமதக் கிளைகளோடு பகைமை பாராட்டாதிருக்கவேண்டும். கிளைமதங்கள் அனைத்துக்கும் பொதுவாக அமைந்துள்ள ஒருமைப்பாட்டினை மேற்கொண்டு ஒத்து வாழ வேண்டும் என்பதே வேண்டப்படுவதாகும்.

2. சமயசாரம்

நமது இந்துமத நூற்களில் வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், புராணங்கள் என நூற்கள் எண்ணிலாதன உள்ளன. அவற்றின் மிக முக்கிய தத்துவங்களை முன்னர் எடுத்தியம்பியுள்ளோம். அவற்றின் பொதுவான சாராம்சங்களையேனும் இந்துக்கள் அனைவரும் அறிந்துகொள்ளுதல் நலமாகும். ஆதலின் அதனை அடியிற் சுருக்கிக் கூறுவோம்.

கடவுள்

1. கடவுள் ஒருவரே; வழிபடத்தக்கவர் அவரே.
2. அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர்.
3. அவர் அசத்தும் இன்றி, சத்தும் இன்றி சிவசத்தாய் விளங்குகிறார்.
4. அவர் அருவாகவும், உருவாகவும், அருவுருவாகவும் அமைந்துள்ளார்.

5. அவர்ஒரு பெயரும், வடிவமுமின்றிப் பலபெயரோடும் பல வடிவங்களோடும் விளங்குகிறார். அவரை எப்பெயரிட்டு அழைத்தாலும், எந்த வடிவத்தில் வழிபட்டாலும் அதனை அவர் ஏற்று அருள் புரிகின்றார்.
6. அவர் அம்மையப்பராகவும், அருட்குருவாகவும் அடக்கி ஆள்பவராகவும் இருக்கிறார்.
7. ஐந்தொழில்களால் உலகை இயக்குகிறார்.
8. தவமும் தியானமும் உள்ள உயிர்களுக்கு ஞானத்தை ஊட்டுகிறார்.
9. அவர் உயிர்களோடு ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருக்கிறார்.
10. அவர் எல்லா வல்லமையும் உள்ளவர்.

ஆன்மா

1. ஆன்மா என்பது ஒன்று உண்டு.
2. ஆன்மா உடலினுள் உள்ளது.
3. ஆன்மா வேறு; உடல் வேறு.
4. ஆன்மா உடலினும், ஐம்பொறிகளினும், அந்தக்கரணங்களிலும் நுண்ணுடலினும் வேறானது.
5. ஆன்மாவை மும்மலங்கள் பற்றியுள்ளன.
6. ஆன்மா தன்னையும், தலைவனையும், தலைவனை அடையும் வழிகளையும் அறியாது தயங்கி நிற்கும்.
7. இறைவன் உணர்த்த ஆன்மா தனது சிறப்பியல்பை உணரும்; ஆன்மா சதசத்தாம்.
8. தன் இயல்புணர்ந்த ஆன்மா இறைவனை நாடும்.
9. ஆன்மா தவத்தாலும், தியானத்தாலும், பாச நீக்கம் பெற்று ஞானம் பெறும்.
10. ஞானம் பெற்ற ஆன்மா இறைவன் திருவடியை அடையும்.

பாசமும் பாச நீக்கமும்

1. ஆன்மாவின் அறிவைப் பாசம் மறைக்கும்.
2. ஆன்மாவுக்கு ஐந்தவத்தை உண்டு.
3. ஆன்மா கருவிகளைக் கொண்டு விசயங்களை அளந்தறியும்.
4. ஆன்மா இறைவனின் ஞானசொரூபத்தைக் காணப் பாசம் நீங்கும்.
5. ஞான சொரூபத்தால் விளக்கம் பெற்ற ஆன்மா இறைவனோடு ஒன்றிவாழும்.
6. இவ்வாறு ஒன்றிவாழும் ஆன்மாவை ஆணவ மலம் தாக்காது.
7. இறையோடு ஒன்றி இறைபணி ஆற்றும் ஆன்மாக்களை மாயா, கன்மங்களும் தாக்காது.
8. பாசநீக்கம் பெற்ற ஆன்மாக்களுக்கு இறைவன் அறிந்தும், அறிவித்தும் உபகரிப்பன்.
9. பாசம் நீக்கிய ஆன்மா ஜீவன் முத்தனாவன்.
10. ஜீவன் முத்தனானவன் அடியார்களையும், ஆலயங்களையும் ஆண்டவன் எனவே நினைந்து வாழ்ந்து இறுதியில் பரமுத்தி அடைவன்.

3. சமய முன்னேற்றப் பணிகள்

1. நமது சமயம் முன்னேறவேண்டுமெனின் ஆலயங்கள், அறநிலையங்கள் முதலியவற்றிற்கு நிர்வாக அதிகாரிகளும், மேலதிகாரிகளும் நியமனம் பெற்றிருப்பதுபோல, சமய முன்னேற்றப் பணிபுரியத் தக்கதோர் சமயப் பணித்துறை ஒன்று தனியாக அமைதல்வேண்டும்.

2. சமய அறிஞர்கள் பலர் இதன் நிர்வாகத்தை நடத்த வேண்டும்.

3. சமயப் பிராசாரகர்கள், நிர்வாக அதிகாரிகள், கோவில் அர்ச்சகர்கள், தோத்திரம் ஓதுபவர்கள் இவர்களுக்கு அந்தந்த விஷயங்களில் சமயக் கல்லூரிகள் நிரந்தரமாக நிறுவித் தேர்வு

உண்டாகும்படிப் பயிற்சி அளிக்கவேண்டும். சமயஞானம் பெற இவர்களுக்கென இந்துமத நூல் ஒன்று எழுதி வெளியிடல் வேண்டும். அந்நூலைப் பல மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும்.

4. ஆலயங்களின் வருமானத்திலிருந்தும், உபரி வருமானங்களிலிருந்தும், பிற அறநிலையங்களிலிருந்தும், வரும் வருமானத்தில் ஒருபகுதியைச் சமயப்பணித்துறைக்கென ஒதுக்கவேண்டும். அத்தொகை அனைத்தையும் ஒரே நிலையத்தின் மூலம் செலவு செய்யும்படித் திட்டம் வகுக்கப்படவேண்டும்.

5. மாவட்டம், தாலுகா, கிராம முறையாகக் கிளை நிலையங்கள் ஏற்படுத்தவேண்டும்.

6. துண்டுப்பிரசுரங்கள் பல அச்சடித்து எங்கும் பரப்ப வேண்டும்.

7. சமயத்தைப் பழிக்கும் பழிப்புரைகளுக்குத் தக்க விடையிறுக்க வேண்டும்.

8. பொதுமக்களிடையே நாஸ்திகர்களின் பிராசாரங்கள் நடைபெறா வண்ணம் தடுப்பதோடு, ஆஸ்தீகப் பிராசரங்களைப் பெருக்க வேண்டும்.

9. சிறுபான்மையரிடையே காலப்பழக்கத்தால் புகுந்துள்ள உயிர்ப் பலி, மது, மாமிச நிவேதனம் முதலிய மூடப்பழக்கங்களை அவர்கள் கைவிடும்படிச் செய்து, அவர்களைத் தூய வழிபாட்டு நெறியில் நிலைநிற்கும்படிச் செய்யவேண்டும்.

10. ஆலயங்கள் தோறும் சர்க்கார் உதவியோடு (கிராண்ட்) பாடசாலைகள் பல நிறுவி அவற்றில் இந்துமதத் தோத்திரங்களையும், சாத்திரங்களையும் மாணவர் தகுதிக்கு ஏற்பக் கற்பிக்க வேண்டும்.

11. இந்து அநாதை விடுதிகள், இந்து மாதர் இல்லங்கள், வைத்திய சாலைகள் முதலிய தர்ம ஸ்தாபனங்களை நிறுவி இந்துக்களைப் பராமரிக்கவேண்டும்.

12. இந்து நிலையங்களில் வெளி ஆடம்பரச் செலவுகளைக் கூடியவரை குறைத்து, அவசியச் செலவுகளை நடத்தவேண்டும்.

13. இந்துக்களைப் பிறமதம் புகாது தடுத்து, புகுந்தாரை மீட்டு எடுத்து ஆதரிக்கவேண்டும்.

14. ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலும் வல்லுனர்களைக் கொண்டு வேற்று நாடுகளில் நமது மதப் பிரசாரங்களைச் செய்விக்க வேண்டும்.

15. பூஜைகள், விழாக்கள் முதலியவற்றைக் கண்கவர் வனப்புடனும், தூய்மையுடனும் சிறப்புற நடத்தவேண்டும்.

ஆகவே, நமது சமயத்தின் நிலையின் நன்குணர்ந்து அதன் சாராம்சத்தை மேற்கொண்டு, நமது சமயத்திற்கு இன்றியமையாத பணிகளை இன்றே செய்து, இந்துமதத்தை வளர்க்கவேண்டுவது ஒவ்வொரு இந்துவினுடையவும் தலையாய கடனாகும்.

30. தோத்திரமாலை

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

நான்கு திருக்கரங்களையும் ஐந்தாவது கரமாகிய துதிக்கையையும், ஓங்கார வடிவமாகிய யானை முகத்தையும், சந்திரப்பிறைபோன்ற தந்தங்களையும் உடைய சிவகுமாரனாகிய ஞானக்கொழுந்தை எனது மனதில் கொண்டு அவனது சித்தி, புத்தி எனும் திருவடிகளை வணங்குகின்றேன். (1)

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்பு வர்தம் கை.

விநாயகர் செல்வத்தை அதிகரிக்கும்படிச் செய்வார். செய்கின்ற காரியங்கள் எல்லாம் வெற்றியாகும்படி உதவுவார். பேச்சுவன்மையைத் தருவார். பெருமையைப் பெருகச் செய்வார். உடம்பைத் திடம் ஆக்குவார். ஆதலால், அவரைத் தேவர்களும் பத்தியோடு கும்பிட்டு வழிபடுவார்கள். (நாமும் வணங்கி வழிபடுவோமாக.) (2)

சமயாச்சாரியர்கள் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

பாண்டிய மன்னன் நெடுமாறனது சுரநோயைத் தீர்த்த திருஞான சம்பந்தரது திருவடிகளுக்கு வணக்கம். கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலிருந்து கரையேறிய திருநாவுக்கரசருடைய திருவடிகளுக்கு வணக்கம். திருநாவலூரில் வன்றொண்டராய்த் தோன்றிய சுந்தரர் திருவடிகளுக்கு வணக்கம். பிரளயகாலத்தும் அழியாத திருவாதவூரில் தோன்றிய மாணிக்கவாசக சுவாமிகள் திருவடிகளுக்கு வணக்கம். (3)

சிவபெருமான் துதி

சம்பந்தர் தேவாரம்

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

ஆர்வம் மிகுந்து, அதனால் மனம் இளகி, கண்ணீரொழுகப் பாடுகின்றவர்களை முத்தியில் சேர்ப்பதும், நான்கு வேதங்களிலும் உண்மைப் பொருளாயிருப்பதும், இறைவனது திருநாமமாகிய நமசிவாய எனும் ஐந்தெழுத்தே ஆகும். (4)

அப்பர் தேவாரம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்க நால்வேதமானாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

தேவர் உலகமாகி, அதன் வேறாகிய உலகங்களும் ஆகிநின்றவரே! உமக்கு வணக்கம். அடியேனை மீட்கப்படாத அடிமையாக ஏற்றுக் கொண்டவரே! உமக்கு வணக்கம். மனவாக்குகளுக்கு எட்டாத இடத்தில் தணிவு உடையவராய் அமர்கின்றவரே! உமக்கு வணக்கம். நன்கு காற்றினைப் போல எங்குங் கலந்தவரே! உமக்கு வணக்கம். நான்கு வேதங்களும் ஆனவரே! உமக்கு வணக்கம். திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருப்பவரே! உமக்கு வணக்கம். (5)

சுந்தரர் தேவாரம்

பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானை
பின்னை என் பிழையைப் பொறுப்பானை
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத்து
அணி ஆரூரானை மறக்கலும் ஆமே.

பொருட் செல்வத்தையும், அருட் செல்வத்தையும் தருபவனை, உலக இன்பத்தையும், முத்தி இன்பத்தையும் சேர்ப்பவனை, நான் செய்யும் குற்றங்களை பொறுப்பவனை, மேலும் குற்றங்கள் வராதபடி தடுப்பவனை, இப்படிப்பட்டவன் என்றும் யார்க்கும் அறியமுடியாத எங்கள் இறைவனை, அடியேனுக்கு இரங்கி எளிதாக எழுந்தருளிக் கிருபை செய்தவனை, அன்னப் பறவைகள் வாழ்கின்ற வயல்களை உடைய திருவாரூரில் வீற்றிருப்பவனை மறக்கக் கூடுமோ? (மறத்தல் கூடாது என்பதாம்.) (6)

மாணிக்கவாசகர் திருவாசகம்

கடையவனே எனைக் கருணையினால் கலந்தாண்டு கொண்ட
விடையவனே எனை விட்டிடுதி கண்டாய் விறல்
வேங்கையின்தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே!
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னை
தாங்கிக்கொள்ளே.

கடையவனாகிய என்னை இரக்கத்தால் ஆண்டுகொண்ட இடப வாகனத்தை உடையவனே! அடியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடமாட்டாய்!) வலிமிக்க புலித்தோலை ஆடையாக உடையவனே! உத்தரகோச மங்கை என்னும் திருத்தலத்தில் அரசு வீற்றிருப்பவனே! சடையை உடையவனே! அடியேன் மிகவும் தளர்வடைந்தேன். எம்பெருமானே! அடியேனை நீயே தாங்கிக் காத்தருள வேண்டுகிறேன். (7)

சேந்தனர் திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

அறிஞர்கள் அனுபவிக்கும் கற்பகக்கனி போன்றவனும், எல்லையற்ற பெரிய கடலைப் போன்ற இரக்கம் உள்ளவனும், பத்தரல்லாதாரால் அறிய முடியாத மாணிக்கமலை போன்றவனும், நினைப்பவர்கள் மனத்தில் மாணிக்கம் போன்று ஒளி வீசுபவனும், பகைவரது திரிபுரங்களை எரித்தவனும், திருவீழிமிழலையில் வீற்றிருப்பவனாகிய சிவபெருமானைக் கண்டு என் உள்ளமும், கண்களும் குளிர்ந்தன. (8)

சேந்தனார் திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்
பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே
புகுந்து புவனி யெலாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடி யோமுக்கு அருள் புரிந்து
'பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

தில்லைத் தலம் விளங்குக; அடியவர்கள் வளர்ச்சியுறுக; வஞ்சகர் நம்மைவிட்டு நீங்குக; பொன்னம்பலத்தில் புவனியெல்லாம் விளங்க, உமாதேவியாரோடு வீற்றிருந்து அடியேனுக்கு அருள் புரிந்து பிறவி அறுக்கும் உபாயம் உரைத்த சிவபெருமானுக்கு (அவன்) பல்லாண்டு வாழ்க என வாழ்த்துக் கூறுவோம்.

சேக்கிழார் பெரியபுராணம்

அண்ணலே எனைஆண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்த தருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின்கோலம்
நண்ணிநான் தொழநயந்தருள் புரியெனப் பணிந்தார்.

பெருமை நிறைந்தவனே! அடியேனை ஆட்கொண்ட கருணை அமுதே! ஆகாயத்தில் மறைந்து நின்று அசரீரியாய் அருள் புரிந்த வேத முதல்வனே! திருக்கயிலாயத்தில் நீ வீற்றிருக்கும் திருக்கோலத்தை அடியேன் கண்டு வழிபடக் கருணை புரிவாயாக எனப் பணிந்தார். (அப்பர் இறைவனைப் பணிந்து வேண்டிக் கொண்டார்). (10)

உமாதேவியார் துதி

தொடுக்குங் கடவுட் பழம்பாடல் தொடையின்
பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்குந் தொழும்பர் உளக் கோயிற்கு
ஏற்றும் விளக்கே வளர்சிமைய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிர் ஓவியமே மதுகரம். வாய்
மடுக்கும் குழற்கா டேந்தும் இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே

வேதப் பொருளின் பயனாய் உள்ளவளே! அகத்துறை, புறத்துறை ஆகிய துறைகளையுடைய இனிமைமிக்க தமிழ் மொழியிலிருந்து ஒழுகுகின்ற இனியசுவை போன்றவளே! ஆணவமாகிய அடிமுதலைக் கல்லி எடுக்கும் தொண்டர்கள் உள்ளகோயிலுக்கு ஒளி வீசும் விளக்குப் போன்றவளே! இமயமலையில் விளையாடித் திரியும் பெண்யானை போன்றவளே!

கடலை ஆடையாக உடைய உலகத்தை கடந்து நின்ற சிவபிரான் தனது திருவுள்ளத்தில் அழகு ஒழுகும்படி எழுதி பார்க்கும் உயிரையுடைய சித்திரம் போன்றவளே! வண்டுகள் உண்ணுகிற தேனையுடைய மலர்சூடிய கூந்தலையுடையவளே! இளவஞ்சிக்கொடி போன்றவளே! மலயத் துவசபாண்டியனின் அருமைப் புதல்வியே! வருக! வருகவே! (11)

சுரும்பு முரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித் தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனங் குழைத் தென்னை எடுத்தாண்ட
அங்கயற் கண் எம்பிராட்டி
அரும்பும்இள நகைபோற்றி ஆரணநூபுரஞ்
சிலம்பும் அடிகள் போற்றி

வண்டுகள் பாடுகின்ற வாசனையுடைய மலர் சூடிய குழலை உடையவளும், மேலாடையையும் தோள்வளைகளையும் அணிந்தவளும், வில்லையொத்த கரியபுருவம் உடையவளும், திருஞானசம்பந்தருக்குத் திருமுலைப்பால் ஊட்டியவளும், எனது இரும்பு போன்ற கடின மனத்தை இளக்கி என்னை எடுத்தாண்டருளியவளும், அழகிய மீன்போன்ற கண்களையுடைய மீனாட்சியாகிய உமாதேவியாரது முல்லை அரும்புபோன்ற இளநகைக்கும், வேதமாகிய சிலம்பு ஒலிக்கின்ற திருவடிக்களுக்கும் வணக்கம். (12)

நடராஜர் துதி

அப்பர் தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

வளைந்த புருவமும், கோவைக் கனிபோன்ற சிவந்த வாயில் காணப்படும் புன்சிரிப்பும், குளிர்ந்த சடையும், பவளத்தை ஒத்த சிவந்த மேனியில் பூசிய பால் போன்று வெண்ணிறம் பொருந்திய திருநீறும், இன்பத்தைத் தருகின்ற தூக்கிய திருவடியும் காணும் பேறுபெற்றால், இவ்வுலகத்தில் (இழிந்த) மானுடப் பிறப்பும் வேண்டுவதேயாகும். (13)

சேக்கிழார் பெரிய புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாய் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

இளம்பிறை விளங்குகின்ற சடைமுடியையுடையாய்! உனது திருநடனக் கூத்தைக் கண்டு வழிபடப்பெற்ற மனிதப்பிறவியே எனக்கு மிகுந்த இன்பம் என்று கூறி கண்களிலிருந்து ஆனந்தநீர் சொரியக் கைகளைத் தலைமேல் குவித்து இசையோடு கூடிய பதிகத்தைப் பாடிப் பரவி வழிபட்டார். (14)

தட்சிணாமூர்த்தி துதி

பரஞ்சோதியர் திருவிளையாடல் புராணம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்க முதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.

நான்மறை, ஆறங்கம் முதலிய நூல்களில் வல்ல சனகர், சனந்தனர், சநாதனர், சனற்குமார் எனும் முனிவர்களுக்கு ஆலவிருட்சத்தினடியில் குருமுகமாய் வீற்றிருந்து தாமே எல்லாப் பொருளுமாயும், அப்பொருளில் நீங்கிய தன்மையுமாயும் இருக்கின்ற நிலையைச் சொல்லாமல் மௌன நிலையிலேயே உணர்த்தியருளியவரை (தட்சிணாமூர்த்தியை) தியானித்துப் பிறவிநோயை நீக்குவாம். (15)

திருமால் துதி

தொண்டரடிப்பொடி ஆழ்வார்

பச்சைமா மலைபோல் மேனி பவள்வாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

பசுமை நிறம் பொருந்திய மலைபோன்ற திருவுருவத்தையும், பவளத்தின் நிறம் பொருந்திய சிவந்த அழகிய வாயையும். தாமரை மலர்போன்ற கண்களையும் உடைய அச்சுதனே! அமரர்களுக்குத் தலைவனே! இடையர்குலத்தின் கொழுந்தே! என்று உன் நாமத்தைச் சொல்லும் சுவையையன்றி இந்திரலோகம் ஆளும் அச்சுவையை வலியப்பெற்றாலும் நான் வேண்டேன். (16)

குலசேகராழ்வார்

தருதுயரம் தடாயேல் உன்சரணல்லால் சரணில்லை
விரைகுழவும் மலர்ப் பொழில்சூழ் வித்துவக் கோட்டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள் நினைந்தே அழுங்குழவி அதுவே போன்றிருந்தேனே.

வாசனை மிகுந்த மலர்களையுடைய சோலை சூழ்ந்த வித்துவக் கோடென்னும் திவ்வியத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் திருமாலே! அடியேனுக்கு நீர்தரும் துயரத்தை நீரே தடுக்காவிட்டால், உன் திருவடியை அல்லாமல் எனக்கு வேறு கதிகிடையாது. தாய் கோபத்தால் சினந்து குழந்தையை ஒதுக்கித் தள்ளினாலும் அவள் அருளையே நினைந்து அழுகின்ற குழந்தையைப் போல நான் இருக்கின்றேன். (17)

திருமகள் (இலட்சுமிதேவி) துதி

செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்தொளிரும்
எழில் மேனித் திருவே! வேலை
அங்கணுலகில் இருள் துரக்கும் அலர்
கதிராய் வெண்மதியாய் அமரர்க்கு ஊட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே!
நெடுங்கானில் பொருப்பில் மண்ணில்
எங்குளைநீ அவணன்றோ மல்லல்
வளஞ் சிறந்தோங்கி இருப்பதம்மா.

செந்தாமரை மலரில் வீற்றிருந்தருளும் அழகிய மேனியையுடைய இலட்சுமி தேவியே! சூரியன், சந்திரன், அக்கினி வடிவாய் உலகளிக்கும் பூங்கொடியெ! காட்டில், மலையில், புவியில், எங்கு நீ இருக்கின்றாயோ, அவ்விடத்தில் அன்றோ செல்வவளம் பொருந்தி இருக்கின்றது. (18)

சரசுவதி துதி

குமரகுருபர் சகல கலாவல்லிமாலை

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய் உளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பால் அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

கவியும், கவியின் பொருளும், பொருளால் அடையும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கும், என்னிடத்தில் சேரும்படி திருக்கண்ணோட்டத்தை அருள்வாயாக. மனத்தினால் அடியார்கள் இயற்றுகின்ற தமிழ்க் கலையாகிய பாலமுதத்தில் உள்ள குணம், குற்றங்களை, அன்னப்பறவை பாலையும் நீரையும் பிரித்து உண்ணுவதைப் போலப் பிரித்து, குற்றங்களைந்து குணங்கொண்டு அருளுகின்ற வெண்மை நிறம் பொருந்திய அன்னம் போன்றவளே! எல்லாக் கலைகளுக்கும் இறைவியாகிய சரசுவதி தேவியே! உனக்கு வணக்கம். (19)

முருகன் துதி

அருணகிரியார் திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

உத்தம் குணங்களை உடைய நல்லோர்களின் சிநேகிதரே! ஒப்புச் சொல்ல முடியாத பெருமை பொருந்திய இரத்தினகிரியில் வாழ்பவரே! முற்றறிவுடையவரே! திருவருள் ஞானம் பதியவைப்பவரே! வெற்றியைத தரும் வேலாயுதத்தை ஆயுதமாகக் கொண்ட பெரியவரே! அடியேன் உம்மை அன்பினால் பற்றிப் பீடித்துத் திருப்புகழைப் பலகாலும் ஓதி ஜீவன் முத்தனாகும்படி வேண்டுகிறேன். திருவருள் புரிவீராக. (20)

கந்தரலங்காரம்

முடியாப பிறவிக் கடலிற் புகார் முழுதுங் கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்படார் வெற்றி வேற் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர்குலம் அடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்வரே.

வெற்றி பொருந்திய வேலாயுதத்தைத் தாங்கியவரும், அடியார்களுக்கு நன்மையைக் கொடுக்கின்றவரும், அரக்கர்களுடைய கூட்டம் அடங்கும்படி தூள்படுத்தியவரும் ஆகிய முருகப் பெருமானுடைய தெய்வீக நாமத்தைக் கூறுகின்றவர் கடக்க முடியாத பிறவிப் பெருங்கடலில் முழுகமாட்டார்கள். எல்லா நலன்களையும் கெடுக்கும் வறுமை நோயால் இவ்வுலகில் துன்பப்பட மாட்டார்கள். (21)

கந்தரனுபூதி

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

காணும் பொருளாயும் காணாப் பொருளாயும், உள்ள பொருளாயும் இல்லாப் பொருளாயும், மணமாயும் மலராயும், மணியாயும் அதன் ஒளியாயும், காரணங்களுக்கு மூலமாயும் அதன் உயிர்த் தொகுதியாயும், அவை அடையும் பேறாயும், அவை கடந்த வேதம் முதலிய விதி நூல்களையும் விளங்குகின்ற முருகா! நீர் எனக்குக் குருவாய் எழுந்தருளி அருள் புரிவீராக. (22)

கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

காஞ்சித்தலத்தில் மாவடிக்கீழ் வீற்றிருக்கின்ற முருகப் பெருமானின் ஆறுதிருமுகங்களுக்கும், அம்முகங்களிலிருந்து பொழிகின்ற கருணை ஒழுக்கிற்கும், தேவாதி தேவர்களும் வணங்குகின்ற பன்னிரண்டு தோள்களுக்கும், மலரடிகளுக்கும், அவனது சேவற்கொடிக்கும், மயிலூர்திக்கும், திருக்கையில் விளங்குகின்ற வேலாயுதத்திற்கும் வணக்கம். (23)

சண்டேசுரர்

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற்கு
அமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனாடைகள் பிறவும் வேறு
தனக்கென்று அமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும்
பயனை அடியார்கள்
துன்னும்படி பூசனைகொள்ளும் தூயோ
னடித்தாமரை தொழுவாம்.

பொன்னிறம் பொருந்திய கொன்றை மாலையை முடியில் தரித்த சிவபெருமானுக்கு அமைத்த பொருள்களன்றி (நிவேதனம், மலர்கள். ஆடைகள் முதலியவை) தனக்கென்று வேறு இல்லாமல், சிவபூசை, சிவதரிசனம் முதலியவவற்றின் பலனை அடியார்களுக்கு அருளும்படிச் சிறப்புப்பெற்ற சண்டிகேசுரர் அடிமலர்களைத் துதிப்போம். (24)

திருநந்தி தேவர் துதி

திருவிளையாடல் புராணம்

வந்திறை அடியில் தாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலும் தொண்டர் அலகிடும் குப்பையாக்கும்
நந்தியெம் பெருமான் பாதநகை மலர் முடிமேல் வைப்பாம்.

சிவபெருமானது திருவடிகளில் தொழுகின்ற தேவர்களது மகுடங்களில் உள்ள இரத்தினங்கள் சிந்தும்படித் தனது கைப்பிரம்பினால் தாக்கி. சிந்தும் மணிகள் அடியார்கள் காலையும். மாலையும் அலகிடும் (பெருக்கும்) வண்ணம் செய்தருளுகின்ற நந்தியெம் பெருமானது திருவடி மலர்களைச் சிரத்தில் அணிந்து கொள்வாம். (25)

நவக்கிரக தோஷம் நீக்கும் துதி

சம்பந்தர் கோளறு பதிகம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

மூங்கிலை ஒத்த தோள்களையுடைய பார்வதி தேவியை இடப்பாகத்தில் உடையவரும், விடமுண்ட கழுத்தையுடையவரும், வீணையை மீட்டுபவரும், குற்றமற்ற சந்திரன், கங்கை முதலியவைகளை முடிமேல் வைத்தவருமான சிவபெருமான் எனது உள்ளத்தில் வீற்றிருந்தருளும் காரணத்தால் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேதுக்களாகிய நவக்கிரகங்கள் அடியார்களுக்கு குற்றமற்றவைகளாய் நன்மையே செய்யும். அவை நன்மைகளையே செய்யும். (26)

வாழ்த்து

சம்பந்தர் தேவாரம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

அந்தணர்களுக்கும், தேவர்களுக்கும், பசுக்கூட்டங்களும் வாழக்கடவர். குளிர்ந்த புனல் (மழை) பருவந்தவறாமல் பெய்வனவாகுக. அரசநீதி ஓங்கி, தீமைகள் மேலெழும்பாது ஆழ்ந்து, எங்கும் இறைவன் நாமமே சூழ்ந்து, வையகமும் துன்பம் நீங்கும் இன்புறுவதாகுக. (27)

கந்தபுராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோனமுறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

மழை தவறாமல் பொழிக; வளங்கள் சுரக்க; அரசன் நீதிமுறை வழுவாது அரசு செய்க; குறைவின்றி உயிர்கள் வாழ்க; வேதங்களும், அதில் விதிக்கப்பட்ட தர்மங்களும் ஓங்குக; தவமும், வேள்வியும் பெருகுக: மேன்மை பொருந்திய சைவ நீதி உலகம் முழுவதும் விளங்குக. (28)

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்கவெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியார் எல்லாம்.

முருகப் பெருமானது விசாலமான பன்னிரண்டு தோள்கள் வாழ்க. அவரது ஆறுமுகங்கள் வாழ்க. மலையைக் கூறுசெய்த அவரது வேலும். அவர் ஏறிய மயிலும் வாழ்க. தெய்வயானை அம்மையும். வள்ளியம்மையு- வாழ்வார்களாக. அடியார்கள் அனைவரும் வாழ்க. (29)

ஜபம்

அருட்பெருஞ் சோதி! தனிப் பரம்பொருளே! அடியருக்கருளும் ஆனந்தத்தேவே! உன் அடிமலர் இணைகட்கு அடைக்கலம்; அடைக்கலம்.

உனது அண்டப் படைப்பில் அடிமையின் நிலைமை அணுவிலும் அணுவென அறைதலும் அதிகமே; ஆயினும் எமை நீ அன்னையைப் போல அன்புடன் பேணி அருள் புரிகின்றனை; இன்னமும் எங்கள்தம் இருவினை நீக்கி இன்னருள் அளித்திடும் முதல்வா! எந்தம் சித்தம் திருந்திச் சீர்பெறச் செய்வாய்! தீய செயல்கள் சிறிதளவும் யாம் செய்யாதிருக்கத் திருவருள் புரிவாய்! பிறப்பெனும் பெருநோய் பிடித்திடாதெமக்குச் சிறப்புடன் முத்தி சீருடன் அருளே!

திருச்சிற்றம்பலம்.


ஸ்ரீ ராஜா பிரஸ், மதுரை. போன் : 2327025